நன்றி - ஊடறு

# ஒரு தாத்தாவும் எருமையும்

## சிறுகதைகள்

பாமா

விடியல் பதிப்பகம்
கோயம்புத்தூர் – 641 015

© விடியல் பதிப்பகம், முதற் பதிப்பு, டிசம்பர் 2003, தி. ஆ. 2034
உரிமை : ஆசிரியருக்கு
விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் ( வடக்கு )
கோயம்புத்தூர் - 641 015. தொலைபேசி : 0422 - 2576772
மின்னஞ்சல் : vitiyal2000 @ eth. net

ஒரு தாத்தாவும் எருமையும்

சிறுகதைகள்
பாமா

முன் அட்டை வடிவமைப்பு : ஸ்ரீ. கோபிநாத், புதுவை
அச்சாக்கம் : மணி ஆப்செட் , சென்னை - 5

விலை : ரூ. 80

Vitiyal Pathippagam, First Edition, December 2003, T.Y.2034
Copyright : To the Author
VITIYAL PATHIPPAGAM, 11, Periyar Nagar
Masakkalipalayam (North ), Coimbatore - 641 015
Phone : 0422 - 2576772
E - Mail : vitiyal2000 @ eth. net

**Oru Thathavum Yerumaiyum**

Short Stories
**Bama**

Front cover design : Sri. Gopinath, Pondicherry
Printed at Mani Offset, Chennai - 5

**Price : Rs. 80**

**நன்றி திரு. மாற்கு அவர்களுக்கு**

| | |
|---|---|
| 5 | 1. பணக்காரி |
| 12 | 2. மொளகாப் பொடி |
| 22 | 3. அண்ணாச்சி |
| 29 | 4. தாவணி |
| 37 | 5. ஒரு தாத்தாவும் எருமையும் |
| 49 | 6. பொங்கல் |
| 54 | 7. அந்தக்காலம் |
| 61 | 8. பொன்னுத்தாயி |
| 69 | 9. கிசும்புக்காரன் |
| 80 | 10. விடுதலை |
| 87 | 11. மேய்ச்சல் நிலம் |
| 96 | 12. வெனயம் |
| 107 | 13. அதென்ன நாயம்? |
| 112 | 14. ஏப்ளா....எழுத. |
| 118 | 15. எளக்காரம் |
| 125 | 16. தகர்ப்பு |
| 131 | 17. இச்சி மரத்து கொரங்கு |
| 137 | 18. வலியும் வழியும் |
| 142 | 19. குதர்க்கம் |
| 147 | 20. ஒத்த |
| 152 | 21. அம்மா |
| 159 | 22. அந்த இடம் |
| 164 | 23. நிராசை |
| 169 | 24. களவு |
| 175 | 25. பரிவு |
| 183 | 26. சவம் |
| 188 | 27. தீர்ப்பு |
| 192 | 28. வாயத்த சீவன் |
| 198 | 29. கதறல் |
| 203 | 30. எகத்தாளம் |

# 1.பணக்காரி

“பிள்ளயக் கொண்டுக்கிட்டு வேலைக்கு வரக்கூடாதுன்னு மொதலாளி ஐயா சத்தம் போடுறாரு. பாலுக்குடி மறக்காத பச்சமண்ண எங்க உட்டுட்டு போறது?”

விடுஞ்சு கோழிகூப்டுற நேரத்துல பொலம்பிக்கிட்டே சாணியக் கரச்சு விருட்டு விருட்டுன்னு வாசத் தொளுச்சா காளியம்மா.

“பச்சப்புள்ள ஐயா, என்னன்னு உட்டுட்டு வர்ரதுன்னு கேட்டதுக்கு, ஓம்மகா மூத்தவள பிள்ள தூக்க வரச்சொல்லு, அவா என்னத்த படுச்சு கிழிக்கப் போறான்னு ஈவு எரக்கமில்லாம சொல்றாரு.”

சொல்லிக்கிட்டே கொடத்தயும் பானையும் தூக்கிக்கிட்டு விருவிருன்னு தெருக்குழாய்ல தண்ணி புடிக்க ஓடுனா.

“எந்த மாராசனோ இப்பிடித் தெருத் தெருவுக்கு கொழாவி போட்டு தண்ணி இழுத்துட்டாக. இல்லன்னா கெணத்துல வாளியப் போட்டு மங்கு மங்குன்னு வெலாவலிக்க தண்ணி இழுக்கனும்.” தலையில பானையும், இடுப்புல கொடமும் தூக்கிட்டு நாலெட்டுல வீட்டுக்கு வந்த காளியம்மா,

“என்ன நீயி ஒம்பாட்டுக்கு வேலைக்குக் கௌம்பிட்ட, கைப்பிள்ளய எங்க உட்டுட்டுப் போறது. மொதலாளி ஐயா சொல்றாப்ல ராமாய பிள்ள எடுக்கக் கூப்பிட்டுப் போவமா? ” புருசனப் பாத்து கேக்கவும், முத்துக் கருப்பண்ணன் பதுலுக்கு,

“ராமாயி படிக்கட்டும்தா. அவள எப்பாடு பட்டாச்சும் படிக்க வைக்கனும்னு நா இருக்கேன். நீ இப்பிடி பேசுற. வேணும்னா பிள்ளயத் தூக்கிட்டு அவா பள்ளிக் கொடம் போட்டும். பிள்ளயும் பாத்துக்குவா, படிப்பும் படிச்சாப்ல இருக்கும்” என்றான்.

“அதுவுஞ்சரிதான்; ஏண்டி ராமாயி, பிள்ளயப் பாத்துக்கோ. மதியத்துக்கு சத்துணவு போடுவாகள்ள, தம்பிக்கும் ஊட்டிட்டு நீயும் சாப்டு. இந்தா பத்துப்பைசா. எதுக்கும் கையுல வச்சுக்கோ. அவெ அழுதாம்னா பிஸ்கத்து ஏதாச்சும் வாங்கிக்குடு. சூதானமா பாக்கணும். நானும் ஒங்கப்பனும் வெள்ளனத்துல வந்துருவோம். கூழக் குடுச்சுட்டு பள்ளிக் கொடத்துக்குப் போ. எங்களுக்கு நேராமாகிட்டே போகுது.”

எட்டு வயது ராமாயிக்குப் பள்ளிக் கொடம் போகவே புடிக்கல்ல. “ஏம்மா, நானு தம்பியத் தூக்குட்டு ஓங்கூட மொதலாளி

வீட்டுக்கு வாரேன்மா. அங்கவந்து பிள்ளையப் பாக்குரேன், இல்லாட்டி, நம்ம வீட்டுலயே பிள்ளய வச்சுக்குட்டு இருக்கேன். அப்பிடியே தம்பிய தூங்க வச்சுட்டு, பேச்சியம்மாகூட வயக்காட்டுச் செம போயி நெல்லுப் பெறக்கிட்டு, கம்மாயில மீனு புடுச்சிட்டு வாரேம்மா. இன்னைக்கு கோவால்சாமி ஐயா வயல்ல அறுப்புன்னு சொன்னாக."

ராமாயி சொன்னத கேட்டுக்கிட்டிருந்த முத்துக்கருப்பண்ணன், "பிள்ளயத் தூக்கிட்டு கம்மாக்கரப் பக்கமெல்லாம் போக்கூடாது. சும்மா நெரவட்டா இருக்கு. ஒன்னு கெடக்க ஒன்னு ஆகிப்போகும். ஒங்கம்ம சொல்ற மாதிரி பள்ளிக்கொடம் போனீன்னா ஒனக்குந் தம்பிக்கும் சூடா நாலுவா பருக்கையாவது கெடைக்கும். சொல்ற பேச்சக் கேளு. வீணா ஒத வாங்கிச் சாகாத பாத்துக்கோ" என்று கண்டுசனா சொல்லிப்போட, அய்யெம் பேச்சுக்கு அடங்கிப் போனா ராமாயி. கூழக்குடுச்சுட்டு, தம்பி கருப்பசாமிய இடுப்புல தூக்கிக்கிட்டு, கையில சாப்பாட்டுத் தட்டயும் எடுத்துக்கிட்டு, அம்மெ குடுத்த பத்து பைசாவையும் மறக்காம எடுத்து பாவாடையில் சொருகிக்கிட்டு பள்ளிக்கொடம் போனா ராமாயி.

காளியம்மாளும் முத்துக்கருப்பணனும் மொதலாளி வீட்டப் பாத்து வேலைக்குப் போனாக.

விடியக்காலம் போறவுக மசங்குனப் பெறகுதான் வீட்டுக்கு வருவாக. மொதலாளியோட வீட்லயும், வயக்காட்டலயும் வருசம்பூரா ஒழச்சுட்டு அதுக்குக் கூலியா தெனமும் மொதலாளி வீட்ல மிஞ்சுற பழைய சோறும், அறுப்புக் காலத்துல ரெண்டு மூட்ட நெல்லும் வாங்கியாருவாக.

ராமாயிதான் மொதப்புள்ள. அவளுக்கு நேர எளயவந்தான் கருப்பசாமி. ராமாயிக்குப் பெறகு பிள்ள நிக்காமலே போயி எட்டு வருசத்துக்குப் பெறகு இவெம் பெறந்திருக்கான்.

பள்ளிக் கொடத்துல போயி தம்பிய பக்கத்துல ஒக்கார வச்சுட்டு வாத்தியாரு ஒன்று ரெண்டுன்னு சொல்லிக் குடுத்தத திரும்பிச் சொல்லிக்கிட்டிருந்தா ராமாயி.

பக்கத்துல ஒக்காந்திருந்த சீனியம்மா, "ஏத்தா ராமாயி, ஒந்தம்பி வெளிக்கிருந்துட்டான்"னு ராமாயிட்ட சொல்லிட்டு எந்துருச்சா.

"சார் ராமாயி அவுக தம்பி வெளிக்கிருந்துட்டான்"னு சத்தமா சாருட்ட சொல்லிட்டு ஒக்காந்துட்டா சீனியம்மா.

வாத்தியாரு ஒடனே மூக்கப்புடுச்சுக்கிட்டார். "பச்சப் பிள்ளைகள் பள்ளிக் கொடத்துக்குக் கொண்டாரக் கூடாது, வெளியே தூக்கிட்டுப் போ."

அதட்டவும், ராமாயி தம்பியத் தூக்கிட்டுப் போயி வெளிய ஒக்கார வச்சுட்டு, மண்ணள்ளியாந்து போட்டு சுத்தப்படுத்துனா.

"இன்னைக்கு எதுக்கு பிள்ளயத் தூக்கியாந்துருக்க?" வாத்தியாரு கோவமா கேக்கவும்.

"எங்கய்யனும், அம்மயும் வேலைக்குப் போயிட்டாக சாரு. எங்க மொதலாளி பிள்ளயக் கொண்டாரக்கூடாதுன்னு வஞ்சாராம். அதான் எங்கம்மெ எனியத் தூக்கிட்டுப் போச்சொன்னா." ராமாயி பயந்துகிட்டு சொல்லி முடிச்சா.

"அதுக்காகப் பள்ளிக் கொடத்துக்குத் தூக்கியாந்து, இங்க பேண்டு பள்ளிக் கொடத்த நாத்தமெடுக்க வைக்கனுமா? வீச்சமெடுத்த கழுத. தூக்கிட்டு வீட்டுக்குப் போ." வாத்தியாருக்கு வந்த கோவத்துல கண்டமானிக்க கத்திட்டு மத்த பிள்ளகள கூப்டுகிட்டு வெளியே இருந்த மரத்தடில போயி ஒக்காந்துட்டாரு.

ராமாயி கீழ கெடந்த தாள எடுத்து தம்பிய தொடச்சு இடுப்புல தூக்கி வச்சுக்கிட்டு, சாப்பாட்டுத் தட்டயுந் தூக்கிக்கிட்டு வந்துட்டா.

வார வழில கம்மாயில அவா ஒட்ட புள்ளகள்ளாம் வெளாண்டுட்டு இருக்குரதப் பாத்துட்டு ராமாயியும் கம்மாய்க்குப் போனா. தம்பிய கீழ ஒக்கார வச்சுட்டு அவுக தெரு புள்ள பேச்சியம்மா கூட தண்ணிக்குள்ள போயி எதுத்தாப்பலயே இருந்து தம்பியப் பாத்துக்கிட்டே நீச்சலடுச்சுக்கிட்டு இருந்தா. ஏழெட்டு வருசத்துக்குப் பெறகு இப்பதாங் கம்மா ரொம்பி மட்டந்தட்டி தண்ணி போகுது, கலுங்கல்லுல பலகயப் புடுங்கிட்டுருக்காக. அங்னங்ன பானச்சாறு போட்டு மீனு புடிக்காக. தெருக்காடுக பூரா மீனுதான் வதியளிது. செலேபிக் கெண்ட ஒன்னொன்னும் கைத்தண்டி கால் தண்டி கடல் மீனு கெணக்கா பருத்துப் போயிக் கெடக்குது.

கம்மாக்கரய ஒட்டுனாப்ல வண்ணாப் பெயக துணிமணி வெளுத்துக்கிட்டு இருந்தாக. நண்டு நசுக்குமா பிள்ளக்காடுக தண்ணிக்குள்ள கெடந்து நீச்சலடிச்சுக்கிட்டு கெடந்தாக. மாடுகன்னு குளுப்பாட்டுறவுக கொஞ்சம் தள்ளிப்போயி நின்னு குளுப்பாட்டு னாக. தண்ணி கலங்காத எடத்துல போயி ரொம்பப் பெயல்க தூண்டுலு போட்டு மீனு புடுச்சுக்கிட்டு இருந்தானுக. கூடயே பொடிப்பெயல்க, கம்மாக்காவலுக்காரன் வாரானான்னு பாத்துக்கிட்டு நின்னானுக. கம்மாய குத்தக எடுத்தவன் வந்தாம்னா ஒரு பெயலயும் தூண்டுல போட உடமாட்டான். புடுச்ச மீனையும் புடுங்கிக்கிட்டு, தூண்டுலயும் புடுங்கி ஒடுச்சுப் போடுவான்.

தண்ணிக்குள்ள கெடந்த ராமாயி அவுகப்பன் மாடு குளுப் பாட்ட வாரதப் பாத்துட்டு கரைக்கு ஓடியாந்து பாவாடயக் கெட்டிக் கிட்டு தம்பியத் தூக்குனா.

இதப்பாத்துட்ட முத்துக்கருப்பண்ணன், "ஒன்னிய பள்ளிக் கொடம் போச்சொன்னா இங்க வந்து வெளாண்டுட்டா இருக்க. களவாணிப்பெயபுள்ள ரெண்டு வப்பு வச்சாத்தான் ஒழுங்குக்கு வருவ"

சொல்லிக்கிட்டே மாடுகள தண்ணிக்குள்ளப் பத்தி உட்டுட்டு ராமாய வெரட்டுனான்.

அவெங் கையுல அம்புடாம சுளுவா தட்டையுந் தூக்கிக்கிட்டு நேரா பள்ளிக்கொடத்துக்கு ஓடுனா ராமாயி.

அவா ஓடுனதப் பாத்துக்கிட்டு இருந்துட்டு, தண்ணில எறங்கி வண்டி மாடுகள தேச்சு குளுப்பாட்டுனான் முத்து. வண்டி மாடு ரெண்டையும் மொதல்ல குளுப்பாட்டிக் கெட்டிட்டு, பெறகு பசுவையும் எரும மாட்டயும் குளுப்பாட்டி அப்படியே பால் பண்ணைக்கும் பால் பீச்ச பத்திட்டுப் போச் சொல்லி மொதலாளி சொன்னாரு. வண்டிமாடுகளப் பத்திட்டு வந்து குளுப்பாட்டிக்கிட்டு இருக்கையிலேயே ஒரு மாடு நீந்திக்கிட்டே நடுக்கம்மாய்க்கு போயிருச்சு.

"எங்குட்டு போயிருவா, நீச்சலடிச்சுக்கிட்டே கரைக்கு வந்துருவா. அவளுக்கு மப்பப் பாத்தியா. மாடுகள்ளாம் இங்க நிக்கயில அவா மட்டும் ராங்கி புடுச்சு நடுக்கம்மாய்க்கு ஓடுறா பாரு."

தண்ணிக்குள்ள போன மாட்டப்பாத்துட்டு சொன்ன முத்துக் கருப்பண்ணன், கூட இருந்தவுககிட்ட மாடுகரைக்கு வரவும் புடுச்சு கெட்டச் சொல்லிட்டு பசுவையும், எருமையும் பத்திட்டு வர மொதலாளி வீட்டுக்குப் போனான்.

"என்னலே, வண்டிமாடுகளைப் பத்திட்டு வந்து தொழுவத்துல கெட்டிட்டு இதுகள புடுச்சிட்டுப் போலாம்ல? இதுகள குளுப் பாட்டிட்டு அந்தப் பாதைக்கே பால் பீச்ச கொண்டு போயிரலா முல்ல?" மொதலாளி முத்துக்கிட்டே சொன்னாரு.

"அதுல்லசாமி, ஒரு மாட்ட கம்மாக்கர ஆலமரத்துல கெட்டிட்டேன். இன்னொன்னு குளுப்பாட்டிக்கிட்டு இருக்கை யிலேயே நடுக்கம்மாய்க்கு ஓடிப்போச்சு. அங்ன ஆப்டவுககிட்ட மாட்டப்புடுச்சு கெட்டச் சொல்லிட்டு வந்துருக்கேன்." முத்து மொதலாளிட்ட சொன்னான்.

"அட சோம்பேறிப் பெயலே. ரெண்டாயிரம் மூவாயிரம் பெறுமான மாட்ட தண்ணிக்குள்ள உட்டுட்டு வந்தியா. புத்தி இருக்காடா? மாட்டுக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா ஒந்தோல உருச்சுப் போட்டேன்னு வச்சுக்கோ. வெவரங்கெட்டவனா இருக்கியே. போயி தண்ணில எறங்கி மாட்ட கரயப் பாத்து பத்திட்டு வாடா நாயே."

மொதலாளி கோவமா கத்தவும், மறுபடியும் கம்மாய்க்கு ஓடியாந்தான் முத்து.

மாடு இன்னமும் தண்ணிக்குள்ளதான் கெடந்தது. ஒடனே முத்து தண்ணிக்குள்ள எறங்கி நீச்சலடிச்சு மாட்ட நெருங்கிப் போயி கரயப்பாத்து பத்துனான். மாடு நீச்சலடிச்சுக்கிட்டே கரைக்கு வந்துச்சு.

மாட்டுக்குப் பின்னாலயே வந்த முத்துக்கு நடுக்கம்மாயில

இருந்து கரயப்பாக்கையில மனசு திக்குன்னு ஆயிருச்சு. சமுத்துரங் கெணக்கா கெடக்குற இம்புட்டுத் தண்ணில எப்பிடி கரைக்குப் போப் போறோம்னு மலச்சுப் போயி நின்னுட்டான். அந்தானிக்க கைரெண்டையும் தூக்கி கரயப் பாத்து ஆட்டிக்கிட்டு இருக்கை யிலேயே தண்ணிக்குள்ள பொசுக்குன்னு முங்கிட்டான்.

கரையில நின்னவுக, ஒடனே மெதக்குற பலகைய கொண்டாந்து அவனக்காப்பாத்த போறதுக்குள்ள முக்கா முக்கா மூனுதரம்மேல எந்துருச்சுட்டு ஒரேயடியா முங்கிப் போனான்.

செத்த நேரத்துல கம்மாக்கர பூரா கூட்டம். முத்துவோட பெணத்தையாவது தேடி எடுக்கணும்னு ஆளாளுக்கு பலகைகளையும் பனஞ்சட்டங்களையும் தண்ணிக்குள்ள தூக்கிப் போட்டு கம்மாயக் கலக்கித் தேடுனாக.

பள்ளிக்கொடம் உட்ட ஒடனே ராமாயி தம்பியத் தூக்கிக் கிட்டு வீட்டுக்கு வந்தா. வழில கம்மாயில கூட்டத்தப் பாத்துட்டு அவளும் முண்டியடுச்சு உள்ளபோயி பேச்சியம்மா நிக்குறதப் பாத்து, “பேச்சி, எதுக்குத்தா இன்னைக்கு இம்புட்டுக் கூட்டம் இங்குனக்குள்ள?” கேட்டுக்கிட்டே தம்பிய கீழ எறக்கி உட்டா.

“ஏத்தா, ஒங்கய்யணத்தான் தேடுறாக முண்ட. ஒங்கய்யெ நடுக்கம்மாய்க்குள்ள போயிட்டானாம். காணுமாம். அதான் எல்லாரும் போயி தேடுறாக” பேச்சியம்மா வெவரத்தச் சொன்னா.

“எங்கய்யனுக்குத்தான் நீச்சலடிக்கத் தெரியுமே. எம்புட்டு தண்ணினாலும் நீச்சலடிச்சு வந்துருமே.” கண்ணச்சொழட்டி, தலய ஆட்டிக்கிட்டுச் சொன்ன ராமாயி, தம்பியத் தூக்கிக்கிட்டு கலுங்கல்லுப் பக்கமா போனா.

அங்ன அவுக அம்மயும், இன்னும் நாலஞ்சு பொம்பளகளும் ஒக்காந்து கத்திக் கத்தி அழுதுக்கிட்டு இருந்ததப் பாத்துட்டு ராமாயி அம்மைக்கிட்ட ஓடுனா.

பிள்ளகளப் பாத்த காளியம்மா இன்னுங் கூப்பாடு போட்டு, “இந்தப் பிஞ்சுகள ஏங்கிட்டே உட்டுட்டுப் போயிட்டீகளே ஏ ராசா, ஏஞ்சாமி”ன்னு ஒப்பாரி வச்சா. அவுங்க அழுகுறதப் பாத்துட்டு ராமாயும் அழுதா.

“ஏ எய்யா... ஏ எய்யா....”

திரும்பித் திரும்பி அய்யனக் கூப்பிட்டுக்கிட்டு அழுதா. ராமாயோட அய்யனப் பெத்த தாத்தா அங்ன கண்ணீருங் கம்பலயுமா நின்னாரு. பெரியவுக நாலுபேரு அவருட்ட, “இந்த நெறகம்மாய்க் குள்ள போலாமா? செத்த ரோசன பண்ணிருக்கக்கூடாதா?ன்னு துக்கம் வெசாருச்சாக.

“அவெ விதி அம்புட்டுத்தான்னு இருந்துருக்கு.”

சொல்லியுஞ் சொல்லாம கதறி அழுதாரு முத்தோட அய்யா.

"மாடு திரும்பி வந்துருச்சு. மாட்டப் பத்தப் போனவன் இப்பிடி அநியாயமா மாண்டு போனானே."

"இப்பயும் அஞ்சுமணி ஆச்சு. பெணத்தை கண்டுபிடிக்க முடியலியே.... கொஞ்சந் தண்ணியா இருக்கு. இதுக்குள்ள எந்த எடத்துலன்னு தேடுறது. கலுங்கல்லுல வேற மட்டந்தட்டுது. தண்ணி போற போக்குல பெணத்த எங்குட்டுங் கொண்டு போயி வெட்டுக் குழிகளுக்குள்ள தள்ளிப் போட்டுதோ என்னமோ?"

இப்பிடி ஆளாளுக்குப் பேசிக்கிட்டு இருக்கையிலேயே பெணத்தை கண்டுபுடுச்சு பலகைல தூக்கிப் போட்டு கரைக்கு கொண்டு வந்தாக.

பெணங் கரைக்கு வந்ததும் கம்மாக் கரைல நின்ன அம்புட்டுச் சனமும் கத்தி ஒப்பாரி வச்சதுக.

ஊருக்குள்ள இருந்த பல சாதிச் சனமும் கரைக்கு வந்தாக. பெணத்தக் கொண்டு போயி கரையுல நின்ன ஆலமரத்தல சாத்தி வச்சாக.

காளியம்மா, பிள்ளைகளக் கூட்டிக்கிட்டுப் போயி பெணத்து மேல உழுந்து பரிதாவமா அழுதா. அவா போட்ட சத்தம் அந்த கம்மாக்கர, வயக்காடு பூரா பாவமா கேட்டுச்சு.

"நானும் இம்புட்டு வருசமா இந்த ஊருக்குள்ள இருக்கேன். இப்பிடி ஒரு அகாலச் சாவ நாம் பாத்ததில்ல."

"அந்த மொதலாளிப்பெய பாடையில போக. ஒரு மாட்டுக்காக இப்பிடி வெரட்டி சாகடுச்சிட்டானே. இவெ வெளங்குவானா. இவெங் குடும்பங் வெளங்குமா?

"மாடு போனா இன்னொன்னு வாங்கலாம், மனுசம் போனா வாங்க முடியுமா? அநியாயமா கொன்னுட்டானே."

"மொதலாளி என்னப்பா செய்வாரு? கம்மா ரொம்பும் போதெல்லாம் எப்பிடியும் ஒரு காவு கேக்கும். இந்த வாட்டி இவன பலி கேட்டுருச்சு."

"தண்ணியப் பாக்கவும் பேதலுச்சுப் போனான். இல்லாட்டி இதெல்லாம் ஒரு தண்ணியா. நீச்சலடிச்சு வந்துரலாமே."

"பேயி கீயி அடுச்சுருக்குமோ? அதான் பெய பயந்து போனான்."

"கம்மா நடுச்சென்டருல ஒரு சுழிவு இருக்கு. அதுல மாட்டிக் கிட்டா எப்பேர்ப்பட்டவனும் நீச்சலடுச்சு வரமுடியாது. முத்துப்பெய அதுலதான் மாட்டிருப்பான்னு நெனைக்கேன்."

"மொதலாளி வந்து பாத்தாரா?"

"சக்கிலியப் பெய சாவுக்கு எப்படிப்பா அவரு வருவாரு. ஆளு போய் சொன்னதுக்குக்கூட, மாடு தன்னால வந்து சேராதா என்ன,

இந்த கிறுக்குப்பெய வம்புக்குப் போயி செத்து தொலஞ்சிருக்கான்னு வஞ்சாராம்." இப்பிடி ஆளாளுக்கு சக்கிலியங்க பேசிட்டு பெணத்தத் தூக்கிப்போயி சுடுகாட்ல எருச்சுட்டு அவுகவுக வீடுகளுக்குப் போயிட்டாக.

பெறகு ராமாயி பள்ளிக்கொடம் போறத நிப்பாட்டிட்டு, அவுகம்மகூட மொதலாளி வீட்டுக்கு வேலைக்குப் போறா. பிள்ளயும் பாத்துக்கிட்டு மொதலாளி வீட்ல ஏண்ட வேல எடுத்துவேல செஞ் சுட்டு இருக்கா.

ஒரு நாளு சாயங்காலம் வேல முடுஞ்சு வீட்டுக்கு வந்தப்பெறகு தம்பி கருப்பசாமிய வச்சுக்கிட்டு தெருவிளக்கு வெளுச்சத்துல வெளாண்டுட்டு இருக்கா ராமாயி. அங்கு வந்த பேச்சியம்மாட்ட,

"ஏத்தா பேச்சி, நாங்க இப்ப பணக்காரரா ஆயிட்டோம் தெரியுமா?" சந்தோசமாச் சொன்னா ராமாயி.

"எங்கய்யெஞ் செத்ததுக்கு எங்க மொதலாளி நூறு ரூவா குடுத்தாரு. எங்கம்மைக் கிட்ட இப்ப நூறு ரூவா இருக்கு தெரியும்ல" பூருச்சுப் போயி சொன்ன ராமாயி, கையில இருந்த வெல்லக்கட்டிய நக்கிக்கிட்டா.

"கம்மாத் தண்ணிக்குள்ள உழுந்து செத்துட்டா நூறு ரூவா குடுப்பாகளா?" வெளங்காம கேட்டா பேச்சியம்மா.

"அய்யய்யோ அப்பிடி இல்லத்தா. ஒனக்கு ஒன்னுந் தெரிய மாட்டேங்கு. மொதலாளிக மாட்ட குளுப்பாட்ட போம் போது செத்தாத்தான் ரூவா குடுப்பாக."

சொல்லிக்கிட்டே வெல்லத்துல இத்திினிக்கானு கடுச்சு பேச்சியம்மாவுக்குக் குடுத்தா ராமாயி.

*சிறுகதை கதிர்*
***16 - 30 நவம்பர் 1993***

# 2. மொளகாப் பொடி

கெங்கம்மாளப் பத்தித் தெனமும் ஏதாச்சும் ஒரு சங்கதி ஊருக்குள்ள பெரஸ்தாவம் ஆயிட்டே இருக்கும். பச்சப்புள்ள அழுதாக்கூட, இந்தா கெங்கம்மா வாராருன்னு சொன்னாப் போதும், பயந்து போயி கப்சிப்னு ஆயிரும்.

நஞ்சயும் புஞ்சயுமா கெங்கம்மாளுக்கு ஏகப்பட்ட சொத்து. தென்னம்பாளைல கெடக்குற தேர கெணக்கா அந்தம்மா வகுறுங் கிகுறுமா வீங்கிப் போயிக் கெடந்தாக்கூட, சொத்துக்கு ஆசப்பட்டு கிட்டு பலராம நாயக்கரு மகன் செகந்நாத நாய்க்கரு கெங்கம் மாளுக்குத் தாலி கெட்டுனாரு. தாலிகெட்டி ரொம்பா வருசமா மலடியாத்தான் இருந்தா. ஒடம்பெல்லாம் ரொம்பாக் கொழுப்புங்ரது னாலதான் ஒத்தப்புள்ளயுஞ் செனிக்கலன்னு ஊர்ல சொல்லிக்கிட்டாக. பத்து பன்னெண்டு வருசங் கழுச்சாவிட்டி திடுதிப்புன்னு கெங்கம்மா கெர்ப்பமாகி ஒரு பொட்டச்சியப் பெத்துப் போட்டா. அத வளத்து ஆளாக்கி எங்குட்டோ ரொம்பாத் தொலவட்ல பட்டணத்துல கெட்டிக் குடுத்துட்டு கெங்கம்மா மட்டும் ஒருதி ஒத்தப் பேரியா வீட்ல இருக்கா. கூடப்பெறந்தவுகளும் யாருமில்ல. தாயுந் தகப்பனுஞ் செத்து பலவருசமாச்சு. நெல நீச்சப் பாத்துக்கிட்டு, வெள்ளாம வெளச்சல்ல கெடைக்குரத பட்டணத்துக்கு மகா வீட்டுக்கு அனுப்பி வச்சுருவா. மகாக்காரியும் வருசத்துக்கு ரெண்டு தடவ வந்து அரிசி தவசி பயறு பச்சன்னு அம்புட்டையும் வாரிக்கிட்டுப் போயிருவா.

கெங்கம்மாளோட வீட்டப் பாத்தாப் பெரிய பங்களாகெணக்கா இருக்குமாம். மே மாடி கீமாடி வச்சுக் கெட்டுன வீடு. அம்மந்தண்டி வீட்டுக்குள்ள இந்தம்மா என்னன்னுதான் ஒத்தயில குடியிருக்கான்னு பேசிக்கிருவாக. அவளோட தாத்தா செவராம நாய்க்கரு காலத்துல கெட்ன வீடாம் அது. காலனில குடியிருக்ர எசக்கி முத்தோட குடும்பந்தான் பரம்பர பரம்பரையா அந்த வீட்டுக்கு ஏண்ட வேல எடுத்த வேல செஞ்சுக்கிட்டு பண்ணவேல பாட்ட வேலயுஞ் செய்ராக. எசக்கியோட மகன் கருத்தப்பாண்டிக்கு கெங்கம்மாளக் கண்டாலே பச்சநாவியா இருக்கும். எப்படியாச்சும் அங்கருந்து பிச்சுக்கிட்டு ஓடியாந்துரலாம்னு பாக்கான். ஆனா அவுகய்யா எசக்கி வாங்குன கடனு தீருந்தட்டிக்கும் வேற எங்குட்டும் வேல வெட்டிக்குப் போகக்கூடாதுன்னு கெங்கம்மா புடுச்சு வச்சுக்கிட்டு இருக்கா.

கெங்கம்மாளக் கண்டாலே நமக்கு மூச்சு முட்டிக்கிட்டு வரும்.

அம்மந்தண்டி ஒடம்பு. கையயுங் காலையும் பாத்தா ஒவ்வொன்னும் ஆனத்தண்டிக் குதுரத்தண்டி இருக்கும். ஆனா இம்மந்தண்டிச் சரீரத்த இழுத்துக்கிட்டு அந்தம்மாளும் வயலு, வரப்பு, தோப்பு தொரவுன்னு சலிக்காம சுத்திக்கிட்டுத் திரிவா. செத்த நேரம் வீட்ல சும்மான்னு ஒக்கார மாட்டா. இவா பேர்ல எப்பிடியும் அம்பது அறுவது ஏக்கரு நெலமிருக்குமாம். அம்புட்டும் பொன்னு போட்டா பொன்னு வெளைர பூமியாம். காடுகரைகளுக்குள்ள ஒரு சனத்த மொழய உடமாட்டா. வேல வெட்டிக்கு ஆளுகளக் கூப்புட்டாலும் கண்ணுக் குள்ள வெளக்கெண்ணய ஊத்திக்கிட்டு கங்காணிப்பா.

காலனில இருக்குர அம்புட்டுப் பேரும் கெங்கம்மாளப் பாத்து பயந்துக்கிட்டு கெடந்தாலும் பச்சையம்மா மட்டும் இத்தினிக்கூட பயப்படமாட்டா. சும்மாயே இவா ரொம்பாக் குசும்புக்காரி. வீம்புக்குனாலும் கெங்கம்மா பிஞ்சைக்குத் தான் புல்லுப் பெறக்கப் போவா. வேற ஒரு சனமும் அங்க போகாதது இவளுக்கு நல்ல வேட்டையாத்தான் இருக்கும். நல்லா மண்டிக் கெடக்குர புல்ல செமக்கமாட்டாமெ அறுத்துக் கெட்டிக்கிட்டு வருவா. வந்துட்டு சும்மாயும் இருக்க மாட்டா. என்னமோ சாதிக்க முடியாதத சாதிச்சுட்டது கெணக்கா, பிஞ்சைல கெடந்த புல்லப் பத்தியும், ரொம்பாத் துணுச்சலா புல்லறுத்துக் கெட்டிக் கொண்டாந்ததப் பத்தியும் தெருக்காட்ல பேசிக்கிட்டுத்திரிவா.

ஒரு தடவ கொழாயடில தண்ணி புடிக்க வந்த பச்சையம்மா ரொம்பாப் பெருமையா பீத்திக்கிட்டு இருந்தா. "இன்னைக்கு கெங்கம்மாளோட மாமரத்துப் பிஞ்சைக்குப் புல்லுப் பெறக்கப் போனேனா... புல்லுன்னா புல்லு அப்பிடி வளந்து கெடக்கு. நல்லா அறுத்துக் கெட்டிக்கிட்டு, கெட்டத்தூக்குனா ஒத்தைல தூக்கித் தலைல வைக்க முடியல. முந்தானிய சும்மாடு கட்டிதலைல வச்சுக்கிட்டு யாராச்சும் அங்குட்டு வந்தா கெட்டத் தூக்கி உடச் சொல்லலாம்னு சுத்திமுத்திப் பாத்துக்கிட்டுருந்தேன். ஒரு காக்கா குருவியக்கூட காணும். நேரமாகிக்கிட்டே இருக்கு. சரி கொஞ்சம் புல்ல அள்ளிப் போட்டுட்டு கெட்டித் தூக்கியாராலாம்னு பாத்தா, அறுத்த புல்ல என்னன்னு அள்ளிப் போட்டுட்டு வரன்னு மனசு கேக்கல. சரி இன்னஞ் செத்த நேரம் பாப்பமுன்னு சொல்லிட்டு அங்ன நின்ன மாமரத்துல கெடந்த ரெண்டு காயப்புடுங்கி, புல்லறுத்த பன்னறு வாளக் கொண்டி மாங்காய வெட்டித் தின்னேன். வகுறுவேற பசில கிள்ளுதே. யே....பாதகத்தி மக்கா...காயின்னா....காயி...அப்பிடி ஒரு காயி. தேனமிர்தமா இருக்கு. சப்பட்டக்காயி பாத்துக்கோ. அம்புட்டு ருசியா இருக்கு. இத்தினிக்கூடப் புளிக்கல. தின்னுக்கிட்டு இருக்கைல கெங்கம்மாளே வந்துட்டா. நானு சட்டுன்னு மாங்காய அடிமுந்தில மறச்சு வச்சுக்கிட்டு அவாகிட்டயே புல்லுக் கெட்டத் தூக்கி உடச் சொன்னேன். அந்தம்மாளுக்கு வந்துச்சே... வெளம். அத்துவானக்

காட்டுக்குள்ள ஆனக்குட்டிக்கு மதம் புடுச்சது கெணக்கா ஆடுரா. எங்குட்டுக் கெடந்துதான் எனக்கு அம்புட்டுத் தெம்பு வந்துச்சோ. மூச்சப் புடுச்சுக்குட்டு புல்லுக்கெட்டத் தூக்கித் தலைல வச்சுக்கிட்டு ஓட்டமும் நடையுமா ஓடியாந்துட்டேன்.”

“நீ சும்மானாலும் படங்காமிக்காத. ஒனிய சும்மாவா உட்டா அவா?” அங்ன நின்ன பர்வதம் கேட்டா.

“என்ன செஞ்சுருவாங்ர? ஒரு மயித்தக்கூட அசைக்க முடியாது. கெங்கம்மா பத்தடி பாஞ்சா, இந்தப் பச்சையம்மா, பதுனெட்டடி பாய்வா. ஆமா,” வீராப்பாச் சொல்லிக்கிட்டுருந்தவா எந்துருச்சு தண்ணி புடிக்கக் கொடத்தத் தூக்கிக்கிட்டுப் போனா.

ரெண்டு மூனு நாளுக் கழுச்சு பச்சையம்மா, கூட ரெண்டு பொம்பளைகளக் கூப்ட்டுக்கிட்டு கெங்கம்மா பிஞ்சைல புல்லுப் பெறக்கப் போனா. வரப்புல புல்லறுத்துக்கிட்டு இருக்கைல கெங்கம்மா வந்துட்டா. வந்தவா பூன நடந்த மாதிரியே திரும்பி வீட்டுக்குப் போயி தாளுல மொளகாப் பொடிய அள்ளிக் கொண்டாந்தா. வீட்டுக்கிட்ட பிஞ்ச இருந்தது அவளுக்கு நல்ல தோதாப் போச்சு. நேரா பச்சையம்மா புல்லறுத்துக்கிட்டுருந்த வரப்புல வந்து, “ஏண்டி, களவாணிக் கழுத, வேற எடமில்லன்னா இங்கயே வந்து ஏங்கழுத்தறுக்ர? நீயி ரொம்பாத் திமுருக்காரின்னு ஒன்னோட காலனி பொம்பளைகளே சொல்லுவாளுக. அது சரியாத்தான் இருக்கு. இந்த கெங்கம்மா காடுன்னா அம்புட்டுச் சனமும் அஞ்சி ஒடுங்கிப் போகுங்க. ஒனக்கு மட்டும் இம்புட்டு ராங்கியா?” சொல்லிக்கிட்டே மொளகாப் பொடிய அள்ளி பச்சையம்மாளோட கண்ணுக்குள்ள தூவிட்டா.

திடுதிப்புன்னு மொளகாப்பொடி கண்ணுல படவும் பச்சையம் மாளுக்குக் கெட்ட கோவம் வந்துருச்சு. திகுதிகுன்னு எருஞ்ச கண்ண மாராப்புட்ட தொடச்சுக்கிட்டே கண்டமாணிக்கா வசவுல கூடிட்டா. “சீ, நீயெல்லாம் ஒரு பொம்பளதானா? சும்மா கெடக்குர புல்ல அறுத்ததுக்கு கண்ணுல மொளகாப் பொடியத்தூவுறியே. என்ன இங்க அந்தானிக்க காயுங்கனியுமா வெளஞ்சு கெடக்கு வந்து களவாண்டுட்டுப் போயிட்டாக? பொத்தச் சொரக்கா கெணக்கா அவா மூஞ்சியும் மொகரயும் பாரு. எப்பப்பாரு பத்துமாத்தச் சூலிகெணக்கா வகுத்தத் தள்ளிக்கிட்டு வந்துருவா முண்ட, ஓங் கொணத்தக் கண்டு தான் ஒத்தப் புள்ளயோட ஓம்புருசன் போயிட்டான்.”

வஞ்சுக்கிட்டே புல்ல அருச்சுக் கெட்டுனா. கூட வந்த ரெண்டு பேத்தயும் கூப்டு, “ஏ… டிகா, சட்டுன்னு புல்லக் கெட்டித் தூக்குங்கடி. கண்ணுவேற பகபகன்னு எரியுது. பலவட்ர முண்ட, பாடைல போக. கண்ண முழுச்சுப் பாக்க முடியலியே ஓங்கைல குட்டம்பத்த. குலுக்க கெணக்கா வந்து நிக்கிரா பாரு செத்த நாயி,” சொல்லிக்கிட்டே புல்லக்கட்டித் தூக்கிட்டு வந்தா. கூட வந்தவளுகளும் தப்புச்சோம்

பொழச்சோம்னு ஓடியாந்துட்டாளுக.

கெங்கம்மாளும் சும்மா உடல. மானாவாரிக்காப் பேசுனா. பிஞ்சய உட்டுட்டு வெளிய வந்தப்பெறகும் பச்சையம்மா கத்துனா; "இன்னைக்குக் கண்ணுக்குள்ள மொளகாப் பொடிய போட்டுடோம்னு சவுடாலா நிக்காத, சக்காளத்தி; கொள்ளிக் கண்ணுமுண்ட. பேரப்பாரு பேர...கெங்கம்மா நொள்ளியம்மா.... ஓ மூஞ்சியப் பாத்தா பேல்ரநாயிகூட எந்திரிக்காது....வந்துட்டா....எலிவாலு கெணக்கா ஒரு சடயயும் போட்டு ஆட்டிக்கிட்டு."

அன்னைக்குத் தெருவுல பூராம் இதே பேச்சுத்தான். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வெதமாப் பேசிக்கிட்டாக.

"அந்தம்மாளப் பத்தித் தெருஞ்சுக்கிட்டே இவளுக எதுக்கு அங்க போயி புல்லு பெறக்குராளுக. மப்புத்தான?"

"என்ன இருந்தாலும் அந்தம்மாளுக்கு இம்புட்டு மொனகூடாது தாயே. மெனக்குட்டுப் போயி மொளகாப் பொடிய அள்ளியாந்து தூவி உட்டுரக்காளே. கண்ணு குருடாப் போனா போனதுதான். இந்தப் புல்லறுத்ததுக்கே இப்பிடிச் செஞ்சானா, வெள்ளாம வெளச்சல்ல கைய வச்சுட்டா என்னத்த? கொலயே செஞ்சுருவா போலுக்கோ பாதகத்தி."

"எல்லா சம்சாரிக காடுகரைகள்ளயுந்தான் புல்லறுக்கப் போறோம். மாடுகன்னு வச்சு பொழைக்குர நம்ம வேற எங்குட்டுப் போயி புல்லறுக்குரதாம்? என்னமோ இவாதான் அருவசமா ஒலகத்துல இல்லாத பிஞ்ச வச்சுருக்கா."

"யே....அந்தம்மாளப் பத்திப் பேசுரதெல்லாம் அக்குருமம். நண்டு கொளுத்தா வளைல நிக்காதுங்ர சாடைல, இந்தப் பச்சையம்மா முண்டைக்கு கொழுப்புப் புடிச்சுப் போயிதான அவா பிஞ்சைக்குச் செமயே போறா? அந்தம்மாளோட கொணந்தெருஞ்சு ஒரு சாதிசனம் அவா பிஞ்சைக்குள்ள மொழையாது. இவா மட்டும் என்ன பெரிய கவர்னரு பொஞ்சாதி பொறுக்கோ..... போயிருக்கா."

இந்த வெசயத்துக்குப் பெறகு கெங்கம்மாள அம்புட்டுப் பேரும் மொளகாப்பொடின்னு கூப்பிட ஆரம்புச்சாக. அந்தம்மாளுக்கு எதுக்க மொளகாப்பொடின்னு சொல்லிட்டாப் போதும், கோவம் மூக்குமேல வந்து நிக்கும். பச்சையம்மா கூட்டாளிகள்ளாம் மொளகாப்பொடி மொளகாப்பொடின்னு சொல்லியே அந்தம்மாள உசுக்காட்டி உட்டுட்டு கும்மரச்சம் போடுவாளுக.

ஒருநா அப்பிடித்தான் பச்சையம்மாளும் இன்னும் நாலஞ்சு பொம்பளைகளும் எள்ளுக்கள வெட்டிட்டு வீட்டுக்கு வந்துக்கிட்டு ருந்தாளுக. தூரத்துல வரும்போதே கெங்கம்மா வாரதப் பாத்துட்டு பச்சையம்மா எடக்கா சொன்னா, "ஏடியா நம்மூரு ரோதைல இப்ப மொளகாப்பொடி அரைக்குர மிசினு வந்துருக்காம். நம்ம கீழத்தெரு வாத்தியாரு பொண்டாட்டி இப்ப அம்மிக்கல்லுல மசால

அரைக்கமாட்டாளாம். சம்சாரிக வீடுக கெணக்கா மொளகாப்பொடிய அரச்சு வச்சுக்கிட்டு வெஞ்சனம் வைக்காளாம்."

"அப்டியா மதினி. மொளகாப்பொடி அரச்சு வச்சுக்கிட்டாச் சவுரியந்தான். வெஞ்சனத்துக்கும் போடலாம். புல்லுப் பெறக்குர சனத்துக கண்ணுகள்ளயும் போட்டு உடலாம்." சிட்டம்மா சொல்லி முடிக்கவும் கெங்கம்மா கிட்டத்துல வரவும் சரியா இருந்துச்சு.

ரெண்டெட்டு தள்ளிப் போயிட்டு கெங்கம்மா கோவமா கத்துனா. "ஏண்டி, நாரமுண்ட, யாரப் பாத்து சாடப் பேச்சு பேசிக் கிட்டுப் போற? ஒன்னுமில்லாத வெறுங்கழுத பேசர பேச்சப்பாரு. திமுரு புடுச்ச நாயி."

இதக்கேட்டதும் பச்சையம்மாளுக்கு ஆங்காரமா வந்துருச்சு. கூழுக்கொண்டுவந்த தூக்குச்சட்டியத் தூக்கிக்கிட்டு அடிக்கப் போனா. மத்த பொம்பளைகளும் வசவுல கூடிட்டாளுக. ஒத்தயில எம்புட்டுக் கிட்ட கெங்கம்மா மறு பேச்சுபேசல. மேமூச்சுக் கீமூச்சு வாங்க ஒரே ஓட்டமா ஓடுனா.

இது நடந்து ரெண்டு வாரங்கழுச்சு மேலக்காட்டுச் செம களவெட்டுக்குப் போன ஒரு பத்துப் பன்னெண்டு பொம்பளைக வேல மெனக்கிட்டுப் போயி வீட்டுக்கு திரும்பி வந்துக்கிட்டுருந்தாளுக. வரும்போதே பச்சையம்மா சொன்னா "வேலையுமில்ல வெட்டி யுமில்ல இன்னைக்கு என்னத்தக் கொண்டி கஞ்சி காச்சரது என்ன பொழப்போ நம்ம பொழப்பு. வேலைக்குப் போனா கஞ்சி; இல்லன்னா தண்ணியக் குடுச்சுட்டு படுக்க வேண்டியதுதான்."

"ஏ... ஓம்புருசஞ் சம்பாரிச்சுட்டு வருவாம்ல. பெறகென்ன?" ஆத்தியம்மா கேட்டா.

"சும்மா கெட; அந்தப் பெயலா? ரெண்டு மாசமா வேல யுமில்லாமெ வெட்டியுமில்லாமக் கெடந்துட்டு போன மாசந்தான் எங்குட்டோ கெணத்து வெட்டு வேலைக்கு இருப்பு இருந்து வேல செய்யப் போயிருக்கான். போனவெ நெலச்சு நின்னு வேல செய்வானா, எடவழில ஓடியாந்துருவானான்னு நெனச்சுட்டுக் கெடக்கேன். ஒடம்பு வணங்கி வேல செய்யமாட்டான். அவனயா ஆளோட சேக்கச் சொல்ற?" பச்சையம்மா சொல்லிக்கிட்டே அங்ன ஆப்ட பருத்திக் காட்டுகள்ள வெடுச்ச பருத்தி, முத்துன காய்களப் புடுங்கி புடுங்கி மடிக்குள்ள வச்சா. இவளப்பாத்துட்டு கூட வந்த அம்புட்டுப் பேரும் புடுங்குனாளுக. அந்தா இந்தானு ஆளுக்கு ஒரு செம பருத்திக்காய புடுங்கிக்கிட்டு வாரவழில இருந்த கெங்கம்மா காட்லயும் கைவருசயக் காட்டுனாளுக. சொல்லி வச்சது கெணக்கா கெங்கம்மா பருத்திக்காட்டுக்கு வந்துட்டா. வந்தவா பச்சையம்மாளப் பாத்துட்டு, எப்பிடியும் இந்தச் சிறுக்கிகள இன்னைக்கு ரெண்டுல ஒன்னு பாத்துரனும்னு மனசுல கருவிக்கிட்டே திரும்பி தெருவுக்குள்ள போனா.

அன்னியாரம் கெங்கம்மா தெருவுல என்ன சோலியாவோ போலிசு இன்சுபெக்டரும் இன்ன ரெண்டு போலிசுக்காரனுகளும் வந்திருந்தானுக. போலிசுஇன்சுபெக்டருட்ட சொல்லி கையோட ரெண்டு போலிசுக்காரனுகளையும் காட்டுக்கே கூட்டியாந்துட்டா கெங்கம்மா. அந்த இன்சுபெக்டர் அவுக ஆளுக. கெங்கம்மாளோட அண்ண சின்னச்சாமி நாயக்கரு வீட்டு மே மாடியிலதான் இன்சுபெக்டர் வந்து தங்கிப் போயிருப்பார். அந்தப் பழக்கத்துல சாமாத்தியமா போலிசுக்காரனுகள கூப்புட்டுட்டு வந்துட்டா.

பதறிப் பதறி பருத்தி புடுங்கிக்கிட்டுருந்த பச்சையம்மாளும், மத்த பொம்பளைகளும் திடீர்னு போலிசுக்காரனுகளோட கெங்கம்மா வரவும் திடுக்னு ஆயிட்டாளுக. மடமடன்னு மூட்ட முடுச்சுகள தூக்கிக்கிட்டு ஓடியாந்தாளுக; ஓடியாரும்போதே பச்சையம்மா சொன்னா, “இந்த மொளகாப் பொடியக் கண்டீகளா. போயி போலிசுக்காரன கூட்டியாந்துருக்கா. நம்மள மாட்ட வைக்கணும்னே கங்கணங் கெட்டிக்கிட்டு வந்துருக்கா. எல்லாந் துட்டுல பேசுது.”

“ஏ…சும்மா இருக்கா. ஓம்பாட்டுக்கு என்னத்தயாவது கண்டமாணிக்காப் பேசி காரியத்தக் கெடுத்துப் போடாத. நெளிவு சுழிவாப் பேசி வீட்டுக்குப் போற வழியப்பாரு. எக்குத்தப்பா வந்து இன்னைக்கு மாட்டிக்கிட்டோம்.” மாடத்தி சொன்னா.

“இப்பிடி எத்தன நாளா அடுத்தவங் காட்ல களவாண்டே பொழப்பு நடத்துறீக? அம்புட்டுப் பேரும் பருத்தியப் போட்டுட்டு டேசனுக்கு நட,” ஒரு போலிசுக்காரன் சொன்னான்.

ஒடனே பச்சையம்மா, “எதுக்குப் பருத்தியப் போட்டுட்டு டேசனுக்கு வரனும்? பூராப்பருத்தியுமா இங்னக்குள்ள எடுத்தோம்? நாங்க தன்னால மேற்க அழிவுகாட்டுகள்ள இருந்துல பெறக்கிக் கொண்டாரோம். இந்தா இம்புட்டுத்தான் இங்ன எடுத்தது.” சொல்லிக்கிட்டே மடில இருந்த பருத்திய கீழ தட்டுனா.

மூட்ட முடுச்செல்லாம் அவுத்துக் கொட்டு. அது அழிவு காட்டுப் பருத்தியான்னு பாத்துருவோம்,” கெங்கம்மா சொன்னா.

போலிசுக்காரனுகளும் உடாப்புடியாச் சொல்லவும் மூட்ட முடுச்சுகள அவுத்துக் கொட்டுனாளுக. அம்புட்டும் நல்ல பருத்தியா இருக்கவும், “இதா அழிவுகாட்டுப் பருத்தி? இப்பிடி அழிமாண்டஞ் செஞ்சா வெள்ளாம வச்சவுக என்ன லாவங் காணமுடியும்? எல்லாரும் டேசனுக்கு வா,”ன்னு சொல்லி கெங்கம்மாளோட டிராக்டர்ல அம்புட்டுப் பேத்தயும் ஏத்திட்டுப் போனானுக.

போற வழில வண்டிக்குள்ளயே, ஒருத்திய மாத்தி ஒருத்தி குத்தஞ் சொல்லிக்கிட்டு, ஒருத்தி மேல ஒருத்தி பழிபோட்டுக்கிட்டே போனாளுக. பச்சையம்மாதான் அவுகள அடக்குனா.

“இப்ப எதுக்குடி மாறி மாறி சண்டக்காடு போடுறீக. டேசன்ல

போயி அந்தமாணிக்க என்ன தலையவா சீவிடப் போறாக? சும்மாதான் வாங்க தாய்கா. எனக்கு வேற ஒன்னுக்கு முடுத்து நெருக்குது."

பச்சையம்மா சொல்லி முடிக்கவும் வீராயி சொன்னா, " இப்பிடி களவாண்டு மாட்டிக்கிட்டது கேவலமில்லையாக்கும்? என்னைக் காவது நம்ம பொம்பளைக இப்பிடி களவாண்டு, புடிபட்டு வண்டில டேசனுக்குப் போயிருக்காகளா? ஒன்னாலதான் நாங்களும் எம்புட்டுக் கிட்டோம். ரோசம் மானம் ஈனமில்லாமெ பேசாத நீயெல்லாம்."

"ஏ....இதுல என்ன பெரிய ரோசம் மானம்ங்ர? நம்ம என்ன களவாண்டு கொண்டுபோயி அங்க என்ன மெத்தவீடா கெட்டப் போறோம்? இல்லன்னா காதுல கழுத்துல நகநட்டு செஞ்சு போடப் போறமோ? ஏதோ பசியில்லாமெ கஞ்சி குடிக்கனும்னா களவாண்டாத்தான் முடியுது. விக்கிர வெலவாசில நம்ம கூலியக் கொண்டு வகுராற கஞ்சி குடிக்க முடிதா? சொல்லு. இன்னைக்கு ஒரு சல்லிக்காசு வருமானமில்ல. வேல செஞ்சுட்டு கூலி வாங்கிட்டுப் போனாலே குருநாக்கஞ்சியும், ரசமுந்தான் நமக்குக் கெடச்ச கெதி. இன்னைக்குப் போயி பருத்திய வித்துட்டு கருவாட்டுத் தண்ணி வைக்கலாம்னு இருந்தேன். பாவிப்பெயமகா வந்து கெடுத்துப் போட்டா," பச்சையம்மா பதுலுக்குச் சொல்லிட்டு போலிசுக்காரங் கிட்ட சொன்னா, "ஐயா, இங்னக்குள்ள செத்த எறக்கி உடுங்க. ஒன்னுக்கிருந்துட்டு ஓடியாந்துர்ரேன்."

"எங்னக்குள்ளயும் எறக்கி உட முடியாது. நேரா டேசன்ல கொண்டு போயிதான் எறக்குவோம். பேசாமெ வாய மூடிக்கிட்டு வாங்க," போலீசுக்காரன் சொன்னான்.

"இவெ என்னடி பள்ளிக்கொடத்துல பச்சப் புள்ளைகளப் பாத்து வாய மூடுன்னு சொல்றது கெணக்கா நம்மளப் பாத்துச் சொல்றான். இப்ப என்ன வாயத் தொறந்து வச்சுக்கிட்டா வாரோம்?" பச்சையம்மா சொல்லிட்டுச் சிருச்சா. ஒடனே அம்புட்டுப் பேரும் கொல்லுன்னு சிருச்சாளுக. பெறகு டேசன் வரைக்கும் ஒரே கேலியுங் கிண்டலுமாப் பேசிக்கிட்டு நக்கலு பண்ணிச் சிருச்சுக்கிட்டே வந்தாளுக.

காளத்தி கெழவி அம்புட்டுப் பேத்தயும் வஞ்சு அடக்குனா, "இதுல உக்காந்து வரவா முடிது? குண்டக்க மண்டக்காத் தூக்கித் தூக்கிப் போடுது. என்ன எழவு வண்டியோ? இதுல இந்தப் பெய மக்களுக்கு என்னமோ திருநாக் கூட்டத்துக்குப் போறது கெணக்கா சிரிப்பாணி அள்ளுது. செத்த சும்மா வாங்கடி."

பச்சையம்மா பதுலுக்குச் சொன்னா, "சும்மா கெட பெரிமெ. இந்த வண்டி ஆட்டுற ஆட்டத்துல எனக்கு மோத்திரம் முட்டிக்கிட்டு நிக்கிது. இந்தப் பெயலுக ஒன்னுக்கிருக்கக்கூட உடமாட்டேங்கானுக. பேறுகால வலிகெணக்கா அடிவகுறெல்லாம் குன்னப் புடுச்சுக்கிட்டு வலிக்குது. இன்னஞ் செத்த நேரம் போனா வண்டிக்குள்ளயே இருந்துருவம் பொறுக்கோ; அப்பிடி இருக்கு."

டேசன் வந்துரவும் அம்புட்டுப் பேரையும் கீழ எறங்கச் சொன்னானுக. போலிசுக்காரனுக. எறங்குன ஒடனே வேகவேகமா சீலயத் தூக்கிப் புடுச்சு நின்னுக்கிட்டே பச்சையம்மா மோண்டா. மத்தவுகளும் அவளக் கெணக்காவே நின்ன மாணிக்கா சடச்சடன்னு மோண்டாளுக. இதப் பார்த்த போலிசுக்காரன், "சீ...வீச்சமெடுத்த கழுதைக. டேசனயே நாறடுச்சுருவாளுக," சொல்லிக்கிட்டு உள்ள போயிட்டான்.

மோண்டு முடிக்கவும் பச்சையம்மா, "ஐயா, ஆத்துரத்த அடக்குனாலும் மோத்துரத்த அடக்க முடியாது. இதுக்குத்தான் எடவழில எறக்கி உடச் சொன்னேன். நீங்கதான் நேரா டேசன்ல வந்துதான் ஒன்னுக்கிருக்கனும்னு கண்டுசனா சொல்லி இங்க வந்து எறக்கி உட்டுட்டீக," சொல்லிக்கிட்டு சிருச்சா.

"சரி, சரி சட்டுன்னு இருந்துட்டு வாங்கடி நேரமாகுது. மோண்டப் பெறகுதான் சூசுவான்னு நிக்க முடியுது." சொல்லிட்டு நடயக் கெட்டுனா பச்சையம்மா. மத்த பொம்பளைகளும் அவளோட சேந்துக்கிட்டு வீட்டுக்குக் கெளம்புனாளுக. இதப் பாத்த போலிசுக்காரன் கத்துனான். "ஏய்....ஏய்....எங்க ஓடுறீக. உள்ள வந்த ஆளுக்கு பத்துரூவா தெண்டங் கெட்டிட்டுப் போ."

"என்ன ஏய் ஓய்னுகிட்டு. நீ என்ன தாலி கெட்ன புருசனா ஏய்னு கூப்டுற? நல்லா வம்பாரத்துக்குப் பெறக்ன பருத்தியயும் போடச் சொல்லிட்டு பத்துரூவா தெண்டமுங் கெட்டனுமாம்ல. இது நல்ல கோளாறுதாண்டி. வீட்ல போயி இன்னைக்கு ஒரு குருநாக்கூட வாங்கி ஒல வைக்க முடியாம நாங்க கெடக்கோம். இவனுக்குப் பத்துரூவா குடுக்கனுமாம் பத்துரூவா. யார ஏமாத்தலாம்னு அலைறீக. இன்னைக்குப் பொழுதுக்கு ஒர பொடிமட்ட வாங்கக்கூட துட்டு கெடையாது பாத்துக்கோ," சொல்லிக்கிட்டே சீலய அவுத்து ஒதறிக் காட்டுனா பச்சையம்மா.

"அதெல்லாந் தெரியாது. தெண்டங் கெட்டுனாத்தான் இங்கருந்து போகலாம்," போலிசுக்காரன் சொன்னான்.

"இதென்னடி பெரிய எழவாப் போச்சு. குருடன ராசமுழி முழிக்கச் சொன்ன கதையாவுல இருக்கு. என்னத்த வச்சு தெண்டங் கெட்டுறது? சரி உடாட்டி போரும்யா. நாங்க இங்கயே இருக்கோம். ரவைக்குச் சோத்தப் போடுங்க, தின்னுட்டு விடியவும் வேல வெட்டிக்குப் போயிட்டு வந்து தெண்டங் கெட்டுறோம். ஏ வாங்கடி ஒக்காருவோம்," சொல்லிக்கிட்டு பச்சையம்மா ஒக்காந்தா. கூடவே அம்புட்டுப் பேரும் ஒக்காந்தாளுக. காளத்தி கெழவி முந்தானய விருச்சு அங்னக்குள்ளயே படுத்துக்கிட்டா. அந்நியாரம் இன்சு பெக்டருக்கு மோட்டாருல வந்து எறங்குனாரு. ஒடனே அங்ன நின்ன ரெண்டு போலிசுக்காரனுக கொல தெறிக்க ஓடியாந்து இவளுகள எந்துருச்சு தள்ளிப் போயி நிக்கச் சொன்னானுக. இதப்பாத்துட்டு

பச்சையம்மா சொன்னா, "இவனுக என்னடி இந்த டக்கு மோட்டாரக் கண்டதும் இந்த ஓட்டம் ஓடிக்கிட்டுத் திரிரானுக. இங்னகுள்ள இன்சுபெக்டரக் கண்டுட்டு பேண்டு கழிரவனுக வீட்டுகள்ள போயிருப்பாரு. மீசையத் திருக்கி உட்டுகிட்டு பொண்டாட்டிமார்க கிட்ட வீரம் பேசுவானுக."

"ஏ... சும்மா இரு மாதிரி. ஒ வெங்கலத் தொண்டய வச்சுக்கிட்டுச் செத்த நேரம் சும்மா இருதாயே. ஒரு அதிகாரி வந்தா அப்பிடித்தான் கறிக்கொடல கைல புடுச்சுக்கிட்டு இருப்பானுக. ஒனியச் கெணக்கா ராங்கி புடுச்சுப் போயா பேசுறது?," ஆராயி சொன்னா.

வண்டிய நிப்பாட்டுன இன்சுபெக்டரு அம்புட்டுப் பேத்தையும் வண்டில ஒக்காந்த மேனிக்கா ஒரு பார்வ பாத்தாரு. பெறகு கழுத கெணக்கா கனச்சாரு.

"இந்தத் தடவ ஒங்கள உட்டுறேன். இன்னொரு தடவ இப்பிடிச் செஞ்சீக....அம்புட்டுப் பேத்தையும் உள்ள தள்ளிப் போடுவேன். ஓடு எல்லாரும் வீட்டப் பாத்து."

இன்சுபெக்டரு கனச்சு முடிக்கவும் எல்லாரும் வீட்டுக்கு வந்துட்டாளுக. இதுக்குள்ள ஊருக்குள்ள வெசயந் தெருஞ்சு எல்லாரும் இதத்தான் பேசிக்கிட்டுருந்தாக.

"என்ன, டேசனுக்குப் போயிட்டு வாரீகளா? அதுக்குள்ள வெளிய உட்டுட்டானுகளா? எம்புட்டு தெண்டங்கெட்டுனீக?" பணியாரமுத்து கேட்டாரு.

"தெண்டமெல்லாம் ஒன்னுமில்ல மாமா. கூட்டிக்கிட்டுப் போயிட்டு உட்டுட்டானுக," பச்சையம்மா படக்குனு சொன்னா.

"அதுக்குள்ள தெருவுக்குள்ள என்னமெல்லாமோ சொல்லிக்கிட்டாளுகளே;"

"ஆமாமா, சொல்லுவாக. சொல்லுவாக. எல்லாம் இந்த மொளகாப் பொடியோட வேல. என்னவோ எங்கள டேசன்ல கொண்டு போயி வச்சு நோனியப் பிதுக்கிருவாம்னு நெனச்சிருப்பா. அது என்னடான்னா... ஆன குசுவுது குசுவுதுன்னு காத்துக்கெடந்தா அது புசுக்குனு போன கதயாப் போச்சு." ரோசமாச் சொல்லிட்டு பச்சையம்மா வீட்டுக்குப் போயிட்டா.

இதுக்குள்ள கெணத்து வெட்டுக்குப் போயிருந்த அவா புருசன் வீட்டுக்கு வந்துருந்தான். பச்சையம்மா டேசனுக்குப் போயிட்டு வார வெசயத்தக் கேள்விப்பட்டுட்டு கோவமா கத்துனான். "ஏத்தா, ஒனக்குக் கொஞ்சமாச்சும் வெவரமிருக்காத்தா? களவாண்டா யாருக்கிட்டயும் எம்புடாமெக் களவாங்கனும். ஒரு பருத்தி மயித்துக்காக டேசனுக்குப் போயிட்டு வாரீயே. கேனக் கொள்ளுமகா."

"யே....அறிவு கெட்டதனமாப் பேசாத மச்சான். ஊர்க்காரனுக தான் புரியாமெப் பேசுரானுகன்னா....நீயும் சேந்துக்கிட்டுல்ல கத்துர.

தெருவுக்குள்ள களவாங்காதவா ஒருத்தியக் காட்டு பாப்பம். நீயி வேலைக்குன்னு போனவெ இந்தா வந்து ஒக்காந்திருக்கியே. என்னத்த சொல்றது."

"நீயி எனியத்தான் நோண்டுவ வெங்காயம். டேசனுக்குப் போயிட்டு வாரதுக்கு வெக்கமில்ல. ஒங்குடும்பமே களவாணிக் குடும்பந்தான்."

ஒடனே பச்சையம்மா புருசன அடக்குனா, டேசனுக்குப் போனேன். வந்தேன். இப்ப என்னங்ர அதுக்கு? நா ஒனிய ஒன்னு கேக்குரேன். மேற்கே அம்புட்டுத் தொலவட்டுக்கு வேலைக்குப் போன எவளாச்சும் நம்மூர்க்குள்ள வண்டில வந்து ஒய்யாரமா எறங்கி இருக்காளான்னு சொல்லு பாப்பம். நாங்க வண்டிலைல வந்தோம். அதுலயும் கெங்கம்மாளோட வண்டிலயில வந்தோம். இங்ன டேசனுக்கும் நம்ம தெருவுக்கும் கொள்ளயத்தத் தூரமா என்ன?"

"களவாண்டு மாட்டுனதுமில்லாமெ இப்பிடியொரு சவுடாலுத்தனமாக்கும்? ஓ வாயக் கொண்டியே சமாளிப்பத்தா நீயி. சும்மாவா சொல்றாக, ஓ வாயத் தச்சுப் போட்டாலும் தரதரங்கும், பூட்டிப் போட்டாலும் புருபுருங்கும்னு," பச்சையம்மாளோட புருசஞ் சொன்னான்.

"சரி, ஒங்கிட்ட வாய் குடுத்துட்டு இருக்கத் தேரமில்ல. ஒனக்கென்ன தெரியும். இந்தக் காலத்துல வாயி பேசாட்டா வாயுக்குள்ளயே வந்து குசிவிருவாக ஆமா," சொல்லிட்டு களிக்கிண்டுரதுக்கு கேப்ப மாவு கடஞ் சொல்லி வாங்கியார வேலுச்சாமி கடைக்குப் போனா.

# 3. அண்ணாச்சி

“ரொம்பாக் கிசும்புக்காரனா இருப்பாம் பொறுக்கோ இந்தப்பெய. அவுகய்யனும் அம்மையும் அப்பிராணிககெணக்கா இருக்கைல அவுகளுக்குப் பெறந்த இந்தக் கழுத இப்படித் தறு தலையா வந்து வாச்சிருக்கே,” கோவமும் சலிப்புமாச் சொல்லிக் கிட்டு இருந்த மாடத்தியத் தடுத்துட்டு முத்துரத்தனம் மேல சொன்னா. “அதானடி....அந்த வீட்டுப் பிள்ளைக பூராம் இப்பிடித்தான் இருக்குதுக. மித்ததுகளயாவது ஒரு வழில சேத்துரலாம். ஆனா இவெ இருக்கானெ....அதான் இந்த அம்மாசிப் பெய, இவன எட்டுலயுஞ் சேக்க முடியாது. எழவுலயுஞ் சேக்க முடியாது. ரொம்பா ரப்புக்காரன்.”

“யாரு.... அந்தத்த இருளாயி பேரனத்தான சொல்றீக? எம்மா.... அவெ வெலாவுல வெடுச்ச பெயல்ல,” பக்கத்துல ஒக்காந்து பாசி நெத்து அடுச்சுக்கிட்டுருந்த தாயம்மா சொன்னா.

அம்மாசிக்கு இருவது வயது இருக்கும். தெருவுல பொம்பளைக சொன்னது கெணக்கா இவெ ஒரு சைசான பெயதான், ஊர்ப் பெரியவுகளுக்கு இவன வள்ளுசாப் புடிக்காது. ஆனா எளவட்ட பெயல்களுக்கு இவம்னா உசுரு.

வயசுக்குத் தக்கன வளத்தியும், கருத்த மீசையும் அதுவுமா பாக்குதுக்கு அம்மாசி நல்லா இருப்பான். நல்ல தேகக்கட்டு. அவெஞ் சிருச்சாம்னா வெயிலுக்குள்ள துள்ளூற கெண்ட மீனுக கெணக்கா பளீர் பளீர்னு பல்லு ஒளியடிக்கும். பெய என்னத்தத்தாம் போட்டு பல்லு தேப்பானோ தெரியல. எப்பயும் நையாண்டியாப் பேசுனாலும் ஒரு நாயத்தோட பேசுவான். என்னமோ விட்டேத்தியாத் திரிரவங் கெணக்காத்தான் தெரிவான். ஆனா ரொம்பா வெவரமான பெய.

பொழுதெனிக்கும் அவனப்பத்தி ஆவலாதிதான் வரும். அந்தப் பெயலச் சரியாப் புருஞ்சுக்கிராமத்தாஞ் சனங்க இப்பிடி அவனப் பத்திக் கூடக்கொறயாப் பேசுதுன்னு நெனப்பேன். இப்பக்கூட அவெஞ் செஞ்சது எனக்கு நாயமாகத்தான் தெரிது. அவன நேராப் பாத்து பூராத்தையும் கேட்டுட்டேனே நானு.

வெள்ளங்காட்டி, கம்மாப்பக்கம் வெளிக்குப் போகையில் அவனப் பாத்தேன். அப்பத்தான் அவனும் நானும் பேசிக்கிட்டோம். என்னடா வெசயமுன்னு கேட்டதுக்கு, எடுத்த எடுப்புல பூஞ்சிரிப்பா ஒரு சிரிப்புச் சிருச்சான். சிருச்சுக்கிட்டே நடந்த வெவரத்தச் சொன்னான்.

"ஏ மச்சான், இதுல என்ன தப்பு இருக்குன்னு சொல்லு. நேத்து அவரு பரசுராமரு வயக்காட்ல வரப்பு வெட்டிட்டு வெள்ளனத்துல வீட்டுக்கு வந்துட்டேன். வந்து கூழக்குடுச்சுப் போட்டு அப்படியே நெட்டியக்கல்லு வரைக்கும் ஒரு நட போயிட்டு வருவமின்னு வண்டி ஏறுவேன்."

"நெட்டியக்கல்லுக்கு என்ன சோலியாப் போன? " நாங் கேட்டேன்.

"சொல்றதக் கேளு மச்சான். அங்க கெணத்துவேல கெடைக்கு முன்னு இந்தக் கடக்காரப் பொண்டுகப் பெய சொன்னாமுன்னு வேல வெசாரிக்கப் போனேன். நம்மூரு பஸ்டாண்டுல வண்டி ஏறமின்னப் பெரும்பாடாப் போச்சு. அம்புட்டுக் கூட்டம்."

"வண்டில ஏறயில யாரோடயும் சண்ட போட்டிட்டியா?"

"நீ ஒரு திக்கம் மச்சான். முழுசுங் கேக்காமெ, ஓம் பாட்டுக்கு என்னத்தயாவது சொல்வ. ஊடால பேசாமக் கேளு."

அவெங் கொணந் தெருஞ்சதுனால நானும் அவசரப்படாமெ, "சரி சொல்லு; நானு குறுக்கே பேசல," சொல்லிட்டு அவெ என்ன சொல்லப் போறாமுன்னு அவனையே பாத்தேன்.

"அம்புட்டுக் கூட்டத்துல அடுச்சுப்புடுச்சு ஏறி எடம் பாத்து ஒக்காந்துட்டேன். அதே வண்டில அவரு சந்துரசேகரும் ஏறுனாரு. சந்துரசேகர்னா யாருங்ர? அதான் எங்கய்யம் பண்ண வேல செய்ராம்ல. அந்த மேச்சாதி மொதலாளிதான். வந்தவரு எனியப் பாத்ததும் என்ன சொன்னாருங்க? இப்பப்பாரு, எங்க ரெண்டு பேத்துக்கும் எடைல உழுந்த டயலாக்க அப்பிடியே பாத்துக்கோ."

"ஏலேய்.... நீ அந்த மாடசாமியோட மகந்தானடா?"

"நானு மாடசாமியோட மகனேதான்."

"ஏலேய்....எனிய யாருன்னு தெரியலயாடா?"

"ஏந் தெரியல. நல்லாத் தெரிமே. நீரு சந்திரசேகருதான?"

சொல்லிக்கிட்டே இருந்தவன் வேட்டியத் தூக்கிட்டு டவுசரு பையில இருந்து ஒரு பீடிய எடுத்து பத்த வச்சுக்கிட்டான்.

"இந்தப் பீடி எதுக்குங்க மச்சான். அந்நியாரம் பீடிய எடுத்துப் பத்த வச்சுக்கிட்டு பொகய உட்டுக்கிட்ட பேசுனம் பாத்துக்கோ. அதான் அது கெணக்காவே இருக்கனும்னு தான் இப்பப் பத்த வச்சேன்."

"சரி சொல்லுடா. பெரிய ஆக்டிங்காரந்தான். பொறுமய சோதுச்சுப் போடுவ," நானு கொஞ்சம் எருச்சலா கேட்டேன்.

"சர்த்தான், இப்பப் பாரு மச்சான்."

"தெருஞ்சுக்கிட்டுமாடா ஒக்காந்துருக்க? எந்திரிடா நா ஒக்காந்துக்குரேன்."

"நானு இம்புட்டுக் கூட்டத்துல நசுங்கி பிதுங்கி இந்த எடத்தப் புடுச்சு ஒக்காந்துருக்கேன். இங்ன நெட்டியக்கல்லுல எறங்குவேன். அதுவரைக்கும் நா ஒக்காந்துக்கிட்டு வாரேன். அதுக்குப் பெறகு நீங்க ஒக்காந்துக்கொங்க."

"ஏலேய்.... இந்தாருக்க நெட்டியக்கல்லுதானல.... எந்திரிடா. தள்ளிக்கோ ஐயா நின்னுக்கிட்டு வரைல நீயி மருவாத இல்லாம ஒக்காரலாமாடா?"

"ஐயாவா?.... எங்கய்யா உம்ம பிஞ்சைலதான் இப்ப உழுதுக்கிட்டு இருக்காரு நீரு எப்ப எனக்கு ஐயாவானீரு? நீரு தலைகீழா நின்னாலும் நானு எந்திரிக்க மாட்டேன்."

இதுக்குள்ள பீடியுங் கட்டப் பீடியாப் போக தூக்கிக் கெடாசிட்டு கெக்கருச்சுக்கிட்டு சிருச்சான். அவெ மொகத்துல இருந்த குசும்பையும், சிரிப்பையும் பாத்துட்டு எனக்குஞ் சிரிப்பு வந்துச்சு.

"கடேசி வரைக்கும் நீயி எந்திரிக்கவே இல்லியாக்கும்?" நானு ஆத்தாமெக் கேட்டேன்.

"அடி சக்கே, நானாவது எந்திரிக்கிரதாவது. இத்தோடய நின்னுச்சுன்னு நெனைக்க? இன்னியும் பாரு," சொல்லிக்கிட்டே கொரல மாத்திப் பேச ஆரம்புச்சான்.

"ஏலேய்...., ஒனக்குப் படி அளக்குர சம்சாரிகிட்டப் போயி வம்பு பண்றியேடா. ஒங்கய்யனுக்கு இருக்குர நன்றி விசுவாசம் ஒனக்குக் கடுகளவுகூட இல்லியே. மொதலாளி வாராருன்னா பள்ளு பறச்சாதி பூராம் அம்புட்டுப் பணிவா எந்துருச்சு நிக்கும். இவெம் பொடிப்பெயலுக்கு எங்க அதெல்லாந் தெரியப் போகுது."

"யோவ்...எந்திரிக்க முடியாதுன்னா முடியாது. இதுக்கு மேல பேசுனீர்னா மரியாத கெட்டுப் போகும்."

"நெட்டியக்கல்லு வரவும் எறங்கிட்டேன். அவரு தரப்புரத் தரப்புரன்னு மொணங்கிக்கிட்டே இருந்தாரு. நா மேல ஒன்னும் பேசல. இதுதான் நடந்தது மச்சான். இங்க நம்ம தெருப் பெயமக்க எனிய மென்னு துப்புராளுக."

"அதுக்குள்ள எப்பிடி ஊருக்குள்ள தெருஞ்சுச்சு?" நாங் கேட்டேன்.

"அந்தக் கண்ராவிய ஏங் கேக்குர? சாயந்தரமே சந்துரசேகரு எங்கய்யங்கிட்ட வெசயத்தச் சொல்லி எனிய கண்டுச்சு வைக்கச் சொன்னாராம். எங்கய்யா எங்க வீட்ல போட்ட கூப்பாட்டுலதான் இப்ப தெருப்பூராம் இதே பேச்சா இருக்கு."

"நம்மூருப் பொட்டச்சிக சும்மான்னு இருக்க மாட்டேங்காளுக. அவா ஊமச்சிறுக்கி, என்ன இருந்தாலும் ஒரு சம்சாரி நிக்கைல ஒரு பறப்பெய ஒக்காத்துக்கிட்டு வரலாமா? அம்புட்டுச் சவுடாலு என்ன

கேக்குது இவனுக்கு? ரொம்பா மணியம் புடுச்ச பெய. இவனுக்குப் போங்காலம் நெருங்கிருச்சுங்கா," நாஞ் சொல்லவும் அம்மாசி சிருச்சான்.

"இது தேவல மச்சான். அந்தக் கெழவ பணியாரமுத்து என்ன சொல்ராம்ங்ற? சம்சாரி நம்மளுக்குத் தெய்வங்க மாதிரி. அவுக இல்லினா நம்ம பொழைக்க முடிமா? சுத்த வெவரங் கெட்ட நீசப் பெயல்களாவுல இருக்கானுக. நக்குன நாய்க்கு நா எழும்பாதும்பாங்க. இந்த நாயி மேல உழுந்தே புடுங்கப் பாக்குது. சம்சாரிக மனசு வச்சா அம்புட்டுப் பல்லையும் பேத்துருவாக பேத்து."

"கெழவஞ் சொல்லச் சொல்ல எனக்குச் சிரிப்புத்தான் வந்துச்சு. சிரிக்கதப் பாத்துட்டு கெழவ இன்ன ரெண்டு வசவு வஞ்சான்." அம் மாசி சொல்லிக்கிட்டே சிரிச்சான். நானும் சிருச்சுக்கிட்டே வந்துட்டேன்."

அம்மாசியப் பத்தி பேச்சு அடங்குன ஒரு வாரத்துக்குள்ள திரும்பியும் அவனோட நட்னத்தனத்தப் பத்தி தெருவுல பேசுனாக. ஆனா அவெம் மட்டும் ஒன்னுமே நடக்காதது மாதிரி செவனேன்னு போறதும் வாரதுமா இருந்தான். நாந்தான் அவனக் கூப்டு,

"ஏப்பா, இப்ப என்ன செஞ்ச?" ன்னு வெசாருச்சேன். நானு வெசாரிக்கவும் அவெ ரொம்பா எடக்காச் சொன்னான். "மச்சா, இன்னைக்கு ரவைக்கு ஊர்க்கூட்டம் இருக்கு. வந்துரு பெரிய கொலயாளிய வெசாரிச்சுத் தூக்குல போடப் போறாக."

"ஊர்க்கூட்டம் இருக்கட்டுமப்பா, நீயி என்ன செஞ்சன்னு சொல்லு."

"எனியத்தான் மச்சான் வெசாரிக்கப் போறாக. கட்டாயம் வந்துரு என்ன," அம்மாசி சொன்னான்.

"இப்ப என்ன ஆவலாதி ஒம்மேல? சொல்லுப்பா - கேப்போம்," நானு திரும்பியும் கேட்டேன்.

"அதாவது மச்சான், ரெண்டு நாளைக்கு முன்னால அந்தச் சின்னையா முத்துக் கருப்பன் எனியக் கூப்டு, அந்த ஜெயசங்கரு மொதலாளியோட பிஞ்சைல தண்ணிபாச்சப் போனாரு."

"ஆமா... ஒனியப் பாத்தேனே வெள்ளையுஞ் சொள்ளையுமா மம்பிட்டியத் தூக்கிட்டுப் போனீயே. நீ போன சோக்கப் பாத்து, நீ மம்பிட்டிக்கு கணகின போடப் போறீயாக்கும்னு நெனச்சேன்," நாஞ் சொன்னேன்.

"இந்த லக்கலுதான வேண்டா மச்சான். ஏ, வெள்ளையுஞ் சொள்ளையுமா வேலவெட்டிக்குப் போக்கூடாதா? நானு அன்னைக்குன்னு பாத்து இந்த முத்திருளங்கிட்ட ஒரு ரூவா குடுத்து சட்டைக்குப் பெட்டி போட்டுல போட்டுட்டுப் போனேன்."

“ஆமாமா... மடிப்புக்கலையாத சட்டையாத்தான் இருந்துச்சு. சரி என்ன வெசயமுன்னு சொல்லு.”

“ஜெயசங்கரு பிஞ்சைக்குப் போனனா. அங்க அவரு பம்பு செட்டுக்கிட்ட நின்னுக்கிட்டு இருந்தாரு. நானு மம்பிட்டியோட போயி நிக்கவும் அவரே பேச்சே எடுத்து உட்டாரு.” சொல்லிக் கிட்டுருந்தவெ அவரு பேசுன தோரணைல பேச ஆரம்புச்சான்.

“ஏலேய் ஒங்க தெரு முத்துக்கருப்பங்கிட்ட தண்ணி பாச்சரதுக்கு ஒரு ஆளப்பாத்து அனுப்பச் சொன்னேன். நேரமாச்சு. இன்னும் ஒரு பெயலயுங் காணோம்.”

“முத்துக்கருப்பஞ் சின்னையா எனியத்தான் அமத்திப் போச் சொன்னாரு. அதான் வந்துருக்கேன்.”

“ஒனியப் பாத்தா வேலைக்கு வந்துருக்காப்லயா தெரியுது. எங்கயே ஆபிசுக்குப் போறவங் கெணக்கா வந்து நிக்க. நீயி ரொம்பாச் சள்ளப் புடுச்ச பெயல்ல. வேற ஆளே கெடைக்கலன்னா அந்தப் பெய ஒனியப் போச்சொன்னான்?”

“இப்ப என்னங்றீரு? ஒமக்குத் தண்ணிதான பாச்சனும், நானு எப்பிடி வந்தா ஒமக்கு என்ன?”

“ஏலேய், இப்ப மணி என்னன்னு தெரியுமாலே? வந்துருக் காம்பாரு, எங்கயோ ஊரு தேசம் போறவ மாதிரி.”

“அண்ணாச்சி ஒங்ககிட்டதான ரெஸ்ட் வாச்சி இருக்குது. ஏங்கிட்ட இல்லியே அண்ணாச்சி. நீங்கதான் மணி என்னன்னு சொல்லனும் அண்ணாச்சி. கூடிய சீக்கிரம் வாச்சு ஒன்னு வாங்கனும் அண்ணாச்சி வாங்கிக் கெட்னாப் பெறகு மணி பாத்து சொல்றேன் அண்ணாச்சி.”

அம்மாசி இப்பிடிச் சொல்லிக்கிட்டிருக்கைல அவெம் மொகத்தப் பாத்து எனக்குச் சிரிப்ப அடக்க முடியல. நானு சத்தமாச் சிரிக்கவும், “பொறு மச்சான், கொறையவுங் கேளு. நானு அண்ணாச் சின்னு கூப்டவும் அவரு மொகம் போன போக்கப் பாக்கனுமே. ரொம்பாக் கடுப்பாயிட்டாரு. கடுப்போடயே திலும்பியும் பேசுராரு.

“என்னலே சொன்ன? அண்ணாச்சியா? வாய்க்குவாயி அண்ணாச்சின்னா சொல்ற? யாருடா அண்ணாச்சி? யாருக்குடா அண்ணாச்சி. ஒருப் பறத் தாயளியாடா எனிய அண்ணாச்சின்னு சொல்றது?”

“கண்டமாணிக்கப் பேசாதீரும். பெறுகு நானும் பேசுனா ஒமக்கு மரியாத கெட்டுப் போகும். வேண்டாம்னா போச் சொல்லுரத உட்டுட்டு..... மயிரு பேசுரதப்பாரு.” சொல்லிக் கிட்டே விருட்டுன்னு வீட்டுக்கு வந்துட்டேன். ஊருக்குள்ள வந்து என்னத்தப் புளுகிட்டுப் போனானோ இவனுக கூட்டம் போட்டுருக்கானுக.”

“அப்ப ஒனக்கு தெண்டந்தான் இன்னைக்கு. சம்சாரியப் பாத்து மயிருதயிருன்னு பேசிட்டு வந்துருக்கில.”

“அட நீ ஒன்னு மச்சான், எனிய அதுக்கா வெசாரிக்கப் போறாகன்னு பாத்த? நானு அந்த ஆள அண்ணாச்சின்னு கூப்டதுதான் பெருங் குத்தமாப் போச்சு இப்ப. அதுக்குத்தான் கூட்டம்.”

அம்மாசி சொன்னது கெணக்கா ராத்திரி கூட்டங்கூடிட்டாக. நாட்டமெ அம்மாசிட்ட கேட்டாரு. “ஏலேய் அம்மாசி, நம்ம சாதி என்ன, மொதலாளியோட சாதி என்ன? யாரு போயி யாரப் பாத்து அண்ணாச்சிங்றது? சுத்த வெவரங்கெட்ட பெயலா இருக்கியே.”

அம்மாசியும் பதுலுக்கு, “நம்ம பறையரு; அவரு நாய்க்கரு; நாந்தான் போயி அவரப் பாத்து அண்ணாச்சின்னேன். இதக் கேக்குதுக்கு ஒரு கூட்டம்,” சொல்லிக்கிட்டுத் தலயச் சொருஞ்சுக் கிட்டான்.

அம்மாசியோட பதுலக் கேட்டு எளவட்ட பெயல்கள்ளாம் கொல்லுன்னு சிருச்சானுக.

நாட்டாமெ வந்த வெளத்த அடக்கிக்கிட்டுச் சொன்னாரு. “சரி ஓங்கிட்டப் போயி எனக்கு அது இதுன்னு பேசிக்கிட்டு சட்டுன்னு சொல்லுலே. எதுக்கு மொதலாளிய அண்ணாச்சின்னு சொன்ன.”

அம்மாசியும் பட்டுன்னு சொன்னான், “அவரு எனியவிட வயசுல மூத்தவரு. அதான் அண்ணாச்சினேன். எளையவரா இருந்துருந்தா தம்பின்ருப்பேன்.”

இந்தப் பதுலக் கேட்டுட்டு இன்னுஞ் சத்தமாப் பெயல்க சிரிச்சானுக.

“இந்தப்பெய லேசுக்குள்ள மசியமாட்டான். பதுலப்பாரு ரொம்பா வில்லங்கம் புடுச்ச பெய,” சின்ன நாட்டாமெ சொன்னாரு.

ஒடனே நாட்டாமெ சீரியஸா பேச ஆரம்புச்சாரு “ஏலேய் ஒனிய யாரும் டமாசு பண்றதுக்கு இங்க கூப்டல. இம்புட்டுக் காலமா யாராச்சும் பள்ளு பறையனுக நாய்க்கமார ஒறமொற சொல்லிக் கூப்டுருப்பமா? நீ நேத்துப் பெறந்த பெய இப்பிடி வெதண்டாவதஞ் செய்றீயே. அண்ணாச்சின்னு சொன்னது தப்புத்தானலே.”

ஒடனே அம்மாசியும் சீரியசா பேச ஆரம்புச்சான். “நாஞ் சொன்னதுல ஒன்னும் தப்பில்ல. நானென்ன மாமெ மச்சாமின்னு ஒறவு வச்சு பொண்ணு பிள்ளயா கேட்டுட்டேன்? சாதாரணமா அண்ணாச்சின்னு மருவாதையாக் கூப்டதுக்கே இம்புட்டு ரகள செய்றீக. போன வாரத்துல சாக்கட அள்ளுற இருளப்பன அண்ணாச் சினு கூப்டதுக்கு அம்புட்டுப் பேரும் சேய்..... கொறப்பெயலப் போயி அண்ணாச்சிங்கான்னு எளக்காரமாப் பேசுனீக. இப்ப என்னடா எப்படிடா நாய்க்கரப் போயி அண்ணாச்சிங்கலாம்னு எடங்கலுக்கு

மொடங்கலா கேக்குறீக. அந்த பூவதிக் கெழவி சொல்றது கெணக்கா 'கழுத விட்டைல முன் விட்ட வேற பின்விட்ட வேறயா? விட்டன்னா எல்லாம் விட்டதான். மனுசம்னா எல்லாம் மனுசந்தான்" சொல்லிட்டு விருட்டுன்னு வீட்டுக்குப் போயிட்டான் அம்மாசி.

அம்புட்டுப் பேரும் அவனயே அருவசமா பாத்தாக.

இந்தியா டுடே
இலக்கிய மலர் 1995

# 4. தாவணி

“படுச்சுப் படுச்சுச் சொன்னேன். பிள்ளயக் கொண்டு போயி தூரந்தொலவுல உடாதன்னு. கேட்டியா? இப்ப நாம் பெத்த செல்லத்தோட மொகத்தக்கூட பாக்கக் குடுத்து வைக்காத பாவியாப் போனேனே....” சொல்லிக்கிட்டே ஒப்பாரி வச்சா அருளாயி.

அவா நெஞ்சுலயும் தலைலயும் அடுச்சுக்கிட்டு அழுகுறதப் பாத்த பொம்பளைக அவள எம்புட்டோ தேத்திப் பாத்தாக. அருளாயி ஒஞ்ச பாடுல்ல. வீட்டுக்கு வெளிய திருணயில அவா புருசன் இருளப்பன் இடுஞ்சுபோயி ஒக்காந்துருந்தான்.

அங்னக்குள்ள இருந்த அம்புட்டுப்பேரும் விக்கிச்சுப் போயி மேக்கொண்டு என்ன சொல்ரது, என்ன செய்ரதுன்னு தோணாமெ பேயறஞ்சது கெணக்கா இருந்தாக.

“பணம் பாதாளம் வரையும் பாயுமின்னு தெரியாமயா சொல்லி வச்சாக. அவெங்கிட்ட துட்டு இருக்கு. எல்லாத்தையும் போட்டு அமுக்கிட்டான்,” இருளப்பனோட அப்பா சொல்லவும், “அப்ப முழுப் பூசணிக்காய சோத்துல மறப்பான். நம்ம பாத்துக்கிட்டு சும்மா இருக்கவா? ” கோவமாக கத்துனான் அருளாயியோட தம்பி காளியப்பன்.

காளியப்பனுக்கு இருவது இருவத்தஞ்சு வயது இருக்கும், அக்கா மகா செல்லக்கிளி திடுதிப்புன்னு செத்துப் போனான்னு கேட்டதுலருந்தே, வெறிபுடுச்சவங் கெணக்கா பேசிக்கிட்டுருந்தான். சங்கதிய கேட்டுக்கிட்டு மச்சா இருளப்பனயும் கூப்டுகிட்டு ஒடனே பெறப்டு ரவ்வோட ரவ்வு பயணப்பட்டு குப்பாம்பட்டணத்துக்குப் போனான். அம்புட்டு செலவழிச்சுப் போயும் செல்லக்கிளியோட பெரேதத்தக்கூட பாக்காமத்தான் திரும்பி வந்தாக.

செல்லக்கிளிக்குப் பதினொரு வயது. நல்லா மதமதன்னு வளந்துருப்பா. அருளாயிக்குப் பெறந்த ஏழு பிள்ளைகள்ள நாலு செத்துப் போக மிச்சமிருந்த மூனுல கடக்குட்டிதான் செல்லக்கிளி. இருளப்பனும், அருளாயும் செகந்நாத மொதலாளிட்ட பண்ண வேல செஞ்சாக. மூத்த பெயல்க ரெண்டு பேரும் மூணாங்கிளாசுக்கு மேல படிக்கல. வீட்ல நின்ன ரெண்டு எரும மாட்டுக்குப் பில்லு கில்லுப் புடுங்கிப் போட்டுக்கிட்டு, மாடு மேச்சுக்கிட்டு அலைஞ்சானுக ஊடதாட கூலி வேலைக்கும் போயிருக்கிருவானுக.

மகா செல்லக்கிளிய மட்டும் எப்பாடுபட்டாச்சும் ஒரு எட்டாங் கிளாஸ் வரைக்குமாவது படிக்க வச்சிரனும்னு இருளப்பனுக்கு கொள்ள ஆச. அந்த ஆசைலதான் மகளத் தூரந் தொலவட்டுக்குத் துணுஞ்சு அனுப்பினான்.

செல்லக்கிளி அஞ்சாங் கௌாசு படுச்சுக்கிட்டு இருக்கைல மொதலாளி கேட்டாரு, “ஏலேய், இருளப்பா, ஓம்மகா என்னடா செஞ்சுக்கிட்டு இருக்கா?”

“அது இப்ப அஞ்சாங் கௌாசு படிக்கிது சாமி. அதமட்டுக்குமாச்சும் கடப்பட்டு ஒடப்பட்டுனாலும் ஒரு எட்டு வர படிக்க வைக்கனும்தான் பெரயாசப்படுறேன் சாமி,” இருளப்பன் சொன்னான்.

“போடா…பேப்பெயலே இந்த காலத்துல எட்டு வரைக்கும் படுச்சு என்னத்துக்குடா பெரயோசனம்? அவெவெ என்னவெல்லாம் படுச்சுப்டு சும்மா வெறும் பெயல்களா அலைரானுக. கொறைஞ்சது பன்னெண்டாங் கௌாசு வரைல படுச்சாலும் மேக் கொண்டு ஒரு வாத்திச்சி வேலைக்காவது போகலாம்,” மொதலாளி சொல்லிட்டு இருளப்பனப் பாத்தாரு.

மொதலாளி காட்ல மொளகாச் செடிகளுக்குத் தண்ணி பாச்சுக்கிட்டுருந்த இருளப்பன் மம்பிட்டிய ஊனுன்ன மாணிக்க நிமுந்து மொலாளிய ஆச்சரியமாப் பாத்தான். “பெரிய பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்கனும்னு ஆசயாத்தாஞ்சாமி இருக்கு. ஆனா, எனக்கு ஐவசு இல்லியே. மேக்கொண்டு நம்ம ஊர்ப் பள்ளிக்கொடத்துல எட்டு வரைக்குந்தான இருக்கு,” சொல்லிட்டு குனுஞ்சு தண்ணீயத் திருப்பி அடுத்த பாத்தில உட்டான்.

“ஏம்மகா நடுவுளது குப்பாம்பட்டணத்துல இருக்கு. அதுக்கு வீட்ல ஏண்ட வேல எடுத்த வேல செய்ரதுக்கு, ஒரு சின்னக்குட்டியா பாத்து அனுப்பச் சொல்லிக் கடிதம் போட்டுருக்கு. நீ சரின்னு சொன்னீனா, ஓம்மளக் கூப்டுக்கிட்டு போறேன். அங்ன வீட்டுல குடுக்குரதச் சாப்டுக்கிட்டு அதுக்குத்தக்கன வேலை வெட்டிகள செஞ்சுக்கிட்டு இருக்கட்டும். அங்க பெரிய பள்ளிக்கூடம் இருக்கு. அங்கயே படிக்கட்டும். பள்ளிக்கொடம் போறதுக்கு முன்ன செத்த நேரம், போயிட்டு வந்து சாயந்தரத்துல செத்த நேரம் வீட்ல உள்ள வேலைகளப் பாத்துக்கிட்டு ஏம்மகளுக்கு ஒத்தாசையா இருக்கட்டும். மாசம் இம்புட்டுன்னு சம்பளங்கூட போட்டுத் தாரம்னு எழுதி இருக்கா. படிப்புப் படுச்சாப்லயும் இருக்கும். வேலையுஞ் செஞ்சாப்லயும் இருக்கும். என்னலே சொல்ற?” மொதலாளி வெளக்கமாச் சொல்லிட்டு இருளப்பனோட பதிலுக்காக அவனையே பாத்தாரு.

“ஒரு பக்கம் பாத்தா பிள்ள படிப்புக்காக அனுப்பலாம்னு இருந்தாலும், அவுகாத்தா உடமாட்டா சாமி. செல்லக்கிளியப்

பிருஞ்சுட்டு இருந்துக்க மாட்டா," இருளப்பன் சொன்னான்.

"என்னலே சொல்ற நீயி, பிள்ளைய எப்பப் பாக்கனும்னு தோணுதோ, சொல்லு நானே ஏங்காசப் போட்டு ஒங்க ரெண்டு பேரையும் கூப்டுட்டு போயிக் காட்டுரேன். மொதலாளி சொல்லவும் இருளப்பனுக்கு ஆச அதிகமாயிருச்சு. செல்லக்கிளி படுச்சு டீச்சரா வார மாதிரி நெனச்சுப் பாத்துப் பூருச்சுப் போனான்.

"எதுக்கும் அருளாயிட்ட கலந்து பேசிட்டு வந்து சொல்றேஞ்சாமி," இருளப்பன் சொல்லிட்டு தொயந்து தண்ணியப் பாச்சுனான். ஒவ்வொரு மொளகாச் செடிலயும் வெளேர்னு பூவும் காயும் செவேர்னு பழமும் கெடந்ததப் பாக்கைல இருளப்பன் மனசுக்குள்ள செல்லக்கிளிதான் வந்து நின்னா. இப்டிப் பூத்துக் குலுங்கி நிக்கிரது மாதிரி நம்ம மகளும் சந்தோசமா வாழனும்னு மனசுக்குள்ள நெனச்சிக்கிட்டு வேகவேகமாத் தண்ணியப் பாச்சிட்டு மசங்கவும் வீட்டுக்கு வந்தான்.

வந்த ஒடனே அருளாயியக் கூப்டு மொதலாளி சொன்னத அப்பிடியே சொல்லிட்டு அருளாயி சரின்னு சொல்லனுமேன்னு ஏக்கத்தோட அவளப் பாத்தான்.

"ஒனக்குக் கொஞ்சமாச்சும் பிள்ளப் பாசமின்னு இருந்தா இப்பிடிக் கேப்பியா? ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணுன்னு ஒரு பொட்டச்சிய வச்சுருக்கோம். அவளையும் எங்குட்டோ கங்காணாத ஊருச்செம உட்டுட்டு எப்பிடி உசுர வச்சுக்கிட்டு இருக்குரது? அப்பிடியாப்பட்ட படிப்பு நம்மளுக்கு வேண்டாம். நம்ம ஊருக்குள்ள எம்புட்டு படிக்க முடியுமோ அம்புட்டுப் படிக்கட்டும். அது போதும்," சொல்லி முடிச்சுட்டு இருளப்பனச் சாப்ட வரச்சொன்னா.

இருளப்பனும் உடாமெ, சாப்டும் போதும் தொயந்து கேட்டான்.

"இங்ன கெடக்குர துரும்ப அங்ன எடுத்துப் போடக்கூட உடாமெ நாஞ் செல்லக்கிளிய வளத்து வாரேன். பச்சப் பிள்ளயக் கொண்டு போயி வீட்டு வேலைக்கு உட்டு அப்டி நம்ம பொழைக்க வேண்டாம். கூழோ, தண்ணியோ குடுச்சுட்டு நம்ம கூடயே இருக்கட்டும்." அருளாயி சொல்லவும் இருளப்பன் செத்தநேரம் பேசாம இருந்தான்.

பெறகு வெத்தலைய மடுச்சு வாய்க்குள்ள வச்சுக்கிட்டே சொன்னான், "ஏத்தா நீ கொஞ்சம் யோசன செஞ்சு பாரு. அவா என்ன வேல வெட்டி செஞ்சு பொழைக்கவா போறா? பள்ளிக்கூடம் போவாத்தா. ஒஞ்ச நேரத்துல வீட்டு வேலை, களப்பாப்பா ரெண்டாவது நம்ம மொதலாளிதான கூப்டுகிட்டுப் போறாரு. அவரு சகலத்தையும் சொல்லி ஏற்பாடு செய்வாரு."

இருளப்பன் என்ன சமாதானஞ் சொன்னாலும் அருளாயிக்கு ஏத்துக்கிரவே முடியல. ரெண்டு பேருக்கும் இதுனாலேயே பொழு

தெனிக்கும் வாக்குவாதம் வந்துக்கிட்டிருந்துச்சு. கடேசில பரிச்ச முடிஞ்சு லீவு லீவுக்கு செல்லக்கிளிய மொதலாளி கூப்டுகிட்டு வந்துருவாருன்னு சொல்லவும் அருளாயும் அரமனசாச் சம்மதிச்சிட்டா.

அஞ்சாங் கெளாசு முடிச்சு ஆறாங் கெளாசுக்குப் பாசு பண்ணிப் போகையில மகளோட சர்டிபிகேட்ட வாங்கிக்கிட்டு வந்து மொதலாளிட்ட குடுத்தான் இருளப்பன். மொதத் தடவப் போகைல மகளோட தானும் வர்ரதா எம்புட்டோ சொல்லிப் பாத்தான் இருளப்பன். ஆனா மொதலாளி அறுவடை இருக்கு, பெறகு தொழி கலக்கி நாத்துப் பாவனும் அப்டி இப்டின்னு சொல்லி இருளப்பன வேண்டாமின்னுட்டு செல்லக்கிளியக் கூப்டுகிட்டு குப்பாம்பட்டணம் வந்தாரு.

செல்லக்கிளி வேலைக்கு வந்து சேந்து சரியா எட்டு மாசம் ஆச்சு. இந்த எட்டு மாத்தைல ஒரு தடவகூட செல்லக்கிளிய ஊருக்குக் கூட்டியாரல. மொதலாளிட்ட கேட்டதுக்கு, "எங்கலே போயிருவா ஓம் மகா. போன மாசந்தான் நாம் போயிப் பாத்துட்டு வந்தேன். நல்லா தின்னுபோட்டு கொழுகொழுன்னு இருக்கா, நெழல்லயே இருக்காள்ள. நீ பாத்தின்னா ஒனக்கே ஓம்மகள அடையாளந் தெரியாது போ," ரொம்பா ரப்பாச் சொல்லிட்டுப் போயிருட்டாரு.

"மொதலாளி ஒரு காயிதமாச்சும் எழுதிப் போடலாமுன்னு இருக்கேன். அட்ரசு குடுங்க," இருளப்பங் கேட்டு வாங்கிட்டுப் போயி அவுக தெருவுல படுச்ச பெய ஒருத்தங்கிட்ட குடுத்து எழுதிப் போட்டான். பதிலுக்கு மகா கடிதம் போடுவா போடுவான்னு காத்துக் கெடந்ததுதான் மிச்சம். பதிலே வல்ல.

அருளாயி அடிக்கொருதரம் செல்லக்கிளியப் போயி பாக்கனும் பாக்கனும்னு நச்சரிச்சுக்கிட்டு இருந்தா. இதுக்காக வகுத்தக் கெட்டி வாயக்கெட்டி ரூவாயுஞ் சேத்து வச்சா. "மொதலாளிட்ட ஒன்னுஞ் சொல்லாமெ தம்பி காளியப்பனக் கூப்டுகிட்டு இந்த அட்ரசுக்கு வெசாரிச்சுப் போயி எப்படியாச்சும் பிள்ளயப் பாத்துட்டு வந்துரு,"ன்னு சொல்லி சேத்து வச்ச ரூவாய புருசங்கிட்ட குடுத்தா. இது மட்டுமில்லாமெ கொஞ்சம் அரிசி, நெலக்கள்ளப் பருப்பெல் லாம் வறுத்து வச்சு கொண்டு போச் சொல்லிக் குடுத்தா.

இருளப்பனும் போக ரெடியாகிட்டு இருக்கைலதான் இப்பிடி ஒரு சங்கதி. செல்லக்கிளி திடுதிப்புன்னு செத்துப் போனான்னு.

என்னைக்குமில்லாமெ அன்னைக்கு மொதலாளி சேரிக்குள்ள வந்து இருளப்பன வீட்ல வந்து கூப்டுகிட்டுப் போனாரு. கூட்டிட்டுப் போயி வெசயத்த நெதானமா எடுத்துச் சொல்லிட்டு, "ஒடனே கெளம்பு, போயி மொகத்தையாவது பாத்துட்டு வந்துரலாம்,"ன்னு அம்புட்டு உருக்கமா பேசுனாரு.

வெசயத்தக் கேட்டதுலருந்து இருளப்பனுக்குக் கண்ணு

இருண்டு போன மாதிரிப் போச்சு. எப்பிடி சுதாரிச்சு வீட்டுக்கு வந்து பொண்டாட்டிட்ட வெசயத்தச் சொன்னாம்னே தெரியல.

கலங்கிப் போயிக் கெடந்த அவன காளியப்பந்தான் தேத்திக் கீத்தி குப்பாம்பட்டணத்துக்குக் கூப்டுக்கிட்டுப் போனான். அங்க போனப் பெறகுதான் நடந்த வெசயத்த பூராங் காளியப்பன் தெருஞ்சுக்கிட்டான்.

மொதலாளியோட மகா வீட்டுக்கு முன்னால ஏகப்பட்ட கூட்டம். இருளப்பனையும் காளியப்பனையும் மொதலாளி அறிமுகப் படுத்தவும் மொதலாளியோட மகா முந்தாணிய வச்சு மூஞ்சிய தொடச்சுக்குட்டு அழுகுரது கெணக்காப் பாவலாப் பண்ணுச்சு.

இருளப்பனுக்கோ, காளியப்பனுக்கோ எதுவும் பேச முடியல. துக்கந் தொண்டைய அடைக்க வெறுமுத்திப் புடுச்சுப் போயி மலங்க மலங்க முழுச்சுக்குட்டு இருந்தாக. மொதலாளியோட மகா அவுககிட்ட, “நேத்து இந்நியாரமெல்லாம் பாவிமகா உசுரோட நின்னாளே. இப்பிடி பொடுக்குன்னு போவான்னா கண்டேன்? ஒக்காந்து பாடம் படுச்சுக்கிட்டு இருந்த பிள்ள திடீர்னு கையக்கால ஒதறிக்கிட்டு வலிப்பு வந்து கெடந்துச்சு. வாயுல வேற மொறை மொறையாத் தள்ளுது. எனக்கு கையும் ஓடல காலும் ஓடல. ஒடனே டாக்சி கொண்டாந்து டவுனு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயி நாலஞ்சு பாட்டுலு குளுக்கோசு ஏத்தி, ஒரு ஊசி நானூறு ரூவான்னாலும் ரூவாய ரூவான்னு பாக்கமெ ரெண்டு ஊசி போட்டுக் கவனிச்சும் உருசு நிக்கலியே; நா என்ன செய்யட்டும்,” சொல்லி கண்ணத் தொடச்சுக்கிட்டா.

“டாக்டரு ஒடனே கொண்டு போயி எரிக்கச் சொல்லிட்டாரு. நானும் எம்புட்டோ சொல்லிப் பாத்தேன்; தாயி தகப்பன் வரட்டு மின்னு. ரொம்பா நேரம் பெணத்த வைக்கக்கூடாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டாரு. இப்பிடி ஒரு வலிப்பு வியாதி இருக்குன்னு ஏங்கிட்ட முன்னக்கூட்டியே சொல்லி இருந்தா அவள இங்க வேலைக்கு வச்சிருக்கவே மாட்டேனே. இப்பிடித் தெரியாத்தனமா கொண்டு வந்து வச்சு ஏ வீட்ல சாகனும்னு ஆகிப் போச்சே அப்பா,”ன்னு சொல்லவும் மொதலாளி ஆதரவா மகள அணச்சுக்கிட்டாரு.

மொதலாளி மகா வீட்ல வாடகைக்கு குடியிருந்த நாலஞ்சு பேரு வந்து, “சரி, சரி ஆனது ஆகிப் போச்சு. அவா இங்க இருந்திருந்தாலும், ஊர்ல இருந்திருந்தாலும் சாக வேண்டிய விதி இருந்தா யாரு நிப்பாட்ட முடியும். ஏதோ ஒங்களால முடுஞ்சத செஞ்சு ஆதரவு சொல்லி அனுப்பி வையுங்க,” சொல்லி நெலமைய ரொம்பாச் சாதாரணமா ஆக்கிட்டாக.

மொதலாளியும் இருளப்பங்கிட்ட ஆயிரம் ரூவாயக் குடுத்துட்டுச் சொன்னாரு. “என்னப்பா செய்றது! ஆண்டாண்டு அழுதாலும் மாண்டவுக திரும்பி வரவா போறாக? மனசத்

தேத்திக்கோ. இந்தா, இத வாங்கிக்கிட்டு ஊருக்குப் போ. நானு இன்னும் ரெண்டு நாள்ல வந்துருவேன்."

இருளப்பனும் காளியப்பனும் வாயடச்சுப் போயி அந்தப் பணத்த ஏறெடுத்தும் பாக்காமெ ஊருக்குப் போறதுக்கு வண்டி ஏற பஸ் ஸ்டாண்டுக்கு வந்தாக.

அங்ன நாலஞ்சு பேரு செல்லக்கிளியோட சாவப் பத்திப் பேசுனத ரெண்டு பேருங் கேட்டு அந்தாணிக்க அவுக ரத்தமே ஒறஞ்சு போச்சு.

"என்னதாந் துட்டுக் கொழுப்புன்னாலும் இப்பிடியா. வேலைக்குன்னு கூட்டியாந்து கொல செய்வாக. இத்தனைக்கும் கைம்பொண்டாட்டி கச்சர. இம்புட்டுத் துணிவா செஞ்சு போட்டு மூடியும் மறச்சுட்டாளே."

"புருச இல்லாட்டி என்ன! அவளுக்குச் சப்போட்டுக்கு எத்தன பெயல்களக் கைக்குள்ள போட்டு வச்சுருக்கா தெரியுமா?"

"காலைல கூட அந்தப் பிள்ள துணி தொவச்சதப் பாத்தேன். சாயங்காலம் மூனுமணிக்குள்ள கொன்னுட்டாளே பாவி."

"எந்தூருப் பிள்ள இது? எப்பிடித்தான் கொன்னா முண்ட?"

"அந்தப் பிள்ளயப் படிக்க வப்பேன்னு சொல்லிக் கூட்டியாந்து பள்ளிக்கொடத்துலயுஞ் சேக்கல ஒன்னுஞ் செய்யல. எடவிடாத வேல. பத்து பன்னண்டு வயசுப் பிள்ள சமயல்ல இருந்து வீட்டு வேல சகலத்தையும் செய்யனும். ஒரு சின்னத் தப்புன்னாலும் அவளோ மகன்க ரெண்டு பேருஞ் சேந்துக்கிட்டு பாவாடையத் தூக்கிக்கிட்டு பெரம்புட்டயே அடிப்பாகளாம். ஏம் பொண்டாட்டி சொன்னா."

"அப்பப்ப அவளோட மகன்க, அவங்களப் பாக்க வார பெயல்க அந்தப் பிள்ளகிட்ட தப்பாக்கூட நடப்பானுகளாம் ஆத்தாக்காரிக்கும் தெரியுமாம். ஆனா ஒன்னுங் கண்டுக்க மாட்டாளாம். அவா வீட்டத்தவுர வெளிய எங்கயும் அந்தப் பிள்ளய உடமாட்டாளாம்."

"மருந்தக் கிருந்த குடுத்துக் கொன்னுட்டாளோ?"

"இல்ல இல்ல; மூனுமணிக்குள்ள மாவட்டனும்னு சொல்லிட்டு டவுனுக்குப் போனாளாம். அந்தப் பிள்ள ஆட்டி முடிக்க நாலுக்கு மேல ஆச்சாம். அந்தாணிக்க சவுக்குக் கட்டையக் கொண்டு பெடதில பாத்து போட்டுருக்கா, ஒரு போடு. அது படாத எடத்துல பட்டு அங்னகுள்ளயே பிள்ள விலுக்கு விலுக்குன்னு துள்ளிருச்சாம். வாயுல மொறைத் தள்ளவும் பயந்து போயி ஒப்புக்கு டாக்டருட்டப் போனாளாம். எடவழிலயே செத்துப் போச்சாம். அதான் ஒடனே வந்து பெணத்த எரிச்சுட்டாளாம். அவுகய்யனும் மாமனும் வந்து பெணத்தக்கூட பாக்கலியே. இந்த வெசயத் தெருஞ்சவுகளுக்குப் பணத்தக் குடுத்துச் சரிக் கெட்டிட்டா. அந்தப் பிள்ளயோட தகப்பன் ஒரு அப்பிராணி. பாவம் வாயில்லாப் பூச்சியாப் போறான்."

இதுக்கு மேல காளியப்பனால அங்ன நின்னு கேக்க முடியல. கோவமும் வெறியும் புடுச்சுப் போயி மாமனையும் இழுத்துகிட்டு ஊருக்கு வந்துட்டான். வரும்போதே அருளாயிட்ட எதையும் சொல்ல வேண்டாமுன்னு சொல்லிட்டான்.

மொதலாளி திரும்பி வந்ததும் காளியப்பன் இருளப்பனையும் கூப்டுகிட்டு மொதலாளி வீட்டுக்குப் போனான்.

மொதலாளியப் பாக்கவும் இருளப்பனுக்கு ஆத்தரத்தவிட அழுகதான் முந்திக்கிட்டு வந்துச்சு. அவனால ஒன்னும் பேசக்கூட முடியல. காளியப்பந்தான் கோவமாக் கத்த ஆரம்பிச்சான். ஆனா மொதலாளி அதிசயமா அன்னைக்கு ரெண்டு பேரையும் வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போயி அம்புட்டு பாசமா, பரிவாப் பேசி ஆறுதல் சொன்னாரு.

"ஆடு நனையுதுன்னு ஓநாய் அழுத கததான்" இதுன்னு இருளப்பனுக்குப் புரியல; காளியப்பனுக்குப் புருஞ்சது.

"இந்தப் பசப்பெல்லாம் எங்கிட்ட காட்டாதீரும். பிள்ளயக் கொண்டு போயி என்னென்ன கொடும செஞ்சு, கொன்னு போட்டீகன்னு எல்லா வெவரமும் எனக்குத் தெரியும். ஒம்ம பச்சோந்தித்தனம் ஏங்கிட்ட செல்லாது," காளியப்பன் கத்துனான்.

"இங்க பாருப்பா, காளியப்பா இப்பிடி அப்பட்டமா, அபாண்டமா கொல செஞ்சம்னு வாய் கூசாமெச் சொல்லாத. ஏதோ அவா விதி அவா போயிட்டா. இந்தா, இதுல ரெண்டாயிரம் ரூவா இருக்கு. எடுத்துக்கோ," மொதலாளி இப்படிச் சொல்லவும் காளியப்பனுக்கு இன்னும் ஆத்துரமா வந்துச்சு.

"என்ன சொன்ன நீயி? செல்லக்கிளியோட உசுருக்கு நீயி ரெண்டாயிரம் ரூவா வெல பேசுறியா?," கேட்டுக்கிட்டே மொதலாளிய அடிக்கப் போனான்.

மொதலாளி ரொம்ப நிதானமா, "காளியப்பா, ஆத்துரத்துல அறிவில்லாமெ நடக்காத. ஏம்மகா எம்புட்டுப் பிரியமா செல்லக்கிளிய வச்சுருந்தது தெரிமா? செல்லக்கிளிக்குத் தாவணி போடனும்னுகூட ஏங்கிட்ட சொல்லிக்கிட்டிருந்தா. இந்தப் பெரிய லீவு உடும்போது தாவணியப் போட்டே ஊருக்குக் கூட்டியாரனும்னு இருந்தேன். அதுக்குள்ள இப்பிடி ஆகிப் போச்சு. நீ நம்பலன்னா, இந்தா பாரு அவளுக்காக ஏம்மகா எடுத்து வச்ச தாவணிய. இது இருந்தா சும்மா செல்லக்கிளி நெனப்புத்தான் வருமுன்னுட்டு செல்லக்கிளியோட துணிமணிகளோட இதையும் வச்சுக் குடுத்து உட்டுருக்கா," சொல்லிக்கிட்டே ஒரு செகப்புத் தாவணிய எடுத்து காட்டுனாரு மொதலாளி.

காளியப்பனுக்குக் கோவம்னா இன்ன மட்டுமின்னு இல்ல.

"நீயி பிள்ளய பள்ளிக் கொடத்துல சேக்கனும்னு சொல்லிட்டுப்

போயி சுடுகாட்ல போயி தள்ளி எருச்சுட்டு இன்னியும் பேசுற? அங்க என்னென்ன நடந்துச்சுன்னு எங்களுக்குத் தெரியும். ஒந்தாவணியும் மயிரும்" தாவணியத் தூக்கி எறிஞ்சிட்டு கோவத்தோட காளியப்பன் திரும்பிப் போனான்.

அந்தச் செகப்புத் தாவணியப் பாத்துக்கிட்டே செத்த நேரம் இருளப்பன் நின்னான். பெறகு எதையோ நெனச்சுக்கிட்டு விருட்டுன்னு தாவணிய எடுத்துக்கிட்டு அவனும் விடுவிடுன்னு திரும்பிப் போயிட்டான்.

மறுநா காலயில மொதலாளி வீட்டுக்கொல்லயில இருந்த வேப்ப மரத்துல செகப்புத் தாவணியில் நாண்டுக்கிட்டு ஒரு பொணம் தொங்குச்சு.

சிறுகதை கதிர்
நவம்பர் - 1994

# 5. ஒரு [illegible]

[illegible]

முனுட்டாராம். ஒரு கஞ்சி தண்ணி கொதிக்க வச்சுக் குடுக்க வீட்டுல ஒரு பொட்டச்சி வேண்டாமான்னு கூட சொல்லிப் பாத்துட்டாகளாம். எனக்கென்ன காலு கையி இல்லியா கொதிக்க வச்சுக் குடிக்கன்னு சொல்லிட்டாராம்.

குப்பையபட்டி கிராமத்துல ஊர்மாடுகள மேய்க்கிறது ரெண்டே பேர்தான். ஒன்னு இருளாண்டி. இன்னொன்னு வீரன். இருளாண்டி எருமைகள் மேய்ப்பாரு. வீரன் பசுவு, காளங்கன்னுகள பத்திட்டுப் போவாரு. ஊர்ல இருக்குற மாடுகன்னுகள கம்மாச்செடி, வயக் காட்டுச் செம பத்திக்கிட்டுப் போயி மேய உட்டுட்டு, மசங்கவும் வீடுகளுக்குப் பத்திட்டு வந்துருவாக. ஒரு மாட்டுக்கு மாசத்துக்கு ஒத்த ரூவா கெடைக்கும். காலைல வெள்ளனத்துலேயே வீட்டு வீட்டுக்குப் போயி மாடுகள அவுத்து உட்டு மொத்தமா பத்திட்டுப் போவாக. சாயங்காலத்துல ஊர்கிட்ட வந்ததும் மாடுகள உட்டுட்டுப் போயிருவாகா. எப்பிடியும் மாசத்துக்கு எரனூறு ரூவாகிட்ட சம்பாதிப் பாங்க. எடையில பொங்கலு, தீவாளின்னு வரைல அஞ்சோ, பத்தோ கெடைக்கும். மேகலக்குடிகள்ள சம்சாரிக எப்பயாச்சும் வேட்டி துண்டுக குடுத்தாலும் குடுப்பாக.

இருளாண்டி மாடுமேய்க்கப் போம்போது மகனையுங் கூடயே கூட்டிக்கிட்டு போவாரு. மாடுக எட்டாக்கைக்குப் போச்சுன்னா ஓடி வெரட்டிக் கொண்டார மகனைத்தான் போச்சொல்லுவாரு. மாலாண்டிக்கு அய்யங்கூட மாடு மேய்க்கப் போகனும்னா ரொம்ப சந்தோசமா இருக்கும். அப்ப மாடு மேய்க்க தொடங்குனதுதான். இப்பவரைக்கும் அதே தொழிலுதான். சின்னப்பிள்ளையா இருக்கும் போதும் மாலாண்டி கலகலன்னுதான் இருப்பாராம். எருமமாட்டு மேல ஒக்காந்துட்டு சுத்திக்கிட்டு வாரதுன்னா, மாலாண்டிக்கு அம்புட்டுச் சந்தோசமாம். கம்மாய்ல மேய்க்கும்போது அங்ன போட்டுருக்குர வெள்ளரிக்காய்களக் களவாண்டு தின்னுகிட்டு, சோளக் கதுருகளப் புடுங்கிக் கசக்கித் தின்னுட்டு, ஊருணித் தண்ணில மீனு புடுச்சு சுட்டுத்தின்னுக்கிட்டுத் திரிவாராம்.

இருளாண்டி செத்தப்பெறகு, மாலாண்டி அய்யனக்கெணக்கா ஊரிக்காலு மாடுகள கொஞ்ச நாளைக்கு மேச்சாரு. பெறகு அந்தத் தொழிலு சரிப்பட்டு வராமப் போகவே, ஒரு எருமக் கன்னுக்குட்டிய மட்டும் புடுச்சு வளத்தாரு. அந்த எருமய மட்டும் பத்திக்கிட்டுப் போயி மேச்சிட்டு வருவாரு. அவுகய்யன ஊர்ல எல்லாரும் ஊரிக்காலு மாட்டுக்கார இருளாண்டின்னு சொல்லுவாக. மாலாண்டி ஊரிக்காலு மாடுகள மேக்கிறத உட்டுட்டாலும் அவருக்கும் அந்தப் பேருதான். ஊரிக்காலு மாட்டுக்காரன் மாலாண்டின்னு சொன்னா அம்புட்டுப் பேத்துக்கும் தெரியும். இவரத்தவுர ஊருக்குள்ள இன்னும் ரெண்டு மூனு மாலாண்டிகளும் இருக்காக.

இப்ப மாலாண்டிக்கு அம்பது வயசு இருக்கும். அந்த ஒத்த

கன்னுக்குட்டிய வச்சு வளத்து வகுத்துப்பாட்ட பாத்துக்கிட்டாரு. ஒவ்வொரு ஈத்துக்குப் பெறகும் கன்னுக்குட்டிய வச்சுக்கிட்டு பெரிய மாட்ட வித்துருவாரு. காலைல மாட்டப் பத்திக்கிட்டு வயக்காட்டுப் பக்கம் போவாரு. மாட்ட மேய உட்டுட்டு வரப்புமேல ஒக்காந்து வெத்தலபாக்கு போடுவாரு. செத்த நேரம் துண்ட வரப்புமேல போட்டு படுத்து எந்திரிப்பாரு. வெயிலு ஏறயில துண்ட எடுத்து தலப்பா கெட்டிருக்கிருவாரு. கையில ஒரு குச்சிய வச்சுக்கிட்டு அப்பப்ப மாட்ட, ஏய்,....டேய், ஏலேய்...ம்...தா....இப்படி பல மாதிரி சத்தம் போட்டு கூப்டுகிட்டு இருப்பாரு. மதியம் ரெண்டு மணிக்கு மேல மாட்டக் குளுப்பாட்டிட்டு வீட்டுக்கும் பத்திட்டு வருவாரு.

மாட்டக் குளுப்பாட்டும்போது எருமயிட்ட பேசிக்கிட்டே குளுப்பாட்டுவாரு. அவருகூட மாடு மேய்க்கிற பெயல்களும், சின்னப் பிள்ளைகளும் இவருகூட தமாசாப் பேசிச் சிருச்சு வெளயாடுங்க. இவரும் கண்டமாணிக்கா கண்டதகளியதச் சொல்லி சிரிக்க வைப்பாரு. ஒரு நாளு கம்மாத் தண்ணில மாலாண்டி மாடு குளுப்பாட்டிக்கிட்டு இருந்தாரு. பக்கம் பக்கமா மத்தவுகளும் அவுகவுக மாடுகள குளுப்பாட்டிக்கிட்டு இருந்தாக. வழக்கம்போல மாலாண்டி தாத்தா மாட்டுகிட்ட பேசிகிட்டே குளுப்பாட்டுனாரு.

“ஏலேய், செத்தப் பொறுடா; ஒடம்பு பூராஞ் சகதியாக்கிட்டு வந்துருக்க. அந்தா...அந்த வளஞ்ச கொம்பப்பாரு. எம்புட்டுச் சுத்தமா வந்துருக்குன்னு. எல்லா நாங்குடுக்ர எடந்தான். தெனமும் ஒனியத் தேச்சு தேச்சு குளுப்பாட்டுரம் பாரு” பேசிக்கிட்டே தண்ணி அள்ளி ஊத்துனாரு. தண்ணிய ஊத்திட்டு திரும்பியும் தேய்க்கவும் மாடு தண்ணிய உட்டு வெளிய வந்துச்சு. “டேய், இருடா. ஓடாத. மூஞ்சியப் பாரு எங்கபோயி மூஞ்சியத் தேச்ச? இம்புட்டுச் சகதிய அப்பிக்கிட்டு வந்துருக்க? அவெ பழனிப்பய மாட்டோட சேந்துக் கிட்டு மேயும்போதே நெனச்சேன். அவெம்மாட்டுக்கூட சேராதன்னு ஒனக்குச் சொல்லியிருக்கேனா? ரொம்ப மணியம் புடுச்ச மாடு அது. ரெண்டு பேரும் சேத்துக்குள்ள ஓடிப்புடுச்சு வெளாண்டு சகதிக்குள்ளே உழுந்து பெரண்டு.... செய்.... மூஞ்சிய மூஞ்சியாவா வச்சிருக்க?,” சொல்லிக்கிட்டே மூஞ்சியத் தேச்சாரு. தேச்சுக்குட்டு இருக்கைலயே மாடு வாலத் தூக்குச்சு.

“என்ன....வாலத்தூக்குற? குளிக்கும்போதுதான் ஒனக்கு ஒன்னுக்கு, ரெண்டுக்கு வரும். சரி....சரி...போடு. தரைல போட்டாலும் பெரயோசனம். தண்ணிக்குள்ள போடுறியேடா,” சொல்லிட்டு மாட்டோட மூக்கணாங் கவுத்தப் புடுச்சுக்கிட்டு நின்னாரு. மாடு சாணி போட்டு முடுச்சதும் தண்ணிய அள்ளி வாலுப்பக்கம் ஊத்தி உட்டாரு.

பக்கத்துல மாடு குளுப்பாட்டிக்கிட்டு இருந்த கந்தசாமி பெயங்

கேட்டான். "தாத்தா, தெனமும் ஒம்மாட்டுக்கூடப் பேசுறியே. அதுக்கென்ன வெளங்கவா செய்யும்?"

"ஏலேய், அதுக்கு வெளங்காமயாடா நாஞ்சொல்றதெல்லாம் கேக்குது? குளுப்பாட்டும்போது பாரு, நானு எங்குட்டுத் திரும்பச் சொன்னாலும் திரும்பிக் காட்டும். நீயி பாக்கல?"

"நாந்தான் பாத்தேனே தாத்தா. மாடு எங்க திரும்புது? நீதான அங்குட்டு இங்குட்டுமாய்போயி தண்ணி அள்ளி ஊத்தித் தேய்கிற," இப்பிடி கந்தசாமிப்பெய பதுலுக்குக் கேக்கவும் தாத்தா சிரிச்சுக்கிட்டே பேச்ச மாத்திட்டாரு.

"ஏலேய், எப்பாயாச்சும் அந்தக் கொய்யாப்பழ நாய்க்கரோட கரும்புத் தோட்டத்துக்கிட்டப் போயி மாடு மேச்சிருக்கியா? அங்னகுள்ள ஒரு பெரிய உடும்பு திரியுதுடா. நானு நெறய்யத்தடவ பாத்துருக்கேன். ஒரு நாளைக்காவது அதப்புடிக்கலாம்னு பாக்கேன்.... எம்புடுவனாங்குது. நேத்துப் பாத்தினா வெக்காளி உடும்பு என்னமா ஓடுதுங்க. புடிக்கலாம்னு போகையில டபக்குனு காவாத் தண்ணிக் குள்ள குதுச்சு மொதல கெணக்கா சர்ர்ர்னு நீச்சலடுச்சுக்கிட்டு ஓடிப் போச்சு. கண்டரளி நீச்சலடுச்சுட்டுப்போன சோக்கப் பாத்துக்கிட்டு புடிக்கனும்ங்ரதயே மறந்து போனம்னா பாத்துக்கோயேன். நல்ல பாம்பு கெணக்காவே தலயத் தூக்கிட்டு நால திக்கமும் சுத்திப் பாத்திக்கிட்டே நீச்சலடிக்கிடா."

"உடும்பப் புடுச்சு என்னத்துக்கு தாத்தா?"

"அடப்படுவா, என்னத்துக்கின்னா கேக்க? உடும்புக்கறி தின்னா ஒடம்புக்கு நல்லதுடா. மருந்துப் பண்டங்கெணக்கா அது. அம்புட்டுச் சாமானியத்துல உடும்புக்கறி கெடைக்காது தெரியும்ல."

"போ. தாத்தா...போ. ஏங்கண்ணுல மட்டும் அது தட்டுப் பட்டுச்சுன்னு வையி. கல்லக்கொண்டி ஒற்றே இறுத்துதான். வெக்காளி விலுக்கு விலுக்குனு துள்ளிக்கிட்டுச் சாகும்," கந்தசாமி ரொம்பாச் சவுடாலாச் சொன்னான்.

"சரி, ஒரு நாளைக்கு அந்தக் கரும்புத் தோட்டத்துச் செம போயி அந்த உடும்பக் கொண்டாந்துரு பாப்பம்." சொல்லிட்டு மாட்ட வீட்டுக்குப் பத்திட்டுப் போனாரு தாத்தா.

இன்னொரு நாளு மாடு மேய்க்குரதுக்கு கந்தசாமியோட தங்கச்சி மருதாயி வந்திருந்தா. அவளுக்கு ஏழெட்டு வயசு இருக்கும். கந்தசாமிக்குப்பெறகு நாலஞ்சு வருசங்கழுச்சு பெறந்தவா. மருதாயியப் பாத்துட்டு மாலாண்டி தாத்தா சிருச்சுக்கிட்டே கேட்டாரு.

"ஏ... களவாணிப் பெயபுள்ள....என்ன இன்னைக்கு இங்குட்டு வந்துருக்க. இன்னங் கலியாணம் ஆகலியா? எனக்கு வாக்கப் பட்டுக்கிறயா? தெனமுங் கறியுஞ் சோறுமாப் போடுறேண்டி... வாரீயா?"

"போயி ஒம்பேத்தியாளப் போயி கெட்டிக்கோ. ஏந் தங்கச்சிகிட்டே அப்படியெல்லாங் கேக்காதே." மருதாயிக்குப் பதுலா அவுகண்ணஞ் சொன்னான்.

"எனக்கெந்த பேத்தியா இருக்காடா. ஊருல இருக்குறத பூராம் ஏம் பேத்திமாருதான்ல."

"ஏந்தாத்தா, ஒனக்குக் கலியாணமே ஆகலியா? நீயி பொண்டாட்டி இல்லாமெ இருக்கப்போயித்தான ஒனியப் பத்தி பாட்டு இட்டுக்கட்டிப் படிக்காக," கந்தசாமி கேட்டான்.

"அட பெயபுள்ள, எனக்குக் கலியாணம் ஆகி, ஒங்க பாட்டி செத்துப் போனாடா. அந்தப்பாட்ட எனக்கா படிக்காகங்க. நானு ஒனியப்போல மாடுமேய்க்கற காலத்துலயே நாங்க அந்தப்பாட்டப் படுச்சுக்கிட்டுத் திரிவோம்." சொல்லிட்டு அந்தப்பாட்ட சத்தம் போட்டு படுச்சாரு தாத்தா.

"ஊரிக்காலு மாட்டுக்காரா,

ஒத்தக்காலுப் புண்ணுக்காரா,

பொண்டாட்டி இல்லாமெப்

புண்ண புண்ண நோண்டுரானே

எருமமேல சவ்வாரி போயிக்கிட்டே இதப் படிப்போம்."

"நேரம் எம்புட்டு இருக்குந் தாத்தா?" கந்தசாமி கேட்டான்.

"பொழுதப் பாத்தா தெரியல. பாலு பீச்சர நேரந்தான். பத்திக்கிட்டுப் போலே. இந்தக் கருவாச்சிய சூதானமாக் கூப்டுகிட்டுப் போ. அடுத்த வாரம் பருசம்போட வாரேன்." சொல்லிக்கிட்டே மருதாயோட கன்னத்த புடுச்சுக்கிள்ளுனாரு. அவரு கையத் தட்டி உட்டுட்டு கன்னுக்குட்டியப் புடுச்சுட்டுப் போனா மருதாயி.

அன்னைக்குக் கம்மாயில ஒருத்தரும் மாடு குளுப்பாட்டல. மழ வார மாதிரி இருக்கவும் அம்புட்டுப்பேரும் மாடுகள வெள்ளனத்துலயே பத்திட்டுப் போயிட்டாக. மாலாண்டி தாத்தா மட்டும் மாட்டத் தண்ணிக்குள்ள உட்டு குளுப்பாட்டிக்கிட்டு இருந்தாரு. அவரு பாட்டுக்கு எருமயிட்டப் பேசிக்கிட்டே தேச்சாரு.

"ஏலேய்.... தெனமும் நாம் பாக்குரேன், நீயி மேயும் போது ஒனியச்சுத்தி பத்து இருவது வெள்ளக் கொக்குக நிக்குதுகளே.... எதுக்குலே? அதுக தான் ஒனக்குக் கூட்டாளிகளா? நீயி எங்குட்டுப் போனாலும் ஊர்வலம் போறது கெணக்கா அம்புட்டுக் கொக்கும் ஒங்கூடயே வருதுக. ரொம்பாத் தமாசுடா.... ஆமா....ஏய், ந்தா... என்னலே வாலக்கொண்டி இந்த அடி அடிக்க? கொசுக்கடுச்சா கொசுவ அடிப்பியா ஏம்மேல சத்துனு வாலத்தூக்கிப் போடுறியே. படுவா ராஸ்கோலு." குனுஞ்சு கால்ல ஒட்டியிருந்த சகதியத் தேச்சுக்கிட்டே எருமயிட்ட கேட்டாரு, "ஆமலே...எதுக்கு அந்தக் கருச்சாங்குருவிய முதுகுல ஏத்திக்கிட்டே திரிற? நீயி அந்தக் கருங்கருவிய முதுகுல

ஏத்திக்கிட்டு , சுத்தி வெள்ளக் கொக்குகளக் கூப்டுகிட்டு அசஞ்சு அசஞ்சு போறதப் பாக்கைல எனக்குச் சிரிப்பாணி அள்ளும் பாத்துக்கோ. அந்தக் கந்தசாமிப் பெயகூட ஒருநாளு எங்கிட்ட சொன்னான்; அந்தக் கொக்குகளும் கரிச்சாங்குருவியுந்தான் ஒனக்குச் செநேகிதமாம் அப்படித்தானலே?"

மாலாண்டி பேசிக்கிட்டு இருக்கைல கம்மாக்கரவழியா ஈஞ்செடியான் வந்தாரு. ஈஞ்செடியானுக்கும் மாலாண்டி வயசுதான். அவரு மாலாண்டிட்ட கேட்டாரு," என்னப்பா மாலாண்டி, ஓம்பாட்டுக்கு ஒத்தயில பேசிக்கிட்டு இருக்க. அந்த மொட்டுக்கண்ண மாதிரி ஒனக்கென்ன கிறுக்கா புடுச்சுப் போச்சு?"

"அதாரு, ஈஞ்செடியானா? என்ன கேட்ட நானு ஒத்தயில பேசுரனா? இந்தா இந்த மூதேவிட்டதான் பேசுறேன். ஒருநா ஒரு பொழுது பதுலு சொல்லாது சரி. நீயி எங்க இந்நியாரத்துல இங்குட்டுத் திரிற? மானங்கருத்துக் கெடக்கு. மழ வரும் பொறுக்கோ," சொல்லிக் கிட்டே மாட்ட அரட்டி தண்ணிய உட்டு வெளியே கொண்டாந்தாரு.

"வெளிக்கிருந்துட்டு கால கழுவலாம்னு வந்தேன். ஒஞ் சத்தங்கேட்டுச்சு. வந்து பாத்தா நீ மட்டும் நின்னு பேசிக்கிட்டுருக்க. அதான் கேட்டேன். சரி வீட்டுக்குத்தான. பத்திட்டு வா போவோம்," சொல்லிக்கிட்டே தண்ணில எறங்கிக் காலுகழுவிட்டு வந்தாரு.

மாட்ட முன்னால உட்டு பின்னால ரெண்டு பேரும் பேசிக் கிட்டே வந்தாக. மாலாண்டி கோமணமாக் கெட்டியிருந்த வேட்டிய அவுத்து உட்டுட்டு தலப்பா கெட்டியிருந்த துண்ட எடுத்து மூஞ்சியத் தொடச்சுக்கிட்டாரு.

"மாடு செனப்புடுச்சுருக்க மாதிரி தெரிது. ரெண்டு மூனு மாத்தைல ஈண்டுக்குறும் போலயே," ஈஞ்செடியான் கேட்டாரு.

"ஆமாமா செனயாத்தான் இருக்கு. அதான் ரொம்பாச் சாக்கிரதயாப் பாக்குறேன். ஈண்டப்பெறகு கடங்கப்பியெல்லாம் அடச் சுட்டு சூசுவான்னு குத்த வைக்கனும்."

"நீயி ஒருத ஒத்தப்பரிக்கு அப்படி என்ன கடங்கெடக்கு? ஒனக்கென்ன பிள்ளையா குட்டியா?"

"நல்லாக் கேட்ட போ. போன வருசம் மாடு மேய்க்கப் போயி வரப்புல தடுமாறி உழுந்து காலு ஒடஞ்சு கெட்டுப் போட்டுக் கெடந்தேனே....யாவுகம் இருக்கா? அப்ப வைத்தியச்செலவுக்கு அவரு ராசாராம் அய்யாட்ட எரநூறு ரூவா கடன் வாங்குனேன். அதுக்கு வட்டியத்தான் கெட்டிக்கிட்டு வாரேன். அசலு அப்படியே இருக்குதாம். வட்டியே இப்ப ஆயிரத்துக்கு மேல கெட்டிருக்கேன். இப்ப மாடு ஈனவும், அந்தக் கடனுக்காக மாட்டப் புடுச்சுட்டுப் போயிருவாரு அவரு. கன்னுக்குட்டிதான் ஏங்கிட்ட நிக்கும்."

"எரநூறு ரூவாக் கடனுக்காக மாட்ட உடப்போற?"

"நல்லா உட்டேனா, அவரு அப்படிச் சொல்லியிருக்காரு. ஈனட்டும்; பொறு பாப்போம்," சொல்லிட்டு வீட்டுக்கு மாட்டப் பத்திட்டுப் போயிட்டாரு.

மறுநாளு வயக்காட்டுல மாடு மேய்க்கையிலே கந்தசாமிப் பெயகூட மாடன், மாசிலாமணி, முருகேசன் இப்பிடி இன்னும் நாலஞ்சு பெயல்களும் வந்து மாடு மேச்சானுக. இந்நியாரம் காவாத் தண்ணிக்கிட்டப் போன பாம்பப் பாத்துட்டு மணிப்பெய கத்துனான். "ஏலைகா, பாம்பு டோய்....ஏ....அந்தா பாருங்கடா ....அந்தா ஓடுறா பாரு....ங்கொப்பனொளி....அந்தா....புல்லுக்குள்ள கெடக்கா பாரு."

சத்தத்தக் கேட்ட மாலாண்டி தாத்தா பக்கத்து வயல்ல மாட்ட உட்டுட்டு வந்தாரு. "ஏய்.... பயந்தாரிப் பெயலுகா, ஒரு தண்ணிப் பாம்புக்காடா இந்தக் கூப்பாடு? நானு என்னமோ ஏதாக்கும்னுல ஓடியாரேன். தள்ளுங்கலே, எங்னலே இருக்கு. காட்டுங்கடா. வெக்காளி மப்பப் பிதுக்குரேன்," சொல்லிக்கிட்டே போனவரு மாடு மேய்க்ர கம்பக் கொண்டி பாம்பத் தூக்கித் தரைல போட்டு லபக்குனு மண்டயப் புடுச்சுக்கிட்டாரு.

பாம்பத் தூக்கிக்கிட்டு இச்சி மரத்தடிக்கு வரவும், அவரு பின்னாலயே எல்லாப் பெயல்களும் மாடு மேய்க்குர கம்புகளோட போனானுக. அங்ன புல்லறுத்துக்கிட்டிருந்த பொம்பளப் புள்ளை களும் வந்து சுத்தி நின்னுக்கிட்டாக.

தாத்தாவுக்கு ஒரே சிரிப்பு. சுத்தி நின்ன கூட்டத்தப் பாத்து பாம்ப ஒசக்கத் தூக்கிப் புடுச்சுக்குட்டு சொன்னாரு. "இதெல்லாம் ஒரு பாம்பா? வெறுந்தண்ணிப் பாம்பு. இதப் போல எம்புட்டுப் பாம்புகள நானு ஒங்க வயசுல புடுச்சுருக்கேன் தெரியுமா?"

"எம்புட்டுப் பாம்பு?," கூட்டத்துல ஒரு பிள்ள கேட்டுச்சு.

"அப்ப கந்தசாமியை விட நானு சின்னப் பையன். கைக்கு மும்மூனு பாம்பு குட்டிகளத் தூக்கிக்கிட்டு விர்ரு விர்ருன்னு சுத்திட்டு தரைல போடுவேன். பனங்கள்ளு குடுச்சதுக கெணக்கா அம்புட்டும் சொணங்கிப் போயிக் கெடக்கும்," தாத்தா சொல்லவும் நின்னவுக பூராம் தாத்தாவச் சுத்தி ஒக்காந்துட்டாக. தாத்தாவும் ஒக்காந்தாரு, பாம்பு தாத்தா கையச் சுத்திக்கிட்டுக் கெடந்துச்சு.

"தாத்தா, இப்ப இந்தப் பாம்பத் தூக்கிச் சுத்திப் போடு பாப்பம்"னு கந்தசாமி கேட்டான்.

"இப்பப்பாரு....இங்கப் பாரு....வெலகிக்கோ.... வெலகிக்கோ .... ஒதுங்கிக்கோ," சொல்லிகிட்டே தாத்தா பாம்பத் தூக்கி வாலப்புடுச்சுக்கிட்டு விர்ரு விர்ன்னு சுத்துனாரு. சுத்திட்டு ரொம்பத் தொலவட்டுல தூக்கி வீசுனாரு.

பெயல்க பூராம் தாத்தாவ ரொம்ப அருவசமாப் பாத்தானுக. தாத்தா எல்லாரையுஞ் சுத்திப்பாத்து சிருச்சுக்கிட்டு, "ஏலைகா,

இதுக்காடா இப்பிடிப் பாக்கீக? நானு சொல்லப் போறதக் கேட்டீகனா அம்புட்டுத்தான்." நிப்பாட்டிக்கிட்டாரு தாத்தா.

ஒடனே எல்லாரும், சொல்லு தாத்தா....ஏ தாத்தா சொல்லு தாத்தா...என்னது சொல்லப் போற?," ஆவலா கேட்டாக.

தாத்தா ஒக்காந்தாரு. எல்லாருஞ் சுத்தி ஒக்காந்துட்டாக.

"அந்தக் காலத்துல, மேற்க, கருவலாங்காட்டுக்குள்ள மாடுகளப் பத்திக்கிட்டுப் போவாரு எங்கய்யா. நானுங்கூடப் போவனா....அப்ப ஒரு நாளு கருவ மரத்துல ஒரு பாம்பு தொங்குச்சு."

"எம்மந்தண்டிப் பாம்பு தாத்தா?"

"பெரிய்ய்ய்ய்ய்ய்...ய பாம்பு. எனக்கே ஒடம்பெல்லாம் புல்லருச்சுருச்சு. பெறகும் தயிரியமா கிட்டத்துல போயி பாத்தனா. ங்கொப்பனளி பாம்பு வாயில ஒரு சிட்டுக் குருவியக் கவ்விக்கிட்டு இருந்துச்சு."

"நெசமாவா தாத்தா? பாம்பு குருவியத் திங்குமாக்கும்?" முனியங் கேட்டான்.

"இல்ல, திங்காது. சும்மா மோந்து பாத்துட்டு உட்டுரும், சுத்தப் பேப்பெயலா இருக்கியே. கண்டரளி குருவிய மட்டுமா திம்பாங்ர? நம்ம வளக்குர கோழிகள கூடத் திங்கும்லே."

"பெறகு நீயி என்ன செஞ்ச தாத்தா? குருவியக் காப்பாத் திட்டியா?" கந்தசாமி கேட்டான்.

"காப்பாத்தாமெ உடுவனா நல்லா. சுத்திமுத்தும் பாத்தேன். எப்படிடா காப்பாத்துரதுன்னு யோசுச்சேன். பக்கத்துல ஒடஞ்ச பான ஓடு கெடந்துச்சா. அத எடுத்து ஓரெறி உட்டேன் பாரு. கரேக்டா பாம்பு மண்டைலயே போயி உழுந்துச்சு. குருவிய போட்டுட்டு விருட்டுனு பாம்பு ஓடிப் போச்சு. ங்கோத்தா...அப்ராணி குருவியப் புடுச்சு கொன்னு போட்டு ஓடவா செய்ரன்னு இன்ன ரெண்டு எறி உட்டேன். எறிய வாங்கிட்டு ஓடிப்போனா பாம்பு. சரி அந்த குருவி என்ன நேச்சர்ல கெடக்குதுனு பாப்பமுன்னு குருவியத் தூக்கிட்டு வந்தேன்."

"அப்புறந்தாத்தா? குருவி உசுரா இருந்துச்சா?"

"பாம்பு வாய்க்குள்ள போனது எப்படிடா பொழைக்கும் அந்தாணிக்கத் தூக்கியாந்து எங்கய்யாட்ட காட்டிட்டு சொன்னேன். அத தூக்கிப்போடச் சொன்னாரு எங்கய்யா."

"எங்னகுள்ள தூக்கி போட்ட தாத்தா?"

"நானு தூக்கிப் போடலடா. அத எடுத்துட்டுப்போயி ஒரு மரத்துக்கடில குழிதோண்டி பெதச்சு வச்சுட்டேன். பாவம் குருவி. ஒடம்பு பூராம் ரத்தமா இருந்துச்சு. பெறகு அங்குட்டிக்கூடி மாடு மேய்க்க போம்போதெல்லாம் குருவியோட செமாதிக்கு எரிக்கம்பூ,

துத்திப்பூ, மஞ்சனத்திப்பூ இப்டி ஏதாச்சும் புடுங்கி வப்பேன்."

"இப்பப்போயி பாத்தா அந்த செமாதி இருக்குமா தாத்தா?"

"அதெப்டிலே இருக்கும். நானு ஓமட்டப் புள்ளையா இருக்கைல வச்சது. இன்னமா இருக்குது."

"இன்னொரு தடவ ஒரு பெரிய சாரப்பாம்ப அடுச்சு அத வச்சு நாங்கள்ளாம் வெளாண்டுகிட்டு இருந்தோம். அங்குட்டு கூடி ஒரு தொந்தி நாய்க்கரு வந்தாரு. நானு அதாஞ்சாக்குனு பாம்ப எடுத்து விர்ரு விர்ருன்னு சுத்தி வேனுக்னே அவருமேல தூக்கிப் போட்டேம் பாரு; தொந்தியயுந் தூக்கிக்கிட்டு அலறிக்கிட்டு ஓடுனாம்பாரு ஒரு ஓட்டம், ரொம்பத் தமாசுடா." சொல்லிக்கிட்டே மாடுகளத் திரும்பிப் பாத்தாரு.

"ஏலைகா, மாடுக பூரா வெள்ளாமைக்குள்ள எறங்கியிருக்குடா. ஓடிப் பத்துங்கடோய், ஓடுங்கடோய்" சொல்லிட்டு எந்திரிச்சு விர்ருன்னு நடயக் கெட்டுனாரு. பெயல்களும் மாடுகள அரட்டிக் கிட்டே அவருக்கு முன்னால ஓடுனானுக. இவனுக போயி பத்திக் கொண்டாரயில காட்டுக்காரன் வந்துட்டான். பெயலுகள்ளாம் பயந்துபோயி வரப்புகள்ள உழுந்து எந்துருச்சு ஓடுனானுக. தாத்தாவும் போயி மாட்ட மடக்கிக் கொண்டாந்தாரு.

"ஒனக்கு கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா? நீயெல்லாம் ஒரு பெரிய மனுசனா! சின்னப் பெயல்கள அரட்டி உடுரத உட்டுட்டு நீயே வந்து வெள்ளாமைக்குள்ள மாட்ட உடுறியே. மாட்டுக் கால ஒடுச்சுப் போடுவேன்; சாக்கிரதயா இருந்துக்கோ, ஆமா....," காட்டுக்கார ஐயா கத்துனாரு.

பெயல்க பூராம் தூரத்துல நின்னு பாத்துக்கிட்டு இருந்தானுக. தாத்தாவப் பாக்கையில அவனுகளுக்குப் பாவமா இருந்துச்சு. தாத்தா இங்குட்டு ஒடியாந்துட்டா என்ன; அங்னக்குள்ளேயே நிக்கிராருன்னு நெனச்சுக்கிட்டு இருந்தானுக.

தாத்தா பயப்படாமெ பேசுனாரு, "என்னய்யா ஒம்ம வெள்ளாமைய அழிமாண்டஞ் செஞ்சுட்டோம்? காட்டுக்குள்ள எறங்கமுன்னாலதான் ஓடியாந்து வெரட்டிடம்ல. பெறகென்ன கத்துர."

"இன்னைக்கு நானு இருக்கேம்னு ஓடியாந்து பத்தி உட்டீக. நாளைக்கு நானு இல்லன்னா வெள்ளாமைக்குள்ளயே மாட்ட உட்டுருவீக. ஒங்களப்பத்தித் தெரியாது. கள்ளவாளிக் கழுதைக."

"யோவ், வாத்த வித்தியாசமாப் பேசாதே. வம்பாச் சாகாதே. நேத்துப் பெறந்தவன் நீயி. எனியப் பாத்தா கள்ளவாளி கழுதைங்கர? மென்னியத் திருகிப் போடுவேன் திருகி. ஆமா....," சொல்லிக்கிட்டே மாட்டப் பத்திக்கிட்டு வந்தாரு தாத்தா.

காட்டுக்காரனும் பதுலுக்குக் கத்துனான். தாத்தா இங்குட்டுத்

தள்ளி வரவும் பெயல்க அவர்ட்ட கேட்டானுக. “தாத்தா, ஒனக்குப் பயம்மாவே இல்லியா? சம்சாரிட்டப் போயி அப்படிப் பேசுறியே. ஒனிய அடுச்சுப் போடுவார்னு நாங்கள்ளாம் பயந்துகிட்டே கெடந்தோம்,” கந்தசாமி சொன்னான்.

“நீங்கதாண்டா சம்சாரிகளக் கண்டா பயந்து குசிவிட்டு ஒடுவீக. எனக்கென்னடா பயம் இந்த நீசப் பெயல்ககிட்ட.”

“நீயி பெரியாளு. அதான் பயப்படமாட்டேங்க. சின்னப் பெயலுகன்னா அடுச்சுப் போடுவாங்க.”

“அப்படியா சொல்ற? நம்ம சேரிக்குள்ள போயிப்பாரு. பெரிய பெரிய ஆளுகள்ளாம் சம்சாரிகளக் கண்டா, தோள்ல கெடக்ர துண்ட எடுத்து இடுப்புல கெட்டிக்கிட்டு, கும்புடு போட்டுக்கிட்டு, மீசவச்ச பெயகூட பயத்துல காலு வழியா மோளுவானுக. நானு ஒங்க வயசா இருக்கைலகூட பயப்பட மாட்டேன். நானு பயப்படமாட்டேங்கன்னு எங்கய்யனே எனிய வஞ்சு போடுவான்.”

மாடுகளப் பத்திக்கிட்டே பேசிக்கிட்டே வந்தாக. அப்ப தாத்தா தொயந்து சொன்னாரு. “எங்கய்யா ஊருக்காலு மாடுகள மேக்கை யிலே சம்சாரிக மாடுகளும் மேய வரும்ல. அப்ப எவெ எவெ எனியவோ, எங்கய்யனவோ வஞ்சானோ, அவெம் மாடுகள்ளதான் நானு சவ்வாரி ஏறுவேன். அப்பக் கோவாலங் கோவாலம்னு ஒரு சம்சாரி இருப்பான். அவெம் மாட்டுக்கும் நானு கோவாலம்னு பேரு வச்சுக்கிட்டு அது மேலதான் சவ்வாரி போறது. சும்மா போவம்னா நெனச்சீக. ஏலேய் கோவலா, கெழக்காமப் போடா; இப்பிடி வாடா, அப்பிடிப் போடான்னு கண்டமாணிக்கா வைவேன். அந்த மாட்டு மேல ஏறி ஒக்கார்ரது அந்த சம்சாரிமேல ஏறிப் போறது மாதிரி நெனப் பேன். எங்கய்யங்கூட எனியக் கெஞ்சுவான். சம்சாரிக மாட்டுமேல ஏறாதாடான்னு கத்துவான். நானு அவனுக மாட்டுமேலதான் ஏறுவேன்,” சொல்லிட்டு செத்த நேரம் அமேதியா வந்தாரு. பெயல் களும் எதுவுங் கேக்காமெ கூடயே வந்தானுக.

“என்னடா கப்சிப்புனு ஆயிட்டீக. அனாவசியமா அடுத்த வனுக்குப் பயப்படக்கூடாதுடா. அவனுக்கென்ன ரெண்டு கொம்பா மொளச்சிருக்கு? அவனும் நம்மளப் போல மனுசந்தானடா. அவனுக்குப் போயி எதுக்குடா பயப்படனும் சொல்லு,” தாத்தா கேட்டாரு.

“ஆமா தாத்தா, பயப்படக்கூடாது தாத்தா. நம்ம பயந்தாத்தான் நம்ம வாயில அவனுக குசிவிடுவானுக,” கந்தசாமி சொன்னான்.

“எங்கய்யன எப்படியெல்லாம் வைவானுக தெரியுமா? எங்கய்யன் ஒன்னுமே பேசமாட்டான். என்ன வஞ்சாலும் சகிச்சிட்டுப் போவான். ஆனா நானு உட மாட்டேன். அந்த சம்சாரிக மாட்டு மேலயே மோண்டு வைப்பேன்.”

"மாட்டுமேல மோண்டா அவனுக்கென்ன தாத்தா?"

"அந்த மாட்டுக்கு அவெம்பேருதானே வச்சுருக்கு. பேரச் சொல்லிக்கிட்டே மோளுவண்டா."

"பெறகு என்ன செய்வ தாத்தா?"

"எங்கய்யங்கூட சம்சாரிக வீட்டுப்பக்கம் எதுக்காச்சும் போனம்னு வையி. நம்மள அவுக வீட்டுக்குள்ள மொழய உடமாட்டானுக. என்ன செஞ்சேன் தெரியுமா? ஒரு நாளு அவனுக வீட்டுக் கதவுமேல சாணிக் கொண்டு எறுஞ்சுட்டேன். எங்கப்பம்னா பதறுரான்," சொல்லிட்டு தாத்தா சிருச்சாரு.

"நீ எறுஞ்சத சம்சாரி பாத்துட்டாரா தாத்தா?"

"பாத்துட்டா என்ன செய்வான். மயித்தப் புடுங்கிருவானா? பாத்துட்டு கத்துனான். எங்கய்யன்தான் சின்னப் புள்ள சாமி, தெரியாமச் செஞ்சுட்டான் சாமின்னு சொல்லிக்கிட்டு கெடந்தான். நானு ஒற்றே ஓட்டமா திரும்பிப் பாக்காமெ ஓடியாந்துட்டேன்: சரி, சரி வாங்கடா வீட்டுக்குப் போவோம்" தாத்தா சொல்லிட்டு மாட்டப் பத்துனாரு. பெயல்களும் மாடுகளப்பத்திக்கிட்டு வந்தானுக.

வரும்போது தாத்தா சொன்னாரு, "அந்தக் கொமரவேலு நாய்க்கரு இருக்காருல்ல, அவரு ஒருநாளு எங்கய்யன அடுச்சுப் போட்டாரு. மேயப்பத்திட்டு போன மாடு ஒழுங்கா வீடு வரலனு அடுச்சாரு. ஆனா அவெம்மாடு எங்குட்டோ போயிட்டு செத்த நேரங்கழுச்சு வீட்டுக்கு வந்துருச்சு. இதப் பாத்ததும் எனக்கு அம்புட்டுக் கோவம். நானு என்ன செஞ்சம்னு தெரிமா. மாடு மேய்க்கதுக்கு எங்கய்யன் வச்சுருந்த கம்பைப் புடுங்கிக்கிட்டு சத்து சத்து சத்துன்னு அவெம்மாட்ட இறுத்துனேன் பாரு. அவெ ஓடியாந்து என்னப் புடிக்க வந்தான். எங்கய்யனும் ஓடியாந்தான். 'இன்னைக்கு ஓம்மாட்டுக்கு உழுந்த அடி நாளைக்கு ஒனக்கு உழுண்டா நாய்க்கரே, அடிக்கு அடி குடுக்காமெ உடமாட்டேன் டோய்' சொல்லிக்கிட்டு ஓட்டங்கிண்ணிட்டேன்."

"ஐயய்யோ, நாய்க்கரையா டேய், டோய்னு சொன்ன?"

"நாய்க்கராவது, நோய்க்கராவது நம்மள அனாவசியமா அடுச்சாம்னா நம்மளும் திருப்பி அடிக்கனும்டா. இல்லன்னா நம்மள ரொம்ப ஈசியா நெனச்சுப் போடுவானுக," தாத்தா சொல்லிக்கிட்டே அவுக தெருவுக்குள்ள மொழயப் போகையில ஈஞ்செடியான் வந்தாரு.

"என்ன ஈஞ்செடியான் சிக்கட்டிக் சிக்கடின்னு நடந்துக்கிட்டு ஒரு எடத்துல நிக்கமாட்டெங்க. எங்குட்டு கௌம்பிட்ட இந்நியாரத்துல?," தாத்தா கேட்டாரு.

ஈஞ்செடியானுக்குக் காலு கொஞ்சம் வளஞ்சுக்கிட்டு இருக்கும். அதுனால ஒரு திக்கம் சாஞ்சு சாஞ்சு நடப்பாரு. மாட்டப் பாத்துட்டுக் கேட்டாரு," என்ன மாலாண்டி மாடு இன்னும் ஈனக்காணும். அவரு

ராசாராம் ஐயா வந்து கடனுக்காக மாட்டக் கேட்டாரா?"

"கேப்பாரு கேப்பாரு; அவரு கேட்டா நாங் குடுத்துருவனா? எரநூறு ரூவாக் கடனுக்கு இதுவரைக்கும் ஆயிரத்துக்கு மேல கெட்டியாச்சு. இதுல அவனுக்கு மாட்டவேற குடுப்பாகளோங்க றேன். திருட்டுத் தாயளி வரட்டும் இங்கே மாட்ட உட்டே வாய்ல கெடாவச் சொல்றேன்," கோவமாக் கத்துனாரு மாலாண்டி.

பெயல்கபூராம் நின்னு தாத்தாவையேப் பாத்தானுக. திரும்பியும் கத்துனாரு, "வரட்டும் ரெண்டுல ஒன்று பாத்துர்ரேன். இந்த மசுரு உசுரு இருந்தாலுஞ் சரி, போனாலுஞ் சரி. எம்புட்டு நாளைக்கு அவனுக நம்மள ஏமாத்த உட்டுக்கிட்டு நம்ம ஏமாந்து கிட்டே இருக்குரது?"

"காளங்கன்னு செனப்புடுச்சு ஈண்டுக்கிட்டாலும் ஈண்டுக்குரும்; இந்த மாலாண்டிப் பெயமட்டும் மண்ட மடியுந்தட்டிக்கும் மாறவே மாட்டான் பொறுக்கோ," ஈஞ்செடியான் சொல்லிட்டுப் போயிட்டாரு.

மாலாண்டி மட்டும் நடுத்தெருவுல நின்னுகிட்டு கோவலா கத்துனாரு. "அவரு வாத்தியாரு நாய்க்கருக்கு கொடலு தள்ளி நாய்க்கருன்னு ஏம்பேரு வந்துச்சு? நா எளவட்டமா இருக்கயிலே ங்கொப்பனொளி எனியப் பாத்து பறச்சாதிப் பெயன்னு கேட்டதுக்கு மாட்ட உட்டே அவ வகுத்த ரெண்டா வகுந்தேன். அவெம் மாட்டுக்கே வெறியேத்தி அவனக் கிழுச்செறிஞ்சேன். அத்தோட ஊரிக்காலு மாடு மேய்க்குரதயே நிப்பாட்னேன். இன்னைக்கு இந்த ராசாராமுக்கும் கொடலு தள்ளனும் பொறுக்கோ, மாட்டுக் கொம்புகள வகையாச் சீவி வைக்கேன். படுவா மாட்டப்புடிக்க வரட்டும் பாக்கேன்."

*நிறப்பிரிகை*

*இலக்கிய இணைப்பு 3, 1996*

# 6. பொங்கல்

பொங்கலு பொங்கலுக்கு மொதலாளியப் போயிப் பாத்துச் செய்ய வேண்டிய மொறையச் செஞ்சுருவான் மாடசாமி. அப்பிடித் தான் இந்தப் பொங்கலுக்கும் வழக்கப்படி சாமாஞ்சட்டெல்லாம் வாங்கிக்கிட்டுக் கெளம்புனான்.

சாவக்கோழி காலு ரெண்டையுங் கெட்டி, காலப்புடுச்சு தலகீழாத் தூக்கவும், பெயகோழி றெக்கயப் போட்டு படபடன்னு அடுச்சுக்கிட்டு அலறுனதுமில்லாமெ, சதசதன்னு கழுஞ்சு தள்ளிருச்சு.

“ஐயா, வீட்டுக்குத் தூக்கிக்கிட்டு கெளம்பயில பேண்டுருச்சு கழுத. வெறுவாக்கலங் கெட்டது;” சொல்லிக்கிட்டே பெரிய பூசணிக்காயத் தூக்கித் தோளுல வச்சு, ஒத்தக் கையிட்ட அதப் புடுச்சுக்கிட்டான் மாடசாமி.

“ஏலேய் எளவரசு, அந்தக் கரும்பு ரெண்டையும் நீ தூக்கிக்கோ வாழப்பழத்தார அண்ணங் கொண்டாரட்டும். அம்மெ அரிசியத் தூக்கியாரட்டும்.”

மாடசாமிக்கு அம்பது வயசு இருக்கும். நெடுநெடுன்னு ஒன்னப்பாரு என்னப்பாருன்னு வளந்துருப்பான். வளத்திக்குத்தக்கன கை காலெல்லாம் நீட்டமா மூங்கெஞ்கம்புகணெக்கா வளந்து ருக்கும். தலை நரச்சுப் போனாலும் கர்லிங்கு கர்லிங்கா சுருட்ட சுருட்டயா அடத்தியா மயிரு வளந்து கெடக்கும்.

ஏழெட்டுப் பிள்ளைகளப் பெத்து அதுகள ஆளாக்க என்னென்னமோ தொழிலு செஞ்சு பாத்தான். அவெஞ் செய்யாத தொழிலே இல்லன்னு தெருவுல சனங்க சொல்லும்.

தெருக்கோடியிலே காப்பிக்கட வச்சு ஒன்னுஞ் சரிப்படாமெ மூடிட்டான். பயறு, பணியாரம்னு தெருத் தெருவாச் சுத்தி வித்துப் பாத்துருக்கான். அதுவுஞ் சரிப்படல. சீசனுக்குத் தக்கன மாம்பழம், பலாப்பழமுன்னு குத்தகைக்குத் தோப்பெடுத்து அதுலயும் நட்டப் பட்டுப் போயி இப்ப இந்த நாலஞ்சு வருசமா ராமசாமி ஐயாகிட்ட பண்ண வேல பாட்ட வேல பாத்துக்கிட்டு இருக்கான்.

“என்ன மாமா, நீங்க என்ன யாவரஞ் செஞ்சாலும் தோதுப் படவே மாட்டேங்கி, “ஒருநாளு நானு அவருகிட்டே கேட்டேன்.

அவருக்கு வந்ததே வெளம். “அட போம்மா, நீ ஒன்னு. இந்தக் கண்டாரளிக வேற சாதிப் பெயல்க கொண்டாந்தா ஓடி ஓடி வாங்கித்

திங்காக. நம்ம யாவரஞ் செஞ்சா, பறப்பெய காப்பிக்கட, பறப்பெய சுட்ட பணியாரம்னு ஒரு முண்டயும் வாங்க மாட்டிக்காளுக. அதான் யாவரத்தையே நிப்பாட்டிட்டேன்," சலிப்பாச் சொல்லிட்டுப் போனாரு.

கொஞ்ச நாளு கள்ளச் சாராயங்கூட காச்சி வித்ததாச் சொல்லிக்கிட்டாக. ரொம்பா நாளு குடிக்கக் கஞ்சி இல்லாமெக் கஸ்டப்பட்டுருக்காரு. ஊரெல்லாங் கறி எடுத்துத் தின்னாலும் இவரு மட்டும் மாட்டுக் கொடலத்தான் வாங்குவாரு. ஏம்னா அதுதான் சொற்ப வெலைக்குக் கெடைக்கும்.

பிள்ளைகள்ள ஒருத்தரையும் பள்ளிக் கொடத்துக்கு உடல. "வகுறு காயும்போது படிப்பு எங்குட்டுக்கூடி வரும்?" இப்பிடிச் சொல்லிப் பிள்ளைகள பீடி சுருட்டுற வேலைக்குப் போச் சொல்லிட்டாரு. ஆனா அது என்ன ராசியோ நடுவுளவ எசக்கி முத்த மட்டும் வேலைக்குப் போச் சொல்லாமெ பள்ளிக்கொடத்துல உட்டுட்டாரு. அந்தப் பெயலும் முக்கித் தக்கி பெரிய பத்து முடுச்சு, வாத்தியாரு வேலைக்கும் படுச்சுட்டான். ஆனா வேலதான் கெடச்ச பாடுல்ல. இந்த ரெண்டு வருசமா கெடைக்குற கூலி வேலைக்குப் போயிக்கிட்டு பல லெக்குலயும் வேல கேட்டுக்கிட்டுத் திரிரான்.

மாடசாமி சாமானத் தூக்கிக்கிட்டு நடக்க, பின்னாலியே அவெம் பொண்டாட்டி ராக்கம்மாளும், மகெ எளவரசும் போனாக எசக்கி முத்து மட்டு வாழத்தாரத் தூக்காமெ நின்னுக்கிட்டிருந்தான்.

"தூக்கிட்டு வாலே, தேரமாகுது," மாடசாமி அதட்டுனான். "இதெல்லாம் எதுக்குய்யா கொண்டு போயி மொதலாளிக்குக் குடுக்கனும். நம்ம கொழம்பு வச்சுத் தின்னாலும் ஒரு நேரமாச்சும் வாய்க்கு ருசியாச் சாப்புட்ட மாதிரி இருக்கும்," எசக்கிதான் சொன்னான்.

ஒடனே ராக்கம்மா, "அப்படி சொல்லப்படாதுப்பா. நம்ம வருசா வருசஞ்செய்யுர வழமய மாத்தக்கூடாது. மாத்துனா மொதலாளி என்ன நெனப்பாரு. மொதலாளிக தின்னு ருசி கண்டவுக. அவுகதான் சாப்புடனும், நம்ம என்னைக்கு இதோட ருசியக் கண்டோம். வழக்கம் போல இருந்துட்டுப் போறதுக்கில்லாமெ... சரி சரி கெளம்பு," சொல்லிக்கிட்டே சீலைல சும்மாடு கூட்டி பொட்டிக்கு அடில வச்சிக்கிட்டா.

மாடசாமியும் நின்னு திரும்பிப் பாத்துட்டு சொன்னாரு. "படுச்சும் ஒனக்கு இத்தினிக்கூட நெளிவு சுளுவு தெரியலியே. பச்சப்பிள்ள கெணக்காவுல்ல பேசுற! நம்ம என்ன மொதலாளிக்குச் சும்மாயா இதக்குடுக்கப் போறோம்! பதுலுக்கு அவருஞ் செய்வாருல. சரி தூக்குடா."

எசக்கிமுத்து தூக்கல...."பதுலுக்கு என்னத்தப் பெருசா செஞ்சு

கிழுச்சுரப் போறாரு சொல்லுய்யா பாப்பம்," எசக்கி கேட்டான்.

"இவெ ரொம்பா வெவகாரம் புடுச்ச பெயலா இருப்பாம் பொறுக்கோ. இத்தன வருசமா மொதலாளி வீட்லருந்து பொங்கச் சோறு வாங்கியாந்து குடுத்தேன், திங்கல? அப்பயெல்லாங் கேக்காத கேள்வி இப்ப எதுக்கு? நீயி கழுத்துல போட்டுருக்கியே துண்டு அதுவும் அவரு குடுத்ததுதான். மொதலாளிட்ட போயி கணக்குப் பாக்கலாமாடா? சுத்த வெறும் பயலாவுல இருக்க நீயி," மாடசாமி சலிப்பாச் சொன்னாரு.

"இத்தினிக்கானி பொங்கச் சோத்துக்கும் ஒரு பத்து ரூவாத் துண்டுக்கும் கெதியட்டு போனது கெணக்கா எழுவது, எம்பது ரூவா சாவலு, இத்தந்தண்டி பூசணிக்கா, பத்து ரூவாக் கரும்புத்தட்ட ஒருதாரு வாழப்பழம் நாலு படி பச்சரிசி இம்புட்டுங்குடுக்கனு மாக்கும். ஏ, இத நம்ம வச்சுக்கிட்டு காச்சிக் குடுச்சா ஒரு நாலஞ்சு நாளு பொழுத ஓட்டலாமுல்ல?" எசக்கி கேட்டான்.

ஒடனே ராக்கம்மா சொன்னா, "இப்பிடியெல்லாம் நட்ணயாப் பேசாதடா. மொதலாளி வக்கத்துப் போயிக் கெடக்காருன்னா நாம கொண்டு போயிக் குடுக்கோம். நம்ம கொண்டு போயா அவருக்கு நெறயப் போகுது? ஏதோ நம்மளால ஏண்டது. வருசத்துக்கு ஒரு தடவ இப்பிடிச் செய்றோம். அவருக்கு இருக்குற சொத்தே இன்னும் நாலு தலமொறைக்குப் போதுமேடா. கேனப்பெயகெணக்கா பேசாத. சட்டுன்னு கௌம்பு."

"சரி நம்ம இப்பிடிப் பொங்கலுக்கு போயிப் பாத்தா, அது மாதிரி தீவாளிக்கோ, வருசப்பெறப்புக்கோ அவரு குடும்பமா வந்து நம்மளப் பாக்கனும்ல. அதுமட்டுஞ் செய்ய மாட்டிக்காரு," எசக்கி தான் கேட்டான்.

"இவெ என்ன இன்னைக்கு எடங்கலுக்கு மொடங்கலாப் பேசிக்கிட்டே இருப்பாம் பொறுக்கோ. மொதலாளியோட அந்தஸ்து என்ன, சாதி என்ன? அவரும் வந்து சேரிக்குள்ள வந்து பறப்பெயலப் பாக்கனும்னு எம்புட்டு மப்பு இருந்தாச் சொல்லுவெ? ஒனிய நாலெழுத்துப் படிக்க வச்சதே தப்பாப் போச்சு. இப்பிடிச் சொன்னது மொதலாளி காதுக்குப் போச்சுன்னா அம்புட்டுதான். நம்ம வகுத்துல மண்ணள்ளிப் போட்டுருவாரு. சரி, என்னடா சொல்ற வாரீயா வல்லியா?" கேட்டுட்டு எசக்கியவே மொறச்சுப் பாத்தான் மாடசாமி.

"நா வல்ல. நீங்கதாம் போயி மானம் மரியாதய காத்துல உட்டுட்டு ஒங்க மொதலாளி கால்ல உழுந்து கெடங்க. இந்தா, ஒங்க மொதலாளியோட துண்டும் மயிரும், துண்டத் தூக்கி விட்டெறுஞ் சுட்டு காரித் துப்பிட்டுப் போனான் எசக்கி.

"இவம் போற போக்கப் பாத்தா உருப்படுரது கெணக்காத் தெரியல. பொழைக்கத் தெரியாத பெய," சொல்லிக்கிட்டு மாடசாமி

வாழத்தாரயும் தூக்கிக்கிட்டு நடக்க, ராக்கம்மாளும் எளவரசனும் பின்னால போனாக.

மாடசாமிக்கு வழிநெடுக்க மகெ எசக்கிமுத்து சொன்னதே நாவகத்துக்கு வந்துக்கிட்டு இருந்துச்சு. மொதலாளி வீடு வரவும், வெளிய தெருவுல நின்னுக்கிட்டே, "ஐயா, கும்புடுரேனுங்க," சொல்லிக்கிட்டே துண்ட எடுத்து இடுப்புல கெட்டிக்கிட்டான் மாடசாமி.

மாடிலருந்து பாத்த மொதலாளி, கீழ மொதலாளி அம்மாட்ட, "வசந்தா, அத வாங்கிட்டு அதுகள அனுப்பி வையி," உத்தரவு போட்டுட்டு ரூமுக்குள்ள போயிட்டாரு.

அம்மா வந்து சொன்னாக. "மாடசாமி, கொண்டு வந்தத வாசப்படில வச்சுட்டு அப்பிடியே பின் வாசல் பக்கம்மா வா. வரும்போது கொல்லைல ஒரு வாழ எல அறுத்துட்டு வா."

சொன்னது கெணக்கா எல்லாத்தையும் வாசப்படில வச்சுட்டு பின்னால மாட்டுத் தொழுவம் பக்கம் போனான். அங்க அவெ அறுத்துட்டுப் போன வாழ எலைல பொங்க சோத்தப் போட்டதும் எடுத்துச் சுருட்டிக்கிட்டு முன்பக்கம் வந்தான். ராக்கம்மா பொட்டில இருந்த அரிசிய அம்மா கொண்டு வந்து விருச்ச சாக்குல கொட்டிப்பிட்டு, புருசங் கொண்டாந்த சோத்தப் பொட்டிக்குள்ள வச்சுக்கிட்டா.

"ஐயா வர்ரேனுங்க." ரொம்பா அடக்கமா மாடசாமி சொல்ல ஐயா உள்ள இருந்தபடியே போடான்னு சொல்லிட்டாரு.

வீட்டுக்கு வார வழில, "ஏத்தா ராக்கம்மா, மொதலாளி போன வருசங் குடுத்த துண்டுகூட இந்த வாட்டி குடுக்கலயே," ரொம்பாத் துக்கமாச் சொன்னான் மாடசாமி.

"நானும் அதத்தான் நெனச்சேன். அந்தப்பெய எசக்கி சொல்றதும் நாயமாத்தான் படுது." ராக்கம்மா சொன்னா.

எளவரசம் பெயகிட்ட இத்தினிப் பொங்கச் சோத்தக் குடுக்கவும் அவெம் பாட்டுக்குத் தின்னுக்கிட்டு, கைய நக்கிக்கிட்டு வந்தான்.

அதப் பாத்த மாடசாமி தனக்குத்தானே நெனச்சுக் கிட்டான். "இவெம் பச்சப் பெயலாங் காட்டி அவெம் பாட்டுக்கு நக்கிக்கிட்டு வாரான். அந்தப்பெய எசக்கிமுத்துன்னா இந்த சோத்தச் சீந்தக்கூட மாட்டான்."

வீட்டுக்கு வந்தப் பெறகும் எசக்கி சொன்னதையே மாடு அச போட்டது கெணக்கா அச போட்டான் மாடசாமி. "அந்தப் பெய சொன்னதுலயும் நாயமிருக்கத்தாஞ் செய்யுது. அவனப் போயிப் பேப்பெயன்னு நெனச்சேனே. நாந்தான் சுத்த வெறும் பெயலா போயிட்டு வத்துருக்கேன்," இப்பிடி நெனக்க நெனைக்க மாடசாமிக்கு தாம் மேலயே கோவமா வந்துச்சு.

அந்நியாரம் வீட்டுக்கு வந்த எசக்கி அவுகய்யா ஒக்காந்துருந்த நெலயக் கண்டுக்கிட்டு இன்னும் நம்ம மேல கோவமாத்தான் இருக்காரு பொறுக்கோன்னு நெனச்சுக்கிட்டு ஒன்னும் பேசாமெ வீட்டுக்கு முன்னால கெடந்த ஒரலுமேல ஒக்காந்துக்கிட்டான்.

செத்த நேரம் கழுச்சுச் சொன்னான். “ஏத்தா ராக்கு, அந்தப் பொங்கச் சோத்த எடுத்து குழுதாடில போட்டுட்டு கேப்பக் களி கிண்டுத்தா. நாம் போயி சூடக்கருவாடு வாங்கியாரேன். சூடக்கரு வாட்டுத் தண்ணியும், கேப்பக் களியும் அப்பிடி ருசியா இருக்கும்,” சொல்லிட்டு விர்ருன்னு எந்துருச்சுப் போயிட்டான்.

இதக்கேட்டதும் எசக்கி முத்துவுக்கு நெசம்மா பொங்கச் சோறு தின்னது கெணக்கா சந்தோசமா இருந்துச்சு. ராக்கம்மாளுக்கு ஒன்னும் புரியல. இருந்தாலும் அடுப்புப் பத்த வைக்கப் போனா. எசக்கிமுத்து பொட்டிய குழுதாடில கவுத்துனான். அவுக வீட்டு எரும மாடு புதுசா என்னத்தையோ பாக்கவும் அதத் திங்காம ஒதுக்கிட்டுத் தண்ணிய மட்டுங் குடுச்சுட்டுப் படுத்துருச்சு.

# 7. அந்தக் காலம்

அது அந்தக்காலம்; இப்ப அது மாதிரி முடியுமா? - முடியாது. மாசாணத் தாத்தா அடிக்கொருதட இந்தக் கேள்வியக் கேப்பாரு. அவரே அதுக்குப் பதிலுஞ் சொல்லிக்கிருவாரு.

“அந்தக் காலத்துல சம்சாரிக எதுக்க வந்தாகன்னா நம்ம தெருப் பெயல்கள்ளாம் குடுச்சுக்கிட்டு இருக்ர பீடி சிகரெட்ட கப்புன்னு அமத்திட்டு மரியாதயா எந்துருச்சு நிப்பானுக. இப்ப அப்பிடியா? இப்ப இருக்ர பெயல்க மொதலாளிக வார நேரம் பாத்துத்தான் பீடி சிகரெட்டையே பத்த வைக்கானுக. பத்த வச்சுக்கிட்டு தோரணயா நின்னு கிட்டு குப்பு குப்புன்னு பொகையா உடுரானுக.” சொன்னவரு வலது கால கொஞ்சஞ் சாச்சு வச்சுக்கிட்டு பீடி குடிக்கிறது மாதிரி பாவலா செஞ்சுக்கிட்டு பொகைய ஊதி உடுர மாதிரி உட்டாரு. அவரு மொகத்துல அப்பிடி ஒரு மமதையான சிரிப்பு.

மாரிமுத்து டெய்லர் கடைக்கு வந்தாரு. மாசாணம் கடைல கெடந்த ஸ்டூல எடுத்துப் போட்டு ஒக்காந்தாரு. மாரிமுத்தக் கூப்டு பேசுனாரு. “ஏலேய் மாரி, அந்தக் காலத்துல இப்பிடி யாருடா தச்சுக்கிட்டு இருந்தது பூராப் பெயல்களும் ஊரு வேலதான். செஞ்சானுக. ஆனா இப்ப ஒரு பெயலும் ஊரு வேலைக்குப் போறதில்ல. அதெல்லாம் அப்ப. இப்ப எவெம் போவான்?”

“அதென்ன மாமா ஊருவேல?” மாரிமுத்து கேட்டான்.

“நம்ம பெயல்க பூராம் மேகலக்குடி ஆளுகளுக்குத்தான் வேலவெட்டி செஞ்சானுக. அவனுக தெருவுல மாடுகன்னு செத்துப் போனா தூக்கியாந்து பெதப்பானுக. அவனுக வீடுகள்ள எழவு உளுந்தா, நம்ம பெயலுகதான் ஊரு ஊருக்குப் போயி எழவு சொல்லிட்டு வரனும். எழவு வீட்ல மேளம் அடிக்குரதும் நம்ம பெயல்கதான். பெணத்த தூக்கிக் கொண்டு போயி எரிக்கிறதும் நம்மாளுகதான்.”

“நாளுப்பூராம் மேளம் அடுச்சா ஒத்த ரூவா குடுப்பானுக அப்ப. இப்ப மேளம் அடிக்கவே மாட்டமுனு ஒரே கட்டுமானமா இருக்கோம். இனியும் ஒரு பெய நம்மள ஏமாத்த உடுவமா என்ன. உடமாட்டமில்ல.”

“கூழுகூட அவுககிட்ட வாங்கிக் குடிப்பீகளாம்ல மாமா?” மாரிமுத்து கேட்டான்.

"ஆமாமா. அவனுக சாமி கும்புடயில கூழுக்காச்சி ஊத்துவானுக. அப்ப வெக்கங்கெட்டுப்போயி சட்டியும் பொட்டியும் தூக்கிட்டுப் போயி நாயிக கெணக்கா காத்துக்கெடந்து அவனுக ஊத்துர கூழ வாங்கியாரனும். அது அப்ப. இப்ப ஒர பெயலும் கூழுவாங்கப் போமாட்டான். மொடா மொடாவா கூழுக் காச்சி வச்சுக்கிட்டு ஒக்காந்திருப்பானுக. அவெங்கூழு யாருக்கும் வேணும்."

"இன்னொரு சங்கதிய கேட்டியா! அவெம் பணியார முத்துப்பெய, பண்ணவேல செய்த சம்சாரிகிட்ட கேட்டுக்கிட்டு மொகச்சவரஞ் செய்யப் போயிருக்கான். செஞ்சுட்டுவர கொஞ்சம் லேட்டாயிருச்சாம். பண்ணையார்ட்ட மாட்டிக்கிட்டான்பெய."

"ஏ....என்ன செஞ்சானாம்?"

"சவரஞ் செஞ்சுட்டுப் போயிருக்கான். சம்சாரி கூப்டு வெசாரிச்சாராம்."

"ஏலேய் ஏண்டா இம்புட்டு நேரம். போனமா வந்தமான்னு வரத்தெரியல."

"கடைல கொஞ்சம் லேட்டாப் போச்சு."

"கடைல லேட்டாப் போச்சா? நீயி சவரஞ் செய்யனும்னு தானலே போன?"

"ஆமா சவரக்கடைல ஒரே கூட்டம். அதான் லேட்டாப் போச்சு."

"சவரஞ் செய்யக் கடைக்கா போன நீயி. ஏ....வழக்கப்படி ஒங்க தெரு அம்பட்டையனக் கூட்டியாந்து அந்த வேப்பமரத்தடில செஞ்சுட்டு வரதுக்கென்ன?"

"கடைலதான் செஞ்சு பாப்பமேன்னு அந்த சாரதா ஓட்டலுக்கு எதுத்தாப்ல இருக்குர சவரக்கடைல போயி செஞ்சுட்டு வந்தேன்."

"என்னது! சாரதா ஓட்டலுக்கு எதுத்தாப்புலயா? அங்கதானல நாம் போரது. நாங்க ஒக்கார்ர நாக்காலில நீ போயி ஒக்காந்துட்டு வந்திட்டியா?"

"ஏ...ஒக்காந்தா என்ன? எல்லாந் துட்டுத்தான். நீ துட்டுக் குடுத்தா நீ ஒக்காரலாம். நாந்துட்டுக் குடுத்தா நா ஒக்காரலாம். நாந்துட்டு குடுத்தேன், ஒக்காந்தேன்."

இம்புட்டையும் கையக்கால ஆட்டி நடுச்சுக்குட்டு சொன்ன மாசாணம் சிருச்சுக்கிட்டே சொன்னாரு. "அதெலலாம் அந்தக் காலம். இப்ப முடியுமா? இப்ப ஏதாச்சும் வாயத் தொறந்தா நம்ம பெயல்க எடங்கலுக்கு மொடங்கலாப் பேசிப் போடுவானுக. ஆமா."

துண்ட ஒதறித் தோள்ள போட்டுக்கிட்டு எந்துருச்சுப் போனாரு மாசாணம். அவராவே பேசிக்கிட்டுப் போனாரு. "அந்தக் காலத்துல நம்ம பெயல்கள நாய்க்குங் கேவலமா நடத்துனானக. இப்ப நம்ம பெயல்களும் நாலெழுத்துப் படுச்சு வெள்ளையுஞ் சொள்ளயுமாத்

திரிரானுக. கட்டாந்தரைல கெடக்குரவ என்னைக்கும் கட்டாந்தரை யிலேயே கெடப்பானா? ஒரு நாளைக்காவது பெறண்டு பாயில படுக்க மாட்டான்? படுப்பான். நம்ம பாயில படுத்தா அவனுகளுக்குப் பத்திக்கிட்டு எரியுது."

தேர்தலு டயத்துல வீட்டுவிட்டுக்கு வந்து ஓட்டு கேக்கும் போதும் மாசாணத் தாத்தா ரொம்ப எடக்காப் பேசுவாரு.

"அந்தக் காலத்துல இப்பிடியெல்லாம் போயி மறவா நின்னுக் கிட்டு படத்துல குத்தி ரகசியமாய் பெட்டிக்குள்ள போடமாட்டோம். அது வெள்ளக்காரன் ஆண்டகாலம். ஊர்ச்சனத்த ஒன்னாக் கூப்டுவச்சு தேர்தல்ல நிக்கிறவுகள முன்னால நிப்பாட்டிக்கிட்டு இவருக்கு ஓட்டுப் போடுறவுக கை தூக்குங்கம்பாக. தூக்கவும் எண்ணிக்கிருவாக. பெறகு அவருக்கு ஓட்டுப் போடுறவுக கையைத் தூக்குங்கம்பாக. தூக்கவும் அதயும் எண்ணுவாக. யாருக்கு ரொம்பக் கையி ஒசந்துச்சோ அவுகதான் செயிச்சவுக. கூட நாலு போலீசுக்காரனும் நிப்பானுக."

"இப்பப்பாரு ஓட்டு வாங்கனும்னா அவெம் மொதலாளின் னாலும், மொதலிமாருன்னாலும் நம்மளத் தேடிக்கிட்டு வீட்டு வாசலு வரைக்கும் வந்துர்ரானுக. அப்ப மட்டும் நம்ம ஒண்ணா மண்ணா இருக்குர மாதிரி வேசம் போடுவானுக. பிச்சக்காரனுக கெணக்கா இவனுக அலைரதப் பாத்தா சிரிப்பாத்தான் இருக்கு."

மாசாணந் தாத்தா சொன்னதக் கேட்டுக்கிட்டுருந்த வேல்ச்சாமி சொன்னான். "அந்தக் காலத்துல நீங்கள்ளாம் ஒன்னும் படிக்கல. அதான் கையத் தூக்கச் சொல்லி எண்ணியிருக்காங்க. இப்பத்தான் நெறய்யாப் பேரு படிச்சுருக்கோம்ல. அதான் இப்பிடி ஓட்டுப் போடுறோம்."

"போடா.... வெறுவாக்கலங்கெட்ட பெயலே.... படுச்சானு களாம் படிப்பு. அப்பயாச்சும் இன்னாருக்குத்தான் ஓட்டுப் போடு றோம்னு தெரியும். இப்ப ஆளுக மூஞ்சியக் கண்டது யாரு, மொகரையக் கண்டது யாரு. என்னமோ இதுல குத்து அதுல குத்துன்னு ஆளாளுக்குச் சொல்றானுக. ஓட்டுப் போடுறவுகள்ளாம் படத்தப் பாத்து குத்துரானுக. அம்புட்டுத்தான் என்னக் கேட்டா வெள்ளக்காரனுக ஆட்சியே தேவல. அப்ப எல்லாம் வெலவாசிக இப்பிடியா இருந்துச்சு. ஒத்த ரூவா கொண்டுபோனா ஒரு மூட்டச் சரக்கு வாங்கலாம். அதெல்லாம் அந்தக் காலம். இப்ப முடியுமா? முடியாது."

"ஒனக்கு எப்பப் பாத்தாலும் அந்தக் காலந்தான். போன வாரத்துல நடந்த சம்பவத்த நெனச்சுப்பாரு. அப்பத் தெரியும் அந்தக் காலமா இந்தக் காலமான்னு," வேல்ச்சாமி சொன்னான்.

போன சனிக்கெழம ஊர்க்கோடில இருந்த இச்சிமரத்துல மருதப்ப மொதலாளிய கெட்டி வச்சிருந்தாக. எள்ளுப் போட்டா எள்ளு உழுகாது அப்பிடிக் கூட்டம். ஆம்பளயும் பொம்பளயும்

ஆவேசமாப் பேசிக்கிட்டுருந்தாக, மாசாணந்தாத்தாவும் கூட்டத்துல இருந்தாரு.

"ஒனக்கு எம்புட்டு மப்புன்னா எங்கதெரு பிள்ளய கையப்புடுச்சு இழுத்திருப்ப. அந்தப் புள்ளக் கதறகதற அக்குருமஞ் செஞ்சுருப்ப. ஒனியெல்லாம் அந்தாணிக்க சுண்ணாம்புக்காளவாசல்ல போட்டு நீத்தனும். பலவட்ரப் பெய, லோகம்மா சொன்னா.

மாசாணந் தாத்தாவும் சத்தமாக் கத்துனாரு. "அந்தக் காலத்துலதான் நாங்க அஞ்சி ஒடுங்கிக் கெடந்தோம். எங்க பொம்பள புள்ளைகள ஒங்க இஸ்டத்துக்கு அழிமாண்டஞ் செஞ்சீக. ஒங்க கண்ணுலபட்டாலே கதிகலங்கிப் போயிக் கெடந்தோம். இப்ப அப்படின்னா நெனச்சிக் கையவச்ச? கண்டதுண்டமா வெட்டிப் போடுவோம். ஆமா."

"பொறு தாத்தா; அவுக தெருவுலருந்து ஆளுக வந்துக்கிரட்டும் பேசுவோம்."

"என்னத்தடா பொறுக்குரது. எல்லா அவெஞ்சாதித் திமுரு பாத்துக்கோ. அப்ப மாதிரியே நம்மள பேப்பெயலுகன்னு நெனச்சுக் கிட்டான் அது அப்ப. இப்ப எலும்ப எண்ணிப் போடுவோம் ஆமா."

மருதப்ப மொதலாளி தெருவுல இருந்து பெரியாளுக பத்து இருவது பேத்துக்கு வந்தாக. அதுல மூத்தவரு சொன்னாரு, "என்னவோப்பா நடந்தது நடந்து போச்சு. என்ன செய்றது நீங்க என்ன சொல்றீகளோ அதுக்குக் கட்டுப்படுறோம்."

எல்லாத்தையும் முந்திக்கிட்டு மாசாணஞ் சொன்னாரு. "மருவாதயா அவெங் கைல தாலியக் குடுத்து அந்தப் புள்ள கழுத்துல கெட்டச் சொல்லு. ஒளிவு மறவா நக்குனீல. இப்ப ஒலகறிய தாலியக்கெட்டி பொண்டாட்டியா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போ."

அம்புட்டுப் பேரும் அதுதான் சரின்னு கத்தவும் மருதப்பந் தெருக்காருகள்ள ஒருத்தரு சொன்னாரு, அதெப்டிப்பா முடியும்? ஒங்க சாதி என்ன, எங்க சாதி என்ன? ஒங்க அந்தஸ்து என்ன எங்க அந்தஸ்து என்ன, இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? அஞ்சோ பத்தோ வாங்கிக்கிட்டு அவர அவுத்து உடுங்க."

மாசாணந் தாத்தா மறுபடியும் கத்துனாரு. "இப்பத்தான் சாதி, அந்தஸ்து அது இதுன்னு தெரியுதோ. அவளத் தொடும்போது தெரியல சாதி! எங்கள என்ன இளுச்சவாப் பெயலுகன்னா நெனச்ச. அந்தப் பிள்ளயக் கூப்டுங்க. தாலியக் கெட்டுடா தட்டுவாணிப் பெயலே."

அந்தப் புள்ளயக் கூப்புடவும் அவளே பேசுனா. "இந்த மிருகத்துக்கூட நானு தாலி கெட்டிக்கிட்டு வாழப் புடிக்கல. இவெ எனக்குத் தாலி கெட்டத் தேவையில்ல."

"அந்தப் புள்ளயே வேண்டாமுங்கயில நீங்க என்னப்பா பெருசு படுத்திக்கிட்டு, உட்டுத் தள்ளுங்கப்பா," மருத்தப்பனுக்குச் சார்பா

அவனோட ஆளுங்க பேசுனாக.

"உட்டுத் தள்ளவா! ஒங்க தெரு பொம்பளப் பிள்ளைகள எங்க தெருப் பெயலுக இப்பிடிச் செஞ்சுருந்தா, உட்டுத் தள்ளுவியா? ஒங்களுக்குத்தான் மான ஈனம் இருக்கு. நாங்கள்ளாம் எல்லாத்தையும் உதுத்துட்டு திரிரம்னா நெனச்ச?"

"சரி, சரி பத்தாயிரம் ரூவா வாங்கிக்கோங்க. அவுத்து உடுங்க."

"பத்தாயிரம் ரூவா எங்க கெண்டக்காலு ரோமத்துக்குச் சமானம். ரூவாயக் கொண்டி எங்கள அடக்கப் பாக்குறியா? அதெல்லாம் அந்தக் காலம். இப்ப ஒனக்கும் பயப்பட மாட்டோம். ஓ ரூவாய்க்கும் பயப்படமாட்டோம். நீ ரூவா கொடுத்தாப்ல எல்லாஞ் சாரியாப் போச்சா?"

"சரி என்னதான் செய்யனும்ங்றீங்க சொல்லுங்க." அவுக தெருப் பெரியவரு கேட்டாரு.

"என்ன செய்யனுமா, இவெம் பேருல இருக்குற அந்த ரெண்டேக்கரு பம்பு செட்டு நெலத்த இந்தப் புள்ள பேருக்கு எழுதி வைங்க. இனி ஏதாச்சும் இப்பிடி நடந்துச்சு ஒந்தல ஓ ஒடம்புல இருக்காது."

"அதெப்டிப்பா இதுக்குப் போயி ரெண்டேக்கரு நெலத்த உடமுடியுமா? வேணும்னா இன்னங் கொஞ்சம் பணம் சேத்துக் குடுக்கோம். இத்தோட இத உட்டுருங்க."

"ரெண்டேக்கர எழுதிக்குடு. இல்லின்னா கோர்ட்டுக்கு வா. அங்க வச்சுப் பேசுவோம்.

இதக் கேட்டதும் மருதப்பனே சொன்னான், "நானு நெலத்த எழுதிக் குடுத்துர்ரேன். கோர்ட்டுக்குன்னு போனா எம்பேரு கெட்டுப் போகும். ஏம் மானம் மரியாத எல்லாம் போயிரும்."

"இந்தப் பெயல்க இப்ப முன்னமாதிரி இல்ல. ரொம்பாத் தெளியக் கடஞ்சு போனானுக. எழுதிக்குடுத்துட்டுப் போவேண்டியது தான்," மருதப்பனோட ஆளுக சொல்லி எழுதிக் குடுத்துட்டாக.

"அதெல்லாம் அந்தக்காலம், இவுக வாயில்லாப் பூச்சிகளா இருந்தது. இப்ப அப்பிடியில்ல. இப்ப ஒன்னுன்னாப் போதும். அப்பிடியே தேனிக் கூட்டங்கணக்கா மொலுமொலுன்னு வர்ரானுக. எல்லாங் காலங் கெட்டுப் போச்சு," மருதப்பனக் கூப்டு கிட்டு சொல்லிக்கிட்டே போனாக.

"ஆமாடா வேல்ச்சாமி. இப்பத்தான் நம்ம கொஞ்சம் முழுச்சுப் பாக்குரோம். நம்ம முழுச்சுப் பாக்கம்னு நம்ம முழியத் தோண்டப் பாக்குரானுக. அதெல்லாம் அந்தக் காலம்டா. இப்பத் தோண்டிருவானா இவெ? தோண்ட முடியுமாங்ரேன். முடியாதே." கேள்வியுங் கேட்டு பதிலுஞ் சொன்னாரு தாத்தா.

"எங்கய்யா கூட சொன்னாரு தாத்தா. அவுக காலத்துல எங்க

வீட்டு முத்தத்துல நாற்காலி போட்டு எங்கய்யா ஒக்காந்திருப்பாராம். அப்பிடிக்கூடி மேலத்தெரு ஆளுக வந்துட்டாம்னா ஒடனே நாற்காலிய உட்டு எந்துச்சு நின்னுட்டு அவுக அங்குட்டுப் போனப் பெறகுதான் ஒக்காரனுமாம். இல்லன்னா பறப்பெயலுக்கெல்லாம் ஒரு நாற்காலி, அதுவும் சம்சாரிக முன்னாலன்னு சொல்லிக்கிட்டு வைவானுகளாம்." வேல்ச்சாமி சொன்னான்.

"அது வாஸ்தவந்தாடா. அது அந்தக் காலம். இப்பப் பாரு சம்சாரி வந்தா என்ன, சந்நியாசி வந்தா என்ன. நம்ம பெயலுக காலுமேலகாலு போட்டுக்கிட்டு ஒக்காந்துருப்பானுக. இந்தப் புத்தி அன்னைக்கு இல்லாமல் போச்சு."

கொஞ்ச நாளா மாசாணத் தாத்தாவெ தெருக்காட்ல காணும். ஒரு மாசங் கழுச்சு ஊர்ப்பக்கம் வந்தாரு. எங்க தாத்தா போனன்னு கேட்டதுக்கு, எங்குட்டோ காட்டுப் பெட்டிங்ர ஊராம். அங்க கரும்புத் தோட்டக் காவலுக்குப் போயிட்டு வந்தாராம். வந்தப் பெறகு சூசுவான்னு அலஞ்சிக்கிட்டு இருந்தவரு திடீர்னு ஒரு பெரச்சனய கௌப்பிட்டாரு.

முந்தா நேத்து அந்த ஐயா அசோகரோட பருத்திக்கு தண்ணி பாச்சப் போனாராம். பாச்சி முடிச்சுட்டு சாயங்காலம் கூலிய வாங்கிட்டு வரலாமுன்னு அசோகரய்யா வீட்டுக்குப் போயிருக்காரு. அங்க முன் வெராண்டாவுல நாலஞ்சு மொதலாளிக பெஞ்சுல ஒக்காந்து அசோகரய்யாட்ட என்னமோ பேசிக்கிட்டு இருந்தாகளாம். தாத்தா போயி கூலியக் கேட்டதுக்கு செத்த நேரம் பொறுடான்னு கையக் காட்டுனாராம். தாத்தாவும் ஒரு அரமணி நேரமா நின்னுட்டு பெறகு மொதலாளிக ஒக்காத்திருந்த பெஞ்சுல ஓரத்துல இருந்த எடத்துல போயி ஒக்காந்தாராம். அம்புட்டுத்தான். அம்புட்டுப் பேரும் அடுச்சுப் புடுச்சு எந்துருச்சுட்டாகளாம். அசோகருக்கு வந்த கோவத்துக்கு அளவே இல்ல. கோவத்துல கத்துனாரு. "ஏண்டா பறநாயே, ஒனக்கு எம்புட்டுத் திமிரு இருந்தா, நாங்க ஒக்கார்ர பெஞ்சுல சரிக்குச் சரியா ஒக்காருவே. கெழட்டுப் பெயலாச்சேன்னு பாக்குரேன். இல்லன்னா மிதுச்சே ஒனிய கொன்னு போடுவேன்."

மாசாணந் தாத்தாவுக்கு வந்த ஆத்தரத்துல பதுலுக்குக் கத்துனாரு. "டேய், அசோகா, ரொம்பாத் துள்ளாத. பறநாயின்னா கேக்க பன்னிக்குப் பெறந்த பன்னிப்பெயலே. நானும் அரமணி நேரமா நிக்கிரேன். கூலியக் குடுத்து அனுப்ப வேண்டியதுதானடா. காலு வலிக்குன்னு ஒக்காந்தேன். இதுல என்னடா தப்பு? இதுல ஒக்காந்தவந்தான் மனுசன் நாங்கள்ளாம் என்னதுன்னு நெனச்ச? நா ஒக்காரவும் படக்குன்னு எந்திரிக்கானுக. அம்புட்டு மருவாத குடுக்கீறிகளடா எனக்கு நல்லதுதான். இப்பப் பாத்தியா! ஓஞ்சாதிக் காரனுகளே நானு ஒக்காரவும் எந்துருச்சு மருவாத குடுக்கானுக இன்னொரு தடவ இப்பிடிச் சொல்லிப்பாரு, செருப்புப் பிஞ்சு

போகும் பிஞ்சு."

சொல்லிட்டு விருட்டுன்னு தெருவுக்கு வந்துட்டாரு. தெருவுல வந்து இதத்தான் சொல்லிச் சொல்லிச் சிரிக்காரு. கேட்டசனம் பூராம் சொன்னாக. "அந்தக் காலத்து ஆளுன்னாலும், அம்புட்டு ரோசத்தோட இருக்காரு." தாத்தா மறுவடியும் சிருச்சுக்கிட்டு "அதெல்லாம் அந்தக் காலம். இப்ப எந்தக் கொம்பனயும் உடமாட்டேன். ஆமா," சொல்லிட்டு காதோரத்துல சொறுகியிருந்த பீடிய எடுத்து பத்த வச்சுக்கிட்டு ஓரிழுப்பு இழுத்து உட்டாரு.

புதிய பார்வை
*16 - 30 ஏப்ரல், 1996*

# 8. பொன்னுத்தாயி

பொன்னுத்தாயிக்கு வயது முப்பது முப்பத்திரெண்டு இருக்கும். நல்லாக் கட்டுருட்டான பொம்பள. கலியாணம் முடுஞ்சு ஏழெட்டு வருசமாச்சு. ஏழெட்டு வருசத்துல வருசயா நாலு பெயல்களப் பெத்துப் போட்டா. பொன்னுத்தாயி கருப்புன்னா கருப்பு அப்பிடி ஒரு கருப்பு. பாக்குதுக்கு நல்லா மூக்கும் முழியுமா இருப்பா. அவா பிள்ளைகளப் பாத்தா அதுக்குமேல, எல்லா அண்டங் காக்கா குஞ்சிக கெணக்கா பிய்யாடியோ பிச்சாடியோன்னு தெருவுல திரியுங்க. ஒண்ணொண்ணயும் பாத்தா அவுகம்மயக் கெணக்கா ஒரசிப் பொட்டு வைக்ர நெறம்.

பொன்னுத்தாயி நல்லா நெடுநெடுன்னு வளந்துருப்பா. வளத்திக்குத்தக்கன ஒடம்புக்கெட்டு. தெருவுல நடந்து போனான்னா டங்கு டங்குன்னு பூமியே அதுரும். இவா என்ன பொம்பள கெணக்காவா நடக்குறான்னு மத்த பொம்பளைக அவளப் பத்திப் பொறணி பேசுவாளுக. பொன்னுத்தாயி பேசுனாலும் அப்பிடித்தான். கணீர் கணீர்னு வெங்கல தொண்டதான். தெருக்கொழாய்க்குத் தண்ணிக்கு வந்துட்டான்னா, அவா சத்தம் தெருக் கடேசிவரைல கேக்கும். எப்பயும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசுவா. இதுனால பேர்வாதிப் பேருக்கு இவளக் கண்டாப் புடிக்காது.

ஊர்ல நெறய்யாப் பேத்துக்கு இவளப் பொன்னுத்தாயின்னு தெரியாது. ஆனா ‘ஒதடி’ன்னா எல்லாருக்குந் தெரியும். அவளுக்கு ஒதடு கொஞ்சம் பெருசா இருக்கும். ஒதடு மட்டுமா பெருசு? அவா வாயி அதவிடப் பெருசுன்னு சொல்லுவாக. மத்த பொம்பளைக கெணக்கா சம்சாரிககிட்ட கூலி வேலைக்குப் போகாமெ இவா சொயமா யாவாரஞ் செஞ்சு பொழைக்குறது ரொம்பப் பேத்துக்குப் புடிக்கல.

பொன்னுத்தாயி படிக்கலன்னாலும் பக்கத்துல உள்ள டவுனுக்கு பஸ் ஏறிப் போயி காய்கறிக, பழங்க வாங்கியாந்து தெருத்தெருவா வித்து சீவனம் நடத்துறா. அவுக தெருவுல, யாருமே இப்பிடியொரு தொழில செய்யறதில்ல. யாரு என்ன சொன்னாலும் பொன்னுத்தாயி யாவாரத்த உடாம செஞ்சுக்குட்டுத்தான் இருந்தா.

ஒரு நாளு கூடநெறய்யா தேங்கா கொண்டாந்து … தேங்கா… தேங்கா…. பத்து ரூவாய்க்கு மூணு…. வாங்கடியோய்னு தெருவுல கத்திக்கிட்டுப் போனா பொன்னுத்தாயி. அங்னகுள்ள எவளோ வாயி

சும்மா இருக்க முடியாமெ, "தோப்புல போயி வாங்குனா ஒரு காயி ரெண்டு ரூவான்னு வாங்கலாம். இவாப் பெரிய யாவாரின்னு வந்துட்டா வெக்கங்கெட்டுப் போயி" - சொல்லிட்டு வகையா மாட்டிக்கிட்டா.

"நானு வம்புச் சண்டைக்குப் போகமாட்டேன்; வந்த சண்டைய உடமாட்டேன். ஆமா, வாங்கப் பிரியம்னா வாங்கு இல்லின்னா சும்மா கெட. யாவாரஞ் செய்யறதப் பத்தி நீ எவாடி பேசுறதுக்கு?" -கேட்டுட்டு தெக்குத் தெருப்பக்கமா வந்துட்டா பொன்னுத்தாயி.

அங்க வந்தும் உடல. தேங்கான்னு சொல்லி விக்கிறத உட்டுட்டு, 'நானு வேலைக்குப் போவேன்; போகமாட்டேன் அது ஏ இஸ்டம். இந்தக் கண்டரளி மக்க என்ன எனியப் பேசுறது? நா யாவரஞ் செஞ்சா இவளுகளுக்கு இது வலிபோலுக்கோ. எனியப் பத்தி எவளாச்சும் அநாவசியமா நாக்குமேல பல்லுப் போட்டு பேசுனா. நாக்க ஒட்ட அறுத்துப் போடுவேன் அறுத்து"- தெருவே கலங்குற மாதிரி கத்திக்கிட்டுப் போனா பொன்னுத்தாயி.

அவாப் போன போக்கப் பாத்து யாரும் அவட்ட கூடைல என்ன யாவாரம்னு கூடகேக்கல. அவா அங்குட்டு எட்டாக்கைக்குப் போனப் பெறகுதான் பொம்பளைக பேசுனாளுக.

"இவா இம்புட்டு ராங்கில பேசிட்டுப் போறாளே....ஊரப் போல, ஆளப்போல ஒழச்சு கஞ்சி குடுச்சா என்ன? என்னமோ மேகலக்குடி ஆளுக்கெணக்கா இவளுக்கென்ன யாவாரங் கேக்குதாம். ரொம்ப மணியம் புடுச்சவா பாத்துக்கோ." முனியம்மா சொல்லிக் கிட்டிருக்கையிலேயே மேக்காமப் போன பொன்னுத்தாயி திரும்பி கெழக்காமெ வரவும் பேச்ச அத்தோட நிப்பாட்டிக்கிட்டா.

பொம்பளைக நின்ன லெக்கு வந்த ஒடனே பொன்னுத்தாயி திரும்பியும் சத்தம் போட்டா. "அன்னைக்கு அப்பிடித்தான் பெரசுல பல்லுப்பசயப் பிதுக்கி வச்சு பல்லு தேச்சதுக்கு பெயமக்க மூக்கு மேல வெரல வச்சுக்கிட்டு கசுபுசு கசுபுசுன்னு பேசுறாளுக. ஏந்துட்டு. நா வாங்கித் தேய்க்கேன். இவளுகளுக்கு எங்க வலிக்குதுன்னு தெரியலியே...."

பொன்னுத்தாயி சொல்லிட்டு அங்கிட்டுப் போனப்பெறகு ஆகாசம்பட்டிக்காரி சொன்னா. "ஒதட்டுக் கொள்ளு, சொல்லிட்டு போறதக் கேட்டிகளா? இவா பொழச்ச பொழப்புக்கு கையிட்ட பல் தேய்க்க மாட்டாளாம். என்னமோ சொன்னது கெணக்காவுல இருக்குது. குடிக்கிறது கூழுத் தண்ணியாம்; குண்டி கழுவுறது மொளகு ரசமாம்."

ஒடனே ஆத்தியம்மா சொன்னா; "அவா காதுபட எதயுஞ் சொல்லிப்படாத மதினி. கேட்டான்னா ஒனிய ஆணி வேற அக்கு வேறயாப் பிச்சுப் போடுவா பிச்சு. அவள லேசுப்பட்டவன்னு

நெனக்காத. தொட்டுத் தாலி கெட்ன புருசனயே போலிசுட்ட சொல்லி அடிக்க வச்சவளாக்கும்."

இந்தப் போலிசு வெசயத்தச் சொல்லிக் காட்டாத ஆளு ஊருக்குள்ள இல்ல. இந்த ரெண்டு வருசமா பொன்னுத்தாயி புருசன உட்டுட்டுத் தனியாத்தான் இருக்கா. யாவாரஞ் செஞ்சுட்டு கெடச்ச துட்டுல இத்தினி கொதிக்க வச்சுக் குடுச்சுக்கிட்டு அவுகம்ம வீட்ல படுத்து எந்திரிக்கா.

மூக்காண்டிக்கும் இவளுக்கும் கலியாணம் முடுஞ்ச புதுசுல நாலு பேத்தப்போல நல்லா இருப்போமுன்னுதான் இவளும் வாக்கப்பட்டு அவெங்கூடப் போனா. மூக்காண்டி கன்னங்கரேர்னு இருந்தாலும் மீச மட்டும் துணுக்காத் தெரியும். எந்த நேரமும் மீசய முறுக்கி உட்டுக்கிட்டே இருப்பான். பொழுதனிக்கும் முறுக்கி முறுக்கி மீசையோட ரெண்டு திக்கமும் ஒன்னக் குத்தவா என்னக் குத்தவான்னு கொம்புககெணக்கா வெடச்சுக்கிட்டு நிக்கும்.

வாரத்துக்கு ரெண்டு நாளு வேலைக்குப் போனாம்னா மூணு நாளு வீட்ல நின்னுக்குருவான். ஆனா தெனமும் கௌப்புக் கடைகள்ல திங்கிறது தவறாது. சாயங்காலத்துல கடைகள்ள போயி இட்லி, தோச, வட கிடன்னு தின்னுட்டு, ரவைக்கு வீட்லயும் வந்து சோத்த உடமாட்டான். ஓட்டல்கள்ல திங்காட்டி அவனுக்குத் தின்ன மாதிரியே இருக்காது. வேல செஞ்சுட்டு வந்த துட்ட அவனே செலவழிச்சுப் போடுவான். வேலைக்குப் போகாத அன்னைக்குப் பொன்னுத் தாயோட கூலிய அடுச்சுப் புடுச்சுப் பிடுங்கிட்டுப் போயிருவான். இதுல நாயித்துக் கெழமயாயிட்டா மாட்டுக்கறி எடுத்தாந்து அவுச்சு மாரியப்பத்தேவர்ட்ட சாராயம் வாங்கிக் குடுச்சாத்தான் ஆச்சு. இல்லன்னா இல்லாத ரகள பண்ணி பொன்னுத்தாய ஒருவழி பண்ணிப் போடுவான்.

பொன்னுத்தாயும் பல்லக் கடுச்சுக்கிட்டு சமாளிச்சுப் பாத்தா. கலியாணம் ஆன புதுசுல எப்படியோ அவா சம்பளத்தக் கொண்டு காலத்த ஓட்டுனா. பெறகு வருசயா ஒண்ணுக்கடுத்து நாலு பிள்ளைக ஆகவும் வகுத்துக்குக் கஞ்சி கெடைக்கிறதே பெரும்பாடாப் போச்சு. அவளும் கைக்கு எட்டாமெ வாய்க்கு எட்டாமெ எத்தனையோ நாளு இருந்து பாத்தா. பாலுமாடு ஒண்ணப் புடுச்சு, அதயும் பாத்துக்கிட்டு, பிள்ளைகளையும் பாத்துக்கிட்டு, காட்டுக்கும் வீட்டுக்கும் வேல செஞ்சு அவா நோனி தள்ளிப் போச்சு. இதுல திடீர்னு ஒரு நாளு மூக்காண்டி வீட்ல நின்ன பால்மாட்டயும் வித்துட்டு காக்காசு அவா கைல குடுக்கல. அதுல வந்த சண்டைலதான் அடியும் மிதியும் வாங்கிக்கிட்டு ஓடியாந்துட்டா.

புருசன உட்டுட்டு வரும்போது கடேசிப் பெய பால்குடி மறக்காம இருந்தான். அவன மட்டுந் தூக்கிட்டு வந்து நாலஞ்சு மாத்தைல பால்குடிய மறக்கடுச்சுட்டு, திரும்பியும் கொண்டு போயி

புருச வீட்லயே அந்தப் பெயல உட்டுட்டு வந்துட்டா.

“இவள்ளாம் ஒரு பொம்பளதானா? கொஞ்சங்கூட பிள்ளப்பாசமே இல்லியே. ஆம்பள கெணக்காவுல மதம் புடுச்சுப் போயி அலைறா. எந்தக் காலத்துல புருசங்கிட்ட பிள்ளைகள உட்டுட்டு பொட்டச் சிறுக்கி இப்பிடி அலையக் கண்டோம்.” ஊர்ல பல பேரு பலவிதமாப் பேசுனாலும் பொன்னுத்தாயி அவாபாட்டுக்கு இருந்தா.

“பிள்ளைக என்ன எனக்கு மட்டுமா பிள்ளைக? அவெ அக்குருமத்தத் தணிக்கத்தான வருசயாப் பிள்ளைகளப் பெற வச்சான். ரெண்டு பிள்ளைக்குப் பெறகு கர்ப்பத்தட செய்யலாம்னு போனதுக்கு உடமாட்டம்னு வம்பு பண்ணிக் கூட்டியாந்தான். இப்ப அவனே வச்சு வளத்துப் பாக்கட்டும்.” இப்படி தனக்குத்தானே சொல்லிக்கிட்டா பொன்னுத்தாயி.

மூக்காண்டிதான் குஞ்சானும் நஞ்சானுமா நாலு பெயல் களையும் வச்சிக்கிட்டுச் சீரழிறான். பொறுத்துப் பொறுத்துப் பாத்துட்டு ஒருநாளு பொன்னுத்தாய வழில மடக்கி, “ஏய் வீட்டுக்கு வாத்தா”ன்னு கூப்புட்டான்.

ஒனக்கும் எனக்கும் ஒரு சம்மந்தமும் இல்ல. இருந்ததெல்லாம் ரெண்டு வருசத்துக்கு முன்னாலியே முடுஞ்சு போச்சு. ஓங்கூட இனி வந்து வாழ எனக்குப் புடிக்கல” - சொல்லிட்டு மேல நடந்தா பொன்னுத்தாயி.

“ஒரு பொட்டச்சிறுக்கி ஆம்பளயப் பாத்து சேந்து வாழப் புடிக்கலன்னா சொல்ற? ங்கோத்தா கொள்ளு.... நீயெல்லாம் ஒரு பொம்பளதானா? பெத்த பிள்ளைகள வேகாரிக்கு உட்டுட்டு வெவுசாரியாத் திரிற நாயி”- பதுலுக்கு மூக்காண்டியும் கத்துனான்.

“நானு எப்படியுந் திருஞ்சுட்டுப் போறேன். அதக் கேக்க நீ யாரு? பிள்ளகள என்ன நீயில்லாமலா நாம் பெத்துக்கிட்டேன். வச்சு வளத்துப் பாரு. அப்பத் தெரியும்” பொன்னுத்தாயும் கோவமாக் கத்துனா.

மூக்காண்டிக்கு வந்த வெளத்துக்கு அளவே இல்ல..... கோவத்தோட கத்துனான். “ஏ....லண்டி.... வாய மூடுடி. அவா ஒதடும் ஆளும் பாரு. வேற ஒருத்தம்னா ஓ ஒதட்டுக்கே ஒனியக் கெட்டியிருக்க மாட்டான். நா பாவம் பாத்து கெட்டுனம் பாரு. ஏம்புத்திய செருப் பால அடிக்கனும்.”

“அடுச்சுக்கோ. செருப்பு மட்டுமில்ல. வெளக்கமாத்தயுங் கொண்டு சேத்து அடுச்சுக்கோ. தூ.....துப்புக்கெட்ட பெய. அப்பக்கூட ஒனக்குப் புத்தி வராது.” துப்புக்கழுச்சுட்டு போனவளப் புடுச்சு இழுத்து தல மயித்தப் புடுச்சுக்குட்டு மூஞ்சிலயே நாலஞ்சு அற அடுச்சான். அடுச்சுக்கிட்டே அவள இழுத்துக்குட்டுப் போனான்.

செத்த நேரங் கையக் காலப்போட்டு ஒதறிட்டுப் போன பொன்னுத்தாயி திமிறிக்கிட்டு அவெங்கையப் புடுச்சு பல்லுப் பதியக் கடுச்சு வச்சுட்டா. கடிபட்ட வலியோட பொன்னுத்தாய அடி வகுத்துல பாத்து ஓங்கி ஒரு எத்து எத்துனான். வலி தாங்கமாட்டாமெ பொன்னுத்தாயி அலறிக்கிட்டு அந்தானிக்க பக்கத்துல இருந்த ஒரலு மேல போயி உழுந்து மண்ட ஒடஞ்சு ரத்தமா ஊத்துது. சீல துணிமணி பூராம் ரத்தக்காடுதான். இதுக்குப் பெறகு அவா கத்தல; கதறல. ஒரு வசவு கூட வையல. அப்பிடியே ரத்தஞ் சொட்டச் சொட்ட தெக்காமெ ஓடுனா.

"ஏய்.... போயிப் புடிப்பா. வயக்காட்டுச்செம ஓடுறா. போயிக் கெணத்துல கிணத்துல உழுந்து உசுர மாச்சுக்கப் போறா. அவா போற வேகத்தப் பாத்தா அப்பிடித்தான் தெரிது." கூட்டத்துலருந்து யாரோ கத்திச் சொன்னாக.

"போயித் தொலயட்டும் முண்ட, கழுதயத் தூக்கிப் பெதச்சுட்டு வேற கலியாணஞ் செஞ்சுட்டும் போறேன். இவா போயிட்டா என்ன வேற பொம்பளயே இல்லியா ஒலகத்துல." மூக்காண்டி ரொம்பத் திமுரா சொன்னான்.

பொன்னுத்தாயோட அம்ம தலவிரிகோலமா அலறிக்கிட்டே ஓடுனா. இதுக்குள்ள ஊரே தெரண்டு வந்துருச்சு. ஆம்பளயும் பொம்பளயுமா பொன்னுத்தாயி பின்னால ஓடுனாக. கொஞ்சத் தொலவு ஓடிட்டு கொஞ்சப் பேரு திரும்பிட்டாக.

ஆனா, இவுக நெனச்சபடி பொன்னுத்தாயி எந்தக் கெணத்துலயும் உழுகல. வரப்புக்காட்டு வழியா குறுக்க ஓடிப்போயி பக்கத்து ஊர்ல இருந்த போலிசுடேசனுக்குப் போனா.

ரத்தஞ் சொட்டச் சொட்ட வந்து நின்ன பொன்னுத்தாயப் பாத்ததும் டேசனுக்கு முன்னால ஏகப்பட்ட கூட்டம். போலிசு அவளக் கூட்டிட்டுப் போயி என்ன ஏதுன்னு வெசாரிச்சாக.

"எசமான், ஏம்புருசன் சதா எனிய இம்சிக்கிறாம்னு, இந்த ரெண்டு வருசமா அவன உட்டுப் பிரிஞ்சு எம்பாட்டுக்குத் தனியா இருக்கேன். இன்னைக்கு வந்து ஏங்கூட தகராறு செஞ்சு அடுச்சு ஏம்மண்டய ஒடச்சுப் போட்டான். நீங்கதான் எசமான் இதக் கேட்டுக் குடுக்கணும்" - சொல்லிக்கிட்டே மூஞ்சுல வழுஞ்ச ரத்தத்த சீலைட்ட தொடச்சா.

அவா நின்ன லெக்குப் பூராம் ரத்தந்தான். அவா ஊரு, தெருவு, பேருகீரெல்லாம் வெசாரிச்சுக்கிட்டு அவளக் கவுர்மெண்ட் ஆசுபத்திரிக்குப் போச் சொன்னாரு. அதுக்குள்ள அவுகம்மயும் அங்க வந்துட்டா. பொன்னுத்தாயி அம்மயக் கூப்டுக்கிட்டு ஆசுபத்திரிக்குப் போனா.

எந்தச்சாமி செஞ்ச புண்ணியமோ அந்த போலிசுக்காரன் அக்கா

தங்கச்சிகூடப் பெறந்தவம் போலுக்கோ. ஒடனே ரெண்டு போலிசுக் காரனுகள அனுப்பி மூக்காண்டியப் புடுச்சுட்டு வந்துட்டாரு. பொன்னுத்தாயும் அதுக்குள்ள போயி தலைல மருந்து வச்சு கெட்டிக்கிட்டு வந்தா.

மூக்காண்டிய டேசனுக்குள்ள வச்சு டமார் டமார்னு அடி பிதுக்கி எடுத்துட்டாக. அடுச்சு அவன உள்ள தள்ளிட்டு பொன்னுத்தாயிட்ட கேட்டாரு; "நீ என்னம்மா சொல்ற? ரெண்டு நாளு ஒம்புருசன உள்ள வச்சு புத்திமதி சொல்லி அனுப்பி வைக்கேன். சேந்து வாழுறியா? எடயில ஏதாச்சும் எடஞ்சல் பண்ணுனாம்னா ஒடனே வந்து சொல்லு."

"எசமான் நீங்க அந்த ஆள என்னானாலும் செய்ங்க. அந்தாளு கூட வாழ மாட்டேன். நானு இம்புட்டு நாளாப் பட்டதுபோதும். எம்பாட்டுக்குத் தனியா இருந்து இருக்குற நாள ஓட்டிக்கிட்டுப் போறேன்"- சொல்லிட்டு அவுகம்மயக் கூப்டுக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டா.

மூக்காண்டிய ரெண்டு மெரட்டு மெரட்டிட்டு அடுத்த நாளு உட்டுட்டாக. இதுக்குள்ள பொன்னுத்தாயி போலிசுடேசன் போயி புருசன அடி வாங்கிக் குடுத்தது ஊரெல்லாம் பரவிருச்சு. பொன்னுத் தாயப் பத்தி பல பேரு பலவிதமாப் பேசுனாக.

"என்ன இருந்தாலும் தொட்டுத் தாலி கெட்ன புருசனப் போயி போலிசுல சொல்லிக்குடுத்து அடி வாங்க வைக்கலாமா? அறிவுகெட்ட முண்டையாவுல இருக்கா." ஆத்தியம்மா சொன்னா.

"சீ....அப்பிடிச் சொல்லாத. அந்தப் பிள்ளையுந்தான் எம்புட்டு நாளைக்குப் பொறுத்துக்குட்டு இருப்பா, இவெ அடுச்ச அடியெல்லாம் அவா வாங்கல. இப்பிடியாப்பட்ட கல்நெஞ்சுக்காரப் பெயல்கள எல்லாம் போலிசுலதா புடுச்சுக் குடுக்கனும்ங்கா. அப்பத்தான் மத்த பெயல்களும் மணியம் பண்ணாமெ இருப்பானுக." குருவம்மா சொன்னா.

"அப்ப நீயி சொல்றதப் பாத்தா புருச அடுச்சாம்னா பொண்டாட்டியும் அவன அடிக்கனும்ங்ற. அப்பிடியா? இது நல்ல சோலிதான். இந்தப் போலிசுக்காரன் வந்து எத்தன நாளைக்கு இவளத் தாங்கிருவான்? போலிசுக்காரனுகளக்கூட இப்ப நம்பக்கூடாது பாத்துக்கோ. அது சரி எங்கெங்க போனாலும் கடேசில புருசங்கிட்ட தான வந்தாகனும். அப்ப மப்பப் பிதிக்கிற மாட்டான்?" ஆத்தியம்மா கேட்டா.

இவளுக பேசிக்கிட்டுருந்ததக் கேட்டுக்கிருந்த கனியம்மா சொன்னா, "அவாதான் அவன உட்டுட்டு இந்த ரெண்டு வருசமா தனியாத்தான இருக்கா. இவெஞ் சும்மா கெடக்க வேண்டியதுதான. எடயில கூப்டுப் பாத்தான். வரலனுட்டா. இப்ப இவனாத்தான வந்து அடாவடி செஞ்சான். இஸ்டப்படலன்னா உட்டுட்டு இருக்க வேண்டியது தான்."

“அவெ என்ன இவள வச்சு வாழணும்னா கூப்டுறாம்னு பாத்த, நாலு பிள்ளைகள வச்சுக்கிட்டு பெயலுக்கு பாடுபட்டு போட்டு வளக்க முடியல. அதான் எப்படியாச்சும் சண்டைக்கிழுத்து பிள்ளைகள இவாட்ட தள்ளி உட்ரலாம்னு பாக்கான்” குருவம்மா சொல்லவும் கனியம்மா உடனே சொன்னா, “அவனுந்தான் எம்புட்டு நாளைக்கு ஒத்தக் கட்டையா கெடப்பான். பொம்பளயாச்சும் இருந்துருவா. ஆம்பளைக்கு இருக்க முடியுமா?”

பொம்பளைக இப்பிடிப் பேசிக்கிட்டு இருக்கைல ஆம்பளைக அங்னஙன பேசிக்கிட்டானுக.

“இவெ ஒரு ஆம்பளையா? சரியான பொட்டப் பெய. போலிசு டேசன் வரைக்கும் போயி புருசன அடி வாங்க வச்சவள இன்னும் உசுரோட உட்டுட்டுப் பாத்துக்கிட்டு இருக்கானே. வெறும்பெய. நானா இருந்தா அங்ன டேசன்ல வச்சே அவா சங்க நெருச்சுக் கொன்றுப்பேன்” - வேகமாச் சொன்னான் குப்புசாமி.

“அட நீ ஒண்ணுப்பா, பொம்பளயக் கொல்றது பெரிய காரியமா என்ன? ஆரம்பத்துலயே ரெண்டு தட்டுத் தட்டி அடக்கி வைக்கிற உட்டுட்டு இப்ப அவஸ்தப்படுறான். ஒரு பொம்பளய அடக்க மாட்டாதவனல்லாம் என்னய்யா ஆம்பள, இவனுக்கு மீச ஒரு கேடு” - கோயிந்தன் சொல்லிட்டுச் சிருச்சான்.

ஆம்பளைக இப்பிடிக் காரித் துப்பவும் மூக்காண்டிக்கு ரோசம் பொத்துக்கிட்டு வந்துச்சு. அவனும் பல்லக் கடுச்சுக்கிட்டு என்னடா செய்றதுன்னு தெக்கயும் வடக்கயுமாத் திருஞ்சான்.

பெறகு ஒரு முடிவோட பொன்னுத்தாயோட வீட்டுக்குப் போயி அவுகய்யனக் கூப்டு, “ஒங்க மகள இனி எக்காலத்துலயும் கூப்டு வச்சு வாழப் போறதில்ல. அவா பிள்ளைகளையும் கொண்டாந்து இங்க வச்சுக்கிறட்டும். நாம் பேசாமெ இன்னொருத்தியக் கெட்டிக் கிட்டு எம்பாட்டுக்குப் போறேன். அவளால எனக்கு சர்வ கேவலமா இருக்குது”ன்னு சொன்னான்.

பொன்னுத்தாயோட அய்யா பொறுமையா சொன்னாரு; “கொஞ்சம் பொறுங்க மாப்ள. பெண்புத்தி பின்புத்திங்கற மாதிரி அன்னைக்கு என்னமோ மடப்பெயமகா டேசனுக்குப் போயிட்டா. கொஞ்ச நாளு குடுங்க. நானே நல்லதனமாப் பேசி கூட்டியாந்து உடுறேன்.”

“அதெல்லாம் ஒன்னுஞ் சரிப்பட்டு வராது. அவா இனி எனக்கு வேண்டாம். பிள்ளைகளக் கொண்டாந்து உடுறேன் அம்புட்டுத்தான்”- சொல்லிட்டு மூக்காண்டி போகப் போனான்.

இம்புட்டு நேரமும் பேசாமக் கேட்டுக்கிட்டிருந்த பொன்னுத் தாயி சொன்னா: “பிள்ளைகளக் கொண்டாந்து எதுக்கு இங்க உடணும்ங்ற? ஓம்பிள்ளைகள நீயே வச்சுக் காப்பாத்து, எனக்கு நீயும்

வேண்டாம்; ஒன்னால வந்த பிள்ளைகளும் வேண்டாம். பெத்தவா தான் பிள்ளைகள வளக்கணும்னு சட்டமா என்ன? இங்க கூட்டியாராத, இனி இந்தப் பக்கமே நீ தலயக் காட்டாத, சொல்லிட்டேன் ஆமா."

மூக்காண்டி ரொம்ப ரோசமா வெளியேறிப் போயிட்டான். பொன்னுத்தாயோட அம்மதான் சத்தம் போட்டு அழுதா. அழுதுக் கிட்டே சொன்னா, "அவெஞ் சொன்னது கெணக்கா எவளையாவது கொண்டாந்து வீட்ல வச்சுக்குறப் போறாம்டி. வாரவா பிள்ளைகளப் படாதபாடு படுத்துவாடி. சொன்னாக் கேளு. கல்லானாலும் கணவெ; புல்லானாலும் புருசம்னு அடுச்சாலும் புடுச்சாலும் அவெங் காலடில கெடக்குறத உட்டுட்டு இப்பிடி வந்து கெடக்குறியே. பாதகத்தி, அந்தப் பிள்ளைகளையாவது கொண்டாந்து இங்க வச்சுக்கிருவம்டி."

"அழுகய நிப்பாட்டிட்டு செத்த சும்மா இரும்மா. பெத்த வனுக்குப் பிள்ளைகள வளக்கத் தெரியாதா என்ன? வளத்துப் பாக்கட்டுமே. கல்லயும் புல்லயுங் கெட்டிக்கிட்டு இம்புட்டு நாளா நாம் பட்டது போதும்"- பொன்னுத்தாயி சொல்லிக்கிட்டு வீட்டுக் குள்ள போயி பெளேட்டுக் கத்திய எடுத்துட்டு வந்தா. வீட்டுக்கு முன்னால இருந்த கோழிக்கூட்டு மேல ஒக்காந்துக்கிட்டு பெளேட்டுக் கத்தியக் கொண்டு அவா போட்டுருந்த தாலிக்கவுத்த அறுத்து அதுல கெடந்த தாலிய உருவி எடுத்தா.

இதப்பாத்ததும் அவுகம்மா கத்துனா; "அட பைத்தியக்கார முண்ட, என்ன காரியஞ் செய்ற, எடுவட்ட பெய மவளே, அப்பிடி என்ன ஊரு ஒலகத்துல நடக்காததா நடந்து போச்சு. புருசங் கெட்டுன தாலிய எவளாவது அறுத்துப் போடுவாளா? ஒனியப் பெத்ததுக்கு ஒரு அம்மிக்கல்லப் பெத்துருக்கலாம்." கத்திக்கிட்டே கீழ கெடந்த தாலிக் கவுத்த எடுத்து வச்சுக்கிட்டு அழுதா.

அவா அழுகச் சத்தங்கேட்டு அங்ன நாலஞ்சு பேரு கூடிக்கிட்டு பொன்னுத்தாய் கண்டமேனிக்கா வஞ்சாளுக. பொன்னுத்தாயி யாரயுஞ் சட்ட பண்ணல. அவுகம்மய அரட்டுனா; "ஏமா, நீ இப்பிடி ஒப்பாரி வைக்குறத நிப்பாட்டிறியா என்ன? என்ன நடந்து போச்சுன்னு இப்பிடி ஏழூருக்குக் கேக்கும்படியா ஒப்பாரி வைக்க? நானு டவுனுக்குப் போயிட்டு வாரேன். நீ கம்மாக்கரயில போயி ஆட்டுக்குட்டிக்கு இத்தினி கொழப்புபுடுங்கிட்டு வந்து போடு. அது பாவம். வாயில்லா சீவன். கொல பட்னியா கெடக்குது."

தாலிய மடில வச்சுக்கிட்டு கூடைய எடுத்துக்கிட்டு போயிட்டா பொன்னுத்தாயி. மறுநாளு காலைலருந்து ஊர்ச் சாவடிக்கு முன்னால ஒரு சின்னக்கட போட்டு யாவரஞ் செஞ்சா. பத்து வருசமா, அவாக் கழுத்துல கெடந்த தாலி, கடபூராஞ் சாமாஞ்சட்டுகளா நெறஞ்சு கெடந்துச்சு.

இந்தியா டுடே
பெண்கள் மலர் - **1996**

# 9. கிசும்புக்காரன்

கிசும்புக்காரம்னா ரொம்பா நொரநாட்டியம் புடுச்சவம்னு அர்த்தம். அதாவது எப்பப்பாத்தாலும் ஏதாச்சும் நட்னத்தனம் செஞ்சுக்கிட்டே இருப்பான். சின்னக்கருவேலம் பட்டி கிராமத்து நடுத்தெருவுல இருக்ர புதியமுத்து மாமாவெ எல்லாரும் கிசும்புக் காரம்னு சொல்லுவாக. அவரு சின்னப் பெயலா இருக்கப்பயுஞ்சரி, இப்பக் கலியாணங்காச்சி முடுச்சு அஞ்சாறு பிள்ளகுட்டிகளப் பெத்துப்போட்டப் பெறகுஞ்சரி, அவரோட கிசும்புத்தனம் மட்டும் மாறல.

அவரு அஞ்சாங் கௌாசு வரைக்குந்தான் படுச்சாரு. படிக்கும் போது பள்ளிக்கொடத்துல செஞ்ச படுக்காளித்தனம் கொஞ்சநஞ்ச மில்ல. படிப்பத்தவுர மிச்ச எல்லாத்துலயும் மொத ஆளா நின்னாரு. எதயாச்சும் ஒன்ன அருவசமாச் செய்வாரு. இவெங்கூட நாலஞ்சு பெயலுக சிஸ்யப்பிள்ளைக கெணக்காத் திரிவானுக.

ரெண்டாங் கௌாசுப் படிக்கயிலயே பெரியாளுககெணக்கா கெணத்துக் காட்டுகள்ள போயி குளுச்சுட்டு வருவான். பம்படுச்சா அங்ன தொட்டில கெடக்ர தண்ணிகள்ள முங்கி குளுச்சுட்டு வருவான். ஒரு தடவ அப்பிடித்தான் குளிக்கப் போனான். எங்கயும் பம்பெடுத்து உடல. பெரியாளுக பூராம் கெணத்துக்குள்ள எறங்கி நீச்சலடுச்சுக் குளுச்சாக. புதியமுத்து மட்டும் டவுசரக் கழட்டிப் போட்டுட்டு மேலயே நின்னான். தண்ணிக்குள்ள கெடந்த கருவாயம்பெய புதியமுத்து மட்டும் சும்மா நிக்கிரதப் பாத்துட்டு, "ஏலேய், புதியமுத்து ஒனக்கு நீச்சலடிக்கத் தெரியாதுலடா. நீ எதுக்குடா பெரியாளுககூட குளிக்க வார? பேசாமெ அடிகுழாயில அடுச்சுக்குளிக்கலாமுலடா?"ன்னு கேட்டான். கருவாயனுக்கு பத்துப் பதுனஞ்சு வயது இருக்கும். பக்கத்து ஊர்ல ஒம்பதோ, பத்தோ படுச்சுட்டு இருந்தான்.

புதியமுத்து சும்மானாலும் அடுச்சு உட்டான், "எனக்கு நீச்சலுத் தெரிமே."

"பெறகெதுக்குடா மேல நிக்க? உள்ள உழுந்து குளிக்க வேண்டியதுதானலே," கருவாயஞ் சொல்லிட்டு முங்கு நீச்சுல உள்ள போயிட்டான்.

கருவாயம்பெய கேட்டு வாயக்கூட மூடல. படக்குனு

புதியமுத்து தண்ணிக்குள்ள தவ்விட்டான். அவெங் குதுச்சவேகத்தப் பாத்துட்டு, அவனுக்கு நெசத்துக்கே நீச்சலு தெரியும்னு எல்லாரும் நெனச்சுக்கிட்டாக. அவெந் தண்ணிக்குள்ள தள்ளமாடுரதப் பாத்தப் பெறகுதான், பெய புளுகித் தள்ளியிருக்காமுன்னு புருஞ்சுக்கிட்டாக. அங்ன குளுச்சுக்கிட்டுருந்த நடராசஞ் சித்தப்பாதான் நீச்சலடிக்க வச்சாரு. அப்பிடி அப்பிடி அடுச்சே நீச்சலடிக்கப் பழகிட்டான்.

ஊருக்குள்ள பூராம் புதியமுத்தப் பத்தித்தான் பேச்சு. "எளங் கன்னு பயமறியாதுன்னு சும்மாயா சொன்னாக? இத்தினிக்கானு பெய மனசாரெ நெற கெணத்துக்குள்ள போயி உழுந்துருக்கானே. இப்பிடி நட்னகாரப்பிள்ளய நாம் பாக்கல தாயே," புதியமுத்தோட பெரீமெ சொல்லிக்கிட்டே புதியமுத்துவப் பாக்க வீட்டுக்கு வந்தா.

"ஏலேய். படுவாப் பெயலே. எதுக்குடா இப்பிடிப் போயி கெணத்துக்குள்ள உழுந்த? நீச்சலு தெரிலனா சொல்ல வேண்டியது தானலே. ஆளுக இருக்கப்போயிச் சரியாப் போச்சு. இல்லீனா இந்நியாரம் செத்து மெதந்துருப்ப பெயமகனே. ஏம்மகன வேறயில இவெஞ் சேதரஞ் சேத்துக்கிட்டுத் திரிரான். ஒனியப் பாத்துட்டு அவனும் உழுந்து சாகுரதுக்கா?"

பெரீம கேக்கவும் புதியமுத்து சொன்னான். "ஏ பெரீமெ எல்லாம் நீச்சலடிக்ரதப் பாத்துட்டு எனக்கும் ஆசயா வந்துருச்சு. அதான் சும்மானாலும் நீச்சலு தெரியும்னு சொல்லிக்கிட்டு உழுந்தேன். ஆளுக இருக்கப் போயித்தானே உழுந்தேன். ஆளுக இல்லின்னா உழமாட்டம்ல. இப்ப நானு கருவாயனவிட நல்லா நீச்சலு அடிப்பேந் தெரிமா? ஒம்மகெ வீரன ஏங்கூட நீச்சலடிக்கச் சொல்லு பாப்போம்."

"கேட்டுக்கிட்டியாடி ஒம்மகெஞ் சொல்ரத. இன்னைக்கு நீச்சுப் பழகுன பெய போட்டிக்கு ஆளுத் தேடுரான். அவெஞ் சவுடால்த் தனத்தப் பாத்தியா?"

இதக் கேட்டுக்கிட்டிருந்த புதியமுத்துப் பெயலோட அம்மெ சத்தமாச் சிருச்சா.

"நீயி இவன இந்த வயசுலத் தட்டிக் குடுத்து வளக்காமெ, இப்பிடி பல்லக்காட்டுரதுனாலதான் இவெ இம்புட்டு மணியம் பண்ணிக்கிட்டுத் திரிரான்." சொல்லிட்டு எந்துருச்சு போயிட்டா அவுகப் பெரீமெ அனந்தம்மா.

இது நடந்து ரெண்டு மூனு வாரங்கழுச்சு புதியமுத்து நாலஞ்சு பிள்ளக் காடுகளச் சேத்துக்கிட்டு ரவைக்கு ரவ ஒரு மொழுகுத்திரியப் பொருத்தி வச்சுக்கிட்டுச் சாக்கடைகள நோண்டிக்கிட்டுத் திருஞ்சான். ராத்திரி நேரங்கள்ள சாக்கடையில கருப்பு றெக்கையில மஞ்சளு புள்ளிக வச்ச ஒரு சைசான வண்டுக திரியும். அதப் புடுச்சு நொட்டாங்கை வெரலுட்டப் புடுச்சுக்கிட்டு, சோத்துக்கை வெரலுட்ட அந்த வண்டோட தலமேல பட்டுப் பட்டுன்னு அடிப்பானுக.

அப்பிடி அடுச்சா அந்த வண்டு புர்ரு புர்ருன்னு குசுப் போடும். அப்ப ஒரு பாட்டுக் கூட படிப்பானுக.

“பித்தாம் பித்தாம் குசுப்போடு
பீரு பித்தாம் குசுப்போடு
தண்ணிப் பான அடியில
தர்ரு புர்ருன்னு குசுப்போடு”

ஆளுக்கொரு பூச்சியப் புடுச்சு வச்சுக்கிட்டு தெருக்காட்டுகள்ள இந்தப் பாட்டயும் படுச்சுக்கிட்டுத் திரிவானுக. பூச்சி புடிக்கப் போகாதவனுக இவனுக பின்னாலியே செத்த நேரம் பூச்சியக் குடுக்கச் சொல்லிக் கெஞ்சிக்கிட்டே போவானுக. புதியமுத்துப் பெயதான் முன்னணில போவான். கூட்டஞ்சேரச் சேர அவனுக்குக் கெவுரவமா இருக்கும். ஏம்னா இந்த வெளாட்டக் கண்டு புடுச்சவனே அவெந்தான்.

பாட்டு படுச்சுக்கிட்டே போயி தெருவெளக்கு வெளிச்சத்துல ஒக்காந்து, பூச்சியப் பிதுக்கிக் கொன்னுட்டு வெரலுகளப் பாப்பானுக. பூச்சி குசுப்போட்ட லெக்குல கருப்புஞ் செவப்புஞ் சேந்த ஒரு கலராப் புடுச்சுருக்கும்.... இதுதாண்டா மருதாணி வைக்ரதுன்னு புதியமுத்து வெளக்கஞ் சொல்லுவான்.

இப்பிடி ஒருவாரமா இதே சோலியாத் திருஞ்சான் புதியமுத்து. ஒரு நாளு ராத்திரி வந்து சோறு திங்கயில அவுகம்ம கேட்டா, “ஏலேய், நீயி சாக்கடைகள்ள கைய உட்டு நோண்டி பூச்சி புடிக்கியாம்ல? பொம்பளைக சொல்றாளுக. நீயி போறதுமில்லாமெ பிள்ளக்காடு களயுஞ் சேத்துக் கூட்டிக்கிட்டுப் போறியாம்ல.”

“நாம் போனா, இவனுகள யாரு வரச் சொன்னது? ஏம்மா, ஒனக்கும் புடுச்சுட்டு வரட்டுமாமா? இந்தா பாரு ஏ வெரல, எப்பிடிப் புடுச்சுருக்குனு பாரு. அது குசுப்போடும் போதுலம்மா, அந்த எடத்துல சுட்டுப் பொசுக்கும். நாளைக்கு ஒனக்குப் புடுச்சுட்டு வரட்டா?” புதியமுத்து ரொம்பா உற்சாகமா கேட்டான்.

இதக்கேட்டுக்கிட்டுருந்த அவுக பாட்டி சொன்னா, “எவனாவது சாக்கடைக்குள்ள போயி கையஉட்டு நோண்டுவானாடா? வீச்சமெடுத்த பெய. இவனாம்ல படிக்கிர பெயலாம். இப்பிடியே பூச்சி புடுச்சுக் கிட்டுத் திருஞ்சீனா கையில குட்ட நோயி வந்து கெடக்கப் போற பாரு. வேற வெளாட்டே ஒனக்கு கெடைக்கலயாக்கும். நட்னகாரப் பெய.”

அவுக பாட்டியோட சேந்துக்கிட்டு அவுகம்மயும் வஞ்சு போட்டா. அதுக்குப் பெறகு இந்த வெளாட்ட உட்டுட்டான்.

அஞ்சாங் கௌாசுப் படிக்கயில் எங்குட்டுக் கெடந்தோ ஒரு பௌேட்டுக் கத்திய கொண்டாந்துட்டான் புதியமுத்து. அத ஒரு வேப்பங் குச்சில மாட்டிக்கிட்டுத் தெக்குத் தெருவுலருந்து படிக்க வந்த ரத்துனம் பெய மண்டயில ஒத்த முடி இல்லாமெ மொட்டக்

கட்டையா வளுச்சு உட்டுட்டான். பச்சப்பெய வெளாட்டுப் பாக்குல செஞ்சு போட்டாம்னு சொல்லிச் சமாளுச்சுப் பெறக்கி ஒருவழியா அவுகள அனுப்பி உட்டாக.

“ஆனாலும் இந்தப் புதியமுத்துப் பெயலுக்கு இத்தினிக்கூடப் புத்தி கிடையாது. இப்பிடியா ஒத்த மயிருகூட இல்லாமெ மொட்டக் கட்டையா வள்ளுசா வளுச்சு உடுவான். இவெங் கிசும்புத்தனத்த அவுக வீட்டோட வச்சுக்கிரனும். ஊரா வீட்டுப் பிள்ளைய மொட்ட அடுச்சு உட்டாச் சும்மா உடுவாகளா? பிள்ள வளத்து வச்சுருக்கா பாரு இதுகெணக்கா? கொரங்குப் பெயபுள்ள,” வெள்ளக்கண்ணு சத்தம் போட்டுச் சொல்லிக்கிட்டு இருந்தா.

இதக்கேட்டுக்கிட்டுருந்த புதுயமுத்தோட பாட்டி பதுலுக்குக் கத்துனா. “யாருக்குடி புத்தியில்லீங்க? ஏம்பேரனுக்கா புத்தியில்ல? ஒனக்கு இம்புட்டு வயசாகுதுல ஒரு பெளேட்டுக் கத்திய வேப்பங் குச்சில சொருகிக்கிட்டு மளமளன்னு மொட்ட போட்டுக் காட்டு பாக்குரேன். நம்மூரு அம்பட்டையங்கூட இம்புட்டுச் சுளுவா மொட்ட போட மாட்டான். அப்பிடியே போட்டாலும் அஞ்சு பத்துன்னு ரூவா கேப்பான்.”

“ஏலேய், புதியமுத்து, எப்பிடிடா அப்பிடி ஒரு மசுருகூட இல்லாமெ வள்ளுசா வளுச்சுட்ட? எங்க அந்தக் கத்திய எடு பாப்போம். எங்குட்டுக் கெடந்து இந்த வேலயப் படுச்சடா படுவா.” பேரன்ட்ட கேட்டா பாட்டி.

புதியமுத்து குச்சில மாட்டி வச்ச பெளேட்டுக் கத்திய எடுத்துக் காட்டிக்கிட்டுச் சொன்னான். “இது ரொம்பா ஈசிதான் பாட்டி. நானு குச்சில மாட்டிக்கிட்டு, இதவச்சு மொட்ட போடலாம்னு சொன்னனா? இது வச்சு ஒன்னும் போட முடியாதுன்னு ரத்துனஞ் சொன்னான். நாம் போட்டுக் காட்டுரேம்னு சொல்லிக்கிட்டு அவன ஒக்கார வச்சு, குச்சியப் புடுச்சுக்கிட்டு சர்ரு சர்ருன்னு இழுத்தம்பாரு. மயிரு பூராங் கத்த கத்தையா வந்துருச்சு. மொட்ட போடந்தட்டிக்கும் பேசாமெ குடுத்துக்கிட்டுருந்துட்டு பெறகு போயி வாத்தியார்ட சொல்றாம் பாட்டி. அவெ வாத்தியார்ட சொல்லிக்கிட்டு இருக்கும்போதே நானு பைக்கட்டத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு ஓடியாந்துட்டேன்.”

பெளேட்டுக் கத்திய வாங்கிப் பாத்துக்கிட்டே பாட்டி சொன்னா,” இதக்கொண்டி இத்தினிக்கூட காயமில்லாமெ சுத்தமா வளுச்சிருக்கியே. நம்ம அம்பட்டயஞ் சுப்பயங்கூட இப்பிடி வளிக்க மாட்டாம் பொறுக்கோ.”

“நம்ம தெரு வேப்பமரத்துக்கடில சுப்பையஞ் சவரஞ் செய்வார்ல பாட்டி. அதப் பாத்துக்கிட்டுருந்துதான் நானுஞ் செஞ்சேன்.” புதியமுத்து சொன்னான்.

“இதமட்டும் இம்புட்டுக் கருக்கடயாப் பாத்துச் செஞ்சுக்கிறியே.

இதே கூறுபாட்டோட படுச்சா என்ன? செத்தபடுவா," பாட்டி சொன்னா.

புதியமுத்தோட அம்மெ சொன்னா. "ஏலேய், ஒம்பாட்டுக்கு பெளேட்டுக் கத்திய வச்சுக்கிட்டு வெளாண்டுகிட்டுத் திரியாதே. கைல கிய்ல அறுத்துக்கிட்டு கெடக்கப் போறடா."

"இது கைல வெட்டாதும்மா. அதுக்குத்தான இந்தக் குச்சில சொருகிருக்கேன். பிளேட்டுக் கத்தியத் தொடாமெ குச்சிய மட்டும் புடுச்சுக்கிட்டு சர்ரு சர்ருன்னு இழுக்க வேண்டியதுதான். ஆனா இழுக்க முன்னால தலைல லேசாத் தண்ணியத் தடவிக்கிரனும்," புதியமுத்து சொன்னான்.

"இதுல எல்லாம் கோளாறாத்தான் இருக்க. ஆனா ஒன்னு மாத்தி ஒன்னு தெருவுக்குள்ள ஏதாச்சும் ஆவலாதியக் கொண்டாந்துர்ர. சென்மப்புத்தியச் செறுப்பால அடுச்சாலும் போகாது. ஒங்க தாத்தாவும் இப்பிடித்தான். ரொம்பாக் கிசும்புக்காரனா இருந்தான். அவனே எங்கேன்னு நீ வந்து பெறந்துருக்க." பாட்டி சொல்லிட்டு சிருச்சுக்கிட்டா.

அஞ்சாங் கௌாசோட புதியமுத்து படிக்கப்போறத நிப்பாட்டிக்கிட்டான். கம்மாயில தண்ணி வத்துனப் பெறகு ஒரு ஓரத்துல உழுது சோளம் வெதச்சான் புதியமுத்தோட அய்யா. சோளங்கதுரு வாங்கவும் குருவிக வந்து கூட்டங்கூட்டமாச் சோளக்கருதத் திங்கவும் புதியமுத்து காவலுக்குப் போனான். திடுதிப்புன்னு கூட்டமா குருவிக வந்து சோளக்கருதுகள்ள ஒக்காரவும் அதுகள வெரட்டாமெ அருவசமா அதுகளயே பாத்துக்கிட்டுருந்தான் புதியமுத்து. கொஞ்ச நேரங்கழுச்சு குருவிகூட பேசுனான்.

"இந்தாக் குருவிகளே. ஒங்களப் பாத்தா பட்னிய இருக்ர மாதிரி தெரியுது சீக்கரமாத் தின்னுட்டு ஓடிருங்க. எங்கம்மெ வந்தான்னா ஒங்களுக்கும் வசவு கெடைக்கும்; எனக்கும் அடி கெடைக்கும். ஆமா, எங்கம்மெ வரமுன்ன கொஞ்சம்போல தின்னுட்டு ஓடிருங்க; என்ன."

கம்மாப்பக்கம் போனவுக இவெம் பேசுரதக் கேட்டுட்டு வந்து தெருவுக்குள்ள இவனச் சொல்லிச் சொல்லி ஒரே சிரிப்புத்தான். இவனக் கிசும்புக்காரம்னுதான் நெனச்சோம். கிறுக்குப் பெயலா இருப்பாம் பொறுக்கோன்னு சொல்லிக்கிட்டாக.

பள்ளிக்கொடம் போகுரத நிப்பாட்டிட்டதனால புதியமுத்து ஆடுமேய்க்கப் போனான். ஆட்ட மேச்சலுக்கு உட்டுட்டு கரட்டாண்டி புடுச்சு அடுச்சுக்கிட்டுத் திரிவான். தென்னங்குச்சி மொனையில சுருக்குப் போட்டுக்கிட்டு நிமுசத்துக்குள்ள சிறுசும் பெருசுமா அஞ்சாறு கரட்டாண்டிகள அடுச்சுப் போடுவான். ரெண்டொரு தடவ கரட்டாண்டிச் சுருக்குலேயே பாம்பக்கூடப் புடுச்சுக் கொன்றுக்கான்.

புதியமுத்தோட ஆடுமேய்க்ர சுப்புக்குட்டி ஒரு நாளு மத்த

பெயல்ககிட்ட சொல்லிக்கிட்டுருந்தான். “புதியமுத்து இல்லடா. அவெங் கையிட்டயே பாம்புகளப் புடிக்காம்டா. கரட்டாண்டிச் சுருக்குட்ட கரட்டாண்டியயும் புடிப்பான்; பாம்புகளயும் புடிப்பாம்டா நல்ல பாம்பக்கூட புடுச்சு அடுச்சாம்டா.”

புதியமுத்தோட பாம்பு புடிக்ர தெறமயக் கேட்ட பெயல்க ஒருநாளு மெனக்கிட்டு கரட்டாண்டிச் சுருக்கோட புதியமுத்து கூட போனானுக. புதியமுத்தும் அன்னைக்குக் கம்பிலே சுருக்குப் போட்டுக்கிட்டு போனான். ஏழு கரட்டாண்டிகளப் புடுச்சு அடுச்சு வருசயா படுக்க வச்சான். கூடப்போன பெயல்களுக்கெல்லாம் ஒரே கும்மரச்சமாப் போச்சு. நேரம் போனதுகூடத் தெரியாமெ புதியமுத்து கூடயே அலஞ்சானுக. அப்ப ஒரு பொந்துக்குள்ள கரட்டாண்டி தலய முழுங்குன வாக்ல பெரிய பாம்பு வந்துருச்சு. பெயலுகள்ளாம் பயந்து போயி ஓடுனானுக. ஆனா புதியமுத்து பாம்பு தலயப் புடுச்சு இழுத்துக்கிட்டு வந்தான். பெறகு மெதுவா மத்தப் பெயலுகளும் வந்து பாத்தானுக.

“ஏலேய்கா மூனு பெரிய கல்லு கொண்டாங்க. இந்தப் பாம்பக் கொன்னு போடுவோம். இதத் தண்ணிப் பாம்பு மாதிரி நெனைக்காதீ கடா. இது நல்ல பாம்பு. படமிருக்கு பாத்திகளா இது கடுச்சா செத்தே போவமாம். எங்க பாட்டி சொன்னா,” புதியமுத்து சொன்னான்.

ஒடனே ஓடிப்போயி பெரிய பெரிய கல்லுகளத் தூக்கியாந் தானுக புதியமுத்து பாம்ப, அப்பிடியே கீழ வச்சு மொதல்ல பாம்போட வகுத்துலயும், வாலுலயுமாப் பெரிய கல்லுகளத் தூக்கி வச்சான். பெறகு பாம்போட தலைய கம்புட்டயே அழுத்திப் பிடுச்சி கைய எடுத்துட்டான். பெறகு தலய கல்லாலயே நச்சுக் கொன்னான் பெயலுக அம்புட்டுப் பேரும் மூச்சடக்கிட்டு பாத்துக்கிட்டு இருந்தானுக.

பெறகு அம்புட்டுப் பேரும் செத்த பாம்பத் தூக்கிப் பெதச்சிட்டு வீட்டுக்கு வந்தானுக. வந்ததும் புதியமுத்தோட பாட்டிக்கிட்ட பாம்பு புடுச்சு அடுச்சத வெலாவாரியாச் சொன்னானுக. பாட்டி கேட்டுட்டுப் பதறிப்போயிச் சொன்னா, “ஏலேய் பாம்புகிட்டயெல்லாம் வாலாட்டா தடா. நல்ல பாம்பெல்லாம் கொடிய வெசம் உள்ளதுடா. ஒனக்கு எத்தன தடவ சொல்றது? எந்த நேரத்துலதான் ஓங்கம்ம ஒனியப் பெத்துப்போட்டளோ. இப்பிடி சுழிச்சேட்ட செஞ்சுக்கிட்டே திரிர.”

அப்பிடி இப்பிடின்னு புதியமுத்தும் வளந்து ஆளாகி ஒரு கலியாணமும் முடுச்சு நாலஞ்சு பிள்ளைகளுக்குத் தகப்பனாயிட்டாரு. இன்னமும் அவரு கிசும்புத்தனம் மாறல. மேலத் தெரு லச்சுமணந் தாத்தாவ அப்பிடித்தான் ஒருவழி பண்ணிட்டாரு புதியமுத்து. லச்சுமணந் தாத்தாவுக்கு எப்பிடியும் அறுவது வயசுக்கு மேல இருக்கும். இந்த வயசுல போயி பொண்டாட்டி மேல சந்தேகப் பட்டுக்கிட்டு, சண்ட போட்டுக்கிட்டு இருப்பாரு.

ஒருநாளு புதியமுத்து ஊருக்குக் கெழக்கருந்த வேப்ப மரத்தடில படுத்துக் கெடந்தாரு. லட்சுமணந் தாத்தா கம்பூனிக்கிட்டு அங்க வந்தாரு. அவரப் பாத்ததும் புதியமுத்து ங்கொப்பனொளி இம்புட்டு வயசுக்குப் பெறகு இவளுக்கு பொண்டாட்டி மேல சந்தேகம்னு மனச்சுக்குள்ள நெனசுக்கிட்டு தாத்தாட்ட எடக்காப் பேச ஆரம்புச்சாரு. “தாத்தோய், கெழவிய தனியா வீட்ல உட்டுட்டு இங்க வந்துருக்க? கெழவியவுங் கூப்டுகிட்டு வர்ரதுதான?”

“அவா எங்கடா ஏங்கூட வருவா? அவா மாரியப்பங்கூடவுல இப்ப கும்மரச்சம் போட்டுக்கிட்டுத் திரிரா. நாங்கெழண்டு போனம்லடா. இப்ப அம்புட்டுச் சோலியும் அவெங்கூடத்தான் வச்சுக்குரடா,” லச்சுமணந் தாத்தா சொன்னாரு.

“அப்பிடியா தாத்தா சங்கதி? ஊருக்குள்ள அப்பிடித் தான் சொல்லிக்கிராக. இதான் கலிகாலம்ங்ரது ஒரு நாளைக்குக் கையுங்களவுமா ரெண்டு பேத்தயும் புடுச்சு ஊர்க்கூட்டத்துல ஒப்பிக்கிரதுதான தாத்தா? அப்பத்தான் கெழவி அடங்குவா,” ரொம்பச் சீரியசா புதியமுத்து சொன்னார்.

தாத்தாவும் வீராப்பாச் சொன்னாரு. “ஆமாண்டா அப்பிடித்தா நெனச்சுக்கிட்டு இருக்கேன். ஆனா ஒருநாக்கூட அம்புட மாட்டேங்கா. எனக்கு வேற மசங்கிட்டா கண்ணு பார்வ மங்கிப் போகுதா. அதுவேற அவளுக்குத் தோதாப் போச்சு. ஆனாப் பாருடா. எப்பிடியும் ரெண்டு பேத்தையும் புடுச்சே போடுவேன்.”

“வெங்காயம், ஒனக்குத்தான் கண்ணே சரியாத் தெரியலியேடி. ஒழுங்கா ஊத்துர கஞ்சியக் குடுச்சுட்டு செவனேன்னு திருணயில மொடக்குவியா. அப்ராணிக் கெழவிய அசிங்கப் படுத்திக்கிட்டு இருக்க” மனசுக்குள்ள சொல்லிக்கிட்டு புதியமுத்து எந்துருச்சுப் போயிட்டாரு.

ஒரு நாலஞ்சு நாளுக் கழுச்சு புதியமுத்து லச்சுமணங் கெழவங்கிட்ட வந்து இஸ்டத்துக்கு அடுச்சு உட்டாரு.

“தாத்தோய், வெசயந் தெரிமா ஒனக்கு? அந்தப் பெய மாரியப்பனும், ஓ வீட்டுக் கெழவியும் அவரு பூச்சி நாயக்கரு பிஞ்சைல இருக்ர பம்புசெட்டுல நெத்தைக்கும் ஒதுங்குராகளாம். நம்ம தெருப் பெயல்க பாத்தாகளாம். சாயந்தரத்துல அந்தப் பக்க மாப் போனீனா கையும் மெய்யுமாப் புடுச்சு ஒப்புச்சுப் போடலாம்.”

“அப்பிடியா சங்கதி? பாத்தியாடா பாத்தியாடா. நாஞ் சொல்லும்போது ஒரு பெயலும் நம்ப மாட்டேங்கானுக. இப்பப் பாத்தீல. இவனுகளே பாத்துட்டானுக. இப்பத் தெரிதா கெழவியோட வகுச? நாளைக்குச் சாயந்தரம் போறேன். போயி கண்டாரளியக் கையோட புடுச்சுட்டு வாரேன். இன்னைக்குப் பாரு உண்டு இல்லன்னு ஆக்கிப் போடுறேன். இந்தத் தடவ அவளப் புடிக்கலன்னா, நானு

கவுத்தப் போட்டு நாண்டுக்கிறேன்டா. நீ வேணாப் பாத்துக்கிட்டுரு," ஆவேசமாச் சொல்லிட்டு கேதுபூதுன்னு எளச்சாரு தாத்தா.

தாத்தாவுக்கு வந்த ஆக்ரோசத்தப் பாத்துட்டு புதியமுத்து நமட்டுச் சிரிப்புச் சிருச்சுக்கிட்டு எந்துருச்சுப் போயிட்டாரு, மறுநாளு நாலஞ்சு எளவட்டப் பெயல்களக் கூட்டுகிட்டு பூச்சி நாயக்கரு பம்பு செட்டுல போயி முன்னக்கூட்டிய போயி புதியமுத்து இருந்துக்கிட்டாரு.

சாயங்காலம் லேசா மசங்கவும் லச்சுமணந் தாத்தா கம்பூனிக் கிட்டு, பூன வாரது கெணக்கா பம்பு செட்டுப் பக்கம் வந்தாரு. கண் பார்வ மங்கலுனால தட்டுத் தடுமாறி வந்தவரு வழில இருந்த மொட்டக் கெணத்துக்குள்ள டம்முன்னு உழுந்துட்டாரு. அவரு போட்ட சத்தத்துல புதியமுத்தும், கூட இருந்த பெயல்களும் ஓட்டமா ஓடியாந்து தாத்தாவப் புடுச்சுத் தூக்கிக் கொண்டாந்தானுக.

இதுக்குள்ள வெசயம் அங்குட்டு இங்குட்டுமாப் பரவி தாத்தாவெ வீட்டுக்குக் கொண்டு வரயில வீடு பூராந் திமுதிமுன்னு கூட்டம். அப்பத்தான் மேற்கெ நெல்லுத் தூத்துட்டு வரப் போன கெழவி வீட்டுக்குள்ள மொழஞ்சா. மொழஞ்சவா பதறி போயிக் கேட்டா, "இன்னியாரத்துல பம்புசெட்டுப் பக்கம் என்ன சோலியாப் போன? கஞ்சியக் குடுச்சுட்டு சூசுவான்னு வீட்ல கெடந்தா என்ன?"

புதியமுத்து சொன்னாரு. "ஒனியத் தேடிக்கிட்டுத்தான் அங்க போனாரு பாட்டி."

"நானு மேற்கெ நெல்லுத் தூத்தப் போயிட்டு இப்பத்தான வாரேன். அதுக்குள்ள என்ன எழவுக்கு எனியத் தேடிப் போனான். நீங்க அங்ன இருக்கப் போயிச் சரியாப் போச்சு. இல்லின்னா பெணமாவுல செத்து மெதந்துருப்பான். கண்ணுந் தெரியல. ஒரு காடயத்துந் தெரியல. ஒரு லெக்குல அமுக்கிக்கிட்டுக் கெடந்தா என்ன?," பாட்டி அவா பாட்டுக்குப் பொலம்புனா.

"ஒனியவும், மாரியப்பனயுங் கையுங் களவுமாப் புடுச்சு ஊர்க்கூட்டம் போடத்தான் ஒனியத் தேடிக்கிட்டு அங்க போனான்," புதியமுத்து சொன்னாரு.

இதக் கேக்கவும் கெழவிக்கு வந்த ஆங்காரத்துக்கு அளவே இல்ல. நெல்லுத் தூக்கக் கொண்டு போன வெளக்கமாத்தக் கொண்டியே டம்மு டம்முன்னு கெழவனச் சாத்துனா. அடுச்சுக்கிட்டே ஆவேசமாச் சொன்னா, "இந்தக் கெழட்டுப் பெயல எதுக்குக் கெணத்துலருந்து தூக்கியாந்தீக? அந்தாணிக்கக் கெடந்து சாகட்டும்னு உட்டுட்டு வந்துருக்க வேண்டியதுதான. எடுத்துப் பெதச்சிட்டு இந்தக் கேவலப் படாம இருப்பம்ல."

கெழவி அடிக்ரத நிப்பாட்ன புதியமுத்து சொன்னான். "சரி, சரி உடு பாட்டி. இதுக்குப் பெறகாவது கெழவனுக்குப் புத்தி வருதான்னு

பாப்பம்."

இதக் கேக்கவும் கெழவஞ் சொன்னான். "ஏலேய் புதியமுத்து, 'சும்மா கெடந்த சங்க ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'ங்ர சாடையில எனிய உசுப்பி உட்டுட்டு வேடிக்க காட்றியாக்கும். நீயி வெளங்குவி யாடா? ஒனியச் சொல்லி என்ன செய்ய? ஏம்புத்தியச் செருப்பால அடிக்கனும். ஓம் பேச்சக் கேட்டுல இப்ப கெழவிட்ட வெளக்க மாத்தால அடி வாங்குரேன். ஒரு பொட்டச்சிட்ட அடிவாங்குனப் பெறகு இனியும் நானு உசுரோட இருக்கனுமாடா? நானு இன்னைக்கு ராத்திரியே கவுத்தப் போட்டுச் செத்துப் போறேன்டா."

"சரி, நீயி ரோசமுள்ள ஆம்பளன்னா, கவுத்தப் போட்டுக்கோ. நாம் போயி ஒனியப் பெதைக்கக் குழி தோண்டுறேன். உறுதியாக் கவுத்தப் போட்டுருவீலே. இல்லன்னா எங்கவேல மெனக்கிட்டுப் போகும்.... வெங்காயம் அப்ராணிக் கெழவிய சந்தேகப்படுறது தப்பாத் தெரியல. அவா அடுச்சதுதான் மானக்கேடாப் போச்சு." புதியமுத்து சொல்லவும் அங்ன நின்னவுக சிருச்சாக.

"ஏலேய், ஓங்கிசும்புத்தனத்த ஏங்கிட்டக் காட்டாத டோய். மங்குதுரய நம்பி ஆத்துல எறங்குன மாதிரி ஒனிய நம்புனம் பாரு. நீயி வெளங்க மாட்டடா. மோசக்காரப் பெய," கெழவஞ் சொன்னதக் கேட்டுக்கிட்டு புதியமுத்து சிருச்சுக்கிட்டே எந்துருச்சுப் போயிட்டாரு.

மறுநாளு மத்தியானம் போல புதியமுத்து சாவடில வந்து ஒக்காந்தாரு. அங்ன இருந்த தொப்ளாங் கேட்டான். "ஏ , மாமா, இருந்தாலும் ஒனக்கு இம்புட்டு நட்னத்தனங்கூடாது. போயும் போயும் கண் பார்வ தெரியாதக் கெழவனக்கொண்டு போயி கெணத்துல உழ வச்சு வேடிக்க பாத்துருக்கியே. ஒரு பெரிய மனுசம்னுகூட பாக்காமெ இப்பிடிச் செஞ்சு போட்டியே. பாவங் கெழவன்."

"ஏ...வெண்ண, நானாடா அவனக் கூப்டுக்கிட்டுப் போனேன். அவா ரப்பெடுத்துப் போயி வந்து உழுந்தாம்னா நா என்ன செய்வேன். பெரிய மனுசம்ங்றியே, பெரிய மனுசங்கெணக்காவா நடக்கான்! இந்த வயசுல என்ன இம்புட்டு மப்புங்ரேன்?" புதியமுத்து சொன்னாரு.

"அது வாஸ்தவந்தான் மாமா, கெழவனுக்கு அடிகிடி பட்டுத் தொலச்சுருந்தா என்ன செய்றது?"

"அம்புட்டுத் தூரத்துக்கு உடுவமாடா? நாங்க அவனக் கவனுச்சுக்கிட்டேதாம்லே இருந்தோம். போயிப் புடிக்க முன்ன கெழவ உழுந்துட்டாம்டா."

"சரி, போனவாரம் நீயி ஒரு வெள்ளாட்டங் குட்டிக்கு ஆப்பரேசஞ் செஞ்சீயாம்ல. அது இருக்கா? செத்துப் போச்சா?," தொப்ளாங் கேட்டான்.

"ஏய், என்னலே இப்பிடிக் கேக்க? நாங் கைவச்ச குட்டி என்னைக்காவது சாகுமாடா? என்ன நெனச்சுக்கிட்ட எனிய,"

புதியமுத்து ரொம்பாப் பெருமையாச் சொன்னாரு.

"சரி, நீ என்ன டாக்டருக்கா படுச்சுருங்க? ஓம் பாட்டுக்கு செய்ற? எப்பிடி செஞ்ச மாமா? நீயி செய்ரதெல்லாம் அருவசமாத் தான் இருக்கு போ."

"இதுல என்னலே அருவசம்? குட்டிக்கு வகுத்துல கட்டி கெணக்கா வீங்கிக்கிட்டே வந்துச்சு. சரி கட்டிய அறுத்து சலத்தப் பிதுக்கித் தள்ளிட்டு மருந்து வச்சுக்கெட்டுவோம்னு கட்டிய அறுத்தம் பாரு. அது கட்டியுமில்ல. ஒன்னுமில்ல. தோல அறுத்துட்டு விருச்சுப் பாத்தா, கொடலு வெளில தள்ளிருச்சுடா."

"பெறகு என்ன மாமா செஞ்ச?"

"பெறகென்ன, என்னடா செய்ரதுன்னு யோசுச்சேன். சட்டுன்னு கொடல உள்ள தள்ளி வச்சு தோலத் தச்சுட்டேன்."

"ஊசி எப்பிடி மாமா தோலுல எறங்குச்சு?"

"எறங்குறது கஸ்டமாத்தான் இருந்துச்சு. ஊசியக் குத்திக்கிட்டு, ஊசிக் கொண்டயத் துணிய வச்சு மெதுமெதுவாத் தள்ளி உட்டுத் தச்சுட்டேன். தச்சுட்டு புண்ணு ஆறுற வரைக்கும் வேப்ப எண்ணெயில பச்செலய அரச்சு கொழப்பித் தடவிக்கிட்டே இருந்தேன். புண்ணும் ஆறிப்போச்சு. இப்பயும் அந்தக் குட்டி சவுரியமா நிக்குதுல."

"நீயி நெசம்மாவே ரொம்பா நொரநாட்டியக்காரந்தான் மாமா. சின்னப் பிள்ளைல இருந்தே நீயி இப்பிடித்தானம்ல மாமா?"

"ஒன்னு சொன்னம்னா, நீயி உடமாட்டியே. சரிடா, நாளைக்கு ராமசாமி ஐயா நாத்துப் புடுங்கிட்டு வரப்பு வெட்ட வரச் சொல்லிருக்காரு, போயி நாலு பெயல்கள வேலைக்கு அமத்திட்டுப் போகனும். ஒங்கூடப் பேசிக்கிட்டிருக்க டயமில்லடா," சொல்லிட்டு புதியமுத்து எந்துருச்சுப் போயிட்டாரு.

மறுநாளு வெள்ளனத்துல போயி நாத்துப் புடுங்கிட்டு, வரப்பு வெட்டிட்டு சாயந்தரத்துல ராமசாமி ஐயா வீட்டுக்குக் கூலி வாங்கியாரப் போனாரு புதியமுத்து.

புதியமுத்தப் பாத்ததும் ராமசாமி ஐயா சொன்னாரு. "என்னலே, கூலி வாங்க வந்தியா? போயி தொழுவத்துல கெட்டிக் கெடக்ர மாடுகளுக்குக் கூழம் உருவி வச்சுட்டு வாடா."

புதியமுத்துப் போயி வைக்கல உருவி அம்புட்டு மாடுகளுக்கும் போட்டுட்டு வந்தாரு.

"என்னலே, கூழம் உருவிப் போட்டிட்டியா? சரி.....போயி அம்மாட்ட ரூவா வாங்கிட்டுப் போயி ஒரு அஞ்சு கிலோ பருத்திக் கொட்டயும், ரெண்டு கிலோ கம்பும் வாங்கியாடா. பால்மாடுகளுக்கு ஆட்டி ஊத்தனும்."

புதியமுத்துக்கு எருச்சல் வந்தாலும் அடக்கிக்கிட்டுப் போயி

வாங்கிட்டு வந்தாரு. வந்த ஒடனே மறுவடியும், “ஏலேய், தங்கவேலு ஆசாரிட்ட ரெண்டு மம்பிட்டிக்குக் கண போடக் குடுத்திருக்கேன். போட்டார்னா போயி வாங்கிட்டு வந்துருடா,” ராமசாமி ஐயா சொன்னாரு.

புதியமுத்துக்கு வந்த வெளத்துக்கு அளவே இல்ல. ஆனாலும் பல்லக் கடுச்சுட்டுப் போயிட்டு வந்தாரு. வந்தப் பெறகு, “சரி, வாங்கிட்டு வந்திட்டியாடா? ம்.... இனி என்ன செய்யலாம்,” சொல்லிக்கிட்டே யோசுச்சாரு.

புதியமுத்து சொன்னான், “இனியா? இனி ஓம் பொண்டாட்டியக் கூப்டுகிட்டு வா. நம்ம ரெண்டு பேரும் மாறி மாறிப் படுக்கலாம்.

ராமசாமி பேயறஞ்சதுகெணக்கா நின்னாரு.

# 10. விடுதலை

அந்த வீட்டப் பாத்தா பெரிய பங்களா கணக்கா இருக்கும். அம்மந்தண்டி வீட்ல ஐயா, அம்மா ரெண்டு பேரு மட்டுந்தான் குடியிருக்காக. ரெண்டு பேத்துக்கும் எப்பிடிப் பாத்தாலும் எழுவது வயசுக்கு மேல இருக்கும். ஐயாவுக்கு எம்பது இருக்குமுன்னு பேசிக்கிட்டாக. அவுகளுக்கு ஆணும் பொண்ணுமா நாலு பிள்ளைக இருந்தாலும், ஒரு பிள்ளகூட தாயி தகப்பங்கூட இல்ல. எல்லாரும் அவுகவுக பொண்டாட்டி பிள்ளைககூட வெளியூர்கள்ள வேல செஞ்சுக்கிட்டு இருக்காக. நெனச்சா ஆடிக்கொரு தடவ அம்மாவாசைக்கு ஒரு தடவ வந்து போவாக.

ஐயா, அம்மாவுக்கு ஒதவி செய்ய ஏகப்பட்ட வேலக்காருக இருக்காக. இதுல முக்கியமான வேலக்காரி ஆராயி. அவாகூட சுப்ரமணின்னு ஒரு பன்னண்டு வயசுப் பெய ஐயாவுக்கு ஏண்டவேல எடுத்தவேல செஞ்சுக்கிட்டு இருக்கான். ஐயா வீட்டுல நாயி ஒன்னும், பூன ஒன்னும் நிக்கிதுக. நாயி பேரு நிக்கி, பூனைய புஸின்னு கூப்டா ஓடியாரும். சுப்ரமணிதான் இந்த நாயயும் பூனையயும் கவனிப்பான். இதுகள குளுப்பாட்டி, சோறு வச்சு, கட்டிப் போட்டு, அவுத்து உட்டு, இதுக பேண்டு தள்ர பீய்யள்ளி போட்டு இப்பிடி அம்புட்டு வேலையயும் சுப்ரமணிதான் செய்வான். நிக்கியும் இவனும் ரொம்பாப் பிரியமா வெளாண்டுகிருவாக.

ஆராயியும், சுப்ரமணியும் தங்குரதுக்கு, பங்களாவுக்குப் பின்னால ஒரு குடுச வீடு இருக்குது. இவுக ரெண்டுபேத்தத் தவுர சரசுவதின்னு ஒரு பொம்பள வந்து சமயல செஞ்சு வச்சுட்டுப் போகும். கடகண்ணிக்குப் போயிட்டு வர பாலு வாங்கியார, மருந்து வாங்க, போஸ்ட் ஆபீஸ் பேங்குகளுக்குப் போயிட்டு வர இப்பிடி எல்லா வெளி வேலைகளச் செய்ய சின்னச்சாமின்னு ஒருத்தரும் ஐயாவோட கார ஓட்டுரதுக்கு முருகன்னு ஒரு ட்ரைவரும், தோட்ட வேல செய்ரதுக்கு குப்புசாமின்னு ஒரு பெரியவரும் இப்பிடி ஏகப்பட்ட எடுபிடி ஆளுக இருந்தாக. இவுக எல்லாருமே காலைல வேலைக்கு வந்துட்டு சாயங்காலம் போயிருவாக. மதியத்துக்கு எல்லாருக்கும் ஐயா வீட்ல சோறு போடுவாக. ஆராயியும் சுப்ரமணியமும் உள்ளயே தங்கி வேல பாக்காக. ரெண்டு பேரும் வெளியூர்க்காரவுக. ஆராயிதான் அம்புட்டு வேலக்காரருகளுக்கும், நாய்க்கும் பூனைக்குமாச் சேத்து ரேசங்கட அரிசி போட்டு

மதியத்துக்குச் சமையலு செய்வா.

ஆராயிக்குப் பத்து வயசாகும்போது அவளோட தாயுந் தகப்பனுஞ் செத்துப் போனாக. அவாதான் தாய்க்குத் தலமகா. பத்து வயசுலயே வேலக்காரியாப் போயிட்டா ஆராயி. ஏதோ ஒரு வீட்ல வேலக்கார புள்ளையாச் சேந்து தம்பி தங்கச்சிகளக் காப்பாத்தி இருக்கா. நாப்பது வருசத்துக்கு மேல பல லெக்குல வேல செஞ்சுட்டு கடேசியா இங்க வந்து சேந்துருக்கா. இப்ப அவளுக்கு அம்பது வயசுக்கு மேல இருக்கும். கலியாணங் காச்சின்னு ஒன்னும் முடிக்கல. முடுச்சு வைக்க ஆளுமில்ல. இங்க ஐயா வீட்ல சாப்பாடு போக மாசம் நூறு ரூவா குடுக்காகளாம். அவா வளத்து ஆளாக்கி உட்ட தம்பி தங்கச்சிகள்ளாம் நல்ல நெலைல இருந்தாலும், ஒரு கழுதைகூட அவள எட்டிப் பாக்காதுக. இந்த வயசுலயும் ஆராயி பொழுதனிக்கும் வேல செஞ்சுகிட்டே இருப்பாக. செத்த நேரம் வேல செய்யாமெ இருந்தாலும் அம்மாவுக்குக் கோவம் வந்துரும்.

இந்த வயசுலயும், ஆராயி விடியங்காட்டி எந்துருச்சு, வாசத் தொளுச்சு, வீடு வாசக் கூட்டியள்ளி, கோலம் போட்டு, வீட்டச் சுத்தி வச்சுருக்ர தொட்டிச் செடிகளுக்கு தண்ணி ஊத்தி, கொழாய்ல தண்ணி புடுச்சு, தொட்டிகள்ள தண்ணிய ரொப்பி, துணி தொவச்சு, சட்டிபான மினுக்கி இப்பிடி தொயந்தடியா வேலவெட்டி செஞ்சுக்கிட்டே இருப்பா. காலைல எட்டுமணியப் போல ஆராயிக்கும், சுப்ரமணிக்கும் ஒரு டம்ளர் காப்பித் தண்ணி கெடைக்கும். லிட்டர் கணக்குல பால் வாங்குனாலும் இவுகளுக்குக் குடுக்ர காப்பி மட்டும் எப்பயும் கன்னங்கரேர்னுதான் இருக்கும். பத்துமணி போல ரெண்டு பேத்துக்கும் இத்தினி பழைய கஞ்சியும் ஊறுகாயும் கெடைக்கும். கரெக்டா பதுனொரு மணிக்கு குடுசைல அடுப்பப் பத்த வச்சு வேலக்காருகளுக்கு சோறு பொங்குவா ஆராயி. சோத்தக் காச்சுனப் பெறகு, அம்மா குடுக்குர பழைய காயிகறிகளப் போட்டு கொழம்பு வைப்பா. எல்லாச் சாமானுகளயும் லிமிட்டா அளந்தளந்துதான் குடுப்பாக அதுக்குள்ளயே சமயல முடுச்சப் பெறகு மொதல்ல நாய்க்கும், பூனைக்கும் சோத்தப் போட்டு சுப்ரமணிட்ட குடுப்பா. சுப்ரமணி சோத்த வாங்கிக்கிட்டு நேரா அம்மாட்ட போவான். அங்க நாய்க்கும், பூனைக்கும் வச்ச சோத்துத் தட்டுகள்ள அம்மா இத்தினி இத்தினி எலும்புத் துண்டுகளப் போடுவாக. அம்மா கண்ணு முன்னாலியே சோத்த நல்லாப் பெணஞ்சு நாயயும், பூனையையும் கூப்டு சோத்த வப்பான். பாதி சாப்பிடுந்தண்டிக்கும் அம்மாகூடவே இருந்துட்டு அப்புறம் போயிருவாக.

ரெண்டுஞ் சாப்டு முடுஞ்ச ஒடனே, ரெண்டு தட்டயுங் கழுவி வெயில காய வச்சுட்டு மறுபடியும் ஐயாகிட்டப்போயி நிப்பான் சுப்ரமணி. வெளிவேல இல்லாத டயத்துல ஐயா ரூமுல போயி நிக்கனும்.

மதியம் ஒரு மணி வாக்குல ஆராயி சுப்ரமணியத்த கூப்டு சோறு போட்டுட்டு அவளுஞ் சாப்புடுவா. அதுக்கு முன்னால வெளிலருந்து வேலைக்கு வார அம்புட்டு வேலக்காரங்களுக்கும் சோத்தப் போட்டுருவா ஆராயி. சுப்ரமணிக்கு பத்துப் பன்னண்டு வயசு இருக்கும். வளர்ர பெயலாங்காட்டி நல்லாத் திம்பான். ஆராயி தனக்கு இல்லன்னாலும் அவனுக்கு வகுறுமுட்ட திங்கப் போடுவா. மதியஞ் சாப்டு முடியவும், மறுவடியும் பண்டம் பாத்துரங்களக் கழுவிட்டு ரெண்டரமணியப் போல மாவாட்ட ஒக்காருவா ஆராயி. மொதல்ல அரிசியப் போட்டு ஆட்டி எடுத்துட்டு உளுந்த கொறஞ்சது ஒருமணி நேரமாச்சும் ஆட்டனும், நாலுமணிக்கு மேலதான் உளுந்தம் மாவ தோண்டி அள்ளனும், முன்னால அள்ளுணா அம்மாவுக்குப் புடிக்காது. கிரைண்டர்ல போட்டு ஆட்டுர மாவு ஐயா அம்மாவுக்குப் புடிக்காது. ஆட்டுக்கல்லுல போட்டு மங்கு மங்குன்னு ரெண்டு மணி நேரத்துக்கு ஆட்டுனாத்தான் அம்மாவுக்குத் திருப்தியா இருக்கும்.

விடுஞ்சதுலருந்து, அடைர வரைக்கும் ஆராயியும், சுப்பிரமணி யும் எதுனாச்சும் ஒருவேல செஞ்சுக்கிட்டே இருக்கனும். இல்லன்னா அம்மாவுக்குக் கோவம் வந்துரும். எப்பிடுத்தான் வேல செஞ்சாலும் அம்மாவுக்குத் திருப்தியே இருக்காது. இந்த வெசயத்துல ஐயா பரவாயில்லன்னு சொல்லுவாக. காலைல எந்துருச்சதுலருந்து ராத்திரி படுக்குர வரைக்கும் அம்மா சத்தம் கேட்டுக்கிட்டே இருக்கும். பொழுதனிக்கும் ‘சுப்ரமணி’ ‘ஆராயி’ன்னு கூப்டுக்கிட்டே அது சரியில்ல இது சரியில்லன்னு கத்திக்கிட்டே திரியும். திடீர் திடீர்னு சுப்ரமணியத்தப் போட்டு டம்மு டம்முன்னு அடிப்பாக. சத்தம் போட்டு அழுகக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டே இன்ன ரெண்டு அடிபோடும். வலியத் தாங்க மாட்டாமெ கூடக் கொஞ்சம் அலறு வான். கண்டமாணிக்க வஞ்சுக்கிட்டே அங்குட்டும் இங்குட்டுமாத் திரியும். சுப்ரமணி வழக்கம் போல அடி வாங்கி முடுச்ச ஒடனே வீட்டுக்குத் தெக்க இருக்ர மாமரத்தடில போயி நின்னுக்கிட்டே அழுவான். அங்கதான் நிக்கி நாயி கெட்டிக் கெடக்கும். இவெ அழுரதப் பாத்துட்டு நிக்கியும் பாவம் போல இவனப் பாத்துக்கிட்டு வால மெதுவா அசைக்கும். செத்த நேரத்துல நாயும், இவனுமாப் படுத்து மாமரத்து நெழல்ல ஒறங்கிருவாக. படுத்து ஒறங்கனுதுக்குப் பெறகு வசவு வாங்குவான்.

வேலக்காருக யாரும் ஒருத்தரோட ஒருத்தரு பேசக்கூடாது. அதுலயும் முக்கியமா அக்கம் பக்கத்துல இருக்கவுககூட அருதிக்கும் பேசக்கூடாது. இது ஐயா, அம்மாவோட கண்டிப்பான உத்தரவு. ஐயாவக் கூப்டுகிட்டு அம்மா ஆசுபத்திரிக்குக் காருல போயிட்டு வருவாக. அப்பத்தான் ஆராயியும் சுப்ரமணியும் சிரிச்சுப் பேசுவாக. சுத்திமுத்திப் பாத்துப் பாத்து அக்கம்பக்கத்துல இருக்கவுகளோட நாலு வாத்த பேசுவாக. அப்படி பேசும்போது ஊடாலே கண்ணீரு மால

மாலையாக் கொட்டும். பாக்கப் பரிதாவமா இருக்கும்.

அப்பிடித்தான் ஒரு நாளு காலைல வெள்ளனத்துலயே ரத்தப் பரிசோதனசெய்யனும்னு ஐயாவும் அம்மாவும் காருல போயிட்டாக. ஐயாவுக்குச் சக்கரச்சத்து, அத்தோட கண்ணுஞ் சரியாத் தெரியாது. காதுஞ்சரியாக் கேக்காது. காலைலேயே சுப்ரமணி சத்தம் போட்டு பாட்டு படுச்சுக்கிட்டு மாமரத்துல சொதந்தரமா ஏறி காயி புடுங்கித் தின்னான். ஆராயும் கெணத்தடில ஒக்காந்துகிட்டு பூஞ்சிரிப்பாச் சிரிக்கா.

வேலிக்கு அந்தப் பொறத்துலருந்து சின்னராணி டீச்சர் கேட்டாக, “என்ன, வீட்ல ஆளு இல்லியா. பாட்டெல்லாம் கேக்குது.”

“டாக்டர்கிட்ட போயிருக்காக. சாயந்தரம் போலதான் வருவாக. மத்தியானம் மக வீட்ல சாப்டுட்டு வெயிலுதாள வருவாக;” ஆராயி சொன்னா.

“அதான் டீச்சர் இன்னைக்கு எனக்கு விடுதலை. பாட்டிக்கும் விடுதல,” சொல்லிக்கிட்டே ரெண்டு மாங்காயப் புடுங்கி டீச்சர் பக்கம் எறுஞ்சான்.

மரத்துலருந்து கடகடன்னு எறங்கி வந்து நாயயும் அவுத்து உட்டான். “நிக்கி, இன்னைக்கு ஒனக்கும் விடுதல. சாலியா இருந்துக்கோ. சாயங்காலம் வரைக்கும். ஆனா வெளிய மட்டும் போயிராத. நீயி தொலஞ்சு போயிட்டீனா ஏ உசுரு எனக்கில்ல. சரியாடா நிக்கி,” கேட்டுக்கிட்டே நிக்கிய தடவிக் குடுத்தான். அவுத்து உட்ட சந்தோசத்துல நிக்கி ஆனந்தமா அங்குட்டு இங்குட்டுமா தவ்விக் குதுச்சுட்டு சுப்ரமணிப் பெயலயே சுத்தி வருது. செத்த நேரங்கழுச்சு ஆராயிப் பாட்டிய நாலு சுத்துச் சுத்திட்டு ஓடி, ஓடி வெளாடுது. மாமரத்துல மேல ஒன்னுக்கடுச்ச நிக்கி, சந்தோசத்துல ஒரு லெக்குல நிக்கல.

சுப்ரமணியும் போயி டவுசர வெலக்கிக்கிட்டு கருவப்பல செடிமேல ஒன்னுக்கடுச்சான். அடுச்சுக்கிட்டே சொல்றான். “பாட்டி இதுலருந்துதான அம்மா எல புடுங்கித் தாளிப்பாக. இப்பப் புடுங்கி தாளிக்கட்டும்.”

“ஏலேய், ஒனக்கு வர வர மப்புக்கூடிப் போச்சுடா. அம்மா மேல கோவம்னா அதுக்கு இப்பிடியாடா செய்வ. ஓ மோத்திரம் பட்டா, செடி பட்டுப் போகும்டா,” ஆராயி சொன்னா.

“பட்டுப் போகாது பாட்டி. நல்லா வளரும். எனிய என்ன பாடு படுத்துராக.... இப்ப ஏ மோத்துரத்தப் போட்டுத் தாளிச்சு திங்கட்டும்,” சுப்ரமணி ஆங்காரமாச் சொன்னான்.

அந்தப் பொடிப்பெய மனசுக்குள்ள எம்புட்டு வேதன, கோவம்னு நெனச்சுக்கிட்ட ஆராயி, “நீயி செடிமேல ஒன்னுக்கடுச்சத அம்மா பாத்தாகன்னா, ஓங்குஞ்சானப் புடுச்சு அறுத்துப் போடுவாக

அறுத்து. நாவகத்துல வச்சுக்கோ," சொல்லிக்கிட்டே திருப்தியா சிரிச்சா. அவன வைரமாதிரி வஞ்சாலும் ஆராயிக்கும் ஒரு குரூரமான சந்தோசந்தான்.

இத்தோட நிக்கல சுப்ரமணி. ஆராயி புடுச்சு வச்ச தொட்டித் தண்ணிக்குள்ள கால உட்டு டப்பு டப்புன்னு அடுச்சு தண்ணியப் பூராஞ் சிந்துனா. தண்ணி பூராங்கலங்கி அழுக்காப் போச்சு. இதப் பாத்த ஆராயி, "ஏலேய் இப்பத்தானலே தொட்டி நிமுரப் புடுச்சு வச்சேன். அம்புட்டுத் தண்ணியையும் அழுக்காகிச் சிந்தி பாதித் தொட்டியா ஆக்கிப்போட்டியேடா," அம்மா வந்து பாத்தா எனிய சும்மா உடாதுடா. எந்திரிடா கத்திக்கிட்டே ஓடிப்போயி அவன வெரட்டுனா. வெரட்டும் போது அவா மொகத்துல கோவமில்ல; சிரிப்புத்தான்.

சாயங்காலம் அம்மாவும், ஐயாவும் வந்து எறங்குனாக. பழையபடி ஆராயும், சுப்ரமணியும் கடுவம் பூனைக மாதிரி மொகங்கள வெரப்பா வச்சுக்கிட்டாக. அவுக சிரிச்சுட்டா அம்மாவுக்குப் புடிக்காது. ஆராயும், சுப்ரமணியும் கச்சிப்னு வேலகளச் செய்ய ஆரம்புச்சாக. தாஞ்சொல்லிட்டுப் போன வேலைகள்ளாம் சரியா செஞ்சுட்டாகளான்னு சரிபாத்தாக அம்மா. நாயி, பூன ரெண்டையும் கூப்டு பாத்தாக. சாப்பிட்டுச்சான்னு சுப்ரமணிட்ட வெசாருச்சாக. நல்ல காலத்துக்கு அம்மாவர முன்னாடி நாயப் புடுச்சுக் கெட்டிட்டான் சுப்ரமணி.

மறுநாள் காலைல அம்மா பக்கத்து வீட்டு சின்னராணி டீச்சரக் கூப்டு வெசாரிச்சாக. "எங்க வீட்ல வேல செய்ற இந்த சோம்பேறிக நா இல்லாத சமயம் எப்படி இருந்துச்சுக? ஒங்ககிட்ட ஏதாச்சும் வந்து சொல்லுச்சுங்களா?"

"ஒன்னுஞ் சொல்லலயேம்மா. நானுங்கூட வீட்டுவேலயா இருந்துட்டேன். இவுகளப் பாக்கலியே" டீச்சரு நல்லபடியா சொல்லிட்டாக. அம்மா குளிக்கப் போனப்பெறகு ஆராயி ரகசியமா சொன்னா, "டீச்சர் அம்மா ஏதாச்சுங் கேட்டா நாங்க எதுவும் ஒங்ககிட்ட சொல்லலன்னு சொல்லுங்க. கலியாணங்காச்சி எதுவுமில்லாமெ, ஒரு ஆம்பள கை மேனில படாமெ, வகுத்துல புழுபூச்சி ஒன்னுஞ் செமக்காமெ இருக்கப் போயி, ஏ ஒடம்பு இன்னும் எளமயாத் தெரியுது. ஆனா வயசாகுதுல டீச்சர். இப்பயும் கொமரிப் பிள்ள கெணக்க லொங்கு லொங்குன்னு வேல செஞ்சுக்கிட்டே இருக்க முடியுமா? இந்த அம்மா ஒரு நிமுசம் ஒக்கார உடமாட்டேங்கி. எங்குட்டும் நகர உடமாட்டேங்கி. அந்தப் பயலப் போட்டு அந்தப் பாடுபடுத்துது. பள்ளிக்கொடம் போகவேண்டிய வயசுல பாவம், இங்க வந்து மாட்டிக்கிட்டுத் தெணறுரான் பெய."

ஆராயி சொல்லிக்கிட்டு இருக்கும்போதே அம்மா குளிப்பு ரூம்புக்குள்ள இருந்த மாணிக்க கூப்புட்டாக. "ஆராயி.... எங்க

போயிட்ட அதுக்குள்ள, ஆளு நடமாட்டத்தையே காணும்."

"இதோ, இங்னதாம்மா நிக்கேன். இந்த வெறகுகள அள்ளி வெயில்ல போட்டுக்கிட்டு இருக்கேன்." அவசரமாச் சொல்லிக்கிட்டே ஆறு வயசுப்பிள்ள கெணக்கா ஆராயி ஓடிப்போயி வெறகுகிட்ட நின்னுக்கிட்டா.

ஆராயி பதறிப்போயி ஓடுனதப் பாத்த டீச்சர் அவளுக்காக பரிதாபப்பட்டாக. பாவம், இந்த வயசுல இந்தப் பயம் பயந்து இப்படி கொலதெறிக்க ஓடிப்போயி, வேலசெஞ்சு வகுத்த ரொப்ப வேண்டி யிருக்குன்னு நெனச்சுக்கிட்டே டீச்சரு வீட்டுக்குள்ள போயிட்டாக.

ஒரு வாரங் கழுச்சு காலங்காத்தாலயே சுப்ரமணி சத்தம் போட்டு, அழுதுக்கிட்டு இருந்தான். வழக்கமா அடி வாங்குனாத்தான் அழுவான். இப்ப என்னத்துக்காக அடி வாங்குனாம்னு தெரியல. மத்தியானம் அம்மா சாப்பிட்டு செத்த நேரம் படுக்கைக்குப் போன டயத்துல சுப்ரமணி வேலிக்கிட்டப்போயி டீச்சரக் கூப்புட்டான். டீச்சர் வெளிய வரவும் சோகமாச் சொன்னான்.

"டீச்சர், எனிய எப்பிடியாவது இங்கருந்து கூட்டிட்டுப் போயிருங்களேன். எனியக்கொண்டு போயி ஒங்க பள்ளிக்கொடத்துல சேத்து உட்டுருங்களேன். நானு எங்க ஊர்ல நாலு வரைல படுச்சுருக்கேன் டீச்சர். எனக்கு படிக்க ஆசையா இருக்கு டீச்சர். காலைலருந்து இன்னஞ் சாப்டல டீச்சர். பினாயிலுப் பாட்ல தெரியாமெ ஒடச்சுட்டேன் டீச்சர். அதுக்குத்தான் எனிய அடுச்சு, சாப்பாடு போடமாட்டேன்டாங்க டீச்சர். பாட்டி மறவா இத்தினிச் சோறு குடுத்ததக்கூட எப்பிடியோ கண்டு புடுச்சு பாட்டிய வைராக டீச்சர். எனிய பள்ளிக் கொடத்துல சேத்து உடுங்க டீச்சர். மத்தியானத்துல எனக்குச் சோறாவது கெடைக்குஞ் டீச்சர்," சொல்லிக் கிட்டே இருந்தவன் ஏங்கி ஏங்கி அழுதான்.

டீச்சருக்கு என்ன சொல்றதுன்னு ஒன்னும் புரியல. அவசரமாப் போயி ரெண்டு வாழப்பழத்தக் கொண்டாந்து குடுத்தாக. "சீக்கிரந் தின்னுட்டுப் போயிரு. அம்மா பாத்துட்டா எனியப் பேசுவாக," டீச்சரு சொல்லிட்டு விருட்டுனு உள்ள போயிட்டாக. கெணத்து மேட்டு மறவுல ஒக்காந்து சுப்ரமணி அந்த ரெண்டு பழத்தயும் தின்னுட்டு தண்ணியக் குடுச்சான்.

அந்தப் பக்கமா குப்பகொட்ட வந்த பாட்டியிடம் சுப்ரமணி ஆனந்தமாச் சொன்னான், "பாட்டி, நானு பள்ளிக்கொடத்துல சேந்து படிக்கப் போறேன். டீச்சர்ட சொல்லியிருக்கேன்; அவுக எனிய பள்ளிக்கொடத்துல சேத்து உடுவாக, ஆமா; நீயும் வாரியா பாட்டி? ஒனிய மட்டும் இங்க உட்டுட்டுப் போமாட்டேன். நீயும் டீச்சர்ட கேளு பாட்டி."

பரிச்ச முடுஞ்சு லீவு உடவும் டீச்சர் அவுகம்மா வீட்டுக்குப்

போயிட்டாக. சுப்ரமணிக்கு தொயந்து அந்த வீட்ல இருக்கப் புடிக்கல. எப்பயும் சோகமா, சோந்துபோயி இருந்தான். அதுக்கும் அம்மாட்ட வசவு வாங்கிட்டே இருந்தான். ஒருநாள் அப்பிடித்தான் அம்மா மானாவாரிக்காப் புடுச்சுப் பேசுனாக. "பொட்டப் பெய, இதென்ன பிள்ள இல்லாத சொத்தா? ஒங்க அம்மையும் அப்பனும் கொண்டு வந்து கொட்டி வச்சுட்டாப் போயிருக்காக. நீ செய்ர வேலைக்கு ஒங்காத்தா வந்து அம்பது ரூவா வாங்கிட்டுப் போயிட்டா. நாயி தின்ன மாதிரி திங்கிறீல. வேல செய்ய மட்டும் ஒடம்பு வலிக்குது. பேண்ட குண்டி கழுவாத பெய. தெருவோட கெடக்ற பிச்சக்காரக் கழுதைகள கொண்டாந்து வச்சா இப்பிடித்தான். குனுஞ்சா குசு பறியும். நிமுந்தா நெட்டி முறியும். இந்தப் பெயல வச்சு என்ன வேல வாங்க முடியும். வேற ஒரு பெயலும் கெடைக்க மாட்டேங்கான். இல்லன்னா இந்தக் கழுதைய கட்ட வெளக்கமாத்தக் கொண்டு அடுச்சு வெரட்டிருப்பேன்."

ஆராயும், சுப்ரமணியும் அமேதியா கேட்டுக்கிட்டு நின்னாக. இந்தத் தடவ சுப்ரமணி அழுகல. ஆனா ஆராயி மௌனமா வழுஞ்ச கண்ணீர சீலைட்ட தொடச்சுக்கிட்டா. சுப்ரமணி பரிதாபமா பாட்டியப் பாத்தான். கொஞ்ச நேரம் அம்புட்டுப்பேரும் அமைதியா நின்னாக. மறுபடியும் அம்மாவே கத்துச்சு.

"இப்ப எதுக்கு இங்ன நின்னுகிட்டு இருக்க? ஆராயி என்னத்துக்கு மூக்கச் சீந்திட்டு நிக்க? அவனச் சொன்னா ஒனக்கு வலி எடுத்துருச்சோ. போ.... போ.... போயி அந்த ஊற வச்ச பச்சரிசிய இடுச்சு மாவாக்கு. ஏம்மகா வருது. அதுரசஞ் செஞ்சு குடுத்தனுப்பனும்."

ஆராயி மெதுவாப் போனா. சுப்ரமணியும் பின்னாலியே போனான். அம்மா மறுபடியும் கத்துச்சு. "நீயி ஏண்டா, அவா முந்தானயப் புடுச்சுக்கிட்டு பின்னாலயே போற? போயி மம்பட்டிய எடுத்துட்டு வந்து இந்தப் புல்லச் செதுக்கிச் சுத்தமாக்கு. ஏம்மகா வரும்போது எல்லாஞ் சுத்தமா இருக்கனும். மசமசன்னு நிக்காமப் போ."

சுப்ரமணி மம்பட்டிய எடுத்துட்டுப் போனான். குனுஞ்சு புல்லச் செதுக்கும் போதே அழுதான். ஆராயி அரிசிய இடிக்கும்போதே அழுதா. அவுகவுக வேல முடிஞ்சப் பெறகு அம்மா கூப்டு காப்பித் தண்ணி குடுத்துச்சு. அம்மா போனப் பெறகு ரெண்டு பேரும் காப்பியக் குடிக்காமெ கீழ கொட்டுனாக.

மறுநாள் காலைல அம்மா வழக்கம்போல "ஆராயி, டேய்....சுப்ரமணி,"ன்னு கத்துனாக. ஆனா அவுக கூப்ட கொரலுக்கு ஓடியார ரெண்டு பேருமே அங்க இல்ல.

# 11. மேய்ச்சல் நிலம்

அவன் பெயர் வெயில்முத்து. மழையிலும் வெயிலிலும் அலைந்து திரிந்து ஆடு மேய்ப்பதுதான் அவனது தொழில். அவனை அனைவரும் 'கிறுக்கன்' என்றுதான் கூப்பிடுவார்கள். அதற்காக அவன் வருத்தப்படமாட்டான். பலருக்கு அவன் பெயர் வெயில்முத்து என்பதே தெரியாது. கிறுக்கன் என்ற பெயரிலேயே அவன் அந்த வட்டாரத்தில் பிரபலமானான். ஆனால் அவனுக்கு உண்மையிலேயே கிறுக்கு இல்லை என்ற விசயம் பலருக்குத் தெரியாது.

கிறுக்கனிடம் ஏறக்குறைய இருபது ஆடுகளுக்கு மேல் இருந்தன. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அவன் வெங்கிடசாமி முதலாளியின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான். தற்போது கிறுக்கனுக்கு ஏறக்குறைய முப்பது வயது இருக்கும். தினக்கூலியாகப் பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு காலை எட்டு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை ஆடுகளை மேய்ப்பான். ஆறு மணிக்கு ஆறுகளைக் கொண்டு போய் முதலாளி வீட்டில் விட்ட பின்பு தன் வீட்டுக்குச் சென்று விடுவான்.

அவளைப் பற்றிய வேறு விவரங்கள் யாருக்கும் அவ்வளவாகத் தெரியாது. எங்கேயோ பக்கத்தில்தான் அவன் குடி இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அவனுக்குத் திருமணமாகிவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். வேறு சிலர் திருமணமாகவில்லை என்கிறார்கள். ஒரு சிலர் அவனது வயதான தாயோடு அவன் வசித்து வருவதாகச் சொல்கிறார்கள். எப்படி இருந்தபோதிலும் அவன் அந்தச் சுற்று வட்டாரத்தில் பலருக்கும் அறிமுகமாயிருந்தான்.

கிறுக்கன் குள்ளமாக இருப்பான். முதுகு சிறிது முன்னோக்கி வளைந்திருக்கும். அவனது தலைமுடி எப்பொழுதும் ஒரே அளவாகத் தான் இருக்கும். மொட்டையடித்து மூன்று வாரங்கள் கழிந்த பின்பு பார்த்தால் எவ்வளவு முடி இருக்குமோ அவ்வளவு முடிதான் ஆண்டு முழுவதும் அவன் தலையில் இருக்கும். அது ஏன் எப்படி என்று எவர்க்கும் புரிவதில்லை. கன்ன எலும்புகள் வெளியே துருத்திக் கொண்டிருக்கும். தாறுமாறான மீசையும் இங்கொன்றும் அங்கொன்று மாகத் தாடி மயிரும் காணப்படும். அவனது குரல்கூட வித்தியாச மாகத்தான் இருக்கும். கட்டைக் குரலில் கனைத்தபடி பேசுவான்.

கிறுக்கனது கையில் எப்போதும் ஒரு தூக்குச் சட்டி வைத்திருப்பான். அதில் தான் அவன் பழைய சோறோ, கூழோ

கொண்டு வருவான். கையில் ஒரு நீண்ட கம்பும் இருக்கும். சாப்பிட்டு முடித்த பின்பு அந்தக் கம்பை வைத்துத்தான் தூக்குச் சட்டியை அடித்துக்கொண்டே அலைவான். சாயம் போன ஒரு சிவப்பு நிறப் பனியனும், கறுப்புநிறக் கால்சட்டை தெரியும்படியாக ஒரு அழுக்கு வேஷ்டியோ, அல்லது லுங்கியோ கட்டிக் கொண்டிருப்பான். எப்போதும் சிரித்த முகமும், சுறுசுறுப்பும் கொண்ட கிறுக்கன் அடிக்கடி அடித்தொண்டையில் உரக்கப் பாட்டுப் பாடிக்கொண்டிருப்பான். பாட்டின் இசை மட்டும் மாறவே மாறாது. ஆனால் பாட்டின் கருப்பொருள் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும்.

"வெள்ளாடு மேய்க்க
விடியலிலே வந்தேனே
வெள்ளாமெப் பக்கம் நீ
போகாதே வெள்ளாடே
வெனையாகிப் போகும்
செனையாடே ஏஞ்செல்லாடே"

சத்தமாக அவனிஷ்டப்படி மெட்டெடுத்து அவன் பாடும் பாட்டு அந்தப் பகுதி முழுவதும் கேட்கும். பக்கத்தில் எருமை மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் எல்லம்மா பாட்டிக்குச் சிரிப்பாக இருக்கும். இவனது பாட்டைக் கேட்டு உல்லாசமாகச் சிரித்துக் கொள்வாள்.

பாடி முடித்தவுடன் கிறுக்கன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொள்வான். யாராவது அருகில் இருந்தால் முகம் மலரச் சிரித்துக் கொள்வான். ஏதோ இவன் பாடும் பாடலைக் கேட்பதற்கென்றே பிரத்தியேகமாக அங்கே பலர் குழுமிக் கிடப்பதாக எண்ணிப் பெருமை பொங்கச் சிரிப்பான். யாராவது அருகில் இருந்துவிட்டால் உடனே இன்னொரு பாடலை இன்னும் சத்தமாகப் பாடுவான். சட்டியில் தாளமும் போடுவான்.

எல்லம்மா பாட்டிதான் இவனுக்குத் தோதான ஆள். இவனைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் பாட்டிக்குத் தனி இன்பம்.

திடீரென ஒருநாள் கிறுக்கன் எல்லாம்மா பாட்டியிடம் கேட்டான். "அம்மோவ் பெரியம்மோவ், அந்தா நிக்கிர செடிலருந்து எனக்கொரு பூ புடுங்கித் தா."

பக்கத்து வீட்டில் கற்றுச் சுவருக்கு மேல் எட்டிப் பார்த்து காற்றில் ஆடிக்கொண்டிருந்த ரோஜாவைத்தான் கிறுக்கன் கேட்டான்.

பாட்டி சிரித்துக்கொண்டே சொன்னாள். "அட கிறுக்குப் பெயலே. வீட்டுக்காரன் பாத்தாம்னா அம்புட்டுத்தான் ஒனிய ஒதைக்காமெ உடமாட்டான்."

கிறுக்கன் சிரித்தான். பிறகு சொன்னான். "அப்படீன்னா

அவுககிட்ட போயி ஒரு பூவு வாங்கிட்டு வாயேன்."

"ஒனக்கெதுக்கடா பூவு? காதுல சொருகி வைக்கப் போறீயாக்கும்? சுத்தப் பைத்தியக்காரனா இருப்பாம் பொலுக்கே." எல்லம்மா சொன்னாள்.

"காதுல வைக்க இல்ல. எம்பொண்டாட்டிக்குக் குடுக்கப் போறேன்." கிறுக்கன் சொன்னதைக் கேட்ட எல்லம்மா மட்டுமின்றி, அக்கம்பக்கத்தில் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் அத்தனை பேரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

"அட கிறுக்குப்படுவா. ஒனக்குத்தான் கல்யாணமே ஆகலயேடா. பெறகு எந்தப் பொண்டாட்டிக்கு பூவு கொண்டு போயி குடுக்கப் போற." பாட்டி கேட்டாள்.

"எனக்குக் கல்யாணம் ஆயிருச்சே, ஒனக்குத் தெரியாது. எனக்குத்தான் தெரியும்." வெட்கத்துடன் சொல்லிச் சிரித்தான் கிறுக்கன். அனைவரும் சிரித்தனர்.

இப்படிக் கூத்தும் கும்மாளமுமாக அந்தப் பகுதியில் பலர் ஆடு, மாடு, வாத்து, பன்றி மேய்த்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்துத் தெருவில் இருக்கும் முண்டக் கண்ணியும் எப்போதாவது மாடு மேய்க்க வருவாள். காலையில் வந்து அவளது எருமை மாட்டை மேயவிட்டுவிட்டு வீட்டுக்குப் போய்விடுவாள். பிறகு மாலையில் வந்து மாட்டை வீட்டுக்கு ஓட்டிச் செல்வது அவளது வழக்கம். ஒரு நாள் மாட்டைப் பல இடங்களில் தேடிக் களைத்துப் போய்விட்டாள். அங்கு ஆடு, மாடு மேய்த்தவர்களிடம் மாட்டைப் பற்றிக் கேட்டாள்.

அங்கு வாத்து மேய்த்து கொண்டிருந்த தாத்தாவிடம் கிறுக்கன் சொன்னான். "தாத்தோய். முண்டக்கண்ணியோட மாட்ட அந்தா.... அந்தச் சவுக்குத் தோப்புக்குள்ள நானு பாத்தேன்."

"மெய்யாலுமாடா பாத்தெ? ஒனக்கெப்படித் தெரியும்?பின்ன அவாகிட்ட சொல்லியிருக்க வேண்டியதுதானடா. பாவம் வயசானவா எம்புட்டு நேரமாத் தேடிக்கிட்டு இருக்கா," தாத்தா சொன்னார்.

கிறுக்கன் பதிலேதும் சொல்லாமல் குறுஞ்சிரிப்புச் சிரித்தான். தாத்தா முண்டக் கண்ணியக் கூப்பிட்டுச் சொன்னார். "ஓம்மாடு அந்தச் சவுக்குத் தோப்புக்குள்ள நிக்கிதாம். கிறுக்கன் பாத்தானாம். போயி இருட்டுரதுக்கு முன்னாடி ஓட்டிக்கிட்டு வா."

இதைக் கேட்டதும் முண்டக்கண்ணி சவுக்குத் தோப்புப் பக்கம் வேகமாக நடந்தாள். போகும்போதே, "ஒருநாளும் இந்தப் பெயமாடு அந்தப் பக்கம் போகாதே இன்னைக்கென்ன அம்புட்டுத் தொலவுல போயிருக்கு." சத்தமாகச் சொல்லிக்கொண்டே போனாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கிறுக்கன் சத்தமாகச் சொன்னான். "நாந்தான் ஓம்மாட்ட சவுக்குத் தோப்புக்குள்ள வெரட்டி உட்டேன். போயித் தேடிப் பாரு. அன்னைக்கு ஒருநாளு

ஒம்மாடு என்னோடு ஆடுகளை வெரட்டுச்சா, அதுக்குத்தான் இன்னைக்கு நானு வெரட்டுனேன்" சொல்லிவிட்டு ஏதோ பெரிய சாதனை செய்து விட்டவன்போல தூக்குச் சட்டியைக் கம்பினால் வேகமாக அடித்தான்.

முண்டக்கண்ணி திரும்பி அவனைப் பார்த்து முறைத்தாள். பிறகு வேகமாகத் தோப்புக்குள் சென்று மாட்டைத் தேடினாள். இவளைப் பார்த்தவுடன் மாடு 'ம்மே...' என்று கத்தியது.

முண்டக்கண்ணி அருகில் சென்று பார்த்த பொழுது மாடு ஒரு சவுக்கு மரத்தில் கட்டப்பட்டிருந்தது. கோபத்தோடு மாட்டை அவிழ்த்துக்கொண்டு வந்த முண்டக்கண்ணி வரும்போதே கத்தினாள். "ஏ கிறுக்குப் படுவா. மாட்டக் கொண்டு போயி மரத்துலயா கெட்டிப் போட்ட? ஒனிய இன்னைக்கு என்ன செய்ரம்னு பாரு." கத்திக் கொண்டே கையிலிருந்த கம்பை கிறுக்கனை நோக்கி வீசி எறிந்தாள். கிறுக்கன் சிறு பிள்ளைபோல ஓடி ஒதுங்கிச் சத்தமாகச் சிரித்தான். முண்டக்கண்ணி குனிந்து நான்கைந்து கற்களைப் பொறுக்கித் தொடர்ச்சியாக கிறுக்கனை நோக்கி எறிந்தாள். எறியும்போதே கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்தாள். ஆனால் கிறுக்கனோ விளை யாட்டுப்பிள்ளைபோல குதூகலித்துக்கொண்டே அங்குமிங்குமாக ஓடினான். ஒளிந்தான். எட்டிப் பார்த்தான். பதுங்கினான். வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்.

இப்படியாக ஏறக்குறைய அரைமணி நேரமாக முண்டக் கண்ணியும், கிறுக்கனும் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டி ருந்த அத்தனை பேரும் விழுந்து விழுந்து சிரித்தனர். தாத்தா சொன்னார், "சும்மா கெடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி. இந்தப் பெய இவாகிட்ட போயி நான்தான் வெரட்டுனம்னு வேற சொல்றான். கிறுக்கம்கிரது சரியாத்தான் இருக்கு!" கிறுக்கன் தொலைவிலேயே நின்றுகொண்டிருந்தான். கம்பில் தூக்குச் சட்டியை மாட்டி கம்பைத் தோள்களின்மீது வைத்தபடி அவனது ஆடுகளைக் குரலெழுப்பிக் கூப்பிட்டான்.

முண்டக்கண்ணி கோபமாகக் கத்தினாள். "திருட்டுக் கழுத, மாட்ட வெரட்டிக்கொண்டு போயி சவுக்குத் தோப்புல கெட்டியா போட்டுட்டு வந்த? ஏங்கைல சிக்குன்னாப் பாரு ஒனிய உண்டு இல்லன்னு ஆக்கிப் போடுவேன். களவாளிப்பெய. மாட்டக் கெட்டிப் போட்டுட்டு மசங்கவும் அவுத்துட்டுப் போயி வித்துப் போடலாம்னா திட்டம் போட்ட. கால ஒடுச்சுப் போடுவேன் ஒடுச்சு, சாக்கிரதையா இருந்துக்கோ. கத்திக்கொண்டே வீட்டுக்குச் சென்று விட்டாள்.

தாத்தா சொன்னார். "அம்புட்டு வெவரமா இவனுக்கு இருக்குது? அப்பிடி மாடு களவாண்டு விக்கிரவும்னா நாந்தான் மாட்ட வெரட்டி உட்டம்னு வெளில எதுக்குச் சொல்றான். கிறுக்குப் பெய

புள்ள."

முண்டக்கண்ணி தலைமறையும் சமயத்தில் கிறுக்கன் சட்டியைக் கம்பினால் தட்டிக்கொண்டு சொன்னான். "அம்மோவ் முண்டக்கண்ணி அம்மோவ். எனக்கு நேரமாச்சு நானு போயிட்டு வரேன். வெயிலுமுத்து போயிட்டு வாரா....ன்" நீட்டி முழங்கிக் கொண்டே டண்டண் டன் டண் டண் டண்ணென்று சட்டியை மணிபோல் அடித்தான்.

அடிக்கடி அடித்தடித்தே அந்தச் சட்டியில் ஆயிரம் நெளிசல்கள் இருந்தன.

"சரிதான் போடா பெரிய்ய மகாராசான்னுதான் நெனப்பு. வீணா எதுக்கு அவளோட வகுத்தெரிச்சலக் கொட்டிக்கிர?" தாத்தா கேட்டார்.

கிறுக்கன் சிரித்துக்கொண்டே அவனது ஆடுகளை ஓட்டிச் சென்றான்.

கிறுக்கனும் எல்லம்மாவும் கொஞ்சம் சிநேகிதமாகப் பேசிக் கொள்வார்கள். ஒருநாள் எல்லாம்மா கிறுக்கனிடம் கேட்டாள். "ஏண்டா நீயி ஏங்கிட்ட ஒளிவு மறைவு இல்லாமெ உள்ளதச் சொல்லு. ஊரணிப்பட்டிலருந்து மாடு மேய்க்க வந்த குஞ்சம்மாளுக்கும் ஒனக்கும் தொடர்பு இருந்துச்சாமுல. இங்ன மேய்க்கிறவுக பூராஞ் சொல்றாகளே. அது நெசந்தானா?"

"நெசந்தான்."

"நெசந்தாமுனா. பெறகெதுக்குடா அந்தப் பிள்ளயக் கல்யாணம் கெட்டல?"

"நாங் கெட்டணும்தான் இருந்தேன். அவுக வீட்லதான் கெட்ட உடமாட்டேனுட்டாக."

"எதுக்காம்?"

"ம்...எதுக்கா? இந்தா பாரு. இங்ன பசுவும் மேயுது. எருமயும் மேயுது. எருமக்கெடா எருமயத்தான் தேடுது. காளமாடு பசுமாட்டத் தான் நோங்குது. அதுக்குத்தானாம்."

"என்னடாசொல்ற?"

"இன்னுமா புரியல. நானு எருமயாம். அவா பசுவாம். அதுனால சாதிவிட்டுச் சாதி போகக்கூடாதாம். போக முடியாதாம். எரும எருமயத்தான் தேடணுமாமம். இதுதான் எயற்கையா நடக்கணு மாம். அப்பிடித்தாஞ் சொல்லி அவள வேறொருத்தனுக்குக் கெட்டிக் குடுத்துட்டாக."

கிறுக்கன் சொன்னதைப் புரிந்துகொண்ட எல்லம்மா சொன்னாள். "மனுசனுக்குள்ள மனுசன் என்னடா இருக்கு?"

"நானு அப்படித்தான் கேட்டேன். மாடுகளே தன்னோட இனத்த உட்டு வேற இனத்துக்கூட சேராது. அப்படியிருக்க நம்ம

எப்படி இருக்கணும்னு கேக்காக.”

“நீ என்னடா சொல்ற. புரியும்படி சொல்லேன்.”

“எனக்குத்தான் ஒன்னும் புரியலயே. பெறகு ஒனக்கெப்படி புரிய வைக்றது?” சொல்லிவிட்டுக் கடகடவெனச் சிரித்தான் கிறுக்கன்.

எல்லம்மாவுக்குப் புரிந்தது போலவும் இருந்தது: புரியாதது போலவும் இருந்தது. மேற்கொண்டு அவள் எதுவும் கேட்கவில்லை. ஆனால் அவன் கிறுக்கனில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

மற்றொரு நாள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் எல்லம்மா கேட்டாள். “இந்த ஆடுகள மேய்க்கிறதுக்கு ஓம் மொதலாளி எம்புட்டுச் சம்பளம் தாராரு?”

“எனக்கா? ஒரு நாளைக்குப் பத்து ரூவா, பெறகு யாவாரி வந்து ஆடுகள வெலைக்கு வாங்கிட்டுப் போம்போது ஏங்கைல எதுனாச்சும் குடுத்துட்டுப் போவாக.”

“ஒனக்கினு ஒன்னுமேயில்ல. என்னடா? ஓம் மொதலாளிட்ட சம்பளத்தக் கொஞ்சங் கூட்டிக்கேளு.”

“நாங் கேக்க மாட்டேன்.”

“சுத்த வெறும் பெயடா நீயி.”

“நா ஒன்னும் வெறும் பய இல்லை. நானும் சொந்தமா ஆடு வச்சிருக்கேனே.” சொல்லிவிட்டு தலையை இங்குமங்குமாகப் பலமாக ஆட்டிச் சிரித்தான்.

“அப்பிடியா சங்கதி? எந்த ஆடு ஓ ஆடு?”

“செல்லம்மா எல்லம்மா<br>
சொகுசான பல்லம்மா<br>
வெயிலுமுத்து வளத்தாடு<br>
வெள்ளபாதி கருப்புமீதி”

கிறுக்கன் பாடிக்கொண்டே ஆடினான்.

எல்லம்மா அவனது ஆடுகளை உற்று நோக்கியபடி இருந்தாள். இறுதியாக ஓர் ஆட்டைக் காட்டிக் கேட்டாள். அவனும் அதுதான் அவனது சொந்த ஆடு என்று சொல்லிக் கொண்டு உற்சாகமாகப் பாடினான். பிறகு கேட்டான்.

“ஆமா நீயி எப்படி கரெக்டா ஏ ஆட்டக் கண்டு புடுச்ச?”

“அதான் நீயி பாட்டுப் படுச்சிய வெள்ளபாதி. கருப்பு மீதின்னு. அத வச்சுத்தான். நீயி பள்ளிக்கொடம் போயி படிக்காமலயே இம்புட்டு பாட்டு இட்டுக்கட்டிப் படிக்கிற, நீயெல்லாம் பள்ளிக் கொடம் போயி படுச்சிருந்தீன்னா பெரிய ஆளா வந்துருப்ப” எல்லம்மா சொன்னாள்.

கிறுக்கனுடைய ஆடு பார்ப்பதற்கு அழகாக ஆரோக்கியமாக

இருந்தது. நடு முதுகிலிருந்து வால்வரை தூய வெள்ளை நிறத்திலும் முன்பகுதி கறுப்பு நிறத்திலும் இருந்தது. வால் கருப்பு நிறத்தில் இருந்தது. கால்களில்கூட பாதிவரை கருப்பு மீதி வெள்ளை. பார்ப்ப தற்குக் கவர்ச்சியாக இருந்தது அந்த ஆடு. "இந்த ஆட்ட யாருடா ஒனக்குத் தந்தது? கலருக் கலரா பாக்க நல்லா இருக்கே" எல்லம்மா கேட்டாள்.

"இத நானு குட்டிலருந்து வாங்கி வளக்கேன்."

"ஒங்க மொதலாளிக்குத் தெரியுமா?"

"தெரியுமே....அவரோட ஆட்ட வெல பேச வாரவனுக பூராத்துக்கும் ஏ ஆட்டு மேல ஒரு கண்ணு. இத வாங்கிப் போடலாம்னு கெனாக் கண்டுகிட்டு கெடக்கானுக. நானா குடுப்பேன்?"

"சரி வளத்துத்தான் என்ன செய்வ? என்னைக்காவது ஒரு நாளு விக்கத்தான செய்வ?"

"இல்ல. நானு விக்கவே மாட்டேன். அதுதான் இப்ப எனக்குச் சொந்தபந்தமின்னு இருக்குது தெரியுமா?" இதைச் சொல்லும்போது கிறுக்கனின் குரலில் மாற்றம் இருந்ததை எல்லம்மா கவனித்தாள். கிறுக்கனுக்குள் இருக்கும் உணர்வுகளை அவ்வப்போது அவள் அறிந்தே வைத்திருந்தாள். எல்லோரும் நினைப்பதுபோல அவன் ஒரு பைத்தியமல்ல என்பதுதான் அவளின் தீர்க்கமான முடிவு.

எல்லம்மாவுக்குத் திடீரென அவன் விரும்பிய குஞ்சம்மாவின் நினைவு வந்தது. பாவம் கிறுக்கன். அவனை யாரும் புரிந்து கொள்ளவில்லை என்றும் எல்லம்மா எண்ணினாள். கிறுக்கனிடம் மெல்லக் கேட்டாள். "குஞ்சம்மாள அதுக்குப் பெறகு பாக்கவே இல்லியாடா?"

ஏதோ யோசனையில் ஆழ்ந்து கிடந்த கிறுக்கன் நிதானமாகப் பேசினான். "ஏம் பாக்கல... பாத்தேனே.... தினமுந்தான். பாக்குறேன். எனக்கு ஏதெல்லாம் புடிக்குதோ அதுல எல்லாம் அவளத்தான் பாக்குறேன். இந்த இருக்குல என்னோட ஆடு. அதுலகூட அவளப் பாக்குறேனே."

ஏதோ ஒரு வேதாந்தியைப் போலப் பேசினவன் சட்டென்று நிறுத்திவிட்டு சத்தமாகப் பாடினான்.

"அந்த வேப்ப மரத்தடிதான்
எந்தன் வேதனயச் சொல்லாதோ
இந்தச் சவுக்குத் தோப்புத்தான்
எந்தன் சங்கடத்தச் சொல்லாதோ."

திடீரெனப் பாட்டை நிறுத்தியவன் சட்டியைச் குச்சி வைத்து அடித்துத் தாளம் போட்டுக் கொண்டே இருந்தான். பிறகு வயல் வரப்பின்மீது மல்லாக்கப் படுத்துக்கொண்டான். இரண்டு கைகளை

யும் தலைக்கு அடியில் மடக்கி வைத்து கொண்டு, வலக்காலின்மீது இடக்காலைத் தூக்கிப் போட்டு ஆட்டியபடி இருந்தவன் சட்டென்று ஆட்டுவதை நிறுத்திக்கொண்டான்.

அந்தத் திறந்த வெளியில் பரந்த ஆகாயத்துக்குக்கீழே அவன் அப்படிக் கிடந்தது பார்ப்பதற்குப் பலவிதமான எண்ணங்களைத் தந்தது. எல்லம்மா நினைத்தாள். "இப்படிக் கவலையத்தவன் மாதிரி காலாட்டிக்கிட்டு இருக்கான். திடுதிப்புன்னு சிரிக்கான். திடுதிப்புன்னு அழுகுறான். ஆனா இவனுக்குக் கிறுக்குமில்ல ஒண்ணுமில்ல."

எல்லம்மாளின் நினைவினைத் தடுத்தது திடீரென எழுந்த பாட்டு. கிறுக்கன் தான் உரக்கப் பாடினான்.

"உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக
ஆடு அழுவதும் எனக்காக - இந்த
மாடு கனைப்பதும் எனக்காக."

பாடிக் கொண்டே சத்தமாகச் சிரித்தான்.

எல்லம்மா அவசரமாகச் சொன்னாள். "ஏலேய் இந்தா ஒன்னோட மொதலாளியோட மகன் வாராருடோய். எந்துருச்சு ஆட்டப் பாத்து மேயுடா."

ஆனால் அவள் அவசரப்பட்ட அளவுக்கு அவன் அவசரப்பட வில்லை. நிதானமாகத் திரும்பிப் பார்த்தான். எழுந்து வரப்பின்மீது உட்கார்ந்து கொண்டான். முதலாளியின் மகனோடு நான்கைந்து வியாபாரிகளும் வந்திருந்தனர். ஒரு மாதிரியாக விசிலடித்து ஏதேதோ சப்தமிட்டு ஆடுகளை அழைத்தான் கிறுக்கன். ஆடுகள் இவனை நோக்கி ஓடி வந்தன. கசாப்புக் கடைக்கு ஆடு வாங்க வந்தவர்கள் ஆடுகளை உன்னிப்பாகக் கவனித்தார்கள். இறுதியாகக் கிறுக்கனின் ஆட்டையே தேர்ந்தெடுத்தார்கள். விஷயத்தக் கேட்ட கிறுக்கன் மெதுவாக எழுந்தான். கீழே கிடந்த கம்பினைக் கையிலெடுத்துக் கொண்டு சிலம்பாட்டம் ஆடுவது போல அங்குமிங்குமாகச் சுற்றி னான். ஓடினான். குதித்தான். மிகவும் வேகமாக அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தவன் சட்டென நின்றுகொண்டு கத்தினான். "எதுக்குடா ஏ ஆட்டையே வெலைக்குக் கேக்கிறீக? எதுக்குடா இங்க வந்தீக. என்னடா பேசுனிக? ஏ ஆடுதான் வேணுமா. அதத்தான் எல்லா நாப்பசங்களும் கேக்குறானுக. ஒங்கள சும்மா உடமாட்டேன்டா. எனிய யாருன்னு நெனச்சிக? நானு யாரு தெரியுமா? ஏய் பொறுக்கி நாய்களா...கிட்ட வந்து பாரு அப்பத் தெரியும் ஏய்.....வாடா. நீங்க வாடா பாப்போமுடா. நா யாருடா டேய்? "கத்திக்கொண்டே கிறுக்கன் அவர்களை விரட்டினான். கம்பைச் சுழற்றிக் கொண்டே அவர்களை நெருங்கினான். முதலாளியின் மகனும் அச்சத்துடன் அங்குமிங்குமாக ஓடினான். பிறகு சுதாரித்துக் கொண்டு அரட்டினான். "ஏய் கிறுக்கு

நாயே, ஒனக்கு என்ன ஆச்சு இன்னைக்கு? நில்லுடா அங்க, கூலிக்கார நாயே," சொல்லி வாய் மூடு முன்பு கிறுக்கன் துள்ளிப் பாய்ந்தான். எல்லம்மா இடையில் புகுந்து சமாதானமாகப் பேசினாள். "ஐயா மொலாளி. இவம் மேல இன்னைக்குப் பெரிய கருப்பசாமி வந்து எறங்கி இருக்குது. அதுதான் இப்பிடிப் பேசுறான். இவனுக்கு அப்பப்ப சாமி வரும். சாமி வரும் போதெல்லாம் இப்பிடித்தான் பேசுவான். நீங்க தப்பா நெனைக்காதீங்க. அவன எதுவும் பண்ணிப் போடாதீக. பெறகு சாமிக் குத்தமாப் போயிடும்."

ஒரு கையில் சட்டியும் மறுகையில் கம்பும் வைத்து ஆடிக் கொண்டிருந்த கிறுக்கன் திடீரென சட்டியை ஒரு பக்கமும் கம்பை மறுபக்கமும் வீசி எறிந்தான். பிறகு கத்தி அழுதான். கலகலவென்று சிரித்தான். கூடி நின்றவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. கிறுக்கன் உண்மையிலே கிறுக்கன்தான் என உறுதிப்படுத்திக் கொண்டனர். எல்லம்மா மட்டும் அப்படி எண்ணவில்லை. திடீரென கிறுக்கன் அமைதியாகக் கைகூப்பிச் சொன்னான். "எல்லாருக்கும் வணக்கம். நானு போயிட்டு வாரேன்" சொல்லிவிட்டுச் சிறிது தூரம் சென்றவன் மீண்டும் திரும்பி வந்தான். தூக்குச் சட்டியையும் கம்பையும் எடுத்துக் கொண்டு சட்டியைத் தட்டிக்கொண்டே ஓடினான். அனைவரும் சிலையன உறைந்துபோய்க் கிடந்தார்கள். எல்லாம்மாவைத் தவிர.

தினமணி கதிர்
*16. 11. 97*

# 12. வெனயம்

மேட்டுச்சேரி கிராமம் அன்னைக்கு ரொம்பா ஆரவாரமா இருந்துச்சு. என்ன ஏதுன்னு வெசாரிக்கப்போனா, ஊருக்குள்ள, எம்.எல்.ஏ. வர்ரதா சொன்னாக. கோயிலுக்கு முன்னால பந்தலு போட்டு அலங்காரஞ் செஞ்சுருந்தாக. சிறுசுலருந்து பெருசுவர அம்புட்டுப்பேரும் சிருச்ச மொகத்தோட அங்குட்டும் இங்குட்டுமா அலஞ்சுகிட்டு இருந்தாக. சினிமாப்பாட்டு வேற லவுடு ஸ்பீக்கர்ல அலறிக்கிட்டு இருந்துச்சு.

ராசுப் பெயலும் பள்ளிக்கொடம் முடுஞ்சதும் வீட்டுக்கு ஓடியாந்தான். வீட்டு வாசல்ல நின்னமாணிக்க பைக்கட்டத் தூக்கி வீட்டுக்குள்ள விட்டெறுஞ்சிட்டு விர்ருன்னு கோயிலுப் பக்கம் ஓடுனான். சனங்க பூராம் மேடைக்கு முன்னால ஒக்காந்து பேசிக் கிட்டு இருந்தாக. கூட்டத்துக்குள்ள அம்மயப் பாத்த ராசு இடுச்சு புடுச்சுப் போயி அவாமடில நங்குன்னு ஒக்காந்தான்.

"ஏண்டா, ஓஞ்சூத்து கீழ ஒக்காராதோ? அதியப்புடுச்சு பெய புள்ள. கதவச் சாத்திட்டு வந்தியாடா? நாயி போயி நக்கிட்டுப் போயிருச்சுன்னா ரவைக்கு நம்ம ரெண்டுபேரும் பட்னியாக் கெடக்க வேண்டியதுதான்." ராசோடெ அம்மெ ரெங்கம்மா சொன்னா.

"ம்...சாத்திட்டேன்மா," வேகமாகச் சொன்னான் ராசு.

"சரி... நீ செத்த கீழ எறங்கி ஒக்கார்டா. தொடையெல்லாம் வலிக்குது. மூனாங்கெளாசுப் படிக்கிற பெயல இன்னும் மடில தூக்கிச் செமக்கச் சொல்றாம் பாரு. இருக்க இருக்க நீ என்னலே இன்னும் பச்சப் பிள்ளையா?," சொல்லிக்கிட்டே ராசத்தூக்கி கீழ ஒக்கார வச்சா ரெங்கம்மா.

ராசு கேட்டான். "ஏமா, நம்மளுக்கும் லோனு மாடு குடுப்பாகளாமா?"

"குடுப்பாக...இந்த லோன வாங்க விக்காதத வித்து அவனுக்கு இவனுக்குனு சன்னப் பணமா குடுத்திருக்கேன். பணத்த வாங்கித் தின்னு போட்டு ஏமாத்தாமெ கடேசியா இம்புட்டு நாளுக் கழுச்சு இப்பமாச்சும் லோனு குடுக்காகளே....சரி மாடு வாங்குனாவிட்டி நீ மாடு மேப்பியா?"

"சரிம்மா... நான் மேய்க்கேன். ஆனா....நானு பள்ளிக் கொடத்துக்குப் போனுமே....," ராசு இழுத்தான்.

"பள்ளிக்கொடம் போயிவந்த நேரத்துல மேய்க்கணும்டா."

"சரி, எங்க கௌாசு பலராமன் வீட்டுலகூட மாடு இருக்காம். முந்தா நேத்து சொன்னான்."

பேசிக்கிட்டிருக்கையிலேயே எம்.எல்.ஏ. காருல வந்து எறங்குனாரு. சனம்பூராங் கைதட்டி ஆரவாரஞ் செய்ய, எம்.எல்.ஏ. மேடையில ஒக்காந்தாரு. நெறய்யப்பேரு மேடைக்கு வந்து எம்.எல்.ஏ.வோட தங்க மனசெ, தாராளகொணத்தப் பத்தி பாராட்டிப் பேசிட்டு மால மரியாதெ செஞ்சாக. எல்லாம் முடுஞ்சப்பெறகு எம்.எல்.ஏ. எந்துருச்சு நாலுவாத்த பேசிட்டு, ஒவ்வொருத்தரயாக் கூப்புட்டு லோனக் குடுத்தாரு.

ரெங்கம்மான்னு பேரு கூப்டவும் ராசு அவுகம்மெ எந்துருச்சுப் போனா. ராசும் கூடயே போனான். லோன வாங்கிட்டுத் திரும்பி வரயில ராசு சத்தமாக் கேட்டான். "ஏம்மா இன்னும் யாருக்குமே மாடு குடுக்கல. நமக்கு மாடு தரலம்மா. எப்பம்மா குடுப்பாக?"

"ஏலெய். இங்கயாடா மாடு குடுப்பாக? இங்க லோனுதாம்டா குடுப்பாக. அதக்கொண்டி நம்மதாண்டா நல்ல மாடாப் புடிக்கணும். ஒனக்கு எல்லாத்தயும் வெளக்கணும். இல்லன்னா ஓங்கண்ணுல ஒறக்கம் வராதே," ரெங்கம்மா சொல்லிக்கிட்டே அவனக் கூப்டுகிட்டு வந்தா.

மறாது வாரத்துல இருந்து மேட்டுச்சேரி தெருவுகள்ள லோனு மாடுகளும், கன்னுக் குட்டிகளுமா கெட்டிக்கெடந்துச்சு. காலைலயும், சாயங்காலமும் மாட்டோடெ, கன்னோடெ, பாலு பீச்சுர கேனோடெ சனங்க அலமோதிக்கிட்டு கெடந்தாக. ரெங்கம்மாளும் ஒரு செனமாட்டப் புடுச்சுட்டு வந்து கெட்டிப் போட்டுருந்தா. மாடு இப்பமோ பெறகோ ஈனுக்கிரும் போல இருந்துச்சு.

தெனமும் பள்ளிக்கொடம் முடுஞ்சு வந்த ஒடனே ராசு கேப்பான். "ஏம்மா, என்னம்மா நம்ம மாடு மட்டும் இன்னுங் குட்டியே போடல. எல்லாரு மாடும் பாலு பீச்சுது தெரிமா? எப்பமா நம்ம மாடு கன்னுபோடும்?"

ராசுப்பெய சும்மா சும்மா தொணச்சுக்கிட்டே இருப்பான். ரெங்கம்மாளும் இன்னைக்குப் போடும். நாளைக்குப் போடும்னு சொல்லிக்கிட்டு வந்தா. அவளும் மாடு கன்னு எப்பப் போடும்னு எதிர்பாத்துக்கிட்டே இருந்தா.

ராசு ஒன்னாங் கௌாசுப் படிக்கையில அவுகய்யா செத்துப் போனான். அவனுக்கு எல்லாமே அவுகம்மெதான். ரெங்கம்மாளுக்கும் கொஞ்ச வயசுதான். மிஞ்சி மிஞ்சிப் போனா இருவத்தஞ்சு வயசுதான் இருக்கும். அவள இன்னொரு கலியாணஞ் செய்யச் சொல்லி எல்லாரும் சொல்லிப் பாத்துட்டாக. அவுக சாதில ரெண்டாங் கலியாணம் செய்ரது சர்வ சாதாரண வெசயம்னாலும், ரெங்கம்மா

இன்னொரு கலியாணம் வேண்டாமின்னுட்டா. ராசுப்பயல ஆளாக் கனும்னு அவளுக்கு ரொம்பா ஆச. இந்த லோனு மாட்டக்கூட அதுக்குத்தான் வாங்குனா. இதுல எதனாச்சும் மிச்ச மீதி வச்சு ராசெ முன்னேத்திரனும்னு கெனாக் கண்டுக்கிட்டு இருந்தா.

அன்னைக்கு ஞாயித்துக் கெழம லோனு மாடுகளுக்குக் காதுல கம்மலு குத்துரதுக்கு மேட்டுச்சேரிக்கு அதிகாரி வந்துருந்தாரு. ஒவ்வொரு மாட்டயும், கன்னயும் பாத்துட்டு காதுல கம்மலு குத்துனாரு. ரெங்கம்மாளும் மாட்டக்கொண்டு போயி காட்டுனா. ராசும் கூடப்போனான். மாட்டப் பாத்த அதிகாரி கன்னுக்குட்டிய எங்கன்னு கேட்டாரு. பக்கத்துல பூவசரம் மரத்துல கெட்டிக் கெடந்த கன்னுக் குட்டியக் காட்டி, அதாம்னு சொன்னா ரொங்கம்மா. ஒடனே ராசு அவசரமாச் சொன்னான். “அது எங்க மாடு போட்ட குட்டி இல்ல. அது சாமிப்பெய அவுக மாடு போட்ட குட்டி. எங்க மாட்டுக்கு இன்னுங் குட்டியே பெறக்கல.”

இதக் கேட்டதும் அந்த அதிகாரி ரெங்கம்மாளோட மாட்டுக்குக் கம்மலு குத்தல. மாடு ஈண்டப் பெறகு வந்து கூப்புடச் சொல்லிட்டு, காருல ஏறிப் போயிட்டாரு. ரெங்கம்மாளுக்கு ராசுப்பெய மேல கோவங்கோவமா வந்துச்சு. வீட்டுக்கு வந்ததும் ராசெ நல்லா வஞ்சு போட்டா.

“ஏண்டா, வெவரங்கெட்ட பெயலே, ஓ வாயெ வச்சுக்கிட்டு சும்மா இருந்துருந்தின்னா அவரு நம்ம மாட்டுக்கும் கம்மலக் குத்திட்டுப் போயிருப்பார்ல. இனி இதுக்குன்னு அவரப் போயி மெனக்கிட்டு கூட்டியாரனும். கூப்டாலும் சும்மாயா வருவானுக? அஞ்சோ பத்தோ அவனுகளுக்கு அழுதாத்தான் வருவானுக.”

அங்ன இருந்தவுகளும் ராசெ சகட்டு மேனிக்கா வஞ்சாக. ராசுக்கு ஒன்னும் வெளங்கல. அவெங்கேட்டான், “எதுக்கு எல்லாரும் வைறீக? நானு பொய்யா சொன்னேன்? நெசத்தத்தானெ சொன்னேன். எங்க மாடுதான் இன்னுங்குட்டி போடலியே.....என்னம்மா....? போடலதானம்மா....?”

“போடா...போ....என்னம்மா நொன்னம்மான்னு. பொழைக்கத் தெரியாத பெயலா இருக்கியே. நெசத்தச் சொல்லிட்டாப்ல ஒனக் கென்ன மெடலா குத்திட்டாக? ஒரு எழவுந் தெரியல. என்னன்னு தாஞ் சீவிக்கப் போறியோ. ரெங்கம்மா சலிப்பாச் சொன்னா.

“எங்க டீச்சரு எப்பயும் நெசத்தத்தாஞ் சொல்லனும்னு சொல்லி யிருக்காங்கம்மா. பொய்யே சொல்லக்கூடாதாம். பொய் சொன்ன வாய்க்குப் போசனங் கெடைக்காதாம்.”

“ஆமா ... மெய்யச் சொல்லிட்டாப்ல அந்தமானிக்கப் போன சனங் கெடச்சுருதாக்கும். நம்மெல்லாங் கஸ்டப்பட்டு ஒழச்சாத் தாண்டா ஒருவாக் கூழாவது குடிக்கலாம். வயித்துப் பாட்டுக்கே

இங்க என்னமோ சொன்ன கெணக்கா இருக்கு. இதுல இவெ பொய்யி சொல்லாதெ. மெய்யச்சொல்லுன்னு உசுர வாங்குரான். நல்லா மூனு நேரமும் சோத்தத் தின்னுட்டு ஒக்காந்துட்டு பொய் சொல்லாத, வளவாங்காதேன்னு நம்மகிட்ட சொல்லுவாகாடா. நம்ம நெலமயில இருந்து பாத்தாத்தான் தெரியும்," ராமாயி சொன்னா.

"எப்பிடி இருந்தாலும் பொய்யே சொல்லக்கூடாதாம். காந்தித் தாத்தாகூட சொன்னாராம்," ராசு திரும்பியும் சொன்னான்.

ராசு சொன்னதக் கேட்ட ரெங்கம்மா நெனச்சா. "இந்தப் பெய சொல்றதும் நாயமாத்தாந் தெரிது. ஆனா இந்த நாயமெல்லாம் நம்ம பொழப்புக்குச் சரிப்பட்டு வராதே....இவனப் படிக்க வச்சாலும் தப்பா இருக்கு...படிக்க வைக்கட்டாலும் தப்பாத்தான் இருக்கு...என்ன செய்றது..."

நாலஞ்சு நாளுக்கழுச்சு ரெங்கம்மாளோட மாடு ஈனுக்கிருச்சு. ராசுப்பெயலுக்கு ரொம்பாச் சந்தோசம். பள்ளிக்கொடத்துல கூட செலநேரம் கன்னுக்குட்டிய நெனச்சுக்கிட்டு கெடப்பான். டீச்சருகிட்ட, மத்த பிள்ளைககிட்ட அவுக மாட்டயும், கன்னயும் பத்தி பேசிக்கிட்டு இருப்பான். பள்ளிக்கொடம் முடுஞ்ச ஒடனே முந்தி மாதிரி அங்ன இங்ன நிக்காமெ ஒடனே வீட்டுக்கு வந்து அம்மெகூட பாலு பீச்சுரதுக்குக் கன்னுக்குட்டியப் புடுச்சுட்டுப் போவான்.

பள்ளிக்கொடத்துல ஒருநாளு பெயல்க ஒக்காந்து வீட்டுல நிக்கிர அவுகவுக மாடுகளப் பத்திப் பேசிக்கிட்டுருந்தானுக. ராசும் அவுக மாட்டப்பத்தியும், கன்னுக்குட்டியப் பத்தியும் சொன்னான்.

"எங்க ஊர்லயே எங்கமாடுதான் நெறய்யாப் பாலு பீச்சுது. நானு இப்ப தெனமும் எங்க கன்னுக்குட்டிய சாயங்காலம் மேப் பேன்."

இதக்கேட்ட பலராமன் சொன்னான் "ஒங்க மாடுதான் ரொம்பாப் பாலு பீச்சுதா? எங்கமாடு ஒரு நாளைக்கு 8 லிட்டர் பாலு பீச்சும் தெரியுமா?"

"எங்கமாடு ஒரு நாளைக்கு 10 லிட்டரு பாலுல பீச்சுது." ராசு பதுலுக்குச் சொன்னான். பலராமனுக்குக் கோவம் வந்துருச்சு. கோவமாக் கத்துனான். "ஏய் போடா...போ...ஒங்க மாடு லோனுமாடு. அது போயி 10 லிட்டரா பீச்சுது! யாருட்ட வந்து பொய்யி சொல்ற?... எங்கமாடு சொந்தமாடு தெரிம்ல?"

"லோனு மாடுன்னா பாலு பீச்சாதா? போடா....போ...நீ யாருட்டனாலும் கேட்டுப்பாரு. எங்கமாடுதான் நெறய்யாப் பீச்சுது," ராசு சொன்னான்.

பதுலுக்குப் பலராமனும் எளக்காரமாச் சொன்னான். "எப்பிடின் னாலும் அது லோனு மாடுதானெ.... சொந்தமாடு இல்லியே...லோனு மாட்ட வச்சுக்கிட்டு பீத்துரான்."

ராசு ஒன்னுஞ் சொல்லல. வீட்டுக்கு வந்ததும் அம்மயிட்ட நடந்ததப் பூராஞ் சொன்னான். அவெஞ் சொன்னதக் கேட்ட ரெங்கம்மா சொன்னா. "ஏலெய், பலராமன்னா அந்த கொளத்தங்கரத் தெருப்பெய தானெ? அவெங்கூட சண்ட கிண்ட போட்டுக்கிராதடா. அவுகப்ப னுக்கு இருக்ர சொத்துக்கு நூறு மாடுகூட சொந்தமா வாங்கி உடலாம். அவெ என்ன நம்மள மாதிரி மேட்டுச் சேரிக்காரனா? லோனு மாடுன்னா அம்புட்டுக்கானு பெயபிள்ளைக்குக்கூட எளக்காரமா இருக்கு. என்ன செய்றது. நீயி எதுக்குடா நம்ம மாடு பத்து லிட்டரு பீச்சுதுன்னு சொல்ற? கொறச்சுச் சொல்ல வேண்டியதுதானே?"

"நீ தானம்மா அன்னைக்குப் பத்து லிட்டருன்னு சொன்ன? பெறகு எதுக்கு கொறச்சுச் சொல்லுனும்ங்ற? உள்ளதத்தானே சொன் னேன்."

"உள்ளதச் சொன்னா ஒடம்பு எரியும்டா அவனுகளுக்கு. நம்ம இப்பிடி வெகுளித்தனமா இருக்கப் போயிதான் எல்லாப் பெய மக்களும் நம்மள ஈசியா ஏமாத்தலாம்னு நெனைக்கானுக."

ராசு பதுலொன்னுஞ் சொல்லல. அம்மெ சொன்னதுதம் அவனுக்குச் சரியாப் புரியல. "உள்ளதச் சொல்றது தப்பா? பொய் சொல்லக் கூடாதுங்காக. பெறகு பொய்தான் சொல்லனும்ங்காக. பொய் சொல்லாட்டிப் பொழைக்க முடியாதாம்.... அம்மெ சொல்றா. பொய் சொன்னா பொழைக்க முடியாதாம்.... டீச்சர் சொல்றாக. உள்ளதச் சொன்னம்னா ஏமாத்துவாகளாம். என்னமோ.... ஒன்னுமே புரியல. கொழப்பமா இருக்குது," ராசு நெனச்சுக்கிட்டான்.

ஒருநாளு பள்ளிக்கொடம் முடுஞ்சு ராசு ரொம்பா லேட்டா வீட்டுக்கு வந்தான். ரெங்கம்மா கேட்டா. "இன்னைக்கு ஏண்டா இம்புட்டு நேரம்? பாலு பீச்சப் போம்போது நீயி வருவ வருவன்னு பாத்துட்டு பெறகு நானே போயிட்டேன்."

ராசு பதுலொன்னுஞ் சொல்லாமெ உம்முன்னு ஒக்காந்துருந் தான்.

"ஏலேய், ஒனியத்தானே கேக்கேன். என்னலே ஆச்சு? இப்பிடி தலப்பிள்ள சாகக்குடுத்தவா மாதிரில ஒக்காந்துருக்க?"

"ஏம்மா, பாம்பு தவளயத் திங்கிமா?," ராசு மெல்லக் கேட்டான்.

"எதுக்குடா இம்புட்டு நேரம்னு கேட்டா, நீயி என்னத்தயோ கேக்க? இப்ப என்னத்துக்கு இதக் கேக்க?"

"நீயி திங்கிமான்னு மொதல்ல சொல்லு."

"திங்கும் ஏண்டா...பாம்ப கீம்ப பாத்தியா....?"

"இன்னைக்கில்லம்மா... பள்ளிக்கொடம் உட்டு வரும்போது நாங்க பாம்பு பாத்தோம்."

"எங்கனக்குள்ளடா பாத்தீக?"

“அந்தச் சுடுகாட்டுக்கிட்டப் பாதை கெழக்காமெ வளையுது பாரு, அங்னக்குள்ள ரெண்டு பாம்பு பாத்தோம்.”

“ரெண்டு பாம்பா? அட பாதகத்தி மக்கா... எம்மந்தண்டிப் பாம்புகடா?”

“பெரு.... சும்மா. ரெண்டு பாம்புகளும் ஒரு தவக்காய்க்குச் சண்ட போட்டுக்கிட்டு கெடந்துச்சுக.”

“பாம்புக எப்பிடிடா சண்ட போடும்?”

“நெசம்மா போட்டுச்சும்மா... ஒரு தவக்காய ரெண்டு பாம்புகளும் வாயிட்ட கவ்விக்கிட்டு இழுத்துக்கிட்டு கெடந்துச்சுக. பாவம்மா தவக்கா. அதோட ஒரு காலு ஒரு பாம்போட வாய்ல இருக்கு. ஒன்னு இங்குட்டு இழுக்க, இன்னோன்னு அங்குட்டு இழுக்க தவள கத்தி கத்தி அழுதுச்சுமா.”

“அப்பயும் ஒரு தவக்காய ரெண்டு பாம்பாடா கவ்விக்கிட்டு கெடந்துச்சுக.... சே.....கண்றாவிடா.”

“யாராச்சும் தவக்காயக்....காப்பாத்த மாட்டாகளான்னு நெனச்சேன்மா.”

“பாம்பு வாய்க்குள்ள ஆப்டத எப்பிடிடா காப்பாத்த முடியும்? பாவம்...அந்தத் தவக்காய்க்கு அம்புட்டுத்தான் விதி.”

“கல்லக் கொண்டி பாம்புகள இறுத்தலாம்னு நெனச்சோமா... ஆனா பாம்புகளப் பாத்தா பயந்து கெடந்துச்சு. அதான் இறுத்தல.”

“எதுக்குடா பயம்? எட்டாக் கைல நின்னுக்கிட்டு ஒற்றே இறுத்தா இறுத்திக் கொல்ல வேண்டியதுதானலே.”

“ஐய்யோ...பாம்புகள அடிக்கக் கூடாதாம்மா. அதுக நல்ல பாம்புகளா இருந்துட்டா அம்புட்டுத்தான். நம்மளக் கருவச்சு கொத்தியே போடுமாம். ஏம்னா அதுக சாமி பாம்புகளாம். எங்க டீச்சரு சொன்னாக.”

“போடா....போ..சாமியாவது...கீமியாவது...எம்புட்டு நல்ல பாம்புகள நம்மாளுக கொன்னு தூக்கி எறுஞ்சுருக்காக? நீயி வகுத்துல ஏழு மாசம் இருக்கையிலயே நானு நல்ல பாம்ப அடுச்சுருக்கேன். வகுத்துப் புள்ளக்காரி பாம்பெ அடிக்காதே...பெறக்கிற பிள்ள பாம்பு கெணக்கா நாக்க நாக்க வெளிய நீட்டிக்கிட்டு திரியும்னு சொன்னாளுக. அதெல்லாம் சும்மாடா....நீ என்ன நாக்கயா நீட்டிக்கிட்டுத் திரிர?”

“பெறகு எதுக்கும்மா டீச்சரு அப்படிச் சொல்றாக?”

“அவுகளுக்கு என்னடா தெரியும்? ஏதோ புஸ்தகத்துகள்ள எழுதி இருக்கிற படுச்சுட்டு வந்து அப்படியே சொல்லிக் குடுக்காக. நடமொற வாழ்க்கையப் பாத்தின்னா வேற மாதிரித்தான் இருக்கும். மொதல்ல நாலெழுத்து எழுதப் படிக்கத் தெருஞ்சுக்கோடா. அதக்

கருக்கடயாச் செய்யி என்ன?"

"எங்க டீச்சரு எம்புட்டுப் படுச்சுட்டு வந்துருக்காக? அவுக சொல்றது தப்பாக்கும்? நீயி ஒன்னுகூடப் படிக்கல. நீயி சொல்றது ரைட்டாக்கும். நானு டீச்சர்ட கேப்பேன்....கேக்கட்டா?"

"நீயி இப்படி குண்டக்க மண்டக்கப் பேசாதடா. பெரியவுக சொன்னா கேளு. மொளச்சு மூனு எல உடல. அதுக்குள்ள இவெ எனக்குப் பாடஞ் சொல்ல வந்துட்டான்."

"இப்ப நீ பெரியவளா? டீச்சரு பெரியவுகளா? யாரு சொல்றதக் கேக்க? சொல்லு. நீயி அப்பப்ப எனியக் கொழப்பி உடுறம்மா," ராசு சொன்னதுக்கு ரெங்கம்மா ஒன்னுஞ் சொல்லல.

அன்னைக்கு ராத்திரி தூக்கத்துல ராசுக்கு பாம்பு கெனாதான் வந்துச்சு. அவனால இத ரொம்ப நாளைக்கு மறக்கவே முடியல. தெனமும் பள்ளிக்கொடம் போம்போது, வரும்போது அந்த எடத்தப் பாத்தாலே அவனுக்கு அந்தப் பாம்புகளும், தவளையுந்தான் நெனப்புக்கு வரும். நல்ல பாம்பு சாமியா இல்லையான்னு பொழுதனிக்கும் மண்டயப்போட்டு கொழப்பிக்கிட்டு கெடந்தான்.

மாட்டு லோன அடச்சுட்டு ஒழுகுற வீட்டுக்கூரையப் பிருச்சுட்டு மொதல்ல அத மேயனும்னு ரெங்கம்மா நெனச்சா. ராசுப் பெய பள்ளிக்கொடம் போக புதுப் பைக்கட்டு ஒன்னு கேட்டுருந்தான். அடுத்த வாரம் புதுப்பையி வாங்கித் தாரதா சொல்லியிருந்தா ரெங்கம்மா. ராசுப்பெய அவுக கௌாசுப் பிள்ளைககிட்ட பூராம், அவனுக்குப் புதுப்பைக்கட்டு வாங்கப் போற வெசயத்த சொல்லிக் கிட்டு திருஞ்சான். பைக்கட்டு வாங்குனப் பெறகு புதுப்பேனா ஒன்னு வாங்கனும்னு நெனச்சுக்கிட்டான்.

அந்த வாரம் சனிக்கெழம பள்ளிக்கொடம் லீவு. வழக்கம்போல ரெங்கம்மா மாட்டக் கொண்டு போயி ஊருக்குக் கெழக்க இருந்த நெல்லறுத்த வயக்காட்டுல மேய உட்டுட்டு வந்தா. அங்க எப்பயும் பத்து, இருவது மாடுக, பசுவும், எருமையுமா மேயும். ராசு பள்ளிக் கொடத்துல சத்துணவு சாப்டுட்டு, செத்த நேரம் வெளாண்டுட்டு வீட்டுக்கு வந்தான். ரெங்கம்மா சொன்னா. "ஏலெய் மாட்ட கெழக்க கொண்டு போயி மேய உட்டுருக்கேன். போயி எங்ன நிக்கின்னு பாத்துட்டு வாடா. தூரந் தொல வட்டுக்குப் போயிராமெ."

ராசு போயி பாத்துட்டு வந்து சொன்னான். "ஏமா, உயிர்வேலி முள்ளுகளா இருக்குல.... அங்னகுள்ள மேயுது."

"இங்குட்டு புல்லு இருக்ற லெக்கமாப் பாத்து பத்தி உட்டுட்டு வரக்கூடாதுடா?"

"ஏம்மா, நானு கன்னுக்குட்டிய அவுத்துட்டுப் போயி மேய்க்கட்டாமா?"

"வேண்டாம்டா...நீயி கொண்டு போயி பாலக்குடிக்க

உட்டுருவெ. பெறகு என்னத்த பீச்சி ஊத்துறது? நானு இப்ப வெயிலு தாழ மாட்டக் குளுப்பாட்டப் போறேன். அப்ப கன்னுக்குட்டிய அவுத்துட்டுவா. இப்ப அதுக்குக் கொஞ்சம் புல்ல அள்ளிப் போடுடா."

"ஏம்மா, அப்டின்னா கன்னுக்குட்டிய நாந்தான் குளுப்பாட்டு வேன். என்னம்மா எனக்கு ஆசையா இருக்கும்மா."

"நீ என்னத்தடா குளுப்பாட்டுவெ? அவா துள்ளிக் குதுச்சுட்டு ஒட்டங்காட்டுவாளே. ஒனக்கா அம்புட்ரப் போகுது?"

"என்னம்மா நீயி. அப்ப இப்ப அவுத்துட்டுப் போயி கவுத்தப் புடுச்சுக்கிட்டே மேய்க்கேன். நீயி பெறகாட்டி வா."

"ஏ இந்தப் பெயலுக்கு ஒரு தடவ சொன்னா தெரியமாட்டேங்கி. பாலக் குடுச்சுரும்டான்னு சொன்னா இல்லாத மணியம் பண்றான். ஒனக்குப் புதுப்பைக்கட்டு வேணுமா வேண்டாமாடா?," ரெங்கம்மா அதட்டுனா.

"சரி....சரி பைக்கட்டு வேணும்மா. பெறகாட்டிக்கு ஒங்கூடயே கன்னுக்குட்டியப் பத்திக்கிட்டு வாரேன்."

வெயிலுதாழவும் ரெங்கம்மாளும் ராசும் கன்னுக்குட்டியோட வயக்காட்டுப் பக்கம் போனாக. செத்த நேரங் கழுச்சு மாட்டயும், கன்னுக்குட்டியயும் குளிப்பாட்டிட்டு வீட்டுக்குப் பெறப்படயில ரெங்கம்மா சொன்னா. "ஏலேய் நீயி கன்னுக் குட்டியப் புடுச்சுக்கிட்டு இங்னக்குள்ள நின்னுக்கிட்டு ஆளு வருதான்னு பாத்துக்கோ நாம்போயி அந்த வேலில கெடக்ர பீக்கங்காய்ல ரெண்டு புடுங்கிட்டு வாரேன். காய் வாங்கத்துட்டு இல்லடா."

"ஐயய்யோ வேண்டாம்மா அது ஊராவுக காயி....களவாங்கக் கூடாது. போகாதமா. பள்ளிக் கொடத்துல கூட சொன்னாக. களவாங்கக் கூடாதாம். அடுத்தவுக பொருளுக்கு ஆசப்படக் கூடாதாம்மா," ராசு சொன்னான்.

"ஏ சும்மா கெடடா. நீயும் ஓம் பள்ளிக்கொடமும், நீயி ஆளு பாருடா. நாம் போயிட்டு புடுங்கிட்டு வாரேன்." சொல்லிட்டு ரெங்கம்மா விருட்டுனு போயி ரெண்டு காயப்புடுங்கி மடிக்குள்ள வச்சுக்கிட்டு வந்தா.

ராசுப்பெய திருதிருன்னு முழுச்சுக்கிட்டு கன்னுக்குட்டியப் பத்திக்கிட்டு வந்தான். வார வழியெல்லாம் அவனுக்கு மனசுக்குள்ள கேள்விமேல கேள்விதான். கேட்டா அம்மெ வைவாளோன்னு பயந்துகிட்டு வந்தான்.

வீட்டுக்கு வந்து பாலு பீச்சிட்டு வந்தா ரெங்கம்மா. ராசு உம்முன்னு வீட்டுத் திருணயில ஒக்காந்துருந்தான். ரெங்கம்மா புடுங்கிட்டு வந்த பீக்கங்காயத் தோலு சீவிட்டு, வெட்டிக்கிட்டிருந்தா. அப்ப அங்க வந்த சீனிப்பாட்டி கேட்டா. "பீக்கங்காயி ஏதுடி? நல்லாப் பிஞ்சுக்காயா இருக்கே....பாசிப்பருப்பு போட்டு கொழம்பு வச்சா

நல்லா இருக்கும்."

"இந்தக் காய அந்த மொதலாளி தொரச்சாமியோட காட்டு வேலில இருந்து புடுங்கிக்கிட்டு வந்தேன். இப்பிடி புடுங்கி கிடுங்கி வச்சாத்தான் உண்டு. கடைகளுக்குப் போயி காயி வாங்கித் திங்கிர மாதிரியா நம்ம நெலம இருக்கு. இந்த ரேசங்கட அரிசி கெடைக்கிறத பெரிய காரியம்." ரெங்கம்மா அலுத்துக்கிட்டா.

இதக் கேட்டுக்கிட்டிருந்த ராசு சொன்னான். "பாட்டி, பாட்டி களவாங்குறது தப்புதான? அடுத்தவுக பொருள எடுக்கக் கூடாதுல பாட்டி."

"அப்படித்தாண்டா படிச்ச பெயமக்க சொல்லிக்கிட்டுத் திரிராக. ஆனா அவுக களவாங்காமலா இருக்காக?" பாட்டி பதுலுக்குக் கேட்டா.

"இல்லையே. களவாங்க மாட்டாங்களே. எங்க டீச்சருகூட சொன்னாகளே," ராசு அடுச்சுச் சொன்னான்.

"அவுக சொன்னா, இல்லன்னு ஆயிருமா? போடா.....போ.... நீயி பள்ளிக்கொடம் போனாலும், ஆபிசுகளுக்குப் போனாலும் துட்டு குடுக்காமெ ஒரு காரியம் நடக்காது. எல்லாப் பெயலுகளுக்கும் நெத்தில துட்டு வச்சாத்தான் கையெழுத்துப் போட்டுத் தருவானுக. பள்ளிக் கொடத்துல பிள்ளக்காடுகளச் சேக்கனும்னாலும் துட்டு கெட்டனும். ஏ....அம்புட்டுத் தூரம் போற? ஒங்கம்மெ இந்த லோனு மாட்டப் புடிக்க எம்புட்டுப் பேத்துக்கு எம்புட்டுத் துட்டு கொட்டி அழுதுருப்பா! இதெல்லாமே திருட்டுத்தாம்டா. அத ஒரு பெயலும் வெளிய சொல்ல மாட்டானுக. நீயி என்னமோ இந்தக் காயப் புடுங்கியாந்ததுக்கு பெரிய பெரசங்கம் வைக்ர. தொண்டைக்குக் கீழ போனா நரகலு. இதப் புடுங்குனதுனால நாம யாரு வகுத்தலயும் அநியாயமா அடிக்கலயே! அந்தக் காட்டுக்காரனுக்கு இருக்குர நெலம் நீச்சுப்பத்தி ஒனக்கென்ன தெரியும். நீயி பச்சப்புள்ளதானே. அதான் புஸ்தகத்துல படிக்கிறது பூராம் நெசமுன்னு நெனச்சுக்கிட்டு இருக்க."

பாட்டி சொல்லி முடிக்கவும் ராசு பதுலே பேசல. ஆனா அவனுக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வந்தவனா பேசிக்கிட்டான். "நம்மகிட்ட இல்லன்னா இருக்குறவங்ககிட்ட இருந்து எடுக்குறது தப்பு இல்லையாம். சரிதான். ஆனா, எதுக்கு நமக்கு மட்டும் ஒன்னுமே இல்ல? அந்த பரலாமனுக்கு மட்டும் எல்லாமே இருக்கு? அது எப்படி? நாளைக்குப் பள்ளிக்கொடத்துல டீச்சருட்ட கேக்கணும்."

ரெங்கம்மா கொழம்பு வச்சு, சோத்தக் காச்சி ராசுக்குச் சுடச்சுடப் போட்டுக் குடுத்தா. ராசுக்குப் பசின்னாலும் பீக்கங்கா கொழம்ப ஊத்திச் சாப்புடுரதுக்கு மனசுக்கு எப்பிடியோ இருந்துச்சு. அவுகம்ம யிட்ட சொன்னான். "ஏம்மா, எனக்கு எப்பயும் போல தண்ணிக் கஞ்சிலே குடு. நானு கரச்சுக் குடுச்சிர்ரேன்."

"எதுக்குடா? இன்னுமாடா அந்தப் பீக்கங்காய நெனச்சுக்கிட்டு

கெடக்க? அடப்படுவா? இம்புட்டு வயசுல இம்புட்டு பிடிவாதமா இருக்ர. அன்னைக்கு என்னடான்னா அந்த அதிகாரிககிட்ட சூது வாது இல்லாமப் பேசி ஊர்ச்சனத்தோட வகுத்தெருச்சல வாங்கிக் கெட்டிக்கிட்ட. கூறுகெட்ட பெயலாவுல வந்து பெறந்துருக்க."

"என்னைக்குச் சொன்னேன்?"

"என்னைக்கா? போன பொயலு மழைல வீடு எழந்தவுகளுக்கு கவுருமெண்டு துட்டு குடுத்தாகள்ள. அப்பத் தெருத் தெருவா வந்து வீடுகளப் பாத்து பேரு எழுதயில நீயி என்ன சொன்ன?"

"ஒன்னுஞ் சொல்லலியே."

"ஒன்னுஞ் சொல்லலியா? அந்தக்கா வேலுத்தாயி வீட்டப் பாத்துக்கிட்டு கேக்கயில என்னமோ நீதான் அரிசந்துர ராசா பரம்பர கெணக்கா அவா வீடு மழைல இடியல; அவுகளா இடுச்சு உட்டா கன்னு சொல்லிப் போடல?"

"ஆமா சொன்னேன். ஊர்ல எல்லாரும் அப்பிடித்தான சொன்னாக. அன்னைக்குக்கூட நீயும் சீனிப்பாட்டியுங் அப்பிடித்தான பேசிக்கிட்டு இருந்தீக. நானு கேட்டம்ல."

"நாங்க எங்களுக்குள்ளதானல சொல்லிக்கிட்டோம். நீயி அந்த அதிகாரியிட்டலே சொல்லிப் போட்ட . ஊர்ல ஒரே ஆவலாதியாப் போச்சு. எல்லாப் பெய மக்களும் போகயில வரயில சாடமாடயா வைறாளுக."

"எதுக்கு வஞ்சாக. நானு பொய்யா சொன்னேன். அவுக மகங்கூடச் சொன்னான். மம்பிட்டியக் கொண்டு செவர வெட்டி உட்டாகன்னு."

"ஒனக்கு எத்தன தடவதாம்ல சொல்றது. இவா என்ன பிள்ளையா பெத்து வெச்சுருக்கா! வெனயமில்லாத கழுதயப் பெத்து வச்சுக்கிட்டு.....! அம்புட்டு பேரும் அன்னைக்கு மானாவாயா வஞ்சாளுக. இனியாச்சும் கொஞ்சம் சூதானமா இருந்து பொழைக்ர வழியப் பாருடா. என்ன?" ரெங்கம்மா கொஞ்சம் அதட்டிக் கெஞ்சலும், வருத்தமுமா சொன்னா.

ராசு பேசாம சோத்தச் சாப்புட்டான். அவனுக்கு எல்லாம் புருஞ்சது மாதிரி இருந்துச்சு. ஒன்னுமே புரியாதது மாதிரியும் இருச்துச்சு.

"பள்ளிக்கொடத்துக்குப் போனா ஒன்னு சொல்லித் தாராக. வீட்டுக்கு வந்தா வேற மாதிரி சொல்லித்தாராக. அம்மெ சொல்றா நம்மளுக்குள்ள உள்ளதச் சொல்லலாம்னு. வெளியாளுககிட்ட, அதிகாரிககிட்ட உள்ளதச் சொல்லக்கூடாதுங்கா; செலநேரம் பொய் சொல்லலாமாம். செலநேரம் பொய் சொல்லக்கூடாதாம்... நம்மளுக்கு ஒன்னும் இல்லன்னா நெறய்யா இருக்குரவுககிட்ட இருந்து எடுக்கலாமாம்.... அப்பிடி எடுத்தா அது களவாணித்தனம் இல்லியாம்.

அம்ம சொல்றது சரிமாதிரித்தான் இருக்குது. ஆனா டீச்சருக வேற மாதிரில சொல்லித் தாராக....” கண்டமாணிக்க ராசு நெனச்சுக்கிட்டு கொழம்பிப் போனான்.

திங்கக் கெழம பள்ளிக் கொடத்துக்குப் போனான். சாயங்காலம் பள்ளிக்கொடத்து தோட்டத்துக்கு டீச்சரு தண்ணி ஊத்தச் சொன்னாக. பிள்ளைக தண்ணி ஊத்தும் போது டீச்சரு வந்து சுத்திப் பாத்துட்டுச் சொன்னாக. “ஏய் எல்லாரும் நல்லாத் தண்ணி ஊத்தணும். ஒங்க வீட்டுத் தோட்டம்னு நெனச்சுக்கிட்டு செடிகளுக்கு நல்லாச் செழிம்பா தண்ணி கொண்டாந்து ஊத்தனும்.”

டீச்சரு சொல்லவும் பிள்ளைக இன்னும் வேகவேகமாக வாளிகளத் தூக்க முடியாமெத் தூக்கிட்டு வந்து தண்ணி ஊத்துனாக. டீச்சரு சுத்திச் சுத்தி வந்து தோட்டத்துல இருந்த காய்களப் புடுங் கிட்டுப் போனாக. இதப் பாத்துக்கிட்டே இருந்து ராசு சொன்னான். “ஏலைகா, நம்ம தண்ணி ஊத்தயில மட்டும் டீச்சரு நம்ம வீட்டுத் தோட்டத்துக்கு ஊத்தர மாதிரி ஊத்துங்கன்னு சொல்றாக. ஆனா காய்க்ர காயமட்டும் புடுங்கி அவுக வீட்டுக்குக் கொண்டு போறாங்க. தோட்டம் போடயில காய்க்ர காய்கள நமக்குச் சத்துணவுல போட்டு கொழம்பு வச்சுத் தருவோமுன்னுதானடா சொன்னாக. அப்ப டீச்சரு ஏமாத்தத்தானடா செய்றாக?”

இதக்கேட்ட பெயல்க டீச்சருட்ட போயி ராசு சொன்னதப் பூராம் அப்பிடியே சொல்லிக் குடுத்துட்டானுக. டீச்சருக்கு ரொம்பக் கோவம். ராசக் கூப்புட்டு வரச்சொல்லிக் கேட்டாக. ராசு சொன்னான். “ஆமா டீச்சர். நீங்க பொய்யிதான சொல்றீக. சத்துணவுல காயப் போடாமெ ஒங்க வீட்டுக்குத்தான எடுத்துட்டுப் போறீக? நாங்க தான டீச்சர் தண்ணி ஊத்துறோம் அப்ப நாங்கதான் டீச்சர் புடுங்கிட்டுப் போகணும்?”

மொளச்சு மூனு எலகூட உடல. அதுக்குள்ள டீச்சரயே எதுத்துப் பேசுறடா? பெரிய திருவாத்தனா இருப்பாம் போலடா இவெ.” சொல்லிக்கிட்டே ராசு தலைல நறுக்கு நறுக்குன்னு கொட்டுனாக டீச்சரு.

கொட்டு வாங்குன தலையத் தடவிக்கிட்டே வந்த ராசு நெனச் சான். “டீச்சரு பொய் சொன்னா.....அது பொய் இல்லியாக்கும்....! டீச்சரு களவாண்டா அது களவாணித்தனம் இல்லியாக்கும்....! அவுகளே புழுகுறாக.....! அவுகளே களவாங்குறாக.....! பெறகு நம்ம கிட்ட பொய் சொல்லாத களவாங்காதன்னு சொல்லிக்கிறாக.....!”

அன்னயிலிருந்து ராசுப்பெய ரொம்பா வெனயகாரப் பெயலா கிட்டான்.

*நிறப்பிரிகை - இலக்கிய இணைப்பு 4*
*மே 1998*

# 13. அதென்ன நாயம்?

விடியங்காட்டி ரெண்டு மணில இருந்தே. பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்துல இருந்த பால்பண்ணைக்கு, பாலு பீச்சரதுக்கு மாடுகளப் பத்திக்கிட்டுப்போனாக. "மார்கழி மாசம் மச்சும் குளுரும்ங்றது சரியாத்தான் இருக்கு. கூதலு பொறுக்க முடியல"ன்னு சொல்லிக்கிட்டே சேலய இழுத்துப் போத்திக்கிட்டுப் போனா தாயம்மா. வெளியூருக்குப் பைப்பு லைனு வேலைக்குக் கௌம்பிப் போய்க்கிட்டுருந்த கருத்தப்பாண்டியப் பாத்து, "ஏணா, மணி என்ன இருக்கும்?" தாயம்மா கேட்டா.

"மணி நாலுக்கு மேல ஆகப் போகுதேத்தா. இப்ப மாட்டப் பத்திக்கிட்டுப் போற? வெள்ளனப் போ. மருத வண்டி வந்துருச்சுனாப் பெறகு பால வாங்க மாட்டானுக. இம்புட்டு நேரம் என்ன செஞ்சுக் கிட்டு இருந்தியாம்?" கருத்தப்பாண்டி அதட்டலாக் கேட்டான்.

"இந்தக் கூதலுக்குள்ள நேரம் போறதே தெரியலியே. எந்துருச்சு வெளியவா வர முடியுது? பனி மூஞ்சிலேயே சப்புச்சப்புன்னு அறையுதே?" சொல்லிட்டு மாட்ட அதட்டி வேகமாக ஓட்டுனா.

பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேந்த கருத்தப்பாண்டி, ஏற்கனவே வேலைக்குப் போக அங்க வந்து ஒக்காந்துருந்தவுக கூட ஒக்காந்துக் கிட்டான். காதுகள மறச்சு துண்டு வச்சு நேஞ்சி கட்டியிருந்த கருத்தப்பாண்டி, லேசா துண்ட வெலக்கி, காதுல சொருகியிருந்த பீடிய எடுத்துப் பத்த வச்சான். இதப்பாத்த மொட்டுக் கண்ணந்தாத்தா, "ஏலேய், எனக்கொரு பீடி குடுடா. கூதலு வாட்டுது"ன்னு கேட்டாரு.

"ங்கொப்பனளி, கூதலு வாட்டுச்சுன்னா பேசாமெ வீட்டுல மொடங்கிக் கெடக்க வேண்டியதுதான. இந்நியாரத்துல ஒனக்கென்ன பஸ் ஸ்டாண்டுல சோலி? நாங்கதான் வேற வழியில்லாம குளுருக் குள்ள வெரச்சுப்போயி வாரோம். ஒனக்கென்ன? செத்த பொழுது பெறப்புட்டப் பெறகு வெளிய வாரதுதான? லொக்கு லொக்குனு இருமிக்குறா. அதுல பீடி வேற கேட்டுக்குறா" இவ்வளவு பேசிட்டா லும், ஒரு பீடியப் பத்த வச்சு கெழவங்கையில குடுத்தான் கருத்தப் பாண்டி.

பீடிய வாங்கி இழுத்துக்கிட்டே தாத்தா சொன்னாரு. "ஏலைகா, நீங்க எதுக்குடா நேரங்கெட்ட நேரத்துல எந்துருச்சு. குடுச்சும் குடிக்காமயும் வேலைக்கு வெளியூரு போகனும்? என்னமோ சொன்னது கணக்கா இருக்கு.... கையில வெண்ணெய வச்சுக்கிட்டு

நெய்க்கு அலஞ்ச கததான் போ....” சொல்லிட்டு தொயந்தடியா இருமிட்டு, கழக்குனு சளியத் துப்புனாரு. பெறகும் பீடிய உடாமெ இழுத்துகிட்டே சொன்னாரு. “நம்ம ஊர்ல இல்லாத வேலைகளாடா? பெரிய என்னமோ கலெக்டரு உத்தியோகம் பாக்கப் போறவனுக கெணக்காக தூக்குச் சட்டிகள்ள கஞ்சிய ஊத்திக்கிட்டு .... வண்டிக் காரனுகளுக்குத் துட்டக் குடுத்துட்டு போறானுகளாம் வெளியூர் களுக்கு,” எளக்காரமாச் சொல்லி முடுச்சாரு.

அங்க இருந்த எளவட்டப் பெயலகளுக்குக் கோவம் வந்துருச்சு. தாயப்பன் சொன்னான். “ஏவெண்ணே.... நம்மூர்ல எந்த வேல இருக்க இப்ப? சம்சாரிக பூராம் வயக்காட்டுகள கொய்யாத்தோப்பு, தென்னந்தோப்பு, மாந்தோப்புன்னு மாத்திப் போட்டானுக. முன்ன மாதிரி வாய்க்கா வரப்பு வெட்ட, ஏரு உழ, நாத்துப் புடுங்க, பரம்படிக்க, கதுரறுத்துக் கட்டுச் செமக்க, அடுச்சுத் தூத்தி, வைக்கக்கட்டு கட்டனு இப்ப ஒத்த வேலை கெடையாது. என்ன செய்யச் சொல்ற. நம்ம கிட்ட கையகல நெலமிருந்தா பாடுபடலாம். நீயி அந்தக் காலம் மாதிரி நெனச்சுக்கிட்டுப் பேசுற. எங்களுக்கு மட்டும் என்ன, இப்பிடி நாயாப் பேயா கருக்கல்ல எந்துருச்சு ஓடனும்னு ஆசையா என்ன? பேசறாம்பாரு பேச்சு.....”

தாயப்பன் சொல்லிக்கிட்டு இருக்கயிலேயே ஊருக்குள்ள வர்ற மொதல் பஸ்சு உருமிக்கிட்டே வந்து நின்னுச்சு. வழக்கமா நாலரைக்கு வர்ர வண்டி இன்னைக் கென்னமோ நாலே முக்காலுக்குத் தான் வந்துச்சு. அருவசமா இன்னைக்கு வண்டில கூட்டமா இருந்துச்சு. மம்பிட்டிகளயும், கடப்பாரைகளையும், கஞ்சிச் சட்டிகளை யும் தூக்கிக்கிட்டு திமுதிமுன்னு வண்டிக்குள்ள எல்லாரும் அடுச்சுப் புடுச்சு ஏறுனாக. கூட்டத்துல நெருக்கிக்கிட்டு நிக்கவும் கொஞ்சம் கதகதன்னு இருந்துச்சு.

கருத்தப்பாண்டி சத்தமாச் சொன்னான். “வண்டி என்னடா, இன்னைக்கு மாட்டு வண்டிகணக்கா ஊந்துக்கிட்டுப் போகுது. போற போக்கப் பாத்தா காடனூரு வண்டியப் புடிக்க முடியாது போல.”

“ஏற்கனவே வண்டி லேட்டாத்தான் வந்துச்சு. இதுல இப்பிடி ஆடி அசஞ்சு போனா எப்பிடிக் கூடிப் புடிக்க முடியும்?” சின்ன மாயாண்டி கேட்டான்.

அந்தா இந்தான்னு ஒரு வழியா வண்டி கிட்ணம்பட்டில வந்து நின்னுச்சு. சட்டிகளயும், மம்பிட்டிகளயும், கடப்பாறைகளையும் அவசர அவசரமாகத் தூக்கிக்கிட்டு விர்ருன்னு எறங்குனாக. எறங்கும்போதே டிக்கட்டுகளக் காட்டிட்டு எறங்கச் சொன்னாரு கண்டக்டரு.

கருத்தப்பாண்டி கூட மொத்தம் பதினாறுபேரு வேலைக்கு வந்ததுல எட்டுப் பேரு டிக்கெட்டு எடுக்கல. எட்டுப்பேரும் டிக்கட்டு

எடுக்கனும்னு கண்டக்டரு கத்துனாரு. இதுக்கெடயில காடானூரு வண்டி போயிருச்சுங்ர வெவரத்த அறிஞ்சுக்கிட்டு அம்புட்டுப் பேரும் டிக்கெட் எடுக்க முடியாதுன்னு கத்துனானுக. அந்த பஸ் ஸ்டாண்டுல இருந்தவுக எல்லாரும் சுத்தி கூடிட்டாக. கண்டக்டரு, "ஏற்கனவே வண்டி லேட்டு, சிக்கிரம் டிக்கட்ட எடுங்க காலங்காத்தால, இன்னிக்கு யாரு மொகத்துல முழுச்சனோ," சடவாச் சொன்னாரு.

கருத்தப்பாண்டியும், மத்த பதினஞ்சு பேரும் ஒத்தாப்புல கத்துனானுக. "யேய், டிக்கெட்டு எடுக்க முடியாதுய்யா செய்யுரத செஞ்சுக்கோ. போ....."

"இவனுகள வண்டில ஏத்துனதே தப்பு. பாவப்பட்டு ஏத்துனதுக்கு இப்பிடி அடாவடி பண்ணுரானுக." கண்டக்டரும் கோவமாக கத்துனாரு.

"ஆமா. இவுகப்பெ வீட்டு வண்டிபாரு....பாவப்பட்டு ஏத்திட்டானாம். நீயி வண்டிய லேட்டாக் கொண்டாந்ததுமில்லாமெ, ஒ சவுரியத்துக்கு உருட்டிக்கிட்டு வரப்போயி காடனூரு வண்டியப் புடிக்க முடியல. அந்த வண்டிய உட்டதுனால, இன்னைக்கு வேல எங்களுக்கு மெனக்கிட்டுப் போச்சு; அதுக்கு என்ன சொல்ற நீயி," அம்புட்டுப் பேரும் கத்துனாக.

"அதுக்கு நா என்ன செய்யட்டும்? நீ இந்த வண்டில வந்தீல. அதுக்கு மரியாதயா டிக்கட்டு எடுங்க." கண்டக்டரும் விடாப்புடியாப் பேசுனாரு.

"நாங்க இந்த வண்டில வரல. போ. அம்புட்டுத்தான்," நக்கலாச் சொல்லிட்டு வாயிட்ட விசிலடுச்சான் ஆறுமுகம். ஒடனே வண்டில இருந்த நாலஞ்சு பெரியாளுக வந்து சமரசமாப் பேச ஆரம்புச்சாக. "காடனூரு வண்டி போனதுக்கு இந்த வண்டிக்கார என்ன செய்வான்! சரி, நாயமாத்தான் கேக்காரு. எட்டுப் பேரு டிக்கெட்டு எடுத்தீகள்ள. அது மாதிரி மித்த எட்டுப் பேரும் எடுத்துருங்கப்பா. விடுஞ்சும் விடியாமெ எதுக்கு வம்பு? எங்களுக்கும் டயமாகுதுல?"

"எட்டுப்பேரு டிக்கெட்டு எடுத்ததே வேஸ்டு. இப்ப என்ன பெரிய நாயத்தக் கண்டீக. இவனால எங்க வேல மெனக்கிட்டுப் போச்சு. இன்னைக்குக் கூலியுமில்ல; ஒன்னுமில்ல. அப்பிடியிருக்க எப்பிடிக்கூடி டிக்கெட்டு எடுக்க முடியும்?"

"அதுக்கு கண்டக்டரு என்னப்பா செய்வாரு?"

"கண்டக்டரு என்ன செய்வாரா? விசுல ஊதிட்டு வண்டிய எடுத்துட்டப் போச்சொல்லு," ஆண்டியப்பன் சொல்லவும் அம்புட்டுப் பேரும் சிருச்சாக. கண்டக்ருக்கு ரொம்பா எருச்சலாப் போச்சு. "இப்படித்தான் கொஞ்ச நாளைக்கு முன்னால பஸ்சு டிக்கெட்ட ஒசத்திட்டாகன்னு, எங்கயோ ஒரு ஊர்ல பஸ்சுல ஏறிக்கிட்டு டிக்கெட்டு எடுக்கமாட்டோம்னு பழைய டிக்கெட்டுகளக்

குடுத்துக்கிட்டு ரகள செஞ்சானுக. சைட்டுமேனிக்காக அம்புட்டுப் பெயல்களையும் போலிசு டேசனுக்குக் கொண்டுபோயி உள்ள தள்ளி அடச்சுப் போட்டது கெணக்கா இவனுகளயும் தள்ளனும். அப்பத்தான் வழிக்கு வருவானுக..... தனக்குத்தானே சொல்லிக்கிட்டு கோவமா டிரைவரைப் பாத்து கத்துனாரு. “மாரியப்பா வண்டிய நேரா போலிசு டேசனுக்கு உடுப்பா. அங்க போயி இவனுகள கவனிக்கிர வெதமா கவனிக்கேன். எல்லாரும் வண்டில ஏறு. டேசன்ல வச்சு மிச்சத்தப் பேசிக்கிரலாம். ஏறு வண்டில” கண்டக்டரு அதட்டுனாரு.

“ஆமா, உள்ளதள்ளி அடச்சுப் போட்டு ஒரு மயித்தக்கூட புடுங்கல. மறுநாளு இனிமேலு இப்பிடிச் செய்யாதீகன்னு அம்புட்டுப் பேத்தயும் தொறந்து உட்டுட்டாகள்ள. அதுக்கென்ன சொல்ற....?” சின்ன மாயாண்டி கேட்டான்.

“போலிசு டேசம்னா பயந்துருவம்னு நெனச்சியா? எத்தன டேசனு பாத்துருப்போம் நாங்க? எங்ககிட்ட இந்த பூச்சாண்டி வேல எல்லாம் வச்சுகிராத. வண்டில ஏறமுடியாது. டேசனுக்கு வர முடியாது. யோவ், மாரியப்பா, வண்டிய எடுத்துட்டுப் போவியா.... சும்மா லப்சரு பண்ணிக்கிட்டு,” ஆண்டியப்பன் சொன்னான்.

“இப்பிடி அடாவெடி செய்றானுகளே இந்தப் பெயலுக. வண்டில வந்ததுக்கு நாயமா டிக்கெட்டு எடுக்காமெ, வாச்சட்டம் பேசுறானுக.” வண்டில இருந்த ஒரு கெழவி சொன்ன. “ங்கொப்ப னொளி இந்த கெழட்டுக் கண்டாரளி சொல்றத பாருங்கடா. காடு கரைகள்ள ஆம்பளக்குச் சமமா வேல செஞ்சுட்டு கூலி மட்டும் அவனவிட கொறவா வாங்குறீயே.... அதுமாதிரி பஸ்சுலயும் ஆம்பளக்கு மூன்னு ரூவா டிக்கெட்டுன்னா, பொம்பளைக்கு ரெண்டு ரூவா போடச் சொல்லுரதுதான.... அது உட்டுப்போட்டு பெரிய பஞ்சாயத்து பண்ண வந்துட்டா....”

“என்னத்த கெழவி நாயத்தக் கண்ட நீயி....நாங்களும் நாயமாத்தான் சொல்றோம். இருந்த துட்ட இவங்கிட்ட குடுத்து;, வேலயுமில்லாமெ வெட்டியுமில்லாமெ என்ன செய்யச் சொல்ற? இப்ப எட்டு டிக்கெட்டு எடுத்ததே தப்பு. இனி எப்படி திரும்பி ஊருக்குப் போறது? இந்த வண்டி திரும்பி ஊருக்குள்ள வார டிரிப்லதான் ஏறிப் போகனும். அதுவரைல இங்ன பஸ் ஸ்டாண்டுல ஒக்காந்து இருக்கோம். போயிட்டு ஒடியா ” கருத்தப்பாண்டி சொன்னான்.

கண்டக்டரு வெளமா கத்துனாரு. “எம்புட்டு அடாவடியாப் பேசுரானுகனு பாரு. நாயமாப் பேசுரானுகளாம்....நாயமா....இதென்ன நாயமோ! வண்டில வந்ததுக்கு டிக்கெட்டு எடுக்கனும்ங்றத நாயமாப்படல. இவனுக பெரிய நாயம் பேச வந்துட்டானுக.”

“சும்மா கெடந்து கத்திக்கிட்டு இருக்காத. நீ என்ன கத்து கத்துனாலும் டிக்கெட்டு எடுக்க முடியாது. எங்ககிட்ட துட்டு

கெடையாது. அதுனால வண்டி போகலாம்.”

“துட்டு இல்லாமெ வண்டில எதுக்கு ஏறுனானுக. இவனுகளால நம்ம போக வேண்டிய சோலியும் கெட்டுப் போகும் போலயே.” வண்டிக்குள்ள இருந்த ஒருத்தரு மொனங்குனாரு.

“துட்டு இல்லாமெ வண்டி ஏற நாங்க ஒன்னும் கிறுக்குப் புடுச்சவனுக இல்ல. இருக்குர துட்ட இவனுகிட்ட குடுத்துட்டா திருப்பி எப்பிடி ஊரு போறது? வேலைக்குப் போயிருந்தாலும் கூலி கெடச்சிருக்கும். இன்னைக்குப் பொழுத ஓட்டிரலாம். வேலயு மில்லாமெ. கைல இருக்கிற காக்காசயும் வண்டிக்காரங்கிட்ட குடுத்து ருன்னா, இதென்னயா அநியாயமாவுல இருக்கு? எங்க பக்கத்துல இருக்குர நாயத்த ஒரு பெயலும் புரிய மாட்டேங்கானுக. வகுத்தெருச் சலாவுல இருக்கு.” கருத்தப்பாண்டியன் கத்துனான்.

“அதென்ன நாயம் இவனுகளுக்குன்னு ஒரு நாயம்? அந்த ஆண்டவர்தான் பாக்கனும். நீயி வண்டிய எடுப்பா.” மொதல்லப் பேசுன கெழவி சொன்னா.

“அந்த ஆண்டவனுக்கே எங்க நாயம் புரியாது கெழவி. போயிட்டு வா. டாட்டா,” கைய ஆட்டிட்டு சிருச்சான் ஆண்டியப்பன்.

*இலட்சியப் போராளி - பிப்ரவரி 99*

# 14. ஏப்ளா....ஏழுத

ரொம்ப நாளைக்குப் பெறகு ராசமாணிக்கம் மாமாவப் பாத்தேன். ரொம்ப மாறிப்போயிருந்தாரு. தலமுடி பூராம் வெள்ள வெளேர்னு பஞ்சுப்பொதி கெணக்கா மாறி இருந்துச்சு. ஆனா ஒத்த முடிகூட உழுகல. அம்புட்டு முடியும் அப்பிடியே இருந்துச்சு. நெடுநெடுன்னு அந்த வளத்தியான ஒடம்பு இத்தினிக்கூட கூனல. குறுகல. ஆனா முன்ன இருந்த அந்த வெடிப்பும், துடிப்பும் இப்ப இல்ல. எப்பிடியும் எழுவது வயசுக்கு மேலதான் இருக்கும். எனியப் பாத்ததும் வாயெல்லாம் பல்லாயிருச்சு அவருக்கு. அந்த வெத்தலக் கற புடுச்ச அம்புட்டுப் பல்லும் அப்பிடியே இருந்துச்சு.

"என்னம்மா, எப்ப வந்த? அவரு வந்துருக்காரா? " மாமா உற்சாகமா கேட்டாரு.

"எவரு மாமா?"

"ஓ வீட்டுக்காரரத்தாங் கேட்டேன்."

"நானு பூங்கோத இல்ல மாமா. வெள்ளக்கண்ணு எளையவா."

"அடடடடே... வெள்ளக்கண்ணா, கண்ணு கொஞ்சம் மங்கலாப் போச்சா. சரியா அடையாளந் தெரியல. வயசாகுதுலம்மா."

"எங்க மாமா வயசாயிருச்சு. அப்பிடியேதான் கணார் கணார்னு பேசுறிக. முடிதான் வள்ளுசா நரச்சுப் போச்சு."

"மசுரு போனாப் போகுதும்மா.... உசுரு இருக்குல்ல. அதப்பாரு சரி இப்ப எங்க இருக்க? எப்படி இருக்க? எம்புட்டு நாளு லீவு? ஊர்ப்பக்கமே வரமாட்டேங்கியேம்மா" கேள்விகளை அடிக்கிக் கிட்டே போனாரு.

"மெட்ராசுப் பக்கந்தான் இருக்கேன் மாமா. இங்க யாரு இருக்கா? முன்னப் போல வந்து தங்குறதுக்கு?" சடவாச் சொன்னேன்.

"என்னம்மா அப்பிடிச் சொல்லிப் போட்ட நாங்கள்ளாம் மனுசங்களாத் தெரியலயாமா? அப்பப்ப வந்து போய் இரும்மா." நானு பதுலு சொல்லல. எங்கம்மாவும், அப்பாவும் உசுரோட இருக்கையில இங்க வந்து போனது எம்புட்டுச் சந்தோசமா இருந்துச்சு.... நெனச்சமாத்துரத்துல கண்ணெல்லாங் கலங்குச்சு. சமாளிச்சுக்கிட்டு மாமாட்ட கேட்டேன். "என்ன மாமா, இப்பவும் சாக்குத் தைக்கீகளா?"

வாய் மேல ரெண்டு வெரல வச்சு, அங்குட்டு இங்குட்டுத்

தெரிக்காமெ வெத்தல எச்சியப் புளிச்சுனு துப்பிட்டு ரொம்ப ஆர்வமாச் சொல்ல ஆரம்புச்சாரு. தோளுல கெடந்த துண்ட எடுத்து திருண மேல போட்டு, மேல ஒக்காந்துக்கிட்டாரு, அவரு செஞ்ச முஸ்தீபுகளைப் பாக்கையில் இன்னைக்குப் பெரிய கதையே சொல்லப் போறார்னு தெரிஞ்சு போச்சு. எனக்கும்கூட அவருட்ட பேசனும்னு போலத்தான் இருந்துச்சு. நின்னு பேசிக்கிட்டு இருந்த நானும் திருணயில ஒக்காந்தேன்.

"இப்பல்லாம் சாக்குகள முன்ன மாதிரி பசாருல போட்டுத் தைக்கிறதில்லமா. சம்சாரிக வீடுகளுக்கே போய் தைக்கேன்," சிரிப்போட சொன்னாரு.

"பரவாயில்லைலயே, அப்ப இப்பல்லாம் நம்ம ஆளுகள அவுக வீடுகளுக்கு உள்ள உடுதாக்களாக்கும் மாமா?"

"ஆமமா காலம் எம்புட்டோ மாறிப் போச்சு. அவுக வீட்டுப் பிள்ளைக எனிய தாத்தா தாத்தான்னுதான் கூப்புடுவாக. முன்ன மாதிரி சாதி கீதியெல்லாம் பாக்குரதுல்ல" சந்தோசமாச் சொன்னாரு.

"வயசாகிப் போன ஒங்கள தாத்தான்னு சொல்லாமெப் பெறகு அண்ணாச்சினா கூப்புடுவாக?" ஒரு கிண்டலுக்குக் கேட்டேன்.

"அதுக்கில்லம்மா, முன்னல்லாம் அந்தத் தெருப்புள்ளைக, மொளச்சு மூணு எல உட்ருக்காது. அதுக நம்ம தெரு பெரியாளுக பெரிய மனுசிகளக்கூட மருவாதக் கொறவாத்தான் கூப்புடுவாக. இப்ப அப்பிடி இல்லாமெ ஒறவு வச்சுக் கூப்புடுறாகள்ள. அப்பன்னா எம்புட்டு மாறி இருக்குன்னு பாரு."

"முன்னால எப்பிடிக் கூப்புடுவாக?"

"நானு பிராயமா இருக்கைல எங்கள 'ஏலேய்' 'ஏழுத' இப்பிடித்தான் கூப்புடுவாக. பொம்பளைகள 'ஏப்ளா'ன்னுதான் கூப்புடுவாக.

"இதென்ன மாமா....புதுப்புது வார்த்தைகளா இருக்கு! ஏலேய்னா தெரிது. ஏழுத, ஏப்ளான்னா என்னது?"

"ஏழுதன்னா...ஏ....கழுதன்னு அர்த்தம். ஏப்ளான்னா... ஏ.... புள்ளன்னு அர்த்தம்னு நெனைக்கேன்."

"பரவாயில்லியே மாமா ஒங்களத்தான் ரொம்ப மட்டமாக் கூப்புட்டுருக்காக. பொம்பளைகளுக்கு அம்புட்டு மோசமா இல்ல" மாமாவ உசுப்பி உடுறதுக்காகச் சொன்னேன்.

"போமா....போ....ஆம்பளன்னா என்ன....பொம்பளன்னா என்ன? நம்ம சாதி சனத்துகள ரொம்பக் கேவலமாத்தான் நடத்துனாக."

"இப்பவும் அப்பிடித்தான் மாமா, எங்க பாத்தாலும் சாதிச் சண்டைகதான். ஒன்னும் மாறல."

"சே...சே....இப்ப எம்புட்டோ மாறிப் போச்சும்மா. அதான் சொன்னம்லமா.... அவுக வீட்டுக்குள்ள போயி வெராண்டாவுல

ஒக்காந்துகிட்டுல சாக்குத் தைக்கேன். அதுமட்டுமா, முன்னால செரட்டயில கூழு ஊத்துனவுக, இப்ப டம்ளருல காப்பிய ஊத்திக் குடுக்காக. அதுவும் அவுக குடிக்குற டம்ளர்லயே நமக்கும் குடுக்கா கன்னா பாத்துக்கோயேன்."

"ஆக மொத்தத்துல நம்பளயும் மனுசங்களப் போல மதிக்காகன்னு சொல்றீக. என்ன மாமா?"

தலய வரட்டு வரட்டுனு சொருஞ்சாரு மாமா. "ஏம் பேத்திமாரு மேல கெடந்து வெளாடுறாகளா. அதுக மண்டப் பேனு பூராம் ஏந்தலைக்கு வந்துருச்சு. என்ன கடிகடிக்குதுக படுக்காளிப் பேனுக. பேனுச் சீப்ப வச்சுச் சீவுனம்னா அம்புட்டுக் கழுதயுங் காலி பண்ணிப் போடுவேன். ஒங்கத்தயிட்ட சொன்னா எங்கம்மா கேக்கா? அதெல் லாம் அந்தக் காலத்துலதான். மடில படுக்கப் போட்டுக்கிட்டு எடுத்து எடுத்துக் குத்துவா. இப்பச் சொன்னா கண்ணுந்தெரியல காடயத்துந் தெரியலங்கறா. ஒங்கத்த ஒனிய பாத்தாளாமா."

"இல்ல மாமா. நானு நேத்துத்தான வந்தேன். பாக்கல."

"நானு வந்து பாக்கச் சொல்றேன்மா" செத்த நேரங்கழுச்சுச் சொன்னாரு. "போன மாசத்துல ஒரு நாளுமா, ரெங்கசாமி அய்யா வீட்டுல சாக்குத் தைச்சுக்கிட்டு இருந்தேன். அவரோட பேரன் நாலஞ்சு வயசு இருக்கும். ஏங்கிட்ட வந்து எனியத் தொட்டுட்டான்மா. அவரும் அங்னக்குள்ளதான் இருந்தாரு. ஆனா ஒன்னுமே சொல்லல. எனக்கு ஒரு மாதிரிப் போச்சு. நாந்தான் கோணில இருக்ர தூசி பட்டுரும்னு சொல்லி அந்தப் பையன எட்டப் போச் சொன்னேன்."

"போங்க மாமா போங்க.... இவ்வளவு பேசுறீகளே, ஒங்க மகென் எளையவன் நல்லாப் படுச்சு உத்யோகத்துல இருக்காம்ல.... அவனுக்கு ரெங்கசாமியோ கொங்கசாமியோ.... அந்த ஆளோட மகளக் கேளுங்க தர்ராறானு பாப்போம்." கொஞ்சம் கோவமாத்தாஞ் சொன்னேன்.

"அடச்சே .... நல்லதுதான்...நீ என்னம்மா....இருக்க எடங் குடுத்தாப் படுக்க பாய் கேட்ட கதையாவுல பேசுற. அதெப்டிமா குடுப்பாரு? நம்மதான் அப்பிடி கேக்கலாமா? கேட்டா சும்மா இருப்பாகளா? பெரிய சாதிக் கலவரமே வந்துருமே...."

"பெறகென்ன என்னமோ எல்லாம் மாறிப் போச்சு... சாதியெல் லாம் பாக்க மாட்டாக....அப்படியாக்கும்.... இப்பிடியாக்கும்னு சொல்றீக."

மாமாவுக்கு என்ன சொல்றதுன்னு புரியல. யோசனயில இருந்தாரு. எதுத்த வீட்டுத் திருணயில ஒக்காந்து பீடி புடுச்சுக்கிட்டே நாங்க பேசுனதக் கேட்டுக்கிட்டுருந்த பாக்கியராசு சொன்னான்.

"ஏ தாத்தா....அக்கா கேக்குறது சரிதான....என்ன கம்முனு இருக்க. இத்தினிக் காப்பித் தண்ணி குடுத்துட்டாகளாம். சாதி

போயிருச்சாம். யாரு கண்டா. மிச்சமீதிய ஒனக்குனு தனிக் கிளாசு போட்டு குடுத்துருப்பாக. அதுலயே நீ உருகிப் போன. இன்னமும் எத்தன டீக்கடைகள்ள நம்மாளுகளுக்குத் தனிக் கிளாசுல டீ குடுக்காக.... ஒனக்கு என்ன தெரியும்?"

ஏம் பக்கமாத் திரும்பி ஒக்காந்திருந்த மாமா சடார்னு அவெம்பக்கந் திரும்பிச் சத்தமாப் பேசுனாரு. "ஏலேய்...எனியப் பாத்தாடா என்ன தெரியும்னு கேட்ட. நீயி நேத்துப் பெறந்த பெயடா. எந்தச் சாமி செஞ்ச புண்ணியமோ நாங்கள்ளாம் அந்தக் காலத்துல போராடப் போயி இன்னைக்கு நாலெழுத்துப் படுச்சுகிட்டு வெள்ளையுஞ் சொள்ளையுமா அலைறீக. நாங்கள்ளாம் என்ன மானங்கெட்ட பொழப்பா பொழச்சோம்ங்க. தன்மானச் சிங்கம்டா.... சிங்கம்...." சொல்லிக்கிட்டே வெள்ளை மீசையத் தடவி உட்டாரு. பேசுன வேகத்துல லொக்கு லொக்குனு இருமுனாரு. அவரப் பாக்கப் பாவமா இருந்துச்சு. மனசுல இருந்த வேகத்துக்கு ஒடம்பு ஈடு குடுக்க முடியாமெ ரொம்பக் கஸ்டப்பட்டாரு. நானு ஓடிப் போயி ஒரு செம்புல தண்ணி கொண்டாந்து குடுத்தேன். இருமலு செத்த நிக்கவும் வாயக் கொப்புளுச்சுட்டு கொஞ்சந்தண்ணி குடுச்சாரு.

"என்ன தாத்தா. போராட்டஞ் செஞ்சோம்னு சொல்றியே என்ன நீங்கள்ளாம் சுதந்திரப் போராட்டத் தியாகிகளா.... ஒனக்கு அம்பேத் காரத் தெரியுமா தாத்தா. அவரு என்ன சொன்னாரு. என்ன செஞ்சாருன்னு தெரியுமா? ஏ..ந்தாத்தா...சும்மா ரீல் உடுற?" பாக்கியராசு எகத்தாளமாக் கேட்டான்.

"சரி. அத உடுங்க மாமா, அத்த நல்லா இருக்காகளா?" பேச்ச மாத்தலாம்னு இப்பிடிக் கேட்டேன்.

"ஏதோ எல்லாங் கெடக்காகமா. எங்கம்மெ வலுத்த கட்டமா. வயசு தொண்ணூறுக்கு மேல ஆகுது. பல்லு கில்லு ஒன்னுமில்ல. ஆனாப் பாரு....கறிய கடக்கு கடக்குனு முழுங்குறாமா. எப்படித்தான் செரிமானம் ஆகுதோ. கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

"எங்க பாட்டிகூட மாமா தொண்ணூறு வயசுக்கு மேலதான் செத்தா."

"யாரு? அல்லோத்தி கெழவியா?" பாக்கியராசு கேட்டான்.

"ஆமலே, எங்கப்பனப் பெத்தக் கெழவி" நாஞ் சொன்னேன்.

"ஏமா.... அல்லோத்திக் கெழவின்னதும் எனக்கொன்னு நாவகத்துக்கு வருதும்மா. நானும் அந்த மச்சான் தொள்ளக்காதனும் சேந்து அவளப் படாதபாடு படுத்தியிருக்கோம்." மாமா குறுஞ் சிரிப்பாச் சிருச்சுக்கிட்டே சொன்னாரு.

"என்ன செஞ்சீக அந்த அப்பிராணிக் கெழவிய?" பாக்கியராசு கேட்டான்.

"முன்னயெல்லாம் சம்சாரிக அவுக காடு கரைகளுக்கு

வேலைக்கு ஆளு கூப்புடனும்னா நம்ம தெருவுக்குள்ள வரமாட்டாக. அசிங்கப்பட்டுகிட்டு தெரு மொகப்புல இருக்ர கம்மாக் கரமேல நின்னுகிட்டு ஏ...ப்ளா அல்லோத்தி....ஏ....ப்ளா மூக்கம்மான்னு கத்துவாக. கம்மாயோரம் வீட்டுக்காரவுகள இப்பிடிக் கூப்புடவும், இவுக வீட்டுக்கு வெளிய ஓடியாந்து என்னங்க சாமின்னு கேப்பாக. இன்ன எடத்துல இன்ன வேலைக்கு இத்தன ஆளக்கூப்டுக்கிட்டு வான்னு சொல்லிட்டுப் போவாரு. வேற யாரையுங் கூப்புடச் சொன்னாலும் இவுக போயி கூப்டுக்கிட்டு வந்து அவுக முன்னால உடுவாக. இதுல சிரிப்பு என்னன்னா. கம்மாக்கரைலதான் அம்புட்டுப் பேரும் ஒன்னுக்கு ரெண்டுக்குப் போவோம். அத சகிச்சிக்கிட்டு அங்ன நிப்பாகளே தவுர, நம்ம தெருவுக்குள்ள நொழைய மாட்டாக!”

“எங்க பாட்டியப் பத்திச் சொல்ல ஆரம்புச்சுட்டு என்னத் தையோ சொல்றீக மாமா” நாங் கேட்டேன்.

“அதத்தாம்மா சொல்ல வாரேன் ”னு சொன்ன மாமா மொகத்துல ஒரு பிரத்தியேகமான மினுமினுப்பு. சிரிப்பு, இடுங்கிப் போன கண்ணுக்குள்ள ஒரு தெம்பான மலர்ச்சி. கடந்த கால நெனப்புனால மாமா மொகமே மாறிப் போச்சு. இன்னங் கொஞ்சந் தண்ணியக் குடுச்சுட்டு தொண்டயச் செருமி சரி பண்ணிக்கிட்டாரு. அவரு செஞ்ச முஸ்தீபுகளப் பாத்து எனக்கே பொறுமை இல்ல.

இந்த மாமா எப்பயும் இப்பிடித்தான். ஒரு சின்ன விசயம்னாக் கூட பயங்கரமா முஸ்தீபு செய்வாரு. நானா நெனச்சுக்கிட்டேன். மீச மேல ஒட்டியிருந்த தண்ணிய சோத்தாங்கைய வச்சு இங்குட்டும் அங்குட்டுமா மீசையத் தடவித் தொடச்சாரு. எல்லாத்தையும் பாத்துகிட்டே இருந்த பாக்கியராசு, “ஏ சட்டுனு சொல்லு தாத்தா” சொல்லிக்கிட்டே எந்துருச்சு வந்து எங்ககூட ஒக்காந்தான்.

“ஏப்ளான்னு சம்சாரிக சொன்னா சகிச்சுக்கிருவாளுக. ஆனா நம்ம சொல்லிட்டம்னு வையி.... மல்லுக்கு வந்துருவாளுக” மாமா சொன்னார்.

தனக்குக் கலியாணம் முடுஞ்ச வருசத்துல ஏப்ளா போராட்டம்னே ஒரு போராட்டம் நடத்துனோம்னு மாமா சொன்னாரு. சரிதான். அதப்பத்தி சொல்ல ஆசப்படுறாருன்னு தெருஞ்சு போச்சு. நாங்களும் ரொம்பா ஆர்வமா, “அதென்ன ஏப்ளா போராட்டம்” னு கேட்டோம். மாமாவுக்கு இவ்வளவு போதுமே. இன்னுங் கொஞ்சம் வசதியா சாஞ்சுக்கிட்டுச் சொல்ல ஆரம்புச்சாரு.

“நம்ம பெயலுக எரனூறு முன்னூறு பேரு சேந்துக்கிட்டு நம்ம தெருவுல தொடங்கித் தெருத்தெருவா ஊர்வலம் வந்து போனோம். அப்பிடிப் போம்போது மாடத்தி மகன் கடுச்சுக்குடுச்சான் முன்னால நின்னுக்கிட்டு சத்தம் போட்டு ஏப்ளா ம்பான். நாங்கள்ளாம் ஒழிகம்போம். அத மாதிரி ஏலேய்ம்பான். நாங்க ஒழிகம்போம் நாங்க ஒழிக ஒழிகன்னு கத்திக்கிட்டே போனோம். சம்சாரிக தெருவுக்குள்ள

போம்போது கொஞ்சம் பயமாவும் இருந்துச்சு. ஏம்னா மறுநாளு அவனுககிட்டதான வேல வெட்டி செஞ்சு பொழைக்கணும்."

"ஒங்கள யாரு மாமா இப்பிடி ஊர்வலமா கத்திகிட்டுப் போகச் சொன்னது?" நாங் கேட்டேன்.

"யாருஞ் சொல்லலமா. இந்த கம்னிஸ்டு கச்சிக்காரனுக அப்பப்ப செவப்புக் கொடியப் புடுச்சுக்கிட்டு என்னென்னமோ கத்திக்கிட்டு போவானுக. அதப் பாத்துட்டு நம்மளும் போவோம்னு நாங்க போனோம்.

"பரவாயில்லையே தாத்தா. நல்லாத்தான் செஞ்சுருக்கீக. அம்பேத்காருகூட நெறய்யாப் போராட்டஞ் செஞ்சுருக்காரு."

பாக்கியராசு சொன்னான்.

"ஏலேய். அவரு செஞ்சது இருக்கட்டும்ல. நீங்க என்னலே செஞ்சீக?" மாமா கேட்டாரு.

"நாங்களும் ஒன்னு ரெண்டு செஞ்சுருக்கோம் தாத்தா. இப்ப இந்த ஏப்ளா போராட்டத்தக் கேட்டப் பெறகு ஏதாச்சும் செய்யனும்னு எனக்கும் ஆசை வருது தாத்தா."

"ஆசைப்பட்டா மட்டும் போதாதுடா. துணிஞ்சு எறங்கனும்டா."

"நீயி பொழச்சுக் கெடந்தாப் பாரு தாத்தா. இங்க இந்த ஏப்ளாவ மாத்துனது மாதிரி நாங்க போராடிச் சாதியவே தீத்துக் கட்டுறோம்." சொல்லிட்டு சொன்ன வேகத்துல எந்துருச்சு கெழக்காமப் போனான் பாக்கியராசு.

இலட்சியப் போராளி
*டிச.1999 - சன. 2000*

# 15. எளக்காரம்

"ஏம்மா, இன்னைக்கு நானு பள்ளிக்கொடத்துக்குப் போக மாட்டேன். ஓங்கூட காட்டுக்கு வாரேன்மா" அழுகுறது மாதிரி சொன்னா சின்னப் பொண்ணு.

"அடி செருப்பால....பள்ளிக்கொடம் போமாட்டியா...ஏங்கூட காட்டுக்கு வந்து என்ன செய்யப்போறீயாம்? வாயில நல்லாத்தான் வருது. படுக்காளிப் பெயமகளே" பரிபூரணம் கத்துனா.

செத்த நேரம் கம்முனு இருந்துட்டு திரும்பியும் மொதச் சென்னதயே சொன்னா. இந்தவாட்டி சின்னப் பொண்ணு அழுதா.

"ஏம்டி போமாட்டேங்க? டீச்சரு அடுச்சாகளா? பிள்ளக்காடுக எதுனாச்சும் அடுச்சுப் போட்டாகளா? சொல்லு பெயமகளே, எனக்கு நேரமாகுது. பிந்திப் போனா வேலை செய்ய உடமாட்டாக."

"நானு படிக்கப் போகலம்மா. வீட்டப் பாத்துகிட்டு இருக்கேன்மா. நானு போகமாட்டேன்மா. எனக்குப் பயம்மா இருக்கும்மா. நானு போகலம்மா" பரிதாபமா சொல்லிக்கிட்டே அழுதா.

"நா என்ன பாடுபட்டு குடுச்சுங் குடியாமயுமாக் கெடந்து இந்தப் பெயபுள்ளய நாலெழுத்துப் படிக்க வச்சுரணும்னு பெரயாசைப்படுறேன். இந்தத் தட்டுக்கெட்ட பெயமகா இப்பிடி அடம்பிடிக்காளே....ஏத்தா...ஒழுங்காப் போயிரு....ஒங்கய்யெ வந்தாம்னு வையி. ஓம் முதுகுத் தோல உருச்சு உப்பத் தடவிருவான். நாவகத்துல வச்சுக்கோ; ஆமா" கோவமாயும் வேகமாயும் மெரட்டுனா.

சின்னப்பொண்ணுக்கு என் செய்றதுன்னு தெரியல. ஆனா பள்ளிக்கொடம் போகக் கூடாதுங்றதுல மட்டும் உறுதியா இருந்தா. கெஞ்சுற கொரலுல மெதுவாச் சொன்னா. "ஏமா, இன்னைக்கு மட்டும் போகலம்மா. நாளையிலருந்து போயிடுறேனுமா. அய்யாகிட்ட சொல்லாதம்மா."

"இம்புட்டு நாளா ஒழுங்காத்தானடி போயிக்கிட்டு வந்துகிட்டு இருந்த....இன்னைக்கு என்னடி ஆச்சு? இப்ப நாலெழுத்துப் படுச்சாத்தானடி நாளைக்கு நீ நல்லா இருப்பெ. இல்லைன்னா எனிய கெணக்கா நாயி படாத பாடுபடணும். தெரிமா?....சரி....இந்தா....இந்த ஒத்த ரூவாய வாங்கித் திங்க வச்சுக்கோ. பைக்கட்ட எடுத்துக்கோமா,"

சொல்லிக்கிட்டே சின்னப் பொண்ணோட மொகத்த முந்தானைல தொடச்சு உட்டா பரிபூரணம்.

"எனக்கு துட்டு வேண்டாம்தா. நானு பள்ளிக்கொடம் போமாட்டேன்," துட்டத் தூக்கி எறுஞ்சிட்டு அழுதா.

அப்பிடிக்கூடி பள்ளிக்கொடம் போயிக்கிட்டு இருந்த கிட்ணம்மாளக் கூப்புட்டு பரிபூரணம் சொன்னா, "ஏத்தா...ஏ.... தவசி மகளே, இந்தா ஏம் மகளையும் அப்பிடியே ஒங்கூட பள்ளிக் கொடத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போத்தா. செத்த நாயி, என்ன சொன்னாலும் கேக்கமாட்டேங்கி."

"பெரீமா, நேத்து பள்ளிக்கொடத்துல கோயிலுத் தெரு பிள்ளைக ஒங்க மகளப் போட்டுப் போட்டு அடுச்சாக." கிட்ணம்மா சொன்னா.

"எதுக்குத்தா? அதான் இவா போமாட்டேம்னு மருகி மருகி நிக்கிறா, கேட்டா ஒன்னுஞ் சொல்லவும் மாட்டேங்கா."

"நேத்து மத்தியானம் சத்துணவு சாப்பிடும் போது ஒங்க மகா பெளேட்டு கொண்டு வரலயா....இவா போயி அந்தத் தெரு சோதிலச்சுமி பிள்ளைட்ட டிபனு பாக்சக் கேட்டுருக்கா, அதுக்குத்தான்."

"ஏம்டி...கேட்டியாக்கும்டி?" மகட்ட கேட்டா.

"க்கும். கேட்டேன். அவா தரமாட்டேனுட்டா. பெறகு நம்ம தெரு முனியம்மாளும் நானும் ஒரே பெளேட்டுல வாங்கித் தின்னோம்."

"இதுக்கெதுக்கு ஒனிய அடிச்சாக?"

பரிபூரணத்துக்கு ஒன்னுஞ் சரியா வெளங்கல.

"இல்ல பெரீமெ, அது வந்து இவா போயி அந்தத் தெரு பிள்ளைட்ட டிபன் பாக்சைக் கேட்டாள்ள. அதக்குத்தான்." 'அந்தத் தெரு'வ அழுத்தமாச் சொன்னா கிட்ணம்மா.

"நீ எதுக்குடி அந்தத் தெருப் பிள்ளைட்டப் போயிக் கேட்டெ? நம்ம தெருவுலருந்து எம்புட்டுப் புள்ளைக படிக்குதுங்க? அவுகள எல்லாம் உட்டுட்டு நீ எதுக்கு அந்தப் பெயமக்ககிட்டப் போயி கேட்டெ?"

"நம்ம தெருப் பிள்ளைக எல்லாரும் சோறு வாங்கிக்கிட்டு இருந்தாக. அவுக தெருப் புள்ளைகதான் வீட்ல இருந்து டிபனுகள்ள சாப்பாடு கொண்டாந்து சாப்புடுவாக. சோதிப்பிள்ள சீக்கிரமாகச் சாப்டுட்டு டிபன்பாக்சை சும்மாதான் வச்சுருந்தா. அதான் அவாகிட்ட கேட்டேன்," சின்னப் பொண்ணு வெளக்கமாச் சொன்னா.

பரிபூரணத்துக்குத் தாம் மகா மேல இருந்த கோவம் போயிருச்சு. "படிக்கிற எடத்துல சின்னப் புள்ளைக ஒண்ணுக்குள்ள ஒண்ணு குடுத்துக்குங்க; வாங்கிக்கங்க. இதுல என்ன தப்புன்னு ஏம்பிள்ளயப்

போட்டு அடுச்சிருக்காக," தனக்குத்தானே சொல்லிக்கிட்டே பரிபூரணம் மகளப் பாத்துக் கேட்டா.

"சரி, அந்தத் தெருப்புள்ளைக ஒனியப் போட்டு அடிக்கயில நீ போயி ஒங்க டீச்சருட்ட சொல்ல வேண்டியதுதானடி?"

"நாங்க போயிச் சொன்னம்ல, அதுக்கு டீச்சரு சின்னப் பொண்ணத்தான் வஞ்சாக," கிட்ணம்மா சொன்னா.

"எதுக்காம்?"

"நீ எதுக்குபிள்ள எங்க தெரு பிள்ளைட்ட கேட்ட? ஒங்க தெருப்பிள்ளைகளோட தட்ட வாங்கிச் சாப்புட வேண்டியதுதானன்னு சொன்னாக."

"பெறகென்ன படிப்புச் சொல்லிக் குடுக்காளுக? பாடஞ் சொல்லிக் குடுக்குற டீச்சர்மார்களே சாதியப் பாத்து பிள்ளைகள நடத்துனா என்னத்த வெளங்கப் போகுது," சடவாச் சொன்ன பரிபூரணம், மகளப் பாத்துச் சொன்னா; "நீயி ஒம் பைக்கட்ட எடுடி, எனக்கு வேல கெட்டாலும் பரவாயில்ல. வா பள்ளிக்கொடத்துக்கு, நா வந்து என்னன்னு கேக்குறேன். எப்பிடிப் போட்டு அடுச்சுருந்தா கன்னா பள்ளிக்கொடமே போமாட்டேனு அடம்புடுச்சு அழுவா." சொல்லிட்டு மகளப் புடுச்சு இழுத்துக்கிட்டே ஆத்துரத்தோட பள்ளிக்கொடம் போயிச் சேந்தா பரிபூரணம்.

சின்னப்பொண்ணு படுச்ச நாலாங் கெளாசுக்குப் போனா, டீச்சரு ஆபீசு ரூமுல இருக்காகன்னு பிள்ளைக சொல்லவும் விறுவிறுன்னு ஆபீசுக்குப் போனா. அவா நடைக்கு ஈடு குடுக்க முடியாமெ சின்னப்பொண்ணு பின்னாலியே ஓடுனா. ஆபீஸ்ல கெட்மாஸ்டரு, டீச்சருக எல்லாரும் இருந்தாக. பரிபூரணம் மெதுவாத் தொடங்குனா. அவா மனசுக்குள்ள அம்புட்டு ஆவேசம் இருந்தாக்கூட, இங்க வந்த ஒடனே பெட்டிப் பாம்பா அடங்கிப் போனா. அவளுக்கே ஒரு மாதிரியாத்தான் இருந்துச்சு, ரொம்ப அடக்கமான கொரலுல கேட்டா: "ஐயா, சின்னஞ்சிறுசுக படிக்கிற லெக்குல ஒன்னுக்குள்ள ஒன்னு குடுக்கும், வாங்கும். இந்த முக்காத்துட்டு பெறாத விசயத்துக்குப் போயி ஒங்க தெருப் பிள்ளைக ஏம்மகளப் போட்டு அடுச்சிருக்காக. அவா பள்ளிக்கொடமே போமாட்டேன்னு மொரண்டு புடிக்கா."

சின்னப் பொண்ணப் பாத்த நாலாங் கெளாஸ் டீச்சர் ரேவதி கெட்மாஸ்டருட்ட மடமடன்னு என்னமோ சொன்னாக. ஒடனே கெட்மாஸ்டரு பரிபூரணத்துட்ட கேட்டாரு. "இதுக்குப் போயா வேலயுஞ் சோலியும் போட்டுட்டு இம்புட்டுத் தூரம் வந்துருக்க? என்ன இருந்தாலும் ஓம்மகா கேட்டது தப்புத்தான? கழுத கெடக்குறது

கட்டச் செவராம். கனாக் காண்றது மச்சு வீடாம். சரி, ஓம்மகா தொட்டு வாங்கிச் சாப்பிட்ட பெறகு, எங்க தெருப்பிள்ளைக அதுல சாப்புடச் சங்கடப்படுமா இல்லியா? நீயே சொல்லு, நீ என்ன நாட்டு நடப்புத் தெரியாதவளா என்ன? ஓம்மகளத் தட்டிக்குடுத்து வளக்குறத உட்டுட்டு இங்க வந்தட்டியே நாயங்கேக்க...போ...போ."

"அதுக்கில்லையா, இவளுக்கென்ன தெரியும்? ஒங்க தெருப் பிள்ளைககிட்ட கேக்கக்கூடாது, வாங்கக்கூடாதுன்னு இவளுக்கெங்க தெரியப்போகுது? அதுக்குப் போயி அடிக்கலாமாய்யா? ஒரே பள்ளிக்கொடத்துல படிக்கும்போது இதெல்லாஞ் சகசந்தானே ஐயா," பரிபூரணம் பரிதாவமாச் சொன்னா.

"இதுக்குத்தான் ஒங்க தெருப்பிள்ளைகளப் பள்ளிக்கொடத்துல சேக்கக்கூடாதுங்றது. பாவப்பட்டுச் சேத்தா, இப்பிடித்தான் பிரச்சன வரும். நீங்கள்ளாம் இருக்கவேண்டிய எடத்துல இருந்தா எதுக்கு இந்த வம்பெல்லாம். பள்ளிக்கொடத்துக்கு வரமாட்டேன்னு சொன்னா நாலு பன்னிக்குட்டிகள வாங்கி உடு. மேச்சுக்கிட்டுத் திரியட்டும், ஒனக்கும் நல்லதுதான! சரி சரி போ. காலங்காத்தால வந்து எங்க டயத்த வேஸ்டாக்காத." சொல்லிட்டு எந்துருச்சுப் போயிட்டாரு. அவரு போகவும் மீதிப் பேரும் எந்துருச்சுப் போயிட்டாக. பரிபூரணம் மகளக் கூட்டுகிட்டு வீட்டுக்கு வந்துட்டா. வீட்ல வந்து நடந்ததப் பூராம் புருசங்கிட்ட சொல்லவும் அவெங் கத்த ஆரம்புச்சுட்டான்.

"இவெ என்னடி நம்ம பிள்ளைகளப் பள்ளிக்கொடத்துல சேக்கவே கூடாதுன்னு சொல்றது? இவுகப்பெ வீட்டுப் பள்ளிக் கொடமா என்ன? நம்ம தெரு பிள்ளைக போகாட்டி அவனுக்கு வேலையுமில்ல ஒரு மயிருமில்ல. நம்ம பெயலுக சரியில்ல. இவனு கள இம்புட்டுத் தூரம் பேச உட்டு கேட்டுக்கிட்டு இருக்கோம் பாரு. கெட்மாஸ்டருல இருந்து அம்புட்டுப் பேரும் அந்தத் தெருக்காரனுகளா இருக்கானுக. நம்ம தெருவுலருந்து அத்திப் பூத்தாப்புல ரெண்டு பேரு படுச்சு வாத்தியாரானாலும் இந்தப் பெயலுக கூட மல்லுக்கெட்ட முடியல. இவனுகளே கண்டத களியதச் சொல்லி பொய்ப் பெராது குடுத்து தூரந்தொலவட்டுக்கு அவுகள மாத்தி உட்டுருரானுக. இப்பிடியே உட்டுக்கிட்டே இருந்தம்னா அவனுக இதுக்குமேலயும் கேப்பானுக திருட்டுத் தாயளிக."

"ஆமா, இம்புட்டு வருசமா எல்லாஞ் சாதுச்சுட்டாக, இனி நீ போயி சாதிக்கப் போறியாக்கும். இவளச் சரிக்கட்டி நாளைக்குப் பள்ளிக்கொடத்துக்கு அனுப்பி வையி, இல்லன்னா படிப்பு வீணாப் போகும்." பரிபூரணம் சொன்னா.

"இவனுககிட்ட படுச்சா நம்ம பிள்ளைகதான் வீணாப் போகுங்க. நாளைக்குப் பாரு நாம் போயி கேக்குற கேள்வில இனிமேலு நம்ம தெருப் பிள்ளைக மேல கைவைக்க மாட்டானுக."

"ஏ... நீ வேற சும்மா கெட, நீ ஓம் பாட்டுக்குப் போயி

மானாவாரியாப் பேசிட்டு வர,பெறகு இந்தப் புள்ளயத்தான் பெயிலாக்கிப் போடுவாக. எத்தன பிள்ளைகள அப்பிடி பெயிலாக் கிட்டாகத் தெரிமா? இத்தனைக்கும் நல்லா படிக்குற பிள்ளைகள! இந்த வாட்டி உட்டுரு, பெறகு பாக்கலாம்."

மறுநாளு சின்னப் பொண்ணுட்ட, அந்தத் தெருப் பிள்ளைக கூட சேரக்கூடாது. எதுவுங் கேக்கக்கூடாதுன்னு புத்திமதி சொல்லிக் கொண்டு போயி பள்ளிக்கொடத்துல உட்டுட்டு வந்தாக. சின்னப் பொண்ணு பயந்து பயந்து கௌாசுல போயி ஒக்காந்தா. அவளால முன்னப் போல படிக்கவோ, சந்தோசமா இருக்கவோ முடியல. எதுக்கு நம்ம அந்தத் தெரு பிள்ளைககூட சேரக்கூடாதுன்னு இவா மனசுக்குள்ள ஒரே அரிப்பு.

ஒரு ரெண்டு மூணு நாளாச் சேரித்தெருவுல இதே பேச்சுத்தான்: சின்னப் பொண்ண அந்தத் தெருப் பிள்ளைக அடுச்சதுகூட அம்புட்டுப் பெருசாத் தெரியல. ஆனா அந்தப் பள்ளிக்கொடத்து கெட்மாஸ்டரும், டீச்சர்களும் பிள்ளைகள நடத்துற கொடுமய நெனச்சாத்தான் எல்லாருக்கும் ஆத்துரமா வந்துச்சு. ராத்திரி ஊர்ச்சாவடில ஆம்பளைக ஒக்காந்து பேசும்போது இதே பேச்சுத்தான். காடுகரைகள்ள வேல வெட்டிக்குப் போன பொம்பளைகளும் இதத்தான் பேசிக்கிட்டாக.

"இந்தப் பள்ளிக்கொடத்துல படிக்கிறதவிட சும்மா கெடந் துட்டுப் போகலாம். ஏம்மகா கூட சொல்வா, பள்ளிக்கொடத்தப் பூராங் கூட்டிப் பெறக்கி அள்ளுறது நம்ம பிள்ளைகதானாம். அந்தப் பிள்ளைக வந்து அலுங்காமெ குலுங்காமெ படுச்சுட்டுப் போவாகளாம்."

"நம்ம பெயமக்க எதுக்குக் கூட்டுறாளுக? சும்மா இருக்கலாம்ல?"

"நீ ஒரு திக்கம், சும்மா இருந்தா அடிப்பாகளாம். அப்பிடியும் எங்க வீட்டுக்காரம் போயி கேட்டதுக்கு, நம்ம பிள்ளைகதாஞ் சுத்தமா நல்லாக் கூட்டுதுகளாம். அந்தப் பிள்ளைகளுக்குச் சரியாக் கூட்டத் தெரியலன்னு பசப்பி உட்டுடாக."

இது நல்ல வேலதாண்டி. அப்ப நம்ம பிள்ளைக நல்லாக் கூட்டிக்கிட்டே இருக்கட்டும்; அவெம்பிள்ளைக நல்லாப் படுச்சுக் கிட்டே இருக்கட்டும். இந்தா நம்ம வயக்காட்டுகள்ள ரணபாடுபட்டு வேல செய்ய அவுக ஒக்காந்து சொகமா திங்கிறாகள்ள, அது கணக்காத்தான்."

"ஆனா ஒன்னு மதினி; நம்ம பெயலுக எப்ப எப்பன்னு பொருமிக்கிட்டேதான் இருக்கானுக. எம்புட்டு நாளைக்குத் தான் பொறுத்துக்கிட்டே போமுடியும்? நம்மதான் இப்படிக் குனுஞ்சு குடுத்துட்டே இருந்துட்டோம். நம்ம பிள்ளைகளாச்சும் தலநிமுந்து வாழனும்ங்ற ஆச எல்லாரு மனசுலயும் அனலா எருஞ்சுக்கிட்டு

தான் இருக்குது."

"அது நெசந்தான், இப்பயும் எம்புட்டுச் சமாச்சாரம் நடந்து போச்சு. பள்ளிக்கொடத்துல சின்னஞ்சிறுசுக ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போயிருச்சுனா, நம்ம தெருப் பிள்ளைகளக் கூப்புட்டுத் தான் கழுவிவிடச் சொல்வாகளாம். எம்புட்டு ராங்கித்தனம்னு பாரு."

இது நடந்து நாலஞ்சு வாரத்துலயே இன்னொரு விசயமும் நடந்து போச்சு. மூனாங்கௌாசு டீச்சரு கோமளவல்லி பொங்கலு போனசுப் பணத்த வாங்கி மணிபர்சுக்குள்ள வச்சுருந்தாகளாம். சாயங்காலம் பர்சப் பாத்தா, பணத்தக் காணுமாம். ஒடனே மூனாங் கௌாசுல படுச்ச சேரித் தெருப் பிள்ளைகள மட்டும் வீட்டுக்கு உடாமெ பள்ளிக்கொடத்துலயே வச்சு வெசாரண நடத்தி, கடேசில வெள்ளக்கண்ணு மகன் கட்டாரிதான் எடுத்தாம்னு முடிவு செஞ்சு, அவன மட்டும் பள்ளிக்கொடத்துல நிப்பாட்டிட்டாக.

இந்த விசயம் தெருவுக்குள்ள பரவ, கட்டாரியோட அம்மெ அழுது பொலம்பிட்டு பள்ளிக்கொடத்துக்கு ஓடுனா. வெள்ளக்கண்ணு நாட்டாமையக் கூப்ட்டுகிட்டு போனாரு. கூட பத்துப் பதுனஞ்சு பெரியாம்பளைகளும் போனாக. கெட்மாஸ்டரு, அவுக தெரு நாட்டமையோட பத்துப் பெரியாளுகளயும் கொண்டாந்து வச்சுருந் தாரு. கட்டாரிப் பெய மலங்க மலங்க முழுச்சுக்கிட்டு நின்னான்.

கெட்மாஸ்டருதான் மொதல்ல ஆரம்புச்சாரு. "இந்தா பாருங்கப்பா, ஒங்க தெருப் பெய செஞ்சுருக்ற வேலய. மொளச்சு மூணு எல உடல; அதுக்குள்ள மூவாயிரம் ரூபாயத், திருடிட்டான், எங்க நாட்டாமை சொல்றதுக்குக் கட்டுப்பட்டீகன்னா, நமக்குள்ளயே வியத்த முடுச்சுரலாம். இல்ல அடாவடி செஞ்சீகன்னா போலீசுல கம்ளயிண்டு குடுத்துருவோம்." சாதாரணமா ஆரம்பிக்கிற மாதிரி ஆரம்புச்சு, மெரட்டலோட முடுச்சாரு.

சேரித்தெரு நாட்டாமை குட்டியான் கேட்டாரு. "மூனாங் கௌாசுல பணங்களவு போனா, மூனாங் கௌாசுல படிக்கிற அம்புட்டுப் பிள்ளைகளையுந்தானெ கூப்டு விசாரிக்கணும். ஆனா அது என்ன, நீங்க எங்க தெருப் பிள்ளைகள மட்டும் கூப்டு விசாரிச்சிருக் கீங்களே.... இதுல என்னங்க நாயமிருக்கு?"

நீயி என்ன சொல்ல வார? எங்க தெருப் பிள்ளைகளையும் விசாருச்சிக்கணும்னு சொல்றியா?" அந்தத் தெரு நாட்டாமை கோவமாக் கேட்டாரு.

"ஆமா, ஒங்க தெருப் பிள்ளைக களவாங்கவே செய்யாதுகளா? எங்க தெருப் பிள்ளைகளப் பாத்தாத்தான் களவாணிக மாதிரி தெரிதா?," குட்டியான் கேட்டார்.

"என்னடா சொன்ன? எம்புட்டுத் திமுருன்னா, எங்க பிள்ளைகள களவாணிகம்பெ," கத்திக்கிட்டே எந்துருச்சுப்போயி குட்டியான செவுட்டுல அறஞ்சாரு அவுக தெரு நாட்டாமை.

"அவரு கேட்டதுல என்ன தப்பு? அந்தக் கௌாசுல இருக்ற அம்புட்டுப் பிள்ளைகளையும் கேட்டுப் பாத்துருக்கலாம்ல? இந்தா ஏம் மகனப் புடுச்சு களவாணின்னு வச்சிருக்கீக, இவந்தா எடுத்தாம்னு எத வச்சு முடிவு செஞ்சீக? இவஞ் சேரித்தெருப் பையன்ங்றதுனாலயா? ஒரு அப்ராணி சப்ராணின்னா ஒங்களுக்கு அம்புட்டு எளக்காரம். அப்பிடித்தானெ? ஏலேய், நீயி பணத்த எடுத்தியாடா? உண்மயச் சொல்லுடா" மகன அதட்டிக் கேட்டாரு வெள்ளக்கண்ணு.

"இல்லய்யா, நா எடுக்கலயா, ஒண்ணுக்குப் போம்போது எங்க கௌாசு அரவிந்தன்தான் ரொம்ப ரூவாத்தாளு வச்சிருந்தாயா. ஆயா கடைல பிஸ்கோத்து கூட முழுசா வாங்கித் தின்னாம்யா."

"இந்தா, யாரோ அரவிந்தனாம்ல, அவனக் கேக்க வேண்டியது தான," வெள்ளக்கண்ணு சொன்னதக் கேட்டதும் அந்தத் தெரு நாட்டாமெ வெறி புடுச்சவருகெணக்கா கத்துனாரு, "யாரடா வெசாரிக்கச் சொல்ற? ஏம்மகெ அரவிந்தனையா? அவன என்ன சேரித் தெரு கழிசடன்னா நெனச்செ? ஏங்கிட்டயே ஏம் மகனத் திருடன்னு சொல்றியா," கத்துனதோட நிக்காமெ வெள்ளக்கண்ண மாறி மாறி அறஞ்சாரு.

கட்டாரி ஓடிப்போயி அவுகய்யனக் கட்டிப் புடுச்சுட்டு அழுதான். ரேவதி டீச்சர் அவசர அவசரமா ஓடியாந்து கெட்மாஸ்டரு காதுல படபடப்பா என்னமோ சொன்னாக. ஒடனே கெட்மாஸ்டரு சுதாருச்சுக்கிட்டுச் சொன்னாரு, "சரி, சரி உட்டுத்தள்ளுங்க, நாய அடிப்பானேன், அள்ளிச் செமப்பானேன்னு ஆயிராமெ, நீங்க போயி எதுக்கு இவனுக மேல கைய வச்சுகிட்டு...நீங்க லேசாத் தட்டுவீங்க; அதச் சாக்கா வச்சுக்கிட்டு பெரிய கலவரத்த உண்டு பண்ணிருவானுக. முன்னப் போல இல்ல இவனுக; விடுங்க."

"என்னத்த உடுறது! அவெஞ் சொன்னதக் கேட்டீகள்ள?"

"அவெஞ் சொல்லீட்டாப்பல ஆச்சா? சரி....சரி....ஓம் பையனக் கூட்டிக்கிட்டு போப்பா. எதுக்கு அனாவசியமா ஒருத்தரு மேல ஒருத்தரு பழி போட்டுக்கிட்டு...டீச்சரு பணங்கெடச்சிருச்சுன்னு சொல்றாக. நல்ல வேள, யாருக்கும் பாதகமில்லாமெ போச்சு," கெட்மாஸ்டரு ரொம்ப சாதாரணமாச் சொல்லி முடுச்சுட்டாரு.

இதக் கேக்கவும் வெள்ளக்கண்ணுக்கு வந்த வெளத்துக்கு அளவே இல்ல. நெஞ்சுக்குள்ள அப்பிக் கிடந்த ஆங்காரத்தயும், ஆத்திரத்தயும் ஒண்ணாச் சேத்து தூன்னு காறித் துப்புனாரு. கட்டாரியத் தூக்கி தோளுமேல வச்சுக்கிட்டு நடந்தாரு. பின்னாலயே குட்டியானும், மத்தவுகளும் நடந்து போனாக.

# 16. தகர்ப்பு

சந்திரமதிக்கு அடிமேல அடி வாங்குனது மாதிரி இருந்துச்சு. பத்து வருசத்துக்கும் மேல அன்பு இல்லம் ஆஸ்டலுல வார்டனா இருக்குற அவளுக்கு இது புது அனுபவமாத்தான் இருந்துச்சு. "இத்தன வருசத்துல ஒருநா ஒருபொழுது ஒரு பிள்ள கூட நம்மட்ட இப்பிடி பேசுனது இல்லையே....இந்தச் சின்னப் பெய இப்பிடி மூஞ்சில அடிக்கிற மாதிரி டாண் டாண்ணு எப்பிடிப் பேசுறான்! நம்ம செய்றதுதான் தப்போ! அந்தப் பெய செஞ்சதுதான் தப்பா," கண்டமாணிக்க மனசுக்குள்ள பொலம்பிக்கிட்டா.

காட்டுப்பட்டி எந்த வசதியும் இல்லாத ஒரு குக்கிராமம். அங்க இருந்து எங்க போகனும்னாலும் நடந்தேதான் போகனும், வரனும். அன்பு இல்லம் ஆஸ்டலுதான் அங்க பெரிய கட்டிடமாத் தெரியும். மீதிப்பூரா வீடுகளும் ஓலக் குடுசைகதான். ரொம்பாக் கஸ்டப்படுற பிள்ளைக, தாயிதகபனத்த பிள்ளைகள இந்த ஆஸ்டலுல சேத்து பக்கத்துல இருந்த தொடக்கப்பள்ளிக் கொடத்துல படிக்க வப்பாக. எல்லாம் சுத்துவட்டாரத்துல இருக்குற கிராமத்துப் பிள்ளைகதான் ஆஸ்டலுல சேந்து படிக்கிறாக.

சந்திரமதியோடெ வீடும் ரொம்பாக் கஸ்டப்பட்டதுதான். அவளுக்கும் கிட்டத்தட்ட நாப்பது வயசுக்கு மேல ஆகிப்போச்சு. பத்தாங்கௌாசு படுச்சிருக்கா. கொறச்ச சம்பளம்னாலும் வேற வழி இல்லாமெ இங்கயே பத்து வருசமா இருக்கா. குடும்பக் கஸ்டத்து னால அவா கலியாணங்காச்சினு எதுவும் முடிக்காமெ இங்கயே தங்கி வேல செஞ்சுகிட்டு இருந்தா. ஆஸ்டலு மேனேஜர் போடுற சட்டதிட்டங்கள அப்பிடியே செஞ்சு நல்லபேரு வாங்கிடுவா. பிள்ளைகளையும் அதே மாதிரி கண்டுசனா கொண்டு வந்தா. பிள்ளை களுக்கு அவள அவ்வளாப் புடிக்கலன்னாலும், ஆஸ்டலு மேனேஜ ருக்கு அவள ரொம்பாப் புடிக்கும்.

சந்திரமதி அதுர்ந்து போயி ஒக்காந்துருந்தா. திருமலை ஆஸ்டலுக்கு வந்து சேந்த நாளு அவா கண்ணு முன்னால வந்துச்சு. நாலு வருசத்துக்கு முன்னால, நண்டுக் குஞ்சி கெணக்கா வந்தான். அவுக பாட்டிதான் கொண்டுகிட்டு வந்தாக. கண்ணு ரெண்டும் துருத்திக்கிட்டு இருந்துச்சு. முன் மண்ட மயிரு நெத்தில உழுந்து கெடந்துச்சு. பல்லுகூட தெத்துனாப்புல இருந்துச்சு. கன்னமெல்லாம் ஒட்டிப்போயி மலங்க மலங்க முழுச்சுக்கிட்டு நின்னான். அவுக

பாட்டியும் எலும்பும் தோலுமா நின்னாக. எடது கண்ணுல பூ உழுந்து வெளேர்னு இருந்துச்சு. வலது கண்ண சுருக்கிக்கிட்டுப் பாத்தாக. தண்ணி இல்லாமப் பாளம் பாளமா வெடுச்சுக்கெடக்குற நெலங் கெணக்கா தோலெல்லாம் விறு ஓடிக்கெடந்துச்சு. பாட்டியோட கைய இறுக்கமாப் புடுச்சுக்கிட்டு நின்னான் திருமல. பாட்டி சொன்னாக, "ஏமா, இவன் தாயத்த புள்ளமா, என்னாலயும் இவன வீட்ல வச்சு வளக்க முடியலமா. ஒரு கண்ணு வள்ளுசாப் போச்சு. இன்னொரு கண்ணும் சரியாத் தெரியல. எப்பிடியாச்சும் இவன இங்க சேத்துப் படிக்க வைங்கம்மா ஒங்களுக்குப் புண்ணியமாப் போகும்."

"இவுக அப்பா இல்லியா பாட்டி?" சந்திரமதி கேட்டா.

"இருக்கான்மா. பாடைல போற பெய. அவனாலதாம்மா ஏம் மகா அநியாயமா இந்தப் பச்சமண்ண உட்டுட்டு செத்துப் போனா; அதுல இருந்துதான் புள்ள இப்பிடிப் போனான்," சொல்லிட்டு அழுதுச்சு பாட்டி.

இவுகம்மா எப்படிச் செத்தாக? வேற புள்ளைக இல்லியா?"

"புருசம் பொஞ்சாதி சண்டைல மண்ணென்ணெய ஊத்திக் கொளுத்திப்புட்டான்மா....கட்டைல போற பெய. ஏங்கண்ணு முன்னாலியே பஸ்பமாயிட்டாமா... நாம் பெத்த மகா ஏ வகுறு எரியுதும்மா. பெத்த கொடலு எரிது.....இந்தப் பச்சப் புள்ளயும் அவா எருஞ்சு நின்ன கோலத்தப் பாத்துப் பயந்து அலறிட்டான்....எல்லாம் போச்சு. இது ஒரு புள்ளதான். சேத்துக்கோமா. இவுகப்பெ இன்னொருத்திய சேத்துக்கிட்டான். அந்தச் சிறுக்கி, புள்ளைய பாக்க மாட்டாமா, அதான் இங்க கூட்டியாந்தேன். மாட்டேன்னு சொல்லிடாதீங்க," பாட்டி பேசி ஓஞ்சு போன மாதிரி திருமலய மடில வச்சுகிட்டு ஒக்காந்தாக.

"திருமலய சேத்து இப்ப நாலு வருசம் முடுஞ்சு அஞ்சாவது வருசமாச்சு. இத்தன வருசத்துல இந்தப் பெய இப்பிடிப் பேசுனதே இல்லியே. எத்தனையோ தடவ ஆஸ்டல உட்டு ஓடிப்போனவன புடுச்சுப் புடுச்சுக் கொண்டாந்து வச்சுத்தான் படிக்க வச்சோம். இப்ப எதுக்கு இப்பிடிப் பேசிட்டான்....இம்புட்டுத் துணுச்சல இவங்கிட்ட இருக்குதுனு இப்பத்தானெ தெரியுது....," சந்திரமதி யோசுச்சுகிட்டே இருந்தா.

திருமலைய ஒன்னாங்கௌாசுல சேத்த புதுசுலயே பள்ளிக்கொடம் முடுஞ்சதும் வீட்டுக்கு ஓடிப்போவான். அஞ்சாங் கௌாசுப் படிக்கிற ஆஸ்டலு பையங்க பின்னாலியே ஓடிப் போயித் தூக்கிட்டு வந்துருவானுக. இப்பிடி பொழுதனிக்கும் ஓடவும் ஒரு நாளு சந்திரமதிட்ட ஒன்னாங் கௌாசு டீச்சர் சொன்னாங்க, "பாவம் ரொம்பாச் சின்னப் பையனா இருக்கான். இந்த வருசம் மட்டும் வீட்ல இருந்து வந்து படிக்கட்டும். பெறகு வேணும்னா ஆஸ்டல்ல இருக்கட்டும்."

"அவுக வீட்ல ரொம்பாக் கஷ்டம் டீச்சர். அம்மா கெடையாது. பாட்டியும் பாவம்தான். அதான் இங்க இருக்கான். அவனோடெ நன்மைக்காத்தானெ பாக்கோம்," சந்திரமதி சொன்னா.

"எடைல ஒரு தடவ வீட்டுக்கு விடுங்க. அப்புறம் சரியாகிடு வான்," டீச்சர் சொன்னாங்க.

அடுத்த தடவ திருமல ஓடும்போதும் வழக்கம் போல பிள்ளைககிட்ட மாட்டிக்கிட்டான். பிள்ளைக தூக்கிக்கிட்டு வந்தாக. கையுங் காலும் ஒதறிக்கிட்டு கூப்பாடு போட்டு அழுதான். "திருமல, சரி இன்னைக்கு வேனும்னா நீ வீட்டுக்குப் போயிட்டு நாளைலருந்து ஆஸ்டலுக்கு வந்திடுறியா?," சந்திரமதி கேட்டா.

திருமல மொதல்ல நம்பாதவங் கெணக்கா பாத்துட்டு பெறகு சரின்னு தலையாட்டுனான். எப்பிடியாச்சும் இங்கருந்து தப்புச்சு ஓடிரனும்னு நெனச்சவனுக்கு இது புடுச்சிருந்தது. பைய எடுத்துகிட்டு வீட்டுக்குப் போக ரெடியானான்.

"நாளைக்குக் கண்டிப்பா வந்துரனும் என்ன?" சந்திரமதி கேட்டதுக்கு வேகமாத் தலையாட்டிட்டு அதவிட வேகமா நடையக் கட்டுனான். சீக்கிரத்துல அந்த எடத்துலருந்து போயிரனும்ங்ற வேகத்துல. ஓட்டமும் நடையுமா வீட்டுக்கு வந்து சேந்தான்.

சந்திரமதி எதிர்பாத்தபடி மறுநாளு திருமல பள்ளிக் கொடத்துக்கு வரல. ரெண்டு நாளுக் கழுச்சு அவுக பாட்டி கூட்டிட்டு வந்தாக.

"சின்னப் புள்ளையாங்காட்டி வீட்டு நாவகத்துல ஓடியாந்துடு றான். இனி இப்பிடி வரமாட்டான்....என்னயா, இருந்து படிக்கனுஞ் சாமி," பாட்டி சொல்லி உட்டுட்டு போனாக.

அடிக்கடி ஓடுனாலும் திருமல படிப்புல கெட்டிக்காரனாத்தான் இருந்தான். எந்தக் கௌாசுலயும் பெயிலாகாமெ அஞ்சாங் கௌாசு வந்துட்டான். அஞ்சாங் கௌாசு வந்தப் பெறகு என்னாச்சோ, மறுபடியும் வீட்டுக்கு ஓட ஆரம்புச்சான். இப்ப வீட்டுக்கு ஓடுனாலும், பள்ளிக்கொடத்துக்கு ஒழுங்கா வந்து படுச்சான். ஆஸ்டலுக்குத்தான் போகமாட்டான். ஒன்னாங் கௌாசுல செஞ்ச மாதிரி, இப்ப யாரும் இவன வெரட்டிப் புடுச்சுக் கொண்டாந்து ஆஸ்டலுல உடமாட்டாங்க. இவனே இப்ப அஞ்சாங் கௌாசு வந்துட்டதுனால யாரையும் தொட உடமாட்டான்.

ஒரு தடவ பள்ளிக்கொடம் போயி சந்திரமதி திருமலையக் கூப்புட்டுப் பேசுனா, "இங்க பாரு திருமல, நீயி இப்பிடி ரொம்பா நாளு வாராமெ இருந்தீனா மேனேஜர் ஓம்பேர எடுத்துருவாரு. அப்புறம் என்ன செய்வெ? நீ வந்தீனா, அஞ்சு முடுச்சப் பெறகு பக்கத்துல இருக்குற பெரிய பள்ளிக்கொடத்துல ஒனியச் சேத்துப் படிக்க வப்பாரு. வந்துருடா....ஒங்க பாட்டி பாவம்டா.... என்ன.... வர்ரீயா?"

சந்திரமதி சாந்தமாக் கேக்கவும், சரி வர்ரேன்னு சொல்லிட்டுப் போனான். அதுக்குப் பெறகு பள்ளிக்கொடத்துக்கே ரெண்டு நாளா வரல. மறுபடி தானா பள்ளிக்கொடம் வந்தான். இந்தத் தடவ பாட்டியும் கூட வந்தாக. ரொம்பா புத்திமதி சொல்லி, ஆஸ்டலுல உட்டுட்டுப் போனாக. ஒரு வாரம் போல இருந்தவன், இப்ப பழையபடி ஆரம்புச்சுட்டான்.

போன ஞாயிற்றுக்கெழமதான், அப்பிடிப் பேசிட்டான். அதுலருந்துதான் சந்திரமதி கொழம்பிப் போனா. வழக்கம் போலக் காலச் சாப்பாட்டுக்குப் பெறகு பிள்ளைகள்ளாம் தோட்டத்துல புல்லு புடுங்கிக்கிட்டு இருந்தாக. சமயம் பாத்து திருமல ஓடும் போது மாட்டிக்கிட்டான். சந்திரமதிட்ட கொண்டாந்து உட்டாக. இந்தத் தடவ சந்திரமதிக்கே ரொம்பாக் கோபம் வந்துருச்சு. ஒரு குச்சிய எடுத்துக் கிட்டு வந்தா. ரெண்டு அடி முதுகுல வச்சுட்டு கோவமாக் கேட்டா.

"எத்தன தடவதாண்டா நாங்க பொறுமையா இருக்க முடியும்? இங்க என்னடா கொற ஒனக்கு? ஏண்டா ஓடுன?" திருமல எதுவுமே பேசல. ஆனா வழக்கம்போல இல்லாமெ நெஞ்ச நிமித்திகிட்டு திமுரா நின்னுகிட்டு மொறச்சு பாத்தான். அவெ நின்ன தோரணப் பாக்கயில சந்திரமதிக்கு ஒரு மாதிரியாத்தான் இருந்துச்சு. கொஞ்சங் கோவந் தணுஞ்ச கொரலுல கேட்டா, "சொல்லுடா...ஒனக்கு என்ன புடிக்கல? எதுக்காக இப்பிடி அடிக்கடி ஓடுற? நீ நல்லாதானெ படிக்கெ. அப்புறம் எதுக்கு இந்த மாதிரிச் செய்றெ?"

அமைதியா நின்ன திருமல கோவமாகக் கத்துனான். "எனக்குப் பள்ளிக்கொடம் புடிக்குது; ஆஸ்டலுதான் புடிக்கல. நானு வீட்ல இருந்து வந்தே படிக்கேன்."

"தெனமும் ரெண்டு மூணு கிலோமீட்டர் நடப்பியா?"

"நடப்பேன்."

"ஆஸ்டலு ஏன் புடிக்கல? ஒனிய இங்க என்ன செய்றாக?"

திருமல பேசல.

"சொல்லுடா. சாப்பாடு புடிக்கலயா?"

"இல்ல, சாப்பாடு புடிக்குது."

"அப்புறம்?"

"ஆஸ்டலுதான் புடிக்கல."

"ஆஸ்டலுலதான் என்ன புடிக்கலன்னு கேக்கேன்." திருமலை ரொம்பா ஆவேசமாக் கத்துனான், "இங்க தெனமும் காலைல அஞ்சு மணிக்கெல்லாம் எழுப்பி உடுறீக. அது புடிக்கல."

"பெறகு?"

"தெனமும் காலங் காத்தாலெ குளுருல பச்சத் தண்ணில குளிக்கச் சொல்றீக. அது புடிக்கல."

"வேற என்ன புடிக்கல?"

"தூங்க உடாமெ எழுப்பி உட்டு சாமி கும்புடச் சொல்றீக."

"ஆமா, ஒங்க வீட்லனாலும் காலைல எந்துருச்சு பச்சத் தண்ணில குளுச்சுட்டுத்தானெ பள்ளிக்கொடம் போகனும்? ஒங்க பாட்டி ஒனக்கு அப்பிடியே சுடுதண்ணி வச்சு குடுக்காகளோ?"

"வீட்லன்னா நானு இஸ்டப்பட்ட நேரம் எந்திருப்பேன்; இஸ்டப்பட்ட நேரம் குளிப்பேன்."

"அதுக்காகவா நீ வீட்ல இருக்கனும்ங்ற? ஒன்னுங் கெடையாது. வீட்ல இருந்தா இஸ்டத்துக்கு எங்குட்டாவது போயி டி.வி. பாத்துகிட்டுத் திரியலாம். அதுக்குத்தான் போகனும்ங்றெ."

"ஆமா, டி.வி. நாடகம் பாக்கலாம்."

"இங்கயுந்தானடா டி.வி. பாக்க உடுறோம்."

"எங்க உடுறீகெ? ஒங்களுக்குப் புடுச்சத மட்டும் போட்டு கிட்டுப் பாக்குறீக."

"ஒனக்கு சினிமா பாக்கனும். அதான் செய்திகள்ளாம் பாக்கச் சொன்னாப் புடிக்காது."

"இல்லயே, வீட்ல சினிமாவும் பாப்பேன், செய்தியும் பாப்பேன்," கோவமா கத்துனான்.

பொறுமையா பேசிக்கிட்டே இருந்த சந்திரமதி, "செய்தி பாத்துக் கிழுச்செ. எதுத்து எதுத்துப் பேசப் பழகிட்டெ. ஒன்னாங் கௌாசுல சேரும்போது கொரங்குக் குட்டி கெணக்கா வந்து நின்ன! இப்ப வளந்துட்டிலெ. பேசுவெ," சொல்லிட்டே குச்சிய எடுத்து அடிக்கப் போனா.

குச்சிய கைல புடுச்சுட்டு திருமல கோவமாச் சொன்னான், "எனிய அடிக்காதீங்க. இனிமேபட்டு அடுச்சா...அவ்வளவுதான்."

"என்னடா மெரட்டுறியா"ன்னு கேட்டுகிட்டு குச்சிய உருவித் திரும்பவும் அடிக்க ஓங்குனா.

"நானு திரும்பியும் சொல்றேன். எனிய அடிக்காதீங்க. நா ஒன்னும் முன்ன மாதிரி பயந்துகிட்டு கெடக்கல. அடிச்சா அவ்வளவுதான், ஆமா. சொல்லிட்டேன்," ரொம்பா சீரியசா சொன்னான்.

திருமல நின்ன தோரணயும், பேசுன வெதத்தயும் பாத்த சந்திரமதிக்கே என்னமோ மாதிரி ஆகிருச்சு. அதிர்ச்சியடைஞ்சு அப்பிடியே நின்னா. மேற்கொண்டு என்னத்த, எப்பிடிச் சொல்லி இவன வழிக்குக் கொண்டு வாரதுன்னு ஒன்னுமே புரிபடல. கொஞ்ச நேரம் எதுவுமே சொல்லாமெ இருந்தா. பெறகு கோவப்படாமெ சொன்னா, "இனிமே நீயி வேணும்னா கொஞ்சம் லேட்டா எந்துருச்சுக்கோ, லேட்டா குளி. ஜெபத்துக்குக்கூட வரவேண்டாம்."

"வேண்டாம் நானு வீட்ல இருந்தே படிக்கேன்."

"டி.வி.ல நாடகம்கூட பாத்துக்கோடா."

"தேவையில்ல. நானு வீட்ல இருந்தே பாப்பேன்."

"அங்கன்னா வெறும் சினிமாதானடா பாப்பெ. செய்தி பாக்கனும்டா. நாலு எடத்துல என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கனும்."

"நானு ஊரு டி.சி.ல. செய்தி பாப்பேன்."

"செய்தி பாத்துக் கிழிச்செ. எங்க போன வாரம் கேட்ட ஒரு செய்தியச் சொல்லு பாப்போம்."

ஒடனே சொன்னான். "அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மேல குண்டு போடுது."

"எதுக்குப் போடுது?"

"பின்லேடன்ற ஆளப் புடிக்க."

வாயடைச்சுப் போன சந்திரமதி எதுவும் பேசல. பேசத் தோணாமெ நின்னா. சொல்றதுக்கெல்லாம் பட்டுபட்டுனு பேசறதப் பாத்து எருச்சலடஞ்சுபோன சந்திரமதி எடுத்த எல்லா முயற்சிலயும் தோத்துப் போன மாதிரி ஒணந்தா.

கடைசியா கேட்டா, "நீ இங்க இருந்தீனா ஒனக்கு எல்லா வசதியும் கெடைக்கும்லெ. இப்ப நீ போட்டுருக்க பனியன்கூட இங்க குடுத்ததுதானெ."

இதக் கேட்ட ஒடனே மடமடன்னு பனியனக் கழட்டிக் கீழ போட்ட திருமல. "இந்தாங்க ஒங்க பனியன். எனக்கு வேண்டாம். நாம் போறேன்," சொல்லிட்டு உறுதியா நடந்து வெளிய போனான். சந்திரமதி அவனத் தடுக்கல. மறுபடியும் அதுர்ந்து போயி அப்பிடியே ஒக்காந்துருந்தா.

*தினமணி ஈகைப் பெருநாள் மலர் 2001*

# 17. இச்சி மரத்து கொரங்கு

அந்த அரசமரத்துப் பக்கமாப் போகைல எல்லாம், பார்வதிக்கு அவளோட சொந்த ஊரு நாவகத்துக்கு வரும். அவுக ஊருல அரசமரத்த இச்சிமரம்னு சொல்லுவாக. அதப் பாக்கைல அவா மனசுக்குள்ள பழைய நெனப்பு வரும். அந்த இச்சி மரத்தடிலதான் நெல்லு போட்டு அடிக்கிற களம் இருந்துச்சி. ஊர்ல நடுநிலைப் பள்ளிக்கொடத்துல படிக்கும்போது லீவு நாளுகள்ள அந்தக் களத்து மேட்டுல நெல்லு தூத்து, அந்த நெல்லக் கொண்டு போயி நாடாரு கடைல எடைக்கு எடை போட்டு சீனிக் கெழங்கு வாங்கித் தின்னத நெனச்சு தனக்குத்தானே சிரிச்சுக்கிட்டா பார்வதி.

களத்துமேட்டுக்குப் பக்கத்துலயே வேதக்காருக கல்லறை. பள்ளிக்கொடத்துல பிள்ளைக சொல்லுவாளுக, "நடுமத்தியானம் பன்னண்டு மணிக்குக் களத்துமேட்டுப் பக்கம் போகக்கூடாது; கல்லறையிலிருக்குர பேயி பிசாசெல்லாம் இச்சிமரத்துல வந்து ஒக்காந்துருக்கும்." ஒருநாளு தப்பித் தவறி மத்தியானத்துல அங்ன இருக்கயில பலத்த காத்தடிச்சது. இச்சிமரம் காத்துல பயங்கரமா ஆடுச்சு. இச்சிப்பழமாக் கொட்டுச்சு. பூராத்தையும் பெறக்கிப் பாவாடைல அள்ளிக்கிட்டு வந்து தெருவுல பிள்ளைகளுக்குக் குடுத்தா. பூராம் பயந்தாங்கொள்ளி கழுதைக. ஒருத்திகூட வாங்கித் திங்க மாட்டேனுட்டாளுக. பயங்காட்டிவேற உட்டுட்டாளுக.

"ஏத்தா, பார்வதி இந்தப் பழத்தத் திங்காத. அந்தப் பேய்கதான் இச்சிமரத்துல இருந்துகிட்டு ஆட்டம் போட்டுருக்குதுக. அதான் பூராப் பழத்தையும் உலுப்பி உட்டுருச்சு. அதுக உலுப்புன பழத்தத் திங்காத. வகுறு வீங்கிச் செத்துப் போவ." இதுக்குமேல எப்பிடித் திங்க முடியும். அம்புட்டுத்தான். பழத்தப் பூராம் குழி தோண்டிப் பெதச் சிட்டாக. இன்னைக்கு அத நெனச்சாச் சிரிப்பா வருது.

பார்வதி படிப்ப முடிச்சுட்டு இப்ப டீச்சரா இருக்கா. பள்ளிக் கொடத்துக்குப் போற வழிலதான் இந்த மரம். மானத்துக்கும் பூமிக்குமா ஒசரமா நிக்கிது. அந்த மரத்துல ஒரு கொரங்குக் குடும்பம் குடியிருக்குது. தெனமும் அங்னகுள்ள ஒரு அஞ்சு நிமிசம் நின்னு கொரங்கப் பாத்துட்டுத்தான் போவா பார்வதி. அவா மட்டுமில்ல. அங்குட்டுக் கூடிப் பள்ளிக்கொடம் போற பள்ளிக்கொடத்துப் பிள்ளைகளும் நின்னு அந்தக் கொரங்குகளக் கூப்புட்டு, வெளாண்டுட்டுத்தான் போவாக. பிள்ளைக ராமா...ராமா...ராமான்னு

கூப்புடவும் கொரங்குக எறங்கிக்கீழ வருங்க. பார்வதிக்கு ரொம்பா அருவசமா இருக்கும் ராமான்னு கூப்புடவும் எப்பிடிக் கொரங்குக்குத் தெருஞ்சுக்கிருது.? பெறகுதான் புருஞ்சுக்கிட்டா. கொரங்கு ராமான்னு கூப்புட்டதுக்கு வரல. பிள்ளைக கைல இருக்கும் பிஸ்கோத்து, வடை, இப்பிடி இதுக்காகத்தான் ஓடி வருதுங்கன்னு. பிள்ளைகளும் எதுனாச்சும் கொண்டு வந்து திங்கக் குடுப்பாக. அதுகளுக்கு இது சாமி மாதிரி. வீட்ல அப்படித்தான் சொல்லிக்குடுக்காக.

கொரங்குகளுக்கு நல்லாக் கொண்டாட்டந்தான். ராமா... ராமான்னு கூப்புட, வந்து கெடைக்குர சாமான எடுத்துத் தின்னுகிட்டு கும்மரச்சமா இருந்ததுக. பத்தாக் கொறைக்கு அரசமரத்துல பழம் பழுத்து கெடந்துச்சு. பூராப் பழத்தையும் கொரங்குகளே புடுங்கித் தின்னுங்க. அந்த மரத்துக்கு வார குருவிகளக்கூட கொரங்குக வெரட்டி உட்டுருங்க. இந்தக் கொரங்குகளுக்குத்தான் என்ன சவுடாலு! ரெண்டாப் பிரிஞ்சு போற கெளைல, ஒரு கெள மேல முதுக சாச்சு கிட்டு, பின்னங்காலு ரெண்டையும் அடுத்த கெளைல தூக்கிவச்சு முட்டுக்குடுத்து ஒக்காந்துகிட்டு அங்குட்டுக்கூடி போறவுக வாரவு களப் பாத்து பல்ல இளிக்கும். செல நேரத்துல கெளைகள்ள அங்குட்டும் இங்குட்டும் குதுச்சுக்கிட்டு சலம்பல் பண்ணிக்கிட்டு இருக்கும். மரமே சலசலத்துப்போகும். பார்வதிக்கு அந்த எடம் ரொம்பாப் புடுச்சுப் போச்சு. தெனமும் பள்ளிக்கொடம் போம் போதும், வரும்போதும் அங்னக்குள்ள நின்னுட்டுத்தான் போவா. அந்தக் குட்டிக்கொரங்கு தாய்க்கொரங்கிட்ட வகுத்துல அப்பிட்டு ஒக்காந்து சப்பிச்சப்பி பால் குடிக்கிறதே ஒரு தனி அழகுதான். குடுச்சுக்கிட்டே தலயத் திருப்பி அங்குட்டும் இங்குட்டுமா பாக்கும் அது. ரொம்பாச் செல்லந்தான்.

இம்புட்டும் போனவாரம் வரைலதான். இந்த வாரம் நெலமயே மாறிப் போச்சு. பிள்ளைங்க கொரங்குகளக் கண்டாலே அடுச்சு தொரத்த ஆரம்புச்சுட்டாக. ரெண்டு நாளைக்கு முன்னால பள்ளிக் கொடம் முடுஞ்சு வீட்டுக்கு வரும்போது பிள்ளைக கூட்டமா நின்னு கிட்டு கொரங்குகளை கல்லால எறுஞ்சுக்கிட்டிருந்தானுக. பார்வதி பக்கத்துல போயி என்ன ஏதுன்னு வெசாருச்சா, அந்நியாரம் அப்பிடிக் கூடி வந்த பெரியவரு ஒருத்தரு கேட்டாரு "ஏய்...ஏண்டா அத அடிக்கிறிக? வாயில்லா சீவன்."

"எது வாயில்லாச் சீவன்? வாயப்பாரு. மூஞ்சியப்பாரு, சீனி திங்கமட்டும் வாயி இருக்குல்ல. களவாணிக் கொரங்கு," கோவமாக் கத்துனான் ஒருத்தன்.

பார்வதி கேட்டா, "என்னடா! என்ன செஞ்சுச்சு?"

"டீச்சர், வள்ளியக்கா ரேசங்கடைலருந்து ரெண்டு கிலோ சீனி வாங்கிக்கிட்டு இப்பிடிக்கூடி வந்தாகளா? இந்தப் பெரிய கொரங்கு லபக்குனு அந்தக்கா கைலருந்து சீனிப்பைக்கட்டப் புடுங்கிட்டு

போயிருச்சு டீச்சர். பூராத்தையும் அள்ளி அள்ளித் திங்கிது டீச்சர்." அவங் காட்டிய மரக்கெளைய அண்ணாந்து பாத்தா பார்வதி. அவளுக்குக் கோவத்தவிட சிரிப்புத்தான் வந்துச்சு. உச்சாணிக் கொப்புல ஒக்காந்துகிட்டு ஒருகைல மஞ்சப்பைய வச்சுகிட்டு, மறுகையிட்ட சீனிய அள்ளி அள்ளி மொக்கிக்கிட்டு இருந்துச்சு கொரங்கு. பாதி வாய்க்குள்ள போகுது, பாதி கீழே அருவிமாதிரிக் கொட்டுது. மரத்தச் சுத்தி அங்கங்க சீனீயாக் கொட்டிக்கெடக்குது.

"வள்ளியக்கா எதுக்குடா பைக்கட்ட புடுங்க உட்டா?"

"அவுக பாட்ல பைக்கட்டத் தூக்கிக்கிட்டுப் போனாங்க டீச்சர். இந்தக் கொரங்குக்கு நாங்க எம்புட்டுத் திம்பண்டங் குடுத்திருக்கோம் டீச்சர். இது இப்பிடிச் செய்யுது. களவாணிக் கொரங்கு டீச்சர்."

பார்வதிக்கு என்ன சொல்றதுன்னு தெரியல. ஆனா கொரங்கு அப்பிடி அள்ளித் திங்கிறதப்பாத்தா கோவம் வரல. அத ரசிக்கத்தான் முடுஞ்சது. அதுனால அமைதியாப் போயிட்டா. இதுக்குப் பெறகு பிள்ளைகமத்தில கொரங்குகளுக்கு இருந்த மதிப்பு போயிடுச்சு. அதுனாலே கொரங்குகளும் சந்தோசமே இல்லாதது மாதிரி தெருஞ்சதுக. பார்வதிக்கும் மனசு சஞ்சலமாத்தான் இருந்துச்சு. ரெண்டு மூனு நாளுக்கமுச்சு பார்வதி பள்ளிக்கொடம் போம்போது பாத்தா மரத்துல கொரங்குகளே இல்ல. சே, இந்தப் பிள்ளைக பூராஞ் சேந்து கொரங்க வெரட்டியே உட்டுடாங்கன்னு நெனச்சுக்கிட்டே போனா. இச்சிமரத்துக்குக் கொஞ்சம் தள்ளி, அந்தக் கொரங்கு ஒரு பெரிய பன்னி மேல ஒக்காந்துகிட்டு போயிக்கிட்டுருந்துச்சு. பார்வதிக்குத் தூக்கிவாரிப் போட்டிருச்சு. சும்மாயுமா போனது கொரங்கு. அங்குட்டும் இங்குட்டுமா தலயத் திருப்பித் திருப்பிப் பாத்துகிட்டு என்னமோ பெரிய ஊர்வலம் போறமாதிரி போனதப் பாத்துட்டு பார்வதிக்கு ஆச்சரியத்துலயும்அ சந்தோசத்துலயும் கையும் ஓடல, காலும் ஓடல. பன்னியுங் கொரங்கும் ஒரு பொதருக்குள்ள போனப்பெறகும் நின்னுகிட்டே இருந்தா. அன்னைக்குப் பூராம் இதே நெனப்புதான். சாயங்காலம் வரும்போதும் அந்த எடத்துல கொரங்கு பன்னிமேல சவ்வாரி செஞ்சுகிட்டுப் போச்சு. இப்ப அத ரொம்ப நேரம் பாக்க முடியல. ஏம்னா பிள்ளைக பூராம் அது பின்னால கல்லுட்டு எறுஞ்சுக்கிட்டே அத வெரட்டிகிட்டு ஓடுனாக. பார்வதிக்கு பிள்ளைக மேல கோவமா வரவும் அவுகளச் சத்தம் போட்டா. ஆனா இவா பேச்ச அங்க யாருங் கேக்குறது மாதிரி இல்ல.

"டேய், களவாணிக் கொரங்கு பன்னிமேல ஒக்காந்து போகுதுடா. விடாதீங்க."

"பன்னிதான் ஒனக்கு பிரண்டா. இரு இரு. பன்னியையும் ஒனியையும் என்ன செய்றம்னு பாரு."

"ஏலேய், கொரங்கு பன்னிகூட போதுடா, அங்கபாரு பன்னிதலையத் தொட்டுத் தொட்டு என்னமோ சொல்லுதுடா."

இப்படி பலமாதிரி சொல்லிக்கிட்டே வெரட்டி உட்டுட்டானுக. பன்னி வேகமா ஓடுனாலும், கொரங்கு கீழ உழுகல. எறங்கவும் இல்ல. பன்னி மேல ஒக்காந்துகிட்டே கொரங்கும் ஓடியே போச்சு.

பார்வதிக்குக் கஸ்டமா இருந்துச்சு. நடந்துகிட்டே யோசுச்சுக் கிட்டே போனா.

"பன்னி, பன்னி, இந்தப் பசங்களப் பாத்தியா! இம்புட்டு நாளா, எனிய ராமா ராமான்னு மரியாதயா கூப்புட்டு திங்கக் குடுத்தாங்க. இப்பப் பாரு எனிய கொரங்கு கொரங்குனு வைறாங்க." கொரங்கு சோகமாச் சொல்லுச்சு.

பன்னி லேசாச் சிருச்சுக்கிட்டே சொன்னது, "ஆமா...நீ கொரங்குதான, பெறகு ஒனிய கொரங்குன்னு சொன்னா என்னவாம்? சடச்சுகிறயே!"

"அது இல்ல, இவுங்க எப்பயும் எனிய கொரங்குன்னு சொல்லியிருந்தா பரவாயில்லை. நீயும் பாத்திருக்கியே. எப்பிடி ராமா ராமான்னு கூப்புடுவாக. இப்பமட்டும் எனிய இப்படிப் பேசறது கஸ்டமாத்தான் இருக்கு."

பன்னி நக்கலாக் கேட்டது. "ஆமா இம்புட்டு நாளாப் பிரியமா இருந்துட்டு இப்ப மட்டும் எதுக்கு வெரட்டுறாக?"

"பாத்தியா, பாத்தியா. ஒன்னுந் தெரியாதது மாதிரிக் கேக்கியே. இந்த மனுசக்குட்டிகள நம்பவே கூடாது. பாத்துக்கோ. அன்னைக்கு ஒருத்திக்கிட்டே சீனிப்பையப் புடுங்கிட்டம்ல. அதுலருந்துதான் இப்பிடி விரோதியாகிட்டாங்க."

"பின்னே நீ செஞ்சது நாயமா? பாவம், அந்தப் பொம்பள ரெண்டு கிலோ சீனியும் தின்னு போட்டியே."

"இல்ல. இத்தினிதான் தின்னேன். மீதி பூராங் கொட்டிருச்சு."

"ஆனாலும் நீ செஞ்சது தப்புத்தான. ஒனிய ராமா ராமான்னு கூப்டு திங்கக் கொடுத்தாகள்ள.... அந்த மரியாதயக் காப்பாத்திக்காம இப்பிடிச் செஞ்சு போட்டியே."

பன்னி சொல்லவும் கொரங்குக்குக் கோவம் வந்துருச்சு. முன்னங்காலுட்ட பன்னி தலைல லேசா தட்டிட்டு சொன்னது. "நீ என்னமோ அவுகளுக்காக வக்காலத்து வாங்கிறியே...அவுக என்ன எனிய சும்மாவா ராமா ராமான்னு கூப்புட்டாங்க? அவுக ராமரு கடவுளுக்கு எங்க மூதாதையர் எம்புட்டு ஒத்தாசையா இருந்திருக்கா கன்னு தெரியுமா? எங்களப் பெறகு எதுக்கு ஆஞ்சநேயர்னு சாமியாக்கிக் கும்புடுறாகன்னு நெனச்ச?"

"ஆமா இதெல்லாம் ஒனக்கு எப்பிடித் தெரியும்?"

"எங்க பாட்டி சொல்லுவா. அதான் தெரியும்."

"எங்க பாட்டிகூட கடவுளு எங்க ரூவத்துல வந்தாருன்னு சொல்லுவா."

பன்னி சொல்லவும் கொரங்கு கைதட்டிச் சிருச்சது. "இப்பிடி வேற யாருட்டயும் போய் சொல்லித் தொலைக்காத ஒனிய உண்டு இல்லன்னு ஆக்கிப்போடுவாக."

"ஏன்! நீ மட்டும் ஓம் பெருமயச் சொல்லும்போது, நானுஞ்சொன்னா என்னவாம்." பன்னி எருச்சலாக் கேட்டது.

"நீயும் நானும் ஒன்னாயிடுவமா என்ன? வெவரங்கெட்டுப் போயிப் பேசுறியே?" கொரங்கு ஆவேசமாக் கத்துச்சு.

"ஏ ஆகமாட்டோம். சாமி வராக அவதாரம் எடுத்தது ஒனக்கெங்கே தெரியப்போகுது." பன்னி உருமுச்சு.

"தெரியும் தெரியும். அதுக்காக நம்ம சமமாயிருவமா என்ன?"

"கரெக்டு, சமமாக மாட்டோம் ஒனிய விட நானு ஒசத்தி ஆகிட்டேன். ஏன் தெரியுமா? சாமிக்கு நீயி ஒதவிதாஞ் செஞ்ச. ஆனா சாமியே எங்க வடிவம் எடுத்தாரே! அப்ப யாரு பெருசு. நீ சொல்லு." பன்னி சொல்லிட்டு வில்லன்மாதிரி சிரிச்சது.

அந்தச் சிரிப்புல ஒக்காந்துருந்த கொரங்கு தவறி கீழ உழப்பாத்துச்சு. சட்டுனு பன்னியோட ரெண்டு காதுகளையும் புடுச்சுச் சமாளிச்சுக்கிட்ட கொரங்கு கொஞ்சம் கோவந்தணுஞ்ச கொரல்ல சொன்னது. "எல்லாஞ் சரித்தான். ஆனாலும் நடைமுறையப் பாத்தா, எனக்குக் கெடைக்ற மதிப்பு மரியாதை ஒனக்குக் கெடைக்குறதில்ல. ஒனக்குக் குடுக்கமாட்டாங்க."

"ஏனாம்?"

"ஏன்னா, நீயி குப்பைக்காட்டுல அலஞ்சு திருஞ்சு, கண்ட அசிங்கங்களையும் தின்னுர. பாக்கவும் ஒரு அழகு அந்தஸ்து இல்லாம இருக்க, கன்னங்கரேர்னு ஓம் மூஞ்சியப் பாக்க சகிக்கல. அதான்."

"ஓம் மூஞ்சியப் பாத்தா எப்பிடி இருக்காம்! சீ.....கடேசில நீயும் அந்த மனுசங்க மாதிரித்தானா. அதுங்கதான் கருப்பு, செகப்பு, அழகு அசிங்கம், சுத்தம், அசுத்தம், வெக்கக்கேடு. ஏன் ஆணு பொண்ணுன்னு பிரிச்சுப் பிரிச்சு சண்ட போட்டுகிட்டு கெடக்காக. நீயும் ஒம்புத்தியக் காட்டிட்ட. உங்கிட்டருந்துதான் அவுக வந்தாங்கன்னு சொல்றாக. சரியாத்தான் போச்சு." சொல்லிவிட்டு ஒடம்ப ஒரு ஆட்டு ஆட்டி கொரங்க கீழ தள்ளி உட்டுருச்சு.

சுதாருச்சுகிட்ட கொரங்கு பன்னிய போகஉடாம வழி மறிச்சுக் கிட்டு சொன்னது. "இந்தபாரு, நீயி எனிய என்னன்னாலும் சொல்லிக்கோ, ஆனா அந்த மனுசங்ககூட மட்டும் சம்மந்தப்படுத்திப் பேசாத. ஆமா, எனக்குக் கெட்ட கோவம் வரும். நாங்க ஒன்னும் அதுகமாதிரி இல்ல. அதுக மூஞ்சிகளப் பாரு, எப்பயும் இறுகிப்போயி கெடக்குதுக. மருந்துக்குக்கூட இத்தினி சிரிப்போ. சந்தோசமோ கெடையாது. இந்தப் பள்ளிக்கொடத்துப் பிள்ளைக இப்பிடித்தான் போறாக வாராக. அதுக மூஞ்சிகளப் பாரு. இஞ்சி தின்ன

கொரங்காட்டம்....சே.....அத உட்டுரு. எனியவே நானு சொல்லிப் போட்டேன். அதுக மூஞ்சிகளப் பாரு. வெசனம் புடுச்சுப்போயி.... ஏதோ எங்களப் பாக்கைல மட்டும் கொழந்தைகளா இருந்து சிரிக்குதுங்க, வெளாடுதுங்க, இல்லன்னா மூட்டை மூட்டையா பைக்கட்டுகளத் தூக்கிக்கிட்டு.... பாவம் அதுக."

"அவுக படிக்கப் போறாக. அதான்." பன்னி சொன்னது.

படிக்கப் போனா என்ன, இப்பிடியா கழுத பொதி செமக்குறது கெணக்கா செமந்து சாகனும். நல்ல வேள நம்ம மனுசனாப் பெறக்கல. இல்லன்னா நம்மளம் இப்பிடித்தான் நொந்துபோயி அலையனும்." கொரங்கு சொல்லிட்டு மறுபடியும் பன்னி மேல ஏறி ஒக்காந்துச்சு.

"சின்னதுகளே அப்பிடின்னா பெருசுகளப் பத்திக் கேக்கவா வேணும். ஓடி ஓடிச் சம்பாதிக்காகளாம். சம்பாதுச்சு என்ன செய்ய! சந்தோசமே இல்லையே...இந்தப் பார்வதி டீச்சர் தெனமும் இப்பிடிப் போறாளே....பாத்தியா. அவா மூஞ்சியப் பாத்தின்னா அம்புட்டுச் சோகம் அப்பிக் கெடக்கும். இந்த மரத்துக்கிட்ட வந்தான்னா எங்களப் பாத்துச் சிரிப்பா. அப்ப அவா எம்புட்டு அழகா இருப்பா தெரியுமா. அதப்பாக்கவே நாங்க அந்நியாரம் ரொம்பச் சேட்ட செய்வோம். அது அவளுக்குப் புடிக்கும்.

பேசிக்கிட்டு இருக்கும்போதே கொரங்கோட சம்சாரமும், குட்டியும் குதுச்சுக்கிட்டு ஓடியாந்தாக. பன்னி முதுகுல இருந்த கொரங்கும் குதுச்சு ஓடுச்சு. மூனும் மடமடன்னு பக்கத்துலருந்த பனமரத்துல ஏறுச்சுக. ஒரு மரத்துல இருந்து இன்னொன்னுக்குத் தாவித் தாவி வெளாண்டதுக. பன்னி, குட்டிகளோட சிருச்சுக்கிட்டே பெரிய பட்டாளங் கெணக்கா ஓடுச்சு.

இப்பிடிப்பட்ட நெனப்பு எனக்கு ஏன் வந்துச்சு! பார்வதி பெருமூச்சு விட்டா.

*கண்ணில் தெரியுது வானம் - தொகுப்பு 2001*

# 18. வலியும் வழியும்

"ஏமா, சாவடிக்கிட்ட வேப்பமரத்துகிட்ட பாரும்மா. எம்புட்டு காக்காய்க இருக்குனு பாரேன். எல்லாக் காக்காய்களும் கா....கா...ன்னு கத்திக்கிட்டே சுத்திச் சுத்தி வருதுகம்மா," குமாரு அவுகம்மயிட்டச் சொன்னா.

"காக்கா செத்ததுக்கு அழுதுகிட்டு இருக்குதாக்குமா?"

"ஆமா... அழுகுது. நீ போயிக் கண்ணத் தொடச்சு உடு."

குமாரு வேகமா வேப்பமரத்துக்கு ஓடுனான். அங்க நெறய்யாப் பேரு கூட்டமா நின்னுகிட்டு, சோ...சோ...ன்னு காக்காய்கள வெரட்டிக்கிட்டு இருந்தாக. குமாருக்குப் பின்னாலியே சாவடிக்கு வந்த நாகம்மா, "ஏலேய் குமாரு, ரொம்பாக் கிட்டத்துக்குப் போகாதடா. காக்கா கொத்திப் போடும். ஏ.....எம்மா.... சன்னக்காக் காய்களான்னு பாரு. மொலு மொலுன்னு மொய்க்கவுல செய்யுது," சத்தமாச் சொன்னா.

முண்டியடுச்சு உள்ள போன குமாரு கூட்டத்துக்கு வெளிய வந்த அவுகம்மயிட்ட சொன்னான்.

"ஏமா, பாவம்மா...உள்ள ஒரு கருத்தக் குருவி பயந்துபோயி ஒக்காந்திருக்குமா....இந்தக் காக்காய்க பூராம் அந்தக் குருவியக் கொத்திக் கொத்தி, அதுக்கு ரத்தம் ஒழுகுதம்மா."

"எங்னக்குள்ளடா? தள்ளிக்கோ பாக்கலாம்," உள்ள போயி எட்டிப் பாத்தா.

"இது குயிலுக் குஞ்சிலே...அதான் இந்தக் காக்காய்க இம்புட்டு ஆவேசமா வெரட்டிக் கொத்துதுக," ஆராயிக் கெழவி இழுத்தா.

காக்காய்க கொத்திக் கொத்தி குயிலோடெ எறகுக மானா வாரியா செதறிக் கெடந்துச்சு. கழுத்துக்கிட்ட ரத்தம் வடிஞ்சது. தலைக்கு மேல காக்காய்க கத்திக்கிட்டே சுத்திக்கிட்டுருந்துச்சுக. பெரியாளுக கொஞ்சப் பேரு போயிட்டாக. சின்னஞ்சிறுசுக மட்டும் குயிலுக்கிட்டயே ஒக்காந்து கெடந்தாக.

நாகம்மா கிட்டத்துல போயிக் குயிலத் தூக்குனா. அது படக்குனு அவ கையக் கொத்துச்சு. வேகமாக கைய ஒதறிட்டு ஆத்துரமாச் சொன்னா,

"பாத்தீகளா, இவளுக்கு இருக்குற நட்னய! என்னமோ பாவப் பட்டு எடுத்தா எனியவே கொத்துரா. அந்தக் காக்காய்களக் கொத்தி

வெரட்ட வேண்டியதுதானெ! கொத்துப்பட்டு ரத்தம் ஒழுகையிலகூட மணியம் பண்ணுது பாரு."

"அதுக்கென்ன தெரியும் மதினி. ஒனியப் பாக்கைல கரேர்னு காக்கா மாதிரித் தெரிஞ்சிருக்கும் போல, அதான் ஒனியக் கொத்துது," முத்துலச்சுமி நக்கலாச் சொல்லிட்டுச் சிரிச்சா.

ஒடனே நாகம்மாளும் பதிலுக்குக் கத்துனா, "வேணுமே செத்தபின்னலுக்கு! எனியப் பாத்தாடிக் காக்கா மாதிரி இருக்குன்னே? ஒனியப் பாத்தா அண்டங்காக்கா மாதிரில இருக்குது. எங்க நீ வந்து புடி பாப்போம். ஒனியக் கொத்தாமெ உட்ருதான்னு பாப்போம்."

குமாரு ஒரு குச்சிய எடுத்துட்டு வந்து அதுல குயிலத் தூக்குனான். குயிலும் குச்சி மேல ஏறி ஒக்காந்துச்சு. குச்சியக் கொஞ்சம் மேல தூக்கவும் மறுபடியும் காக்காய்க வந்து கத்துச்சுக.

ஆராயி கெழவி கத்துனா.

"ஏலேய் கீழ போடுடா....காக்கா சுத்திச் சுத்தி வருது. ஒ மண்டயக் கொத்தப் போகுது பாரு. வசம்மா மொட்ட போட்டுத்தான் வச்சிருக்க. கொத்துச்சுனா மண்ட பொத்தலாப் போகும் ஆமா....."

"ஏமா, இதத் தூக்கிக்கிட்டு வீட்டுக்குக் கொண்டு போவோமாமா?," குமாரு ரொம்ப ஆர்வமாக் கேட்டான்.

"ஏ....சும்மா கெடக்கமாட்டியாடா? இதக் கொண்டுபோயி என்ன செய்ய?"

"கொண்டுபோயி என்ன செய்யவா? குயிலுக்கறி திங்கக் குடுத்துவச்சுருக்கணும்டி. ஒடம்புக்கு நல்லது. கொண்டு போயி வெஞ்சனம் வை," ஆராயிக் கெழவி சொன்னா.

"ஆமா...இதுல கொள்ளையத்த கறி இருக்கும். இத்தினிக்கானு குஞ்சி."

"அப்ப பெருசா இருந்தா நீயி திம்பெ. என்ன மாதிரி?," முத்து லச்சுமி கேட்டா.

"ஏ....தின்னா என்ன? குயிலுக்கறி தின்னா கொரலு நல்லா வரும்," நாகம்மா சொன்னதக் கேட்டு அம்புட்டுப் பேரும் சிருச்சாக.

"அப்ப மாட்டுக்கறி திங்குறவுகளுக்கெல்லாம் மாடு மாதிரி கொரலு இருக்குமா?," ஆறுமுகம் கேக்கவும் மறுபடியும் எல்லாருஞ் சிரிச்சாக.

"ஒங்ககிட்ட ஒண்ணும் பேச முடியாது. எது சொன்னாலும் எடங்கலுக்கு மொடங்கலாக் கேப்பீக. இப்ப என்ன சொல்லிட்டம்னு அம்புட்டுப் பேத்துக்கும் சிரிப்பாணி அள்ளுது? ஏலேய் நீ போட்டுட்டு

வாடா. பொழுது போகுது.

“போயி ஒலய வச்சு சோத்தக் காச்சணும். இந்த தொப்ளான் கடவரைக்கும் போயிட்டு வந்துரு. வாயா,” நாகம்மா கூப்புட்டாலும் குமாரு அசையவே இல்ல. குச்சிய வச்சுகிட்டு ஒக்காந்தே இருந்தான்.

“ஏமா இதத் தூக்கிட்டுப் போயி வீட்ல வச்சு வளக்கப் போறேன். என்னம்மா?,” குமாரு விடாப் பிடியாக் கேட்டான்.

“அந்த கையகல வீட்டுக்குள்ள இதைக் கொண்டு போயி என்ன வச்சு வளப்பெ? அப்பயும் எந்தக் காலத்துல குயிலுக்குஞ்சிய வீட்ல வச்சு வளத்தாக? ஒரு கிளிக்குஞ்சினாலும் தேவல. சரி போட்டுட்டு வாடா.”

குமாருகூட நாலாங்கௌாசு படிக்கிற பெயல்களும் அங்ன இருந்தானுக. குமாரு உட்டுட்டா, அதத் தூக்கிட்டுப் போக ரெடியா இருந்தானுக. ஆனா குமாரு அசையாமெ குயிலுகிட்டத்துலயே இருந்தான். திரும்பியும் அவுகம்மயிட்டச் சொன்னான்.

“ஏமா குயிலுக் குஞ்சி பாவம்மா; இதுக்குக் கூடுகூட கெட்டத் தெரியாதாம். எங்க பாடத்துல வந்துருக்கு.குமாரு ஒரு குச்சி எடுத்துட்டு வந்து அதுல குயிலத் தூக்குனான். குயிலும் மேல ஏறி ஒக்காந்துச்சு.

அதுனால நாம எடுத்துட்டுப் போயி, நம்ம வீட்டுத் திருணயில பாஞ்சாலிக் கூடைல கவுத்திப் போட்டு வளப்போம்மா.”

“ஏண்டா, குயிலுக்குக் கூடுகெட்டத் தெரியாதுன்னு பொஸ்தகம் படிச்சுத்தான் தெரியணுமாக்கும்டா? எங்களுக்குப் பொஸ்தகம் பாக்காமயே தெரியுமேடா,” ஆராயி கெழவி எகத்தாளமாச் சொன்னா.

பெயல்க பூராம் கெழவிய அருவசமாப் பாத்தானுக. ஆனந்தன் கேட்டான்.

“அப்ப குயிலு எப்பிடி பாட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும்?”

“ஏலேய் இது காக்கா கூட்ல முட்டையிடும். காக்காதான் குஞ்சி பொரிக்கும். என்ன பாட்டி?,” வீரன் சொன்னான்.

“அந்தா கரெக்டாச் சொல்றானே. அப்ராணி காக்கா முள்ளுப் பெறக்கி, சுள்ளி பெறக்கி கஸ்டப்பட்டு கூடுகெட்டி வைக்க, இது போயி அலுங்காமெ குலுங்காமெ அந்தக் கூட்ல போயி முட்டையிட்டுட்டு ஓடுச்சுனா, எம்புட்டுக் களவாணித்தனம்னு பாருங்க,” ஆராயிக் கெழவி சொன்னா.

குயிலு திக்கம் திக்கம் பதறிப் பதறிப் பாத்துச்சு. காக்காய்க கூட்டம் கொறைஞ்ச மாதிரி இருந்துச்சு. குமாரு குயிலத் தடவி

உட்டுக்கிட்டே இருந்தான். ஏலேய், நீ இப்ப எந்துருச்சு வரல்லன்னா, ஒங்கய்யங்கிட்டச் சொல்லி தோல உரிக்கச் சொல்லுறேன்னு அவுகம்மெ சொல்லிட்டுப் போயிட்டா. அப்பயும் குமாரு அசையல. ஆராயிக் கெழவிட்ட கேட்டான், "குயிலு வந்துச்சுன்னா காக்கா எதுக்கு அத உடுது?"

"காக்கா எங்கலே உடுது? இது களவாணிக் கழுத. காக்கா இல்லாத நேரமாப் பாத்துப் போயி முட்டையிட்டுட்டு ஓடிப்போகும்."

பெயல்கள்ளாம் என்னமோ கதகேக்குறது கெணக்கா கெழவிக் கிட்ட வந்து ஒக்காந்தானுக. குமாரும் குச்சியத் தூக்கிக்கிட்டே கொஞ்சம் நகண்டு வந்து ஒக்காந்துகிட்டான்.

"அப்பக் குயிலு முட்டையக் காக்கா தான் அடகாக்கும், என்ன பாட்டி?"

"ஆமா. அடகாத்து குஞ்சி பொறிக்கிறதோடெ மட்டுமா போச்சு. அதுகளுக்கு எர பெறக்கியாந்து ஊட்டி வளத்து உடுறதும் காக்காதான்."

"ஏம்பாட்டி, தங்குஞ்சிக்கும் குயிலுக் குஞ்சிக்கும் வித்தியாசம் தெரியாதாக்கும்?"

"அதுக்கெங்கடா தெரியப் போகுது? ஒன்றரக் கண்ண வச்சுகிட்டு ஏமாளியா ஊட்டி ஊட்டி வளக்கும். காக்கா குஞ்சியும் குயிலுக் குஞ்சியும் கருப்பா ஒரே மாதிரிதானெலே இருக்குது?"

"ஆமா.... அதான் காக்காய்க்குத் தெரியல," என்னமோ புதுசாக் கண்டு புடுச்சிட்ட மாதிரி குமாரு இழுத்தான்.

ஆராயிக் கெழவி தொடர்ந்து சொன்னா.

"ரெண்டு குஞ்சிகளும் வளருமா....கொஞ்சம் பெருசானப் பெறகு ரெண்டு குஞ்சிகளும் கத்த ஆரம்பிக்குமா....அப்பந்தாங் காக்கா கண்டு புடுச்சுப் போடும்."

"எப்பிடி?"

"எப்பிடியா? குயிலுக் குஞ்சிச் சத்தம் வேற மாதிரிலடா இருக்கும். அத வச்சுக் கண்டுபுடுச்சுட்டு, காக்காய்க்கு வெளமா வரும். நம்மள இம்புட்டு நாளா ஏமாத்திருச்சேன்னு, அந்தக் குஞ்சிய கீழ தள்ளி உட்டுரும். பெறகு அத வெரட்டி வெரட்டி கொத்திச் சாகடிக்கும். அதுக்கு றெக்க நல்லா மொளச்சிருந்தா தப்புச்சு ஓடிப்போகும். இல்லன்னா மாட்டிக்கிரும்."

"அதாம் பாட்டி இந்தக் குயிலுக் குஞ்சும் மாட்டிக்கிருச்சு. அதான் காக்காய்க இத வெரட்டுதுக."

"ஒரு காக்காய்க்கு எம்புட்டு காக்காய்க சப்போட்டுக்கு வருதுக

பாட்டி? பாவம் இந்தக் குஞ்சி," சொல்லிக்கிட்டே குமாரு தடவிக் குடுத்தான்.

"காக்காய்கன்னா அப்பிடித்தாண்டா ஒத்துமையா இருக்குங்க. ஏதாச்சும் எர கெடச்சாலும் பாரு. எல்லா காக்காய்களையும் கத்திக் கத்திக் கூப்ட்டு எல்லாஞ் சேந்துதான் திங்குங்க. இப்பயும் பாருங்க. ஒத்தக் காக்காய்க்கு எத்தன காக்காய்க வந்து சண்டபோடுதுகன்னு," ஆராயிக் கெழவி சொல்லிக்கிட்டே சுத்தி முத்திப் பாத்தா.

"குயிலோடெ ஒத்தைக்கு ஒத்த வந்து சண்டை போடணும் பாட்டி. அத உட்டுட்டு ஒத்தக் குஞ்சிய இம்புட்டுக் காக்காய்க வெரட்டுனா இது என்ன செய்யும்? பாவம் பாட்டி," குமாரு சொன்னான்.

"போடா போ. ஒனக்கென்ன தெரியும்? குயிலுக்குப் போயி பாவம் பாக்காதடா. காக்கா எம்புட்டுக் கஸ்டப்பட்டு ஒழைச்சு கூடுகெட்டுது? அப்ப மட்டும்?," சரிடா போங்கடா பொழுது போகுது.

இவுக பேசிக்கிட்டு இருக்கியலயே திடீர்னு குயிலு பட படன்னு றெக்கைய அடிச்சுக்கிட்டு பறந்து ஓடுச்சு. மறுபடியும் காக்காய்க பூராம் அத வெரட்டிக்கிட்டே பின்னாலியே படை யெடுத்துப் பறந்துச்சுக. காக்காய்க உடாதுடான்னு சொல்லிட்டு கெழவி எந்துருச்சுப் போனா. பெயல்களும் போயிட்டானுக.

மறுநாளு சாயங்காலம் அந்த வேப்ப மரத்தடில பெயல்க வெளாண்டுகிட்டு இருந்தானுக. ஆராயிக் கெழவியும் வேற செல பொம்பளைகளும் அங்ன ஒக்காந்து பேசிக்கிட்டு இருந்தாக.

"ஏலேய் குமாரு, நீதான் குயிலுக்குஞ்சியாம். நாங்கள்ளாம் காக்காய்க என்ன? நாங்க ஒனிய வெரட்டுவோம். நீயி எங்களுக்குப் பயந்துகிட்டு ஓடணும். சரியா? ஏ வாங்கடா எல்லாரும். புது வெளாட்டு வெளாடுவோம்," ஆனந்தன் கூப்பிட்டான்.

வெளாட்டு தொடங்குச்சு. குமாரு ரெண்டு கையயும் விரிச்சு பறந்து கிட்டே கூ...கூன்னு கத்திக்கிட்டே ஓடுனான். மத்த பெயல் களும் கைய விரிச்சு மேலேயுங் கீழயுமா ஆட்டிகிட்டு கா...கான்னு கத்திக்கிட்டே வெரட்டுனானுக.

இவனுகளுக்கு வேற எடமே கெடக்கலயாக்கும். இங்ன வந்து இந்தச் சத்தம் போடுறானுக. காதே வலிக்குதுன்னு பொம்பளைக சத்தம் போட்டாக.

"ஒங்களுக்கு காது வலிக்குது. தங்கள ஏமாளியாக்குற குயிலுனால காக்காய்களுக்கு எப்பிடி வலிக்கும்? போடுங்கடா நல்லா," ஆராயிக்கெழவி காக்காய்களுக்கு தெம்பூட்டுனா.

இந்தியா டுடே,
இலக்கிய மலர், 2002

# 19. குதர்க்கம்

காலைல ஏழெட்டு மணி இருக்கும். தவசிக் கெழவி கம்பூணிக்கிட்டு, கைல ஒரு தூக்குச்சட்டிய எடுத்துக்கிட்டு கெழக்காம போய்க்கிட்டுருந்தா. கம்ப வச்சுத் தட்டித் தட்டி மெதுவா நடந்து போனா.

"என்ன கெழவி. கெளம்பிட்டியா? ஒனக்கு எம்புட்டுத் தடவ சொன்னாலும் நீ கஞ்சி வாங்குறத உடமாட்டெ. மத்த கெழவிகள்ளாம் இங்ன பால்வாடில கஞ்சி வாங்கிக் குடுச்சுட்டு சூசுவான்னு குத்த வைக்கலாம்ல? நீ மட்டும் ரொம்பா நட்ன புடுச்சவா," ஜெயராசு சொன்னான்.

ஜெயராசுகூட இன்னும் பத்துப் பேரு படுச்ச பெயல்களா ஒக்காந்துருந்தாக. அந்த வேப்ப மரத்து நெழலுல ஒக்காந்து பேப்பரு வாசுச்சுகிட்டு இருந்த பையங்க பேப்பர மூடிவச்சுட்டு தவசிக் கெழவியப் பாத்தாக.

"இங்க வா பாட்டி, ஒக்காரு," தவசியும் கம்பூணிக்கிட்டே வந்து, ஒக்காந்திருந்த பையங்க மேல உழுகுறமாதிரி வந்தா.

"பாத்தியா....பாத்தியா....எம்புட்டு பனுக்கலு பனுக்குறா. ஒனக்கு நெசம்மாத்தாங் கண்ணு தெரியலயாக்கும்! இங்கருந்து தெனமும் பல சாதித் தெருவுகள தாண்டி நாய்க்கமாரு தெருவுல போயிக் கஞ்சி வாங்கத் தெரிது. இப்ப மட்டும் மேல வந்து இடிக்கியே. எல்லாம் பம்மாத்து வேல."

"ஏலேய், அதாருடா அவெ மூக்கம்மா பேரந்தானெ? எனிய வாடா பம்மாத்துங்றெ? போயி ஒங்கம்மயக் கேளு; ஒங்க பாட்டியக் கேளு," சொல்லிக்கிட்டே ஒக்காந்தா.

"பாத்தியா....கண்ணு தெரியாட்டி, இன்னாருதா பேசுனாகன்னு எப்பிடிக் கண்டுபுடுச்செ?"

"அட பெயமக்கா, கண்ணுதாந் தெரியல. காதுமாடா அவுஞ்சு போச்சு? ஒருத்தரு பேசுற கொரலுவச்சே ஆளக் கரெக்டா சொல்லிப் போடுவேண்டா. நாஞ் சின்னதுலருந்து பெறந்து, வளந்து, வாக்கப் பட்டு பிள்ளப் பெத்து, பேரம் பேத்தி எடுத்த ஊருல தடவித் தடவிப் போகத்தெரியாதா என்ன? கண்ணு வள்ளுசாத் தெரியாமப் போகல. மங்கலாத் தெரியும்டா."

எல்லாரும் அவளையே பாத்தாக. எழுவது வயசாகி இருக்கும்.

தோலு பூராம் சுருங்கிக் கெடந்தது. எப்பயும் போல எரும கலக்குன கொளங்கெணக்கா கண்ணு ரெண்டும் கலங்கிப் போயி இருந்துச்சு. கழுத்துல ஏழெட்டு கறுப்புக் கயிறு போட்டுருந்தா. கயிறு பூராம் கண்ட கண்ட சாமிகளத் தொங்க உட்டுருந்தா. பல்லுப் பூராம் காவி புடுச்சு செம்மண் கலருல இருந்துச்சு. இந்த வயசுல கூட பல்லு இருக்குதுண்ணு அருவசமாப் பாத்தாக.

"இன்னும் பல்லே உழுகலயா பாட்டி?"

"ஒத்தப்பல்லு உழுகலடா. இப்பக்கூட மாட்டெலும்பு கெடச்சா நல்லாக் கடிப்பேன். கெடைக்கத்தான் மாட்டேங்கி," சொல்லிக்கிட்டே ஈன்னு வாயத் தொறந்து பல்லுப் பூராங் காட்டுனா.

"யே ....சாமிகா...மூடிக்கோ. பல் வெளக்கி எம்புட்டு வருசம் ஆச்சோ. பாத்தாலே பயம்மாக் கெடக்கு."

"சேய்.... இன்னைக்குக் காலைல கூட செங்கம்பட்டியத் தட்டி தேச்சுட்டுத்தான் வாரேன். வருசக் கணக்குல வெத்தல போட்டதால கற போமாட்டேங்கி. இப்ப வெத்தலைக்குக் கூட விதியில்ல."

"ஏ...விதியில்ல. நீதான் மாசா மாசம் முதியோர் பென்சன் வாங்குறியே. அதென்ன செய்ற?"

"அந்தப் பெஞ்சின் பணம் வந்த அன்னைக்கே, ஏம் பேரம் பேத்திமாரு வந்து உரியா உருச்சு, புடுங்கிட்டுப் போயிருங்க. ஒரு நல்லது பொல்லதுகூட வாங்கித் திங்க முடியல."

"அது சரி பாட்டி, ஒங்கண்ணு எதுக்கு இப்பிடி எரும கலக்குன கொளங்கெணக்கா இருக்குது?"

"கேட்டுக்கிட்டியா? அப்பயும் எரும மாடு கலக்குன மாதிரி யாடா இருக்கு? ஏஞ் சொல்ல மாட்டீக? வருசக் கெணக்கா தூசி, துப்பட்டைலயும், புழுதிக்குள்ளயும் வேல செஞ்சா எப்பிடி இருக்கும்? எத்தன தடவ அடுப்பெரிக்க முள்ளுப் பெறக்கப் போகைல கண்ணுல முள்ளடுச்சுருக்கு? களை எடுக்கைல நெல்லுப்பயிரு குத்தி யிருக்கு? எல்லாம் போச்சு. இப்ப காடு வா வாங்குது....வீடு போ.... போங்குது."

"ஆமாமா, வெங்கடசாமி வீடு இப்ப வா....வாங்குது. அப்பிடித் தானே?"

"எங்கய்யா பேரு ஒங்களுக்கு எப்பிடித் தெரியும்?" அருவசமாக் கேட்டா.

"ஏந் தெரியாது. ஒனிய வச்சுத்தான் அந்த வீடே தெரியும்?"

"வீட்டப் பாத்துருக்கீகளா? எம்மந்தண்டி பங்களான்னு பாத்தீகளா?"

"என்னமோ ஒ வீடு மாதிரி அம்புட்டுச் சந்தோசமாச் சொல்றெ?"

"அது ஏ வீடு கணக்காத்தான். எங்க தாத்தா, பாட்டி காலத்துல இருந்தே வெங்கடசாமி அய்யா வீட்லதான் பரம்பரையா பண்ண

வேல செஞ்சோம். எங்கய்யாவும் எங்கம்மயுங்கூடச் செஞ்சாக. நானும் ஒங்க தாத்தாவும் செஞ்சோம். ஏம்புள்ளைக தலை எடுத்துத்தான் போமாட்டேனுட்டானுக. வெளங்காத பெயலுக."

"வெளங்காத பெயலுகளா? அவனுகளாவது புத்தியோடெ இருக்காகன்னு சொல்லு கெழவி."

"அப்ப நாங்கள்ளாம் புத்தி கெட்ட கழுதைகளா? போங்கடா போங்க. ஒங்ககூடப் பேசிக்கிட்டுருந்தா ஏம் பொழப்பு போயிரும். நீங்க என்ன வேலையத்த பெயலுக."

"ஆமாமா...நீயி பெரிய கலெக்டரு வேலதான் பாக்க....போ... கேவலப் பட்ட பொழப்பு."

"எனியவாடா கேவலப்பட்ட பொழப்புங்ற. என்னடா அப்பிடி கேவலத்தக் கண்டீக?"

"இந்த ஊருக்குள்ள ஒனியத் தவுர வேற யாராச்சும் இப்பிடி நாய்க்கமாருக தெருவுல போயி சோறு வாங்கித் திங்காகளா? நீ மட்டும் எதுக்கு அத நிப்பாட்ட மாட்டேங்க?"

"ஏலைகா! நானென்ன நாய்க்கமாருக தெருப்பூராம் போயி வீட்டு வீட்டுக்காடா சோறு வாங்கிட்டுத் திரிறேன்? ஏதோ எங்கொடல ரொப்புரதுக்கு எங்கய்யா வீட்ல மட்டும் வாங்கிச் சாப்புடுறேன். இதுல என்ன கேவலம்! கையி, காலுதெடமா இருக்கயில நானு அவுகளுக்கு வேல செஞ்சு போடலியா? அதுக்குத்தான் இப்ப நாம் போயி சோறு வாங்குறேன்."

இதக்கேட்டுட்டு அம்புட்டுப் பேரும் சிருச்சாக. அவனுக என்னத்துக்குச் சிருச்சாகன்னு தவசிக்குப் புரியல. வரட்டு வரட்டுனு தலயப் போட்டுச் சொறுஞ்சுட்டு, மயிரத் தட்டி உட்டு கொண்ட முடுஞ்சா. சீலய வச்சுக் கண்ணத் தொடச்சுட்டு கைட்டத் தடவிக் கம்பத் தேடுனா. கம்பக் காணலங்கவும்,

"யே கம்பக் குடுங்க சாமிகா....நேரமாகுது. எனிய என்ன ஒங்களக் கெணக்கா வெளாட்டுப் பிள்ளன்னா நெனச்சுக்கிட்டீக? குடுங்கடா....ஒங்களுக்குப் புண்ணியமாப் போகுது," உருக்கமாக் கேட்டா.

"நீ தெடமா இருக்கயில பாடுபட்டதுக்குத்தான் தெனமும் நாய்க்கரு கூலி குடுத்தார்ல? பெறகு இப்ப எதுக்குச் சோறு கேட்டுப் போற?"

"அப்ப நானு பட்ட பாட்டுக்குத் தக்கனயா கூலி குடுத்தாக? இல்லியே....அதுனால இப்ப அவரு குடுக்கனும்ல?"

"இப்பத்தா நீ அங்க வேல செய்யலிலெ! பெறகு எப்பிடிக் கேக்குறெ? இது பெரிய அடாவடியாவுல இருக்குது."

"நல்லாச் சொன்னீகடா. இதாடா அடாவடி? அப்ப வம்பாரத்துக்கு நாங்க பாடுபட்டு அவுக சொத்துக்கு மேல சொத்து

சேத்தாகள்ள. அதுதாண்டா அடாவடி. நாங்க ராப்பகலா பாடு படலன்னா அவுக இம்புட்டுச் சவுரியமா காடுகர, தோட்டந்தொரவு, வீடு பங்களான்னு இருக்க முடியுமா? வாழ்நாளு பூராம் பாடுபட்ட எனக்கு இப்ப கஞ்சிக்கு வழி இல்ல. அதுனால அவுகதானடா குடுக்கனும்."

"ஓ...இந்த கவுருமெண்டு வேலக்காருக, பட்டாளத்துக்காருக வாங்குற மாதிரி வேலைல இருந்து ரிடையர்டு ஆகிட்டு இப்ப பென்சன் வாங்குறியாக்கும்?" ஜெயராசு நக்கலாச் சொல்லவும் தவசி மொதக் கொண்டு அம்புட்டுப் பேரும் கொல்லுனு சிருச்சாக.

"ஒனக்கு அபார மூள பாட்டி. இந்த மாதிரி அய்டியா இது வரைக்கும் ஒரு பெயலுக்கும் வந்ததுல்ல. ஆனாலும் அங்க போயி சோறு வாங்கிட்டு வாரது அம்புட்டு நல்லா இல்ல."

"நானென்ன பழைய கஞ்சியா வாங்கிக் குடிக்கம்னு நெனச்செ? சுடச்சுடத் தந்தாத்தான் வாங்குவேன். பழையது குடுத்தா வாங்கவே மாட்டேனே."

"சும்மால்லாங் கத உடாதெ. நானு ஒரு நாளு பாத்தம்லெ. அந்த நாய்க்கரு பொம்பள ஒனியப்புடுச்சு மானாவாரியா வஞ்சுக்கிட்டு இருந்துச்சு."

"போன வாரந்தானடா? அது என்னன்னு தெரிமா? பழைய கஞ்சியக் குடுத்தாக நான் வாங்க மாட்டேனுட்டேன். சுடுகஞ்சிதான் வேனுமின்னேன். அதுக்குத்தான்."

"அப்படி வசவு வாங்கித் திங்கனுமா? ஒனக்குக் குடுக்கனும்னு கட்டாயமில்லையே."

"என்னடா அப்பிடிச் சொல்லிட்டெ. எனக்குக் குடுக்க வேண்டியது அவுக பொறுப்புடா. நானென்ன சம்பாருச்சு, எனக்குச் சொத்துச் சேத்தனா? இல்லன்னா ஏம்பிள்ளைகளுக்குனு சேத்தனா? ஒன்னுமில்ல. சம்பாருச்சுச் சம்பாருச்சு அவுகளுக்குத்தானெ போட்டேன். அப்ப அவுகதானெ இப்ப எனியப் பாக்கனும். இது அவுக கடமடா."

"சுத்தப் பைத்தியக்காரியாப் பேசுறியே! ஊரு ஒலகத்துல சொல்லிப்பாரு. ஒருத்தர்கூட நீயி சொல்றது ஏத்துக்க மாட்டாக."

"நீங்க தாண்டா பைத்தியங்க. நானு சரியாத்தான் சொல்றேன். சரி கம்பக் குடுங்கடா. ரொம்பா நேரமாச்சு." கம்ப எடுத்துக்கிட்டு நடயக் கெட்டுனா.

"அப்பிடிப்பட்டவா, சோத்துக்குப் பதுலா ரூவாயாக் கேட்டு வாங்கிரு பாப்போம்," ஜெயராசு கத்துனான்.

"ரூவா எதுக்குடா எனக்கு? ரூவாயத் திங்கவா முடியும்? ஏதோ சூடா நாலு பருக்க கெடச்சாப் போதும்டா," சொல்லிக்கிட்டே போயிட்டா.

போகும்போதே தவசிக் கெழவி பல மாதிரி நெனப்புல நடந்தா. இப்பிடித் தெனந்தெனம் நடந்து போயி சோறு வாங்குறது கஸ்டமாத்தான் இருக்குது. வர வர நடக்கவும் தெம்பில்ல. அந்த எனந்தாரிப் பெயல்க சொல்றதும் வாஸ்தவந்தான். அவனுக சொல்றது கெணக்கா மாசா மாசம் ரூவாயக் குடுத்தா நல்லாத்தான் இருக்கும்.

அவுக போடுற சுடுகஞ்சிய, நம்ம இங்ன தெருவுக்குள்ளேயே சூடாக் காச்சிக் குடிக்கலாம். கஞ்சி என்ன பெரிய பெரமாதமான கஞ்சி! அந்த நாடாரு கடைல ஒழக்கு கேப்பமாவ வாங்கி, கேப்பக் கூழு காச்சிக் குடுச்சா....தேனமிர்தமா இருக்கும். கூழுக் குடுச்சு எம்புட்டு நாளாச்சு! இப்ப எந்தப் பெயமக்க கூழுக்குப் போடுறாளுக. சக்க கெணக்கா இந்தச் சோத்தத்தான் திங்காளுக.

யோசுச்சிக்கிட்டே நாய்க்கர் வீட்டுக்கு வந்துட்டா. வழக்கம் போல நாய்க்கரம்மா சுடுசோறு எடுத்துட்டு வந்தா. கெழவி தூக்குச் சட்டியத் தொறந்து சட்டிய நீட்டல. நாய்க்கரம்மாட்ட உறுதியாச் சொன்னா.

“இனி மேற்பட்டு எனக்குச் சோறு வேண்டாம். ஒரு மாசத்துக்கு எனக்கு சாப்பாட்டுக்கு ஆகுற ரூவாயக் குடுத்துருங்க. தெனமும் எனக்கு நடந்து வர முடியல. மாசத்துல மொதல் தேதில வந்து வாங்கிட்டுப்போறேன்.”

இதக் கேட்டதும், கையில இருந்த சோத்தவிட நாய்க் கரமம்மாவோடெ மனது ரொம்பச் சூடாகிப் போச்சு. முழி பிதுங்குற மாதிரி பாத்தா.

*தலித் முரசு - பிப்ரவரி, 2002*

# 20. ஒத்த

இல்லாமல்லி நல்லா பூசணிப்பழங் கெணக்கா குண்டு குண்டா, பாக்க மூக்கும் முழியுமா, செழிப்பாத் தெருஞ்சா. அவளுக்கு அஞ்சு அல்லது ஆறு வயசு இருக்கும். அவுக தெருவுல இருந்த மத்த பிள்ளைக மாதிரியே பள்ளிக்கொடம் போகாமெ தெருவச் சுத்திக்கிட்டு திருஞ்சா. அவுகம்மயும், அய்யனும் அன்னாடங் கூலிவேல செஞ்சாங்க. விடுஞ்சா வேலைக்குப் போயிட்டு பொழுதடஞ்சா வீட்டுக்கு வருவாக. இல்லாமல்லிதான் அவளோட ஒன்றர வயசுத் தம்பியப் பாத்துக்குவா. வீட்டு வேலயும் செய்வா. தெனமும் கொழாய்ல தண்ணி புடுச்சு வப்பா. செல நாளு அடுப்பெரிக்க முள்ளும் பெறக்கிக் கொண்டாருவா.

தெருவுல பொம்பளைக அவளப் பாத்து அருவசப்படுவாக. மத்த பிள்ளைக கணக்கா பானைல வேகுற கஞ்சியத்தானெ இவளுங் குடிக்கா. பெறகெப்படி இப்படி சமஞ்சபுள்ள கெணக்கா உருண்டு தெரண்டு இருக்கான்னு பேசிக்கிருவாக.

“இவா பெறந்து ரொம்ப நாளா பிள்ள தங்காமெ இருந்துச் சுல்ல. ஒத்தயிலயே கெடந்து தின்னாள்ள.... அதான் இப்பிடி குந்தாணி மாதிரி இருக்கா.”

“இல்ல அவுக வம்சமே அப்பிடித்தா. அவுக பாட்டியப் பாரு. அவகம்மையப் பாரு. சதபுதான்னு இருக்காக. ஊளச்சத.”

“நல்லா தெனந்தோறும் குளுச்சு, வளுச்சு இருந்தான்னா, மேகலக்குடி பிள்ளைக கணக்கா இருப்பா.”

“இவா ஆளான ஒடனே பாரு எனக்கு ஒனக்குனு மாப்பிளைக போட்டி போட்டுக்கிட்டு பொண்ணு கேட்டு வருசயில நிப்பானுக.”

இப்பிடிப் பலரும் பலமாதிரி சொல்லுவாக. எல்லாத்தையும் கேட்டுகிட்டு அவுகம்மெ சொல்வா “கடவுள் நல்ல மாதிரித்தான் பிள்ளைகள்ளாம் குடுத்துருக்கார். ஆனா அதுகள நல்லபடியா வளத்து ஆளாக்கத்தான் நமக்கு வக்கு இல்ல. என்ன செய்றது?”

இல்லாமல்லி வயசுல இன்னும் ஏழெட்டுப் பிள்ளைக எப்பயும் ஒன்னாச் சேந்துகிட்டு அலைவாக. எல்லாரும் அவுகவுக தம்பியோ, தங்கச்சியோ தூக்கிக்கிட்டே திரிவாக. எங்க போனாலும் சேந்தே போவாக. சேந்தே வருவாக.

ஒருநாளு மதியம் மூனுமணிக்கு மேல இல்லாமல்லியும், மத்த

பிள்ளைகளும் ஊருக்குத் தெக்க இருந்த ஓடைக்கு வெளிக்கிருக்கப் போனாக. வழக்கமா அங்கதான் பொம்பளைக போவாக. பொம்பளைக எப்பயும் விடியங்காட்டி, இல்லன்னா மசங்கவும் வெளிக்குப் போவாக. ஏன்னா அந்த ஓட, கம்மாக்கரய ஒட்டி இருந்துச்சு. பகலுல கரவழியா ஆம்பளைக தெக்க, வடக்கப் போயிக்கிட்டும் வந்துகிட்டும் இருப்பாக. ஒக்கார முடியாது.

வெளிக்குப்போன இல்லாமல்லியும் மத்த பிள்ளைகளும் வட்டமா ஒக்காந்துகிட்டு கதசொல்லிக்கிட்டே இருந்தாளுக. எடைல அங்ன வேலியோரத்துல பூத்துக் கெடந்த துத்திப் பூவப் புடுங்கி பாவாடைக்குள்ள வச்சுக்கிட்டு ஒவ்வொன்னா எடுத்து தேனுறுஞ் சிட்டு போட்டுக்கிட்டே பேசுனாளுக. ஒரு எடத்துல நரகலக் குமுச்சுட்டு எந்துருச்சு இன்னொரு எடத்துல போயிக் குத்த வச்சாளுக. அந்நியாரம் அங்க நரகலத் திங்க வந்த பன்னிகளுக்குள்ள போட்டி வந்து பெரிய சண்டையே வந்துருச்சு. இல்லாமல்லியும், மத்த பிள்ளைகளும் பயந்துபோயி எந்துருச்சு தள்ளி நின்னு வேடிக்க பாத்திட்டு திரும்பியும் பாவாடையைத் தூக்கிக்கிட்டு ஒக்காந்தாளுக.

இவுக எப்படா எந்திரிப்பாகன்னு பன்னிக பூராம் காத்துக் கெடந்துச்சுக. ரொம்ப நேரமா இவுக எந்திரிக்காமெ பேசிகிட்டே இருக்கவும், பொறுமை எழந்து கிட்டத்துல வந்து கோவமா உறுமுச்சுக. செத்த நேரத்துல ஒரு பெரிய பன்னி இல்லாமல்லிக்குப் பின்னால வந்து அவள இடுச்சுத் தள்ளிட்டு திங்க ஆரம்பிச்சது. இல்லாமல்லி பயந்து போயி எந்துருச்சு, பக்கத்துல கெடந்த ஒரு கல்ல எடுத்து அந்தப் பன்னிய சத்துனு எறுஞ்சா. அம்புட்டுத்தான். அந்தப் பன்னி ஓடியாந்து லபக்குனு அவளோட நெஞ்சாங் கொலயக் கவ்விக் கடுச்சுப் போடுச்சு. சட்ட போடாத ஒடம்பாங்காட்டி அவளோட வலதுமாரு அப்படியே சதை பிஞ்சு தொங்கிருச்சு. இரத்தமா ஊத்துச்சு.

வலி தாங்கமாட்டாமெ அலறித் துடுச்சா இல்லாமல்லி. அழுது கிட்டே தெருவுக்குள்ள ஓடியாந்தா. அவளுக்குப் பின்னாடியே மத்த பிள்ளைகளும் பயந்து போயி ஓடியாந்தாக. தெருவுல இருந்த பொம்பளைக பாத்துட்டு, பதறிப்போயி என்ன ஏதுன்னு வெசாருச் சுட்டு ஆளாளுக்கு வசவுல கூடிட்டாக.

“பெயமக்க பன்னி வளக்காகளாம். சின்னஞ்சிறுசுக வெளிக்குப் போயிக் குத்தவைக்க முடியல. அந்த முனியாண்டிப் பெயலோட கெடாப் பன்னிதான் இம்புட்டு அகராதி செய்றது. அத இனியும் சும்மா விட்டுவைக்கக்கூடாது. கல்லாலயே அடுச்சுக் கொல்லனும்.”

“அட பாதகத்தியா, கரெக்டா மாரப்பாத்து கடுச்சுக் கொதறிடுச்சே. அந்த மாரு வருமோ என்னமோ.”

“சரிங்கிடியா, சும்மா பேசிக்கிட்டே இருக்காமெ பிள்ளையக் கொண்டு போயி டாக்டர்ட காட்டுங்கடி. ரத்தக்காடு ஒழுகுது,”

வீரம்மா அதட்டுனா.

"இவுகம்மயும், அய்யனும் வேலைக்குப் போனவுக இன்னும் வரலியே."

"அட பெயமக்கா, அவுக வாரது வரைல வச்சுகிட்டு இருந்தா, ரத்தம் பூராம் போயி, பிள்ள செத்துல போகும்," வீரம்மா சொல்லிட்டு அப்பிடிக்கூடி வந்த செல்வராசக் கூப்புட்டு பிள்ளையத் தூக்கிக்கிட்டு டாக்டர்ட கொண்டு வரச் சொல்லிட்டு, கூடப் போனா. மத்த பொம்பளைகளும் பின்னால போனாக.

"பிள்ளையப் பாத்து எந்த முண்டையோ கண்ணேறு போட்டுட்டா. இல்லன்னா இத்தன பிள்ளைகள உட்டுட்டு இவள மட்டும் வந்து புடுங்குமா, எழவெடுத்த பன்னி?"

கண்ணேறுமில்ல காடயத்துமில்ல. மத்தியான நேரத்துல ஓடப் பக்கம் போகக்கூடாது. பேய்க்கழுதைக நடமாடுற நேரம்ல. பேய்கூட பன்னி ரூவத்துல வரும்லெ."

"ஆமா.... இவா கண்டா. பேயுமில்ல, ஒன்னுமில்ல. அதவேற சொல்லி சனங்க தெக்க வடக்க போக உடாமெ செஞ்சு போடுவெ போல."

ஆளாளுக்கு ஒவ்வொன்னாச் சொல்லிக்கிட்டே போனாக. பசாருல இருந்த குருமூர்த்தி டாக்டர்ட காட்டுனா, அவரால முடியா துன்னுட்டாரு. கவுர்மெண்டு ஆசுபத்திரிக்குக் கொண்டு போகனும்னு மாட்டுவண்டி கெட்டிக்கிட்டு இருக்கயில, வேலைக்குப் போயிருந்த அவுகம்மயும் அப்பனும் சோந்து போயி வந்தாக. வந்து விசயத்தக் கேட்டதும், அவுகம்மெ சத்தம் போட்டு அழுதா.

"காட்டுல காக்கா வந்து மண்டையில அடிக்கும் போதே நெனச்சேன். என்னமோ நடக்காதது ஒன்னு நடக்கப் போகுதுன்னு மனசுக்குப் பட்டுச்சு. அப்படியே நடந்து போச்சே. கடவுளே, நானு எந்தத் துட்டு வச்சிருக்கேன் போட்டுப் பாக்க. சக்காளத்திக பன்னி வளத்து ஏம்பிள்ளையக் கடிக்க வச்சுட்டாளுகளே " அழுதுக்கிட்டே பொலம்புனா.

மாட்டுவண்டி கெட்டிக்கிட்டு பக்கத்து ஊர்ல இருந்த தர்மாசுபத்திரிக்கு போயிக் காட்டுனாக. தொங்கிக்கிட்டுருந்த சதையத் துண்டா வெட்டி எடுத்துட்டு, ஊசி போட்டு, மருந்து கட்டி உட்டாக. அந்தப் புண்ணு ஆற ரொம்பா நாளு ஆச்சு. ஆறுனப் பெறகு பாத்தா, மாரு கீரு ஒன்னுமில்ல. வெறுந் தழும்புதான் இருந்துச்சு.

ஏழெட்டு வருசங்கழுச்சு இல்லாமல்லியோடெ எடது மாரு பெருசாகிக்கிட்டே வந்துச்சு. ஆனா வலது பக்கம் அப்படியே தழும்புதான் இருந்துச்சு. இப்பதான் அவுகம்மெ ரொம்பக் கவலப்பட்டா. இந்தப் பன்னி செஞ்ச கொடும, இப்பிடி ஒத்தமாருக்காரியாப் போனாளேன்னு ரொம்பா வேதனப்பட்டா.

வருசம் ஆக ஆக இல்லாமல்லிக்கும் வருத்தமா இருந்துச்சு. அவா ஆளானப் பெறகு, தெருவுல, "ஒத்த சடங்காயிட்டா "ன்னு எளக்காரமாப் பேசிச் சிருச்சாக. சன்னஞ் சன்னமா, அவள எல்லாரும் ஒத்த, ஒத்தனே கூப்புட்டாக. இல்லாமல்லிங்ற அவளோட பேரு இல்லாமப்போயி, அவா பேரே 'ஒத்த' ஆகியிருச்சு. ஒத்தனு கூப்புட்டா அவளுக்கு ரொம்பாக் கோவம் வரும். மானாவாரிக்கு வைவா. அவா ரோசப்படுறத பாத்துட்டு, வேனுக்கும்னே ஒத்தனு கூப்டு உரிக்காட்டுவாக.

ஒத்த வயசுக்கு வந்து நாலஞ்சு வருசமாகியும், ஒருத்தர்கூட அவளப் பொண்ணு கேட்டு வரல. அவா வயசுப் பிள்ளைக பூராம் வாக்கப்பட்டுப் போயி, பிள்ளைகளும் பெத்துட்டாக. ஒத்த மட்டும் பாவம் போல வீட்லய கெடந்தா.

"ஒருமாரு இல்லன்னா என்ன? எனக்கு மட்டும் ஆச இருக்காதா? நாலு பேரப்போல எனக்கும் கல்யாணம் ஆகி, பிள்ளப்பெத்து பால் குடுத்து வளக்கனும்னு ஆசையாத்தான் இருக்குது. ஆனா எங்க...சாகும் வரைக்கும் இப்பிடியேதான் கெடந்து சாகனும் போல."

இல்லாமல்லி அப்பப்ப நெனச்சு வேதனப்படுவா.

"சரித்தா....என்ன செய்றது? இம்புட்டுக் காலமா இந்த ஓடைல எத்தனை பிள்ளைக போகுது .... வருது ... கடவுளு ஒந்தல எழுத்த இப்பிடி எழுதிட்டானே. பொறுமையா இரு. ஒனக்குனு ஒருத்தன் பெறக்காமயா இருப்பான்?" அவுகம்மெதான் ஆறுதல் சொல்லுவா.

அந்தா இந்தான்னு ஒத்தைக்கு முப்பது வயசுக்கிட்டெ ஆகிப் போச்சு. சாதாரணமா வயசுக்கு வந்த ரெண்டு மூனு வருசத்துலயே பிள்ளைக வாக்கப்பட்டுருங்க. இனி நம்மளுக்குக் கலியாணங் கெடையாதுன்னு ஒத்தயும் மனசத் தேத்திக்கிட்டாலும், மத்த பொம்பளைகளப் பாக்கயில ரொம்பாக் கஸ்டப்படுவா. இதுக் கெடயில அவுகம்மையும் அய்யனும் செத்துப் போயிட்டாக. தம்பிக்காரன் கலியாணம் முடுச்சுட்டான். ஒத்த ஒரு பால்மாட்டெ வாங்கிக்கிட்டு, அதவச்சு பொழச்சா.

தெனமும் மாட்டுக்குப் புல்லுப் பெறக்கிட்டு வந்து போடுவா. அந்த மாடுதான் அவளுக்குத் தொண. அதக்கூட 'ஒத்த மாடு'னு பேர் வச்சுட்டாக. எல்லாத்தயும் சகிச்சுக்கிட்டு சீவிச்சா. ஒரு தடவ மேற்க மொச்சிக் காட்டுச் செம புல்லும் பெறக்கப் போயிருந்தா. அந்தக் காட்டுக்காரன் வந்து,

"என்ன ஒத்த, ஒத்தயில வந்து புல்லறுக்க? பால்மாடு வச்சிருக்கியா? எம்புட்டுப் பாலு கறக்குது?" நக்கலாக் கேட்டான்.

"ஒத்த கித்தனு சொன்னா தாறுமாறா வஞ்சு போடுவேன். ஒத்தயாம்....மாடு எம்புட்டுப் பீச்சுனா என்ன? அவுகவுக சோலி மயித்தப் பாத்துட்டுப் போகவேண்டியதுதானெ" கோவமாக் கேட்டா.

“ஒனக்கென்ன இம்புட்டுக் கோவம் வருது. நானென்னமோ புதுசாக் கூப்புட்டேனா என்ன? ஒங்காளுக பூராம் ஒனிய அப்பிடித் தானெ கூப்புடுறாக?”

“எங்காளுக எப்பிடியுங் கூப்புடுறாக. நீ யாரு கூப்புடுறதுக்கு? இன்னொரு தடவ சொல்லிப்பாரு நடக்குறதே வேற” சொல்லிட்டு வேக வேகமாப் புல்லறுத்தா.

“சொன்னா என்ன செய்வியாம்? ஒத்தன்னா என்ன? இருக்குற ஒன்னே நல்லாத்தா இருக்கு,” எகத்தாளமாச் சொல்லிக்கிட்டே குனுஞ்சு புல்லறுத்த அவளக் கட்டிப்புடுச்சான்.

அம்புட்டுத்தான் ஆங்காரமாத் திமிறிக்கிட்டு நிமுந்த ஒத்த, அவனோட கையத் தள்ளி உட்டுட்டு, ஓடியாரப் பாத்தா. ஆனா அவனும் அவளப் புடுச்சுக்கிட்டு உடவே இல்ல.

சுத்திமுத்திப் பாத்த ஒத்த யாரும் இல்லனு தெருஞ்சுக் கிட்டுத்தான் இந்தப் பெய இப்பிடிச் செய்றான்னு புருஞ்சுக்கிட்டா. புல்லறுக்குற அருவாள வச்சு ஓங்கி அவங்கைய வெட்டப்போனா. ஆனா அது தவறி அவங் கண்ணுல கொத்திருச்சு. வலிலெ அலறித் துடுச்சான். ரத்தம் ஒழுகுன கண்ண கைய வச்சுப் பொத்திக்கிட்டே அலறுனான். ஒத்த புல்லப் போட்டுட்டு ஓட்டமும் நடையுமா வீடு வந்து சேந்துட்டா.

அவா வந்த தோரணயப் பாத்துட்டு என்ன ஏதுன்னு தெருவுல வெசாரிக்கவும், காட்டுல நடந்ததச் சொல்லிட்டு அழுதா.

“நீ எதுக்குத்தா அழுகுறெ. இப்பிடிச் செஞ்சாத்தான் பெயல் களுக்குப் புத்தி வரும்” லூர்து பாட்டி சொன்னா.

காட்டுக்கார நாய்க்கர ஒத்தக் கண்ணனா ஆக்குன விசயம் ஊர் பூராம் தீ கணக்காப் பரவிடுச்சு. அன்னைலிருந்து ஒத்தய யாரும் ஒத்தனு கூப்புடுறதுல்ல.

*ஊடறு, மே 20002*

# 21. அம்மா

அது ஒரு சனிக்கிழமை. பள்ளிக்கு அரைநாள் விடுமுறை. விமலா பள்ளியிலிருந்து வீடு வந்து மதிய உணவு உண்டபின் படுத்தவள்தான். மாலை ஏழு மணி போல் கண்விழித்தாள். வழக்கம் போல கண்விழித்தவுடன் அம்மாவின் நினைவு வந்தது. புரிந்தும், புரியாததுமான உணர்வுகள் அவளை ஆக்ரமித்துக் கொண்டன. எப்படித்தான் முயன்றாலும் அவளால் இவ்வுணர்வுக் குவியலிலிருந்து மீள முடிவதில்லை.

விமலாவுக்கு நாற்பது வயது ஆகிவிட்ட போதிலும், அம்மாவின் நினைவு வரும் போதெல்லாம் ஒரு சிறு குழந்தையின் மனநிலையில்தான் அவள் இருப்பாள். குறிப்பாக, உறங்கி எழும் போதெல்லாம், ஒரு குழந்தையைப் போல அவளது அம்மாவின் அரவணைப்பில் கட்டுண்டு கிடக்கவும், அம்மாவின் மார்பில் முகம் புதைத்து, அந்தக் கதகதப்பை அனுபவித்தவாறு, கண்களை மூடிக் கொண்டு, அரைத் தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கவும் இவளுக்கு ஆசையாக இருக்கும்.

இந்த நிறைவேறாத ஆசை, ஏக்கம், வெறுமை நீண்ட நேரத்திற்கு விமலாவைச் சக்தியற்றவளாக ஆக்கிவிடும். இந்தச் சனிக்கிழமைகூட அப்படித்தான் உறங்கி விழித்து, உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தாள்.

பழைய ஓட்டுவீடு. விமலா பத்துவயதுப் பெண்ணாக இருந்தாள். பள்ளி சென்றுவரும் பாவாடைச் சிறுமி. சிட்டுக் குருவி போல சிறகடித்துத் திரிந்த காலமது. பள்ளிக்கூடம் சென்று விட்டு வீடு திரும்பிய விமலா, அம்மா இன்னும் வீடு திரும்பாததால் ஏக்கத்துடன் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டாள். உட்கார்ந்த படியே "அம்மா இன்னைக்கு மாம்பழம் புடுங்கிட்டு வருவா. எந்தக் காட்டுக்கு வேலைக்குப் போயிருப்பா? " என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அடிக்கடி கிழக்கும் மேற்குமாகத் தலையைத் திருப்பிப் பார்த்துக் கொண்டாள். இருட்டும் சமயத்தில் அம்மா மேற்கிலிருந்து, தலையில ஒரு விறகுச் சுமையுடன் களைத்துப் போய் வந்தாள்.

விமலா விர்ரென குருவிபோல் பறந்து சென்று அம்மாவின் கால்களைக் கட்டிச் சேர்த்து பிடித்துக் கொண்டாள். "ஏம்மா,

எதுக்கும்மா இம்புட்டு நேரம்? நானு எம்புட்டு நேரமா ஒக்காந்துப் பாத்துக்கிட்டே இருந்தேந் தெரியுமா?," கேட்டுக் கொண்டே அம்மாவின் கையில் மாட்டியிருந்த தூக்குச்சட்டியை வாங்க முயற்சித்தாள்.

"இருடி, வீட்டுக்கு வா, அதுக்குள்ள அவசரம் ஒனக்கு," அம்மா சொல்லியபடி விமலாவை விலக்கியபடி வீட்டுக்கு விரைந்தாள்.

விமலா விடாமல் அம்மாவின் இடுப்புச் சேலையைப் பிதுக்கிப் பிதுக்கிப் பார்த்தாள்.

"அங்க என்னது இருக்குனு பிதுக்குர? இந்நியாரம் வரைக்கும் வேலயே சரியாப் போச்சு. பெறகு என்னத்த கொண்டாரது ஒனக்கு," அம்மா சலிப்பாகச் சொன்னாள். விமலா அம்மாவின் கையைப் பிடித்தபடி குதித்தபடி வீட்டுக்கு வந்தாள்.

"ஏம்மா, இன்னைக்கு ஒன்னுமே கொண்டு வரலியாக்குமா? எங்க தூக்குச் சட்டியக் காட்டு பாப்போம்" விமலா கேட்டாள்.

வழக்கமாக அம்மா வேலைக்குப் போய்விட்டு வரும்போது, விமலாவுக்கு, கொய்யாக்காயோ, நிலக்கடலையோ, மாங்காயோ கொண்டு வந்து கொடுப்பாள். விமலா தூக்குச் சட்டியை எடுத்து.... திறந்து பார்த்தாள். உள்ளே அணில் கடித்த மாங்காய்கள் இரண்டு இருந்தன. விமலா ஆசையோடு ஒன்றை எடுத்துக் கடித்துக் கொண்டே கேட்டாள், "ஏம்மா ஒரு நாளைக்காச்சும் முழு மாம்பழம் கொண்டுட்டு வாயேன்."

"முழு மாம்பழத்துக்கு நா எங்கடி போறது? பொறு....ஒங்க தாத்தா வீட்டுத் தோப்புல காய்க்கட்டும். முழு மாம்பழம் புடுங்கிட்டு வாரேன், என்ன."

"நெசத்துக்காமா தாத்தா மாந்தோப்பு வச்சிருக்காரு? எப்ப அதுல மாங்கா காய்க்கும்?"

"குடிக்கிறதுக்கு கூழுத்தண்ணிக்கே இங்க என்னமோ சொன்ன கதையா இருக்கு. இதுல இவளுக்கு மாந்தோப்பு வேணுமாம்ல. சும்மா சொன்னம்டி. இந்த அணிலு கடுச்சுப் போட்ட காயப் பெறக்குனதுக்கே அந்த தோப்புக்கார மொதலாளி வெரட்டி வெரட்டி கல்லுட்டயும் கட்டிட்டயுமா எறுஞ்சான். ஒன்னுமில்லாம வெறுங் கையா வந்தம்னா நீயி ஏமாந்து போவியேன்னு சங்கடப்பட்டு அவெங்கண்ணப் பாத்து கண்ணப்பாத்து ரெண்டு காயப் பெறக்கிச் சட்டிக்குள்ள போட்டுட்டு வந்தேன்."

"நானு ஏமாந்து போவம்னு, மொதலாளிட்ட வெரட்டுப்பட்டு இதப் பெறக்கிட்டு வந்தியாக்கும்மா?," சத்தமாகவே கேட்டுவிட்ட விமலாவின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. கண்ணீரைத் துடைத்தபடி கட்டிலிலிருந்து எழுந்து வெளியே வந்தாள் விமலா.

“என்ன டீச்சர், இவ்வளவு நேரம் தூக்கம்? எழுப்பலாம்னு பாத்தேன். சரி நல்லா ரெஸ்ட் எடுக்கீங்கன்னுதான் எழுப்பல,” பக்கத்து வீட்டுக்கார அம்மா சொன்னாள்.

“லேசா தலவலி, அதான் படுத்தே கெடந்தேன், விமலா சொல்லிவிட்டு வெளித் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். சிறிது நேரம் பக்கத்தில் இருந்தவர்களிடம் பேசிவிட்டு மீண்டும் வீட்டுக்குள் சென்று படுத்துக்கொண்டாள்.

மறுபடியும் அம்மாவின் முகம்; கிராமத்து வீடு; அம்மாவின் மடியில் முகம் புதைத்துக் கிடக்கும் சிறுமியாக விமலா.

“ஏம்மா, நானு பெரியவளா வளந்தப்பெறகு, டீச்சரு ஆவேன். அப்பயெல்லாம் நீயி இப்படிக் கூலி வேலைக்குப் போகக்கூடாது. நானு சம்பாதிப்பேன் என்னம்மா?” விமலா சொன்னாள்.

“இப்ப இருந்தே நல்லாப்படி. அப்பத்தான டீச்சராக முடியும்.” விமலாவின் தலையைத் தடவிய படி அம்மா சொன்னாள்.

அம்மாவின் மாராப்புச் சேலைக்குள் முகம் பதித்துக் கிடந்த விமலா கேட்டாள். “ஏம்மா, ஒஞ்சேலைல மட்டும் ஒரு மாதிரி மணக்குதே. எதுக்கு?”

“மணக்குதா? அது வேர்வ நாத்தம்டி. நாந்தா குளிக்கக்கூட நேரமில்லாம விடுஞ்சா வேலைக்குப் போயிட்டு பொழுது அடஞ்சா வீட்டுக்கு வாரேன். வாரத்துல ஒரு நாளு அந்த நாயித்துக் கெழம மட்டுந்தாங் குளிக்க முடிது.”

விமலாவின் தலையைத் தடவித் தடவிப் பேன் எடுத்தாள் அம்மா. உடனே விமலா சடக்கென எழுந்து உட்கார்ந்து கொண்டு, “குடும்மா....குடும்மா... அந்தப் பேனக்குடு நாங்குத்துறேன்மா,” ஆசையாகக் கேட்டாள்.

“நீயி குத்தாமெ உட்டுருவடி. பெறகு சீலைல ஏறுச்சுன்னா சீலப்பேனாப் போயிரும்,” சொல்லியபடி பேனை வாயில் போட்டு கொறித்துத் துப்பினாள்.

அம்மா தலையைத் தடவத்தடவ விமலாவுக்குத் தூக்கம் வந்தது. அப்படியே அம்மாவின் மடியில் தூங்கிப் போனாள். திடீரென கண்விழித்த விமலா இருட்டி விட்டதை அறிந்து, கதவினைத் தாளிட்டு விட்டு வந்து மீண்டும் படுத்துக்கொண்டாள். மறுநாள் காலை விடிந்தபொழுது ஞாயிற்றுக் கிழமை என்று நினைவு வரவே சிறிதுநேரம் படுக்கையிலேயே புரண்டு கொண்டிருந்தாள் விமலா. மறுபடியும் அம்மாவின் ஞாபகம். இதென்ன அடிக்கடி இப்படி என்று எண்ணியவளாய் படுக்கையிலிருந்து எழுந்து விட்டாள்.

குளித்து முடித்த பின்பு கோவிலுக்குச் சென்றாள். செல்லும் வழியெல்லாம் அம்மாவின் நினைவுகள்தாம் அவளை ஆக்ரமித்துக்

கொண்டிருந்தன. எத்தனை முறை ஊரில் அம்மாவோடு கோவிலுக்குச் சென்றிருக்கிறாள்! ஒரு முறை அப்படித்தான். இரவு கோவிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். இடைவழியில் விமலா அம்மாவின் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டு தொங்கினாள். அவளைத் தூக்கிக் கொண்டு செல்லவேண்டுமென அடம்பிடித்தாள். அம்மா மிகவும் சாமார்த்தியமாகச் சொன்னாள்,

"ஏக்குட்டி அங்கபாரு. ஒன்ன மாதிரியே ஒரு பிள்ள முன்னால போறா பாரு. உடாத அவள. போயி புடித்தா. ஓடு."

தெருவிளக்கு வெளிச்சத்தில் தெரிந்த விமலாவின் நிழலைப் பிடிக்கச்சொல்லி அம்மா சொல்ல, அதையும் நம்பிக்கொண்டு விமலா தன் நிழலைத் துரத்தித் துரத்திப் பிடிக்க ஓடிக் களைத்து வீடு வந்து சேர்ந்தாள். வீட்டுக்கு வந்தவுடன் விமலா கேட்டாள், "ஏம்மா, இப்ப அந்தப் பிள்ளையக் காணும்?"

"அந்தப் பிள்ளையா? அவாதான் இவா" என்று சொல்லி விமலாவைத் தூக்கி முத்தமிட்டாள்.

விமலாவுக்கு ஒன்றும் புரியவில்லை என்றாலும் அம்மா தந்த முத்தத்தில் அமைதியாகிப் போனாள்.

கோவிலிலும் விமலாவுக்கு அம்மாவின் நினைவுதான். அம்மா அருகில் அமர்ந்திருப்பது போலவே இருந்தது. மிகவும் உருக்கமாகச் செபிக்கும் அம்மாவின் முகம் தெய்வீகமாய்த் தோன்றியது. மனம் அம்மா....அம்மா.... அம்மாவென அரற்றியபடி இருந்தது. ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தாள் விமலா.

இப்போதெல்லாம் அடிக்கடி அம்மாவின் நினைவுதான் அவளுக்கு. மிகவும் துல்லியமாக அம்மாவின் கபடமற்ற முகம், மிருதுவான காதுகள், சுருள் சுருளான முடி, கன்னத்திலுள்ள மச்சம், நீண்டு மெலிந்த விரல்கள், கள்ளமற்ற சிரிப்புச் சிந்தும் கண்கள் இப்பிடி மாறி மாறி மனக்கண்ணில் தோன்றி அவளுக்குள் இருந்த ஏக்கத்தின் வேதனையை ஆழப்படுத்துகின்றன. அம்மாவின் சுயநல மற்ற அந்தப் பாசமும், பரிவும், நேசமும்.....நினைக்க நினைக்க விமலாவுக்குள் சந்தோஷமும் துக்கமும் கலந்து வந்து மனதைக் கனமாக்கியது. இதென்ன உணர்வு! அழவும் முடியாமல் சிரிக்கவும் முடியாமல்..... இந்த இரண்டுங்கெட்டான் நிலையை விமலாவால் பலசமயம் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிகவும் சோர்ந்து போவாள்.

குழந்தையாய் அம்மாவிடம் கொஞ்சிக் குதூகலித்த நாட்களும், குமரியாய் அம்மாவிடம் மணிக்கணக்காய் பேசிய நாட்களும் மனதுபூராம் வியாபித்துக் கிடந்தன. இன்னும்கூட விமலா அதை நினைத்துச் சிரிப்பாள். பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சிறுமி விமலா. அம்மா ஏதோ வாயில் மென்றபடி கடைவீதிப்

பக்கமிருந்து வருவதைப் பார்த்து விட்டாள். உடனே ஓடிப்போய், “ஏம்மா, என்னமோ தின்னுட்டு வாரெ. எனக்குந்தா,” என அடம் பண்ணி அம்மாவிடம் எதுவுமில்லாத நிலையில் வாயில கிடந்ததை வாங்கிப் போட்டுத் தின்றாள். விமலா இருமிவிட்டால், அம்மாவுக்குப் பொறுக்காது. உடனே வயல்வெளி நண்டுகளைப் பிடித்து வந்து நண்டு ரசம் வைத்து சுடச்சுடக் குடிக்கச் செய்வாள். அவ்வளவு அக்கறையாக, பாசத்துடன் பார்த்துக் கொண்ட அம்மாவின் நினைவினை அவ்வளவு சுலபமாக அகற்றிவிட முடியாமல் அணு அணுவாய்த் துடித்தாள் விமலா.

விமலா ஒவ்வொரு முறை விடுமுறைக்கு வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் ஊரில் நடந்த ஒவ்வொரு நிகழ்வினையும் அதன் நிசத்தன்மை மாறாமல் சுவைபடக் கூறுவாள் அம்மா. யாரார்க்கு என்ன குழந்தை பிறந்தது என்பது முதல், யாரார் அந்த இடைப்பட்ட காலத்தில் இறந்து போய்விட்டார்கள் என்பது வரை விலாவாரியாக விளக்குவாள் அம்மா. ஊரில் நடைபெற்ற, நடைபெறப்போகும் திருமணங்கள் பற்றியும் சொல்லாமல் விடமாட்டாள். பலபேரின் மரணத்தைப் பற்றி விமலாவிடம் கூறும்போதெல்லாம் அம்மா இப்படித்தான் முடிப்பாள். “அவனுக்காவது (அவளுக்காவது) அந்தச் சாவு. நானெல்லாம் எப்படிச் சாகப் போறனோ. யாரு கண்டது? நல்ல மரணங்கெடைக்கனும்னுதான் கடவுளக் கும்புடுறேன்.”

அவள் கும்பிட்ட கடவுள் இத்தனை சீக்கிரம் அவளது வேண்டுதலைக் கேட்டுவிடுவான் என்று விமலா எதிர்பார்க்கவில்லை. அதனால் அவளால் அம்மாவின் மரணத்தை அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது இப்படித்தான் நடந்தது. விமலா விடுமுறையில் அம்மாவுடன் வீட்டில் இருந்தாள். அம்மா நன்றாகப் பேசிக்கொண்டுதான் இருந்தாள். மறுநாள் விடுமுறை முடிந்து விமலா புறப்பட்டுச் செல்வதாக இருந்தது. முதல் நாள் அம்மாவுக்கு அழுக்குத் தேய்த்து விட்டு குளிப்பாட்டினாள். அம்மா சுகமின்றிப் போனதிலிருந்து அவ்வப்போது விமலாதான் அவளைக் குளிப் பாட்டுவாள். குளிக்கும்போதே அம்மா சொன்னாள், “இதுதான் எனக்குக் கடைசிக் குளியலா இருக்கும்னு நெனைக்கேன். நீயி போயிட்டு அடுத்த லீவுக்கு வர்ரவரைக்கும் அநேமா நானு இருக்க மாட்டேன்.”

விமலாவுக்கு இதயத்தில் ஈட்டி பாய்வது போல இருந்தது. கண்களில் ‘குபுக்’ கென கண்ணீர் பொங்கியது. இருந்தாலும் உற்சாகமாக இருப்பதுபோல குரலை வைத்துக்கொண்டு சொன்னாள். “சே.... சே.... அப்பிடியெல்லாம் சொல்லாதமா, நீயி இன்னும் பத்து வருசத்துக்கு இருப்ப பாரு. நா என்ன இப்ப போயிட்டு அடுத்து மூனே மாசத்துல அடுத்த பரிட்ச லீவுல வந்துருவேன். எடையில எதுனாச்சும் லீவு கெடச்சாலும் வந்துட்டுப் போவம்ல.”

அம்மா அழுதாள். விமலா அம்மாவுக்குத் தெரியாமல் அழுதாள். அன்றிரவு அம்மா நடுச்சாமம் வரை விமலாவோடு பேசிக்கொண்டு தான் இருந்தாள். படுக்கச்சென்று விமலாவை அழைத்து, “வகுறெல் லாம் வலிக்குது விமலா. ஒறக்கமே வரமாட்டேக்கி,” என்றாள்.

“படுத்துப்பாரும்மா, ஒறங்கிடுவெ. ஒக்காந்துகிட்டே இருந்தா எப்பிடி ஒறக்கம் வரும்?” விமலா கேட்டாள்.

விமலா சொன்னபடியே அம்மா படுத்தாள். நிரந்தரமாக உறங்கிப்போனாள். இது உறங்கிவிட்ட விமலாவுக்கு அப்போது தெரியவில்லை.

மறுநாள் வெள்ளிக்கிழமை. காலையில வழக்கம்போல் ஐந்து மணிக்கு விமலா எழுந்து கொண்டாள். அம்மா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள். வழக்கமாகக் கண்விழித்துக் கிடக்கும் அம்மா, இரவு முழுவதும் தான் உறங்காமல் பட்ட அவஸ்தையைச் சொல்வாள். ஆனால் அன்று அம்மா அசைவற்றுக் கிடந்தாள். விமலா ஓசையெழுப்பாமல் மெதுவாக நடமாடினாள். அம்மா, நிரந்தரமான நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்து போனாள்; ஆனால் விமலாவின் நிம்மதி தொலைந்து போனது என்பதை உணராமலேயே விமலா வழக்கமான காலை வேலைகளைக் கவனிக்க முற்பட்டாள். அடுப்பைப் பற்றவைத்துவிட்டு வந்த விமலா அம்மாவின் அருகே சென்று நின்று அவளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவிடம் அசைவே இல்லை. லேசாக ‘ஏம்மா ஏம்மா’ என்று கூப்பிட்டுப் பார்த்தாள். என்னடி என்று அம்மா கேட்கவில்லை. விமலாவுக்கு இதயம் வலித்தது. சட்டென்று அம்மாவைத் தொட்டு எழுப்பினாள். அம்மா கட்டையாகிப் போய்க் கிடந்தாள். அதிர்ச்சியில், பயத்தில் விமலா உறைந்து போனாள்.

விமலாவால் அழ முடியவில்லை. மீண்டும் குனிந்து அம்மா வின் முகத்தைப் பார்த்தாள். பிணமாகிப்போன அம்மாவுடன் சிறு குழந்தைபோல பேசினாள். “ஏம்மா, நேத்து ராத்திரிகூட ஏங்கிட்ட நல்லாப் பேசினியேமா, நீ எப்பம்மா செத்துப்போன? எப்பிடிம்மா செத்துப்போன? சாகுமுன்னாடி எனியக் கூப்பிட்டியாமா? நானு தூங்கிப்போயிட்டேனேமா. இனி யாரும்மா இருக்கா எனக்கு....? யாரு இருக்காமா? நானு அனாதையாகிப் போனேனேமா.... அம்மா.... அம்மா....அம்மா,” விமலாவின் மனது அரற்றியது. மௌனமாகக் கண்ணீர் வழிந்தோடியது.

இப்போதெல்லாம் ஒவ்வொரு நாள் விடியலில் மட்டுமல்ல; ஒவ்வொரு முறை உறங்கி எழும் போதெல்லாம் அம்மாதான் விமலாவை ஆக்கரமித்துக் கொள்கிறாள், விடுமுறைக்கு வீடு செல்ல விமலாவுக்குப் பிடிப்பதில்லை. அங்கு அம்மா இல்லாத வெறும் வீடு, வீடாக விமலாவுக்குத் தெரியிவல்லை. விடுமுறை முடிந்து

புறப்படும்போது, "பத்திரமாக போ, பள்ளிக்கொடத்துக்கு போற வார வழிகள்ள பாத்துப்போ. ராத்திரிகள்ள கவனமா இரு. காலங்கெட்டுப் போயிக் கெடக்கு. போன ஒடனே கடிதம் போடு," என்று சொல்லி விமலாவின் தலை வருடும் அம்மாவின் நீண்ட விரிந்த விரல்களை விமலாவால் மறக்க முடியவில்லை.

மரணத்தைப் பற்றி புரிந்தது போல இருக்கிறது. புரியாதது போலவும் இருக்கிறது. எது எப்படி என்றாலும் அம்மா விமலாவோடுதான் இருக்கிறாள்.

ஆறாம் திணை

# 22. அந்த இடம்

அந்த எடத்த மறக்கவே முடியல. மறக்கணும்னு எம்புட்டுத் தான் நெனைச்சாலும், அந்த எடம் நெனப்புல வந்துகிட்டே இருக்குது. செல நேரத்துல ஆத்துரமும் எருச்சலாவும் கூட இருக்குது. அந்த எடத்துக்கிட்ட போம்போது மட்டும் நெனப்பு வந்தாக்கூட பரவாயில்ல. ஆனா இது சனியன் தூங்குற நேரந் தவுர எல்லா நேரத்துலயும் எங்குட்டுக் கூடியாவது நெனப்புக்குள்ள இருந்துகிட்டு எட்டிப் பாக்கும். அட, எட்டிப் பாத்துட்டு போயிட்டாக்கூட பரவாயில்ல. இது கழுத பேசி வேற தொலைக்குது. மனசுக்குள்ள பேசி காதுகள்ள வந்து சேருது. அந்த வழிய அடைச்சுப்போட முடுஞ்சா நல்லா இருக்கும். முடியலயே. ஒரே இம்சதான்.

அந்த எடத்துப் பக்கமாப் போகாம இருந்தா சன்னஞ் சன்னமா அத மறந்துரலாம். ஆனா அது முடியாது. ஏம்னா நான் தெனந்தெனம் அது வழியாத்தான் நடந்து போய், பஸ் ஏறி வேலைக்குப் போகணும்; வரணும். இப்பிடி நானு அவஸ்தப்படுறது கூட அந்த எடத்துக்குக் கும்மரச்சமா இருக்கும்னு நெனைக்கேன். அப்பிடித்தான் தோணுது.

அந்த எடம் ரோட்டுப் பக்கத்துல ஒரு ஆபிசோட காம்பவுண்டு செவத்துக்கு வெளிய, செவத்த ஒட்டி இருக்குது. தெனமும் ராவும் பகலுமா அந்த ரோட்டுல நூத்துக்கெணக்கா பஸ்சுகளும், லாரிகளும், காருகளும், பெறகு என்னென்ன கழுத வண்டிகளுமாப் போகும், வரும். போகும் வரும்னு சொல்லக்கூடாது. விர்ரு விர்ருன்னு காத்தக் கிழுச்சுக்கிட்டுப் பறக்கும். வெளிக் காத்த மட்டுமில்ல; நம்ம காதுகளையும் கிழுச்சுக்கிட்டுப் போகும். காதுகள மட்டுமா? இருதயத்தையே நடுங்க வைக்கும். ஒரு பக்கத்துல இருந்து மறுபக்க ரோடு போகணும்னா உசுர கைல புடுச்சுக்கிட்டுத்தான் ரோட்ட கடக்கணும். இம்புட்டு ஆரவாரமுள்ள அந்த ரோட்டு ஓரத்துலதான் அந்த எடம். அந்த எடம் எதுக்கு இம்புட்டுத் தூரம் மனசப் போட்டு கொடையுதுன்னு சொல்லலியே!

எப்பிடியும் பத்து, இருவது நாளு இருக்கும்னு நெனைக்கேன். ரெண்டு மூணு வாரத்துக்கு முன்னால அந்த எடத்துல ஒரு கெழவி படுத்துக் கெடந்தா. அவா செத்துப் போனாளா, உசுரோட இருக்காளான்னு என்னப் போலவே, நெறய்யாப் பேத்துக்கு சந்தேகமா இருந்துருக்கும். ஏம்னா நாலஞ்சு நாளா ஒரே எடத்துல, ஒரே மாதிரி அசைவே இல்லாமக் கெடந்தா. ஒரு வாளிக்குள்ள தூக்கி வச்சுப் போடலாம் அந்த உருவத்த. அப்பிடிச் சுருண்டு கெடந்துச்சு. அதப்

பாக்கையில மனசு ரணமாகிப் போகும். அதுனால அதப் பாக்காமலயே போயிரணும்னு ரொம்பாத் தொலைவுலயே நெனைச்சுக்கிட்டு நடப்பேன். அது என்ன எழவோ, எத மறந்தாலும் மறக்காட்டியும் அந்த எடத்துக்கிட்ட வந்த ஒடனே அந்தக் கெழவியோட நெனப்பு வந்துரும். சரி நெனப்பு வந்தாக்கூட அவளோட மொகத்தப் பாக்கக் கூடாதுன்னு என்னென்னமோ செஞ்சு பாத்துக்கிட்டு நடப்பேன். அந்தப் பக்கமே திரும்பக் கூடாதுன்னு நெனப்பேன். ஆனா இந்தக் கண்ணுக்கு கொஞ்சங்கூட அடக்கமே கெடையாது. வேணுமின்னே ஓரக் கண்ணு பார்வையிலயே பாத்துரும். நெனப்புக்கும் கண்ணுக்கும் அப்பிடியொரு அன்யோன்யம். இது எனக்கு எருச்சலத் தரும். பல தடவ கோவத்துல இந்தக் கண்ண நானு திட்டிக்கூடப் போட்டேன். ஆனா அது அடங்குறா இல்ல. அதவிட மோசம் இந்த மனசு. ஒன்னப் பாத்துக்கிட்டு ஒம்பதாயிரத்தக் கற்பன பண்ணிக்கிட்டு....பஸ் ஏறிப் போனப் பெறகுங்கூட பின்னோக்கியே இழுத்துக்கிட்டுப் போயி ரொம்பா வம்பு பண்ணும். அவள விட்டு வெலகி ஓடுறம்னு ஒரு தடவ நடு ரோட்டுல போயி லாரி அடிச்சுச் சாகத் தெருஞ்சேன். அவா பக்கத்துக்குப் போகல, பாக்கலன்னுதான் பேரு. ஆனா அவாகூட ரொம்பப் பரிச்சயம் ஆயிப் போன மாதிரி ஒரு உணர்வு. அவளப் பாக்காமெ நடந்து ஓடிய போயிரணும்னு பகீரத் பிரயத்தனஞ் செஞ்ச தெல்லாம் ஒரு பெரயோசனமும் இல்லாமப் போச்சு.

செவத்த மொகம் கெழவிக்கு. சாம்பக்கலரு சேலய வச்சு போத்தி இருந்தா. கழுத்த ஒட்டி வெள்ளையும், பச்சயும் கலந்த மணி போட்டுருந்தா. எப்பிடியும் அறுவது வயசுக்கு மேலதான் இருக்கும். சட்ட கிட்ட ஒன்னும் போடல. பஞ்சு கெணக்கா வெள்ள வெளேர்னு முடி. கிராப்பு வெட்டுனது கெணக்கா இருக்குது. அவா பக்கத்துல ஒரு காலி கார்லிக்ஸ் பாட்லு.

"யாரு பெத்த பிள்ளையோ, எந்த ஊரோ, இங்க வந்து இப்பிடிச் சாகக் கெடக்குது. யாராச்சும் எடுத்துக்கிட்டுப் போயி முதியோர் இல்லத்துல சேத்துட்டா நல்லா இருக்கும். யாரு எடுத்துட்டுப் போவா?" இப்பிடி எனக்குள்ள யோசன.

"சரி, நீதான் கொண்டு போயி சேத்துரேன்," ஏங்கிட்டயே ஏம்மனசு கடுப்பாச் சொல்லுச்சு.

"நானா...நா எப்பிடித் தூக்கிட்டுப் போயிச் சேக்க முடியும்? நானு தனி மனுசியா என்ன பண்றது."

"பெறகென்ன பெரிய பரிவிரக்கம் ஒனக்கு? எல்லாம் பம்மாத்துதான்."

"சே...சே....பம்மாத்து கெடையாது. இந்த எடத்துக்கிட்ட வந்தவுடனே ஏம்மனசு எப்பிடிப் பரிதவிக்குது தெரிமா."

"சும்மா வெட்டிப் பேச்சு இதெல்லாம்."

எனக்குக் கோவமா வந்துச்சு. நல்ல வேள....இந்த மனசோட கொடச்சல நிப்பாட்டுற மாதிரி, அடுத்த ரெண்டாவது நாளுல அந்த எடத்துல படுத்தே கெடந்த அந்த உருவம் எந்துருச்சு ஒக்காந்துருச்சு. பஸ்ச விட்டு எறங்கி வரும்போது பாத்தா, கெழவி ஒக்காந்துக்கிட்டு மாம்பழம் தின்னுக்கிட்டு இருந்தா. எனக்குத் தூக்கி வாரிப் போட்டுருச்சு.

"இன்னும் அஞ்சாறு நாளுல செத்துப் போவா. வெறச்சப் பெறகு தூக்குவாகளா, செத்த ஒடனே தெருஞ்சு தூக்கிட்டுப் போவாகளா!..... யாரு வந்து தூக்குவா! செத்தப் பெறகு வீசிப் போகும்ல. அதான் அப்புறப்படுத்துவாக. உசுரோட இருக்ற மனுசிய யாரும் உத்துக்கூடப் பாக்காமெ போறாக. உசுரு போயிட்டா தூக்கிட்டுப் போயி பெதைக்கிறாக....செத்தாத்தான் கவனம் திரும்புமோ. உசுரு இருக்ர வரைக்கும் யாரும் கண்டுக்க மாட்டேங்காங்களே...." இப்பிடி பல மாதிரி மனசுல நெனைச்சிக்கிட்டே கெழவியப் பாக்கேன்.

"இவளுக்கு ஏது மாம்பழம்! எங்குட்டுமெ அசையாமக் கெடப்பாளே....சரி....யாராச்சும் கொண்டாந்து குடுத்துருப்பாக."

மறுபடியும் எனக்குள்ளே மோதல் "நீதான் வெறும் பரிதாப ஒணர்வோட பாத்தும் பாராமப் போறியே.... மத்தவுக அப்பிடியா? அப்பப்ப சாப்புட எதாச்சும் கொண்டாந்து குடுக்காக," மனசுதான் மறுபடியும் மல்லுக் கெட்டுச்சு.

இந்தத் தடவ எனக்கு ரொம்பா எருச்சலா இருந்துச்சு. கோவமா நானும் சொன்னேன். "ஆமா.... அப்பப்ப என்னத்தையாவது சாப்புடக் குடுத்துக்கிட்டு, அவள வாழவும் உடாமெ, சாகவும் உடாமெச் செய்றாக."

"அப்ப அவளச் சாகச் சொல்றியா நீயி?"

"நானு அப்பிடிச் சொல்லல; ஆனா இப்டிக் கருமாயப்பட்டுக் கிட்டுக் கெடக்குரதுக்கு செத்துரதே நல்லது."

"சீ.... கல் நெஞ்சக்காரி....ஒனக்கா அப்பிடியே எரக்கம் பொத்துக்கிட்டு வருது....சும்மா...வேசம்...ஒங்கம்மாவா இருந்தா அப்டி நெனப்பியா....சேய்."

"நா எப்பிடித்தான் எனிய புரிய வைக்ரதுன்னு புரியல. இந்தக் கெழவியால நாம் படுற அவஸ்தைய பாரு. புரிஞ்சுக்கப் போறாக? யாரு கிட்டப் போயிச் சொல்லுறது?"

"ஆமா....இந்தக் கெழவிக்கும் நமக்கும் என்ன அப்பிடி ஒரு இது?"

"அதான் எனக்கும் புரியல. அது சரி இம்புட்டு நாளா இவா இந்த எடத்துல இல்லையே. ...இப்பத் திடீர்னு எப்பிடி இங்க வந்தா?

"யாரோ கொண்டாந்து இங்ன போட்டுட்டுப் போயிட்டாகளோ, சே. கண்றாவி. இதே எடத்துல ஒரு ஆடோ, மாடோ, கெடந்தா,

என்னைக்கோ தூக்கிட்டுப் போயிருப்பாக. கால்நடைக்கு இருக்ற மதிப்புக்கூட மனுசிக்குக் கெடையாது. சே. என்ன வாழ்க்கை என்ன சமுதாயம்."

"இவாகூட கெழவிங்றதுனாலதான் இப்பிடி பாதுகாப்பா ரவைக்கும் பகலைக்கும் இந்த எடத்துல கெடக்குறா. இதே எடத்துல, ஒரு கொமரி குட்டச்சியா இருந்தா கொஞ்சம் இருட்டிப் போனா வெளிய நடமாட முடியாது. என்ன வாழ்க்க.....என்ன சமுதாயம்," மனசு அது பாட்டுக்கு பேசிக்கிட்டே இருந்துச்சு. நானு ஒன்னும் பதுலுக்குச் சொல்லலை. ஆனா அது சொன்ன அம்புட்டும் நாயமாப்பட்டுச்சு.

இப்பச் செத்துப் போவா.....பெறகு செத்துப் போவான்னு பாத்துக்கிட்டு இருந்தா, திடுதிப்புன்னு ஒரு நாளு கால நீட்டி நல்லா நிமுந்து ஒக்காந்துகிட்டு தலய சொருஞ்சு சொருஞ்சு பேனு எடுத்துக் குத்திக்கிட்டு இருக்கா. அந்த வெள்ள முடில, வெளேர்னுதான் பேனு இருக்கும். எப்பிடி பேனுகூட வெள்ளையாப் போகுது? ஆமா....அதான் இப்ப ரொம்பா முக்கியம்.

இப்பல்லாம் சேலய வச்சு மொகத்த மூடமாட்டா. நல்லா முழுச்சுப் பாக்கா. நல்லாத்தான் இருக்கு அவா மொகம். கொமரி குட்டச்சியா இருக்கையில சூப்பரா இருந்துருப்பா....மொட்ட மாடில நின்னுகிட்டு அவளப் பத்தி நெனச்சுக்கிட்டு இருக்கைல சடச் சடன்னு மழ பேயத் தொடங்குச்சு. வேகமா ஓடிப்போயி ரூமுக்குள்ள இருந்துகிட்டேன். அங்க எங்க நிம்மதியா இருக்க முடுஞ்சது. அவா நெனப்புத்தான் நெருஞ்சி முள்ளா மனசுல குத்துச்சு.

"சே இந்த மழைல அவளால எந்துருச்சு ஒடக்கூட முடியாது. மழைக்கு எப்பிடி, எங்ன போயி ஒதுங்குவா? பாவம், நாளைக்குக் காலைல போம்போத அவளப் பாக்கணும். ஆனா அவா அந்த எடத்துல இல்லாம இருந்தா நல்லா இருக்கும். இருந்தான்னா, அவளச் சுத்தி தண்ணியா கெடக்கும்." மனசே வலிக்குது நெனைக்கயிலே....

மறுநாளு போம்போது பாத்தேன். சாம்பக் கலருச் சேலையோட இன்னொரு மஞ்சக் கலரு பூப்போட்ட சேலயும் போத்திக்கிட்டு கெடந்தா. யாராச்சும் இந்தச் சேலயக் கொண்டாந்து குடுத்துருப்பாக. ஆனா அவளப் பாத்தா நனஞ்ச மாதிரியே இல்லியே ....ஒரு வேள ராத்திரிக்கு ராத்திரி எந்துருச்சுப் போயிருவாளோ... எங்க போவா..... ஆனா காலைல ஏழரைக்கெல்லாம் இந்த எடத்துல இருக்காளே.... சாயங்காலம் ஆறு மணிக்கும் இருக்காளே .... மண்டயப் போட்டுப் பிச்சுக்கிட்டதுதான் மிச்சம்.

ரெண்டு நாளுக் கழுச்சு அந்தப் பக்கமாப் போன ஒரு ஆளுட்ட கேட்டேன். அவரும் ரொம்பப் பாவமாச் சொன்னாரு. "ராப்பகலா இங்னதான் கெடக்கா.... யாருன்னு தெரியல."

இந்த ஒரு மாசமா அவா அந்த எடத்துல ஒரு அங்கமாயிட்டா .... படுப்பா.... ஒக்காருவா.... போறவுக வாரவுகளப் பாப்பா.... இந்தப் போக்குவரத்தின் ஆரவாரமும், பரபரப்பும், சனங்களின் நடமாட்ட மும், அவளிடம் இம்மியளவு சலனத்தைக்கூட ஏற்படுத்தல. ஏற்படுத்த முடியல.

இது எப்பிடி சாத்தியம்! நம்மதான் அவா விசயத்துல பாராமொகமா நடந்துக்கிறோம்னு நெனச்சா....இப்ப இவளப் பாக்கையில இவாதான் நம்மள, இந்தச் சமுதாயத்தப் பாராமொகமா நடத்துறான்னு தோணுது.

“ஒங்களோட எந்திர கதியான வாழ்க்கையும், எந்திரம் போன்ற இருதயங்களும், இயக்கங்களும் இதுக்கெல்லாம் அப்பாற்பட்டவா நானு,” அவாதான் சொல்ற மாதிரி இருக்குது. அவா மூஞ்சிதான் அப்பிடிச் சொல்லுது.

“இப்பிடிக் கெடந்துகிட்டே இவளுக்கு எம்புட்டு ராங்கித்தனம்! பெரிய ஞானின்னு நெனப்புதான். இவா எப்ப இங்கருந்து போவா?” எனக்குள்ள ஒரு அங்கலாய்ப்பு.

சொல்லி வச்சது கெணக்கா அடுத்த மூணாவது நாளு போயிட்டா. போயிட்டாளா. செத்துப் போயிட்டாளா....ஒண்ணுந் தெரியல. சரி எப்பிடிப் போனா என்ன. அந்த எடத்துல அவா இப்ப இல்ல. இனி இப்பிடி மனசுல கொடச்சலு, கொமச்சலு இருக்கா துன்னு நெனச்சேன். ஆனா அதுதான் இல்ல. அவா போனப் பெறகும் அந்த எடம் என்ன உறுத்துது. அந்த எடம் காலியா இல்ல. அவளோட நெனப்புகளால ரொம்பிப் போயிக் கெடக்குது. அதுனால அவள இப்பயும் அந்த எடத்துல பாக்க முடியுது. இதுலருந்து தப்பவே வழி இல்லையா.... ஒரு வேள நானு எடத்த மாத்திக்கிட்டுப் போயிட்டா அந்த எடத்த மறந்து போயிர முடியுமோ? ஆனாலும் அந்த மௌனக் கெழவி இப்பிடி என்ன சஞ்சலப்படுத்திட்டு, போயிட்டாளே.... இல்ல....போகலியே....இருக்கா....அந்த எடத்துல இன்னும் இருக்கா.

*குயிக் நியூஸ் - 2002*

# 23. நிராசை

"அந்த ஆட்டுக்காரன் செத்துட்டானாம்."

"எப்ப?"

"நேத்து மத்தியானம் ரெண்டு மணிக்கு."

"அடப்பாவமே.... நல்லாத்தானெ இருந்தான்."

"ம்...இருந்தான். முந்தா நாளுகூட ஆடுகளப் பத்திக்கிட்டு உல்லாசமாப் பாடிக்கிட்டுத் திருஞ்சான். கூடயே ரெண்டு குட்டிகள யுந் தூக்கிக்கிட்டு அலஞ்சான்."

"பெறகெப்படி இப்பிடித் திடுதிப்புனு மண்டயப் போட்டுட்டான்? நம்பவே முடியலயே. சாகுற வயசுகூட இல்லியே."

"அவனுக்கென்ன வயசு இருக்கும்! முப்பதுக்குக் கொறவாத் தான் இருக்கும். ரெண்டு வருசத்துக்கு முன்னதான் கலியாணமே முடிச்சான்."

"கலியாணமே வேண்டாமின்னு இருந்தவன அவுகம்மெ மூக்காயிதான் கட்டாயப்படுத்தி தம்பிமகா செல்லக்கனிக்குக் கட்டி வச்சா. அவெம் பேரு சொல்ல ஒரு பிள்ள கூட இல்ல."

"பிள்ள எங்குட்டுக்கூடிப் பெறக்கும்? அவெந்தான் ஆடு களோடெ ஆடாக் கெடந்து ஒறங்குவானாம்லெ. அவும்மயும் எம்புட்டோ எடுத்துச் சொல்லிப் பாத்துட்டா. இவெ வழக்கம் போல வெளியதான் படுப்பானாம்."

"அதான் அந்தப் பிள்ள செல்லக்கனியும் பொறுத்துப் பாத்துட்டு இவனுக்கு ஒரு ஆட்டையே கெட்டி வச்சிருக்கலாம்னு சொல்லிட்டு அவுகம்மா வீட்டுக்கே போயிட்டாளாம்."

"அவா வந்து பாத்தாளா?"

"ம். வந்தா. அவளப் பொறுத்த மட்டுக்கும் இவ இருந்தாலும் செத்தாலும் ஒன்னுதான."

"சே....வேதனையாவுல இருக்கு. இந்த காடுகரைகள்ள அவங்காலு படாத எடமே இல்ல. அவெம்பாட்டுச் சத்தங் கேக்காத சனமே இல்ல."

"நேத்துக் காலைல வகுறே நல்லா இல்லன்னு சொன்னானாம். ரெண்டு மூனு தடவ பேதியாச்சாம். அம்புட்டுத்தான். பொசுக்குனு போயிட்டானாம்."

“ஆடு மேய்க்கப்போன எடத்துல எதுனாச்சும் பேயி கீயி அடிச்சிருக்கமோ? என்னத்தையாவது கண்டு பயந்திருப்பானா? கூசாமெ எந்தக் கெணத்துலயும் எறங்கி தண்ணி குடிப்பான். கெணத்துக்காட்ல உழுந்து செத்தவுக யாரும் தொத்திகிட்டாகளொ என்னமோ.”

“சே…சே… அப்பிடி எல்லாம் இருக்காது. அவெ என்ன இன்னைக்கு நேத்தா ஆடு மேய்க்கான். ஏழெட்டு வயசுப் பொடியனா இருக்கயில குச்சியும் சட்டியுமா அலைய ஆரம்புச்சவன். இன்னைக்கு வரைல அதே தொழிலுதான்.”

“காடு மேடெல்லாம் கண்டமாணிக்க திருஞ்சே நறுங்கிப் போனான்.”

அத்துவானக் காட்டுக்குள்ள ஆடு மேச்சுக்கிட்டு திருஞ்சுட்டு இன்னைக்கு ஓஞ்சு ஒடுங்கிப்போன ஆட்டுக்காரன் வேங்கையனப் பத்திதா சனம்பூராம் பேசிக்கிட்டு இருந்தாக. வேங்கையன் குட்டையா இருப்பான். கறுத்துப்போன மொகத்துல செம்பட்ட கலரு மீச வச்சிருப்பான். முதுகு லேசா கூனு உழுந்தமாதிரி இருக்கும். கண்ணு பொந்துக்குள்ள கெடக்கும். ஆனாப் பெரகாசமா இருக்கும். அந்த இத்தினிக்கானு ஒடம்புக்குள்ள இருந்து பாட்டுச்சத்தம் மட்டும் கணீர்னு வெளியே வரும். எப்பயும் ஒரு டவுசரும் பனியனும் போட்டுருப்பான். எப்பமாச்சும் ஒரு துண்டு தலைல நேஞ்சி கெட்டிருப்பான்.

ஒரு நாளு பாக்கி இல்லாம தெனமும் மழைன்னாலும், குளுருன்னாலும், பனியினாலும், வெளிலுனாலும் தவறாம ஆடுகள ஓட்டிக்கிட்டு வந்துருவான். காலைல ஆறு மணிக்கெல்லாம் கையில ஒரு குச்சியும், சட்டில கூழும் ஊத்திக்கிட்டு காலுல ஒரு பழைய செருப்புப் போட்டுக்கிட்டு சலிக்காம வாரதப் பாக்கைல ஆச்சரியமா இருக்கும். பகல் பூராம் சுத்தித் திரிவான். கூழக் குடுச்ச பெறகு செத்த நேரம் வரப்பு மேட்டுல கை ரெண்டையும் தலைக்கு அடில வச்சிக்கிட்டு மட்டமல்லாக்க படுத்துக்கெடப்பான். காலுமேல காலு போட்டு ஆட்டிக்கிட்டு சொகம்மாக் கெடப்பான்.

வேங்கையனுக்கு சனங்களோட அம்புட்டுச் சாவாசம் கெடையாது. அவனுக்கு எல்லாமே ஆடுகதான். மனுசங்களோட அவம் பேசுனத விட ஆடுகளோட பேசுனதுதான் அதிகம். தகப்பனத்த அவனுக்கு ஒறவுன்னு இருந்தது அவுகம்மதான். ஆனா அவுகம்மயிட்ட கூட அம்புட்டு பேசமாட்டான். அவனுக்குச் சொந்தம் பந்தம் பாசம் எல்லாமே ஆடுகதான். ஆடுகளோட அவனுக்கு அப்படியொரு அந்நியோன்யம். அந்த ஆடுகளும் அவஞ்சொல்றதப் புருஞ்சிக்கிட்ட மாதிரி அவஞ்சொல்றதக் கேட்டு நடக்கும். அவனயும் ஆடுகளையும் பாக்கையில வேடிக்கையாகவும் இருக்கும்; வினோதமாயும் இருக்கும். வேங்கையன் யாரையும் எதையும்

சட்டபண்ண மாட்டான். அவெ ஒலகமே தனிதான்.

குட்டி ஆடுகமேல அவனுக்குத் தனிப்பட்ட பிரியம். அதுகள அவ்வளவா நடக்க உடமாட்டான். தூக்கிக்கிட்டே திரிவான். அதுகளுக்கு மட்டும் மரத்துல ஏறிக் கொழ ஒடுச்சுத் திங்கக் குடுப்பான். ஒவ்வொரு குட்டிக்கும் பேரு வச்சுக் கூப்புடுவான். கலியாணம் முடிச்ச புதுசுல இவெ இப்படித்தான் மஞ்சணத்தினு ஒரு குட்டிக்கு பேருவச்சு அதக் கொஞ்சிக்கிட்டு இருந்தான். இதப் பாத்த அவெம் பொண்டாட்டி கோவத்துல அந்தக் குட்டிய வெரட்டுனா. அம்புட்டுத் தான் வேங்கையனுக்கு வந்துச்சே கோவம்.

“ஏம் மஞ்சணத்திமேலே அடி உழுந்திச்சுன்னா ஒம்மேல அடி உழும் ஆமா ” சொன்னவெ அவள அடிக்கவே போயிட்டான். அதோட அவா ஓடிப்போனா. அவா போயிட்டான்னு வேங்கையன் இத்தினிகூடக் கவலப்படல.

அவுகம்மெதான் கவலப்பட்டா. பொண்டாட்டி கோவுச்சுட்டுப் போயிட்டான்னு கேள்விப்பட்ட மொதலாளி கேட்டாரு, “என்னடா வேங்கையா ஒம் பொண்டாட்டி ஒனிய உட்டுட்டு போயிட்டா ளாம்லெ … ஏண்டா?”

“ஆமாங்கய்யா, அவா போனதே நல்லது எசமான். மஞ்சணத்திய அடிக்கப் போறா. அவா இருந்தும் பெரயோசனமே இல்லங்கயா. போகட்டும்.”

வேங்கையன் சொல்லவும் மொதலாளிக்கு ரொம்பாச் சந்தோசமா இருந்துச்சு.

வேங்கையன் கலியாணம் முடிக்கும்போது மொதலாளிக்குக் கவலையாத்தான் இருந்துச்சு. கலியாணத்துக்குப் பெறகு, பொண்டாட்டி பேச்சக் கேட்டுக்கிட்டு ஆடு மேய்க்கிறத உட்டுட்டு வேற வேலைக்குப் போயிருவானோன்னு உள்ளூர கலக்கமாத்தான் இருந்துச்சு. இப்ப பொண்டாட்டி இவன உட்டுட்டுப் போயிட்டான்னு தெரியவும் அவருக்கு நிம்மதியா இருந்துச்சு.

வேங்கையன் சின்னப்பையனா இருக்கைல வாரத்துக்கு அஞ்சு ரூவா கூலி குடுத்தாரு. விக்கிற வெல வாசில இந்தக் கூலி பத்த மாட்டேங்குதுனு அவுகம்மெ பொலம்புவா. ஆனா வேங்கையன் எதையுமே கண்டுக்க மாட்டான்.

“ஒங்க மொதலாளிகிட்ட கூலி கூட்டிக் கேளு. இல்லன்னா வேற வேலைக்குப் போடா,” அவுகம்மெ ஒரு நாளு சொன்னா.

அம்புட்டுத்தான், வேங்கையன் பதறிப் போயிச் சொன்னான், “ஏமா என்னம்மா நீயி ஆடுகள உட்டுட்டு வேற வேலைக்குப் போச் சொல்ற? நானு போயிட்டா ஆடுகள யாரு மேய்ப்பா? பாவம்மா ஆடுக.”

“அடச் செத்த பெய மகனே…. ஆடுகள பாவம் பாக்குறியே….

ஒனியப் பாவம்னு பாக்கானா அந்த மொதலாளி? நீ இல்லட்டா வேற ஆளே கெடைக்க மாட்டானா என்ன? ஓ வயசு ஆம்பளைக என்னென்ன வேலைக செஞ்சு எம்புட்டுச் சம்பாரிக்காகன்னு பாரு."

"சம்பாருச்சு என்ன செய்ய? அவுகளுக்கு ஆடுக இல்லியே. அங்க பாரு மஞ்சணத்திக் குட்டி மேன்னு கத்தி ஏனியக் கூப்புடுது பாரு." சிருச்சுக்கிட்டே குட்டியத் தூக்கிக் கொஞ்சுனான்.

"ஆமா, ஆடுக பூராவும் ஒனக்குச் சொந்தம்னு நெனப்புதான். ராப்பகலா நீயி நாயாப் பேயா காடுகரைகள்ள மேச்சு வளத்துவிட அவெ வித்து பணஞ் சம்பாரிக்கான். ஒனக்குக் காத்துட்டு பெரயோசனமில்ல....ஆடுகளத் தூக்கித் தூக்கி கொஞ்சுனதுதான் மிச்சம். இப்பிடி ஓம் பொண்டாட்டிட்ட இருந்திருந்தா அவளாவது இங்க இருந்து ரெண்டு பிள்ளைகளப் பெத்துருப்பா," சலிப்பாச் சொன்னா அவுகெம்மெ. அவெ எதையுமே கண்டுக்காம திருஞ்சான்.

வேங்கையன் எப்பவும் பாட்டுப் பாடிக்கிட்டே திரிரதப் பாக்குறவுக அவெஞ் சந்தோசமாவே இருக்காம்னு நெனப்பாக. செல நாளு பாட்டே படிக்காமெ சும்மா வயக்காட்டுல படுத்தே கெடப்பான். என்னன்னு யாருக்கும் தெரியாது. வீட்லகூட உம் முன்னே சோகமா இருப்பான். யாரு என்ன கேட்டாலும் வாயத் தொறந்து பேச மாட்டான். மஞ்சணத்தி குட்டிய மொதலாளி விக்கிற அன்னைக்கு வேங்கையன் அழுத்துட்டான். அத விக்காதிங்கய்யான்னு கெஞ்சினான்.

"ஓ வேல எதுவோ அதமட்டும் பாத்துட்டுப் போடா. விக்க வேண்டாம்னு சொல்ல நீ யாருடா நாயே," மொதலாளி கேக்கவும் கப்சிப்னு ஆயிட்டான். ஆனா மொதலாளி நல்ல மனுசன் இல்லன்னு மனசுக்குள்ள நெனச்சுக்கிட்டான். ஆனாலும் ஆடு மேய்க்கிறத உட்டுட்டுப் போகப் பிடிக்கல. மொதலாளிக்கு ஆடுகளப் புடிக்காது போலன்னு நெனச்சுக்கிட்டான். அவுகம்மயிட்ட இதச் சொன்னான்.

"ஆடுகள மட்டுமில்லடா பைத்தியக்கார பெயலே, ஒனியவும் புடிக்காது, அவருக்குப் புடுச்செதெல்லாம் ஆடு வித்து வரும் பணந்தான். ஒனக்கு என்னத்தச் சொன்னாலும் ஒரு எழவும் புரியாது. சாகுற வரைக்கும் இந்த ஆடுகளோட கெடந்து ஆடிக்கிட்டுக் கெட. ஒலகந்தெரியாத பெயலா இருக்கியே" கவலையாச் சொன்னா.

வேங்கையன் சாகுற அன்னைக்கு அவுகம்மயிட்டச் சொன்னான். "ஏம்மா, நானு செத்துப் போனா ஒரு ஆட்டுக்குட்டிய ஏங்கூட போட்டுப் பெதைக்கணும்மா." இதக் கேட்டுட்டு அவுகம்மெ மட்டுமில்ல, அங்ன இருந்தவுக பூராம் அழுதாக.

"நீ சாகமாட்டெ ராசா, சரியாப் போகும்டா. நீ பொழச்சு எந்துருச்சு நாளைக்கே ஆடு மேய்க்கப் போவெ ராசா," அழுதுகிட்டே அவுகம்மெ சொன்னா.

வேங்கையன் தலயத் திருப்பி வெளிய நின்ன ஆடுகளப் பாத் தான். அவெங்கண்ணுல கண்ணீரு வழுஞ்சது. அந்தக் குட்டிகளுக்குத் தண்ணி வைம்மான்னு சொன்னான். அதுக்குப் பெறகு அவெம் பேசல. பரிதாபமா போயிச் சேந்துட்டான்.

அவெஞ் செத்ததக் கேள்விப்பட்டதும் மொதலாளி ஒரு ஆள அனுப்பி ஆடுகளப் பூராம் ஓட்டிக்கிட்டுப் போயிட்டாரு. வேங்கைய னோட அம்மெ அவருட்ட வேங்கையனோடெ கடேசி ஆசையச் சொல்லி ஒரு குட்டித் தரும்படிக் கெஞ்சுனா.

"ஓம் மகெ பெரிய மனுசம் பாரு....அவனுக்கு ஒரு கடைசி ஆச! அத நெறவேத்த நாங் குட்டி குடுக்கனுமாக்கும். குட்டியுங் கெடையாது, ஒன்னுங் கெடையாது. போ....போ...," எரக்கமில்லாமச் சொல்லி வெரட்டி உட்டாரு.

எதுனாச்சும் துட்டாவது குடுத்தீங்கன்னா அவனப் பெதைக்க ஒதவியாயிருக்கும்னு சொல்லி அழுததுக்கு, அதான் வாரா வாராம் வாங்கித் தின்னீகள்ள. இனி எங்க இருந்து குடுக்குறது? துட்டுமில்ல ஒன்னுமில்லன்னு கடுமையாச் சொல்லிட்டாரு.

இதக் கேள்விப்பட்ட சனங்க பூராம் வகுத்தெருச்சப் பட்டாக.

"சீவியம் பூராம் ஆடு மேச்சவனுக்கு ஒரு சின்னக் குட்டி குடுக்க மாட்டேன்னுட்டானே. அவனெல்லாம் என்ன மனுசன்?"

"அப்ப ஆட்டுக்குட்டி இல்லாமத்தான் பெதைச்சாகளாக்கும்?"

"பெறகென்ன செய்ய? இம்புட்டு வருசமா ஆடுகள மேச்சு ஒரு குட்டிய ஒம்பது குட்டியாப் பலுகிப் பெருக வச்ச ஏம்மகனுக்கு ஒத்தக் குட்டி குடுக்க மாட்டேன்னுட்டானே....பாவி. அவெ வௌங்குவானா? அவெ ஆடுக பூராம் கொள்ள நோயில போக"ன்னு சொல்லிக்கிட்டு மண்ண வாரித் தூத்துனா அவுகம்மெ. பாத்த சனம் பூராம் பரிதவிச்சுப் போயி நின்னாக.

"இருக்காதா பின்ன? பெத்த கொல எரியாதா?"

"தலவிரிகோலமா அழுதுகிட்டு இருந்தவா திடீர்னு எந்துருச்சு ஓடுனா. ஒரு வாளி நிமுர ஆட்டுப்புழுக்கைய அள்ளி பெணத்தொடெ தலக்குமாட்டுல வச்சிட்டு ஒப்பாரி வச்சு ஒரு மூச்சு அழுதா. கடேசில பெணத்தக் கொண்டு போயி பெதைக்கும்போது, அவளே அந்த வாளியத் தூக்கிக்கிட்டு போயி குழிக்குள்ள வச்ச பொணத்து மேல புழுக்கையைக் கொட்டிட்டு மடார் மடார்னு தலைல அடுச்சுக்கிட்டு அழுதா பாரு....கூடியிருந்த சனம் பூராம் சத்தம் போட்டு அழுதுட்டாக."

ஒக்காந்து பேசிக்கிட்டிருந்த அம்புட்டு பேரும் முந்தானய எடுத்து கண்ணத் தொடச்சாக. மூக்கச் சீந்திப் போட்டாக. அதுக்குப் பெறகு அங்க யாரும் எதுவும் பேசல.

*ஏர் - அக்டோபர் 2002*

# 24. களவு

சின்னப்பிள்ளையா இருக்கயில ஊர்ல சின்னஞ் சிறுசுகளப் பயங்காட்டனும்னா பெரியாளுங்க இந்தா பூச்சக்கள்ளன் வாரான், கள்ளப்பூச்சாண்டி வாரான், களவாணிப்பெய வாரான்னு சொல்லு வாங்க. நானு சின்னப்பிள்ளையா இருக்கயிலகூட அப்பிடிச் சொல்லி எனியப் பயங்காட்டி இருக்காங்க. அப்ப அப்பிடிச் சொல்லும்போது களவாணிப் பெயலப் பத்தி தினுசு தினுசா கற்பன செய்வோம். களவாணின்னா கிழுஞ்சு போன லுங்கி கட்டிக்கிட்டு, பச்சக் கலருல அகலாமா பெல்ட்டு கட்டிக்கிட்டு, ஒரு அழுக்குப் பனியனப் போட்டுக்கிட்டு, தலமுடிய காடுகணக்கா வளத்துவச்சுக்கிட்டு, பெரிய மீச வச்சுக்கிட்டு, பெரிய பெரிய பல்ல வச்சுக்கிட்டு இருப்பான்னு நானு நெனச்சுக்கிருவேன். வழில அப்பிடிப்பட்ட ஆளுங்க யாரை யாச்சும் பாத்துட்டம்னா இந்த ஆளு கண்டிப்பா களவாணியாத்தான் இருப்பாம்னு நானே முடிவு பண்ணிக்கிடுவேன். பெரியவளா வளந்தப்பெறகுதான் இந்த எண்ணம் கொஞ்சங் கொஞ்சமா மாறுச்சு. இம்புட்டு வயசுல எத்தன எத்தனயோ களவாணிகளப் பாத்துருக்கேன்; கேட்டுருக்கேன். ஆனாலும் இந்த ஊருக்கு வந்தப்பெறகு பாத்த இந்த களவாணி மாதிரி வேற எங்கயுமே நானு பாத்ததில்ல.

இந்த களவாணி பேரு வெங்கடேசன். எங்க தெருவுலதான் குடியிருக்கான். அவனும் அவன் பொண்டாட்டியும் ஒரே ஒரு மகனும் பெரிய மாடி வீட்டுல இருக்காக. வெங்கடேசன் ரொம்ப தடியாவும் இல்லாமெ ரொம்ப ஒல்லியாவும் இல்லாமெ இருப்பான். வயசு கிட்டத்தட்ட அறுவது இருக்கும். ஆனா பாத்தா அம்புட்டு வயசு மாதிரி தெரியாது. நல்ல கலரு. சாதாரணமா களவாணிகள்ளாம் பெரிய சைஸ் ஒடம்போட கன்னங்கரேர்னுதான் இருப்பாங்கன்னுதான் நெனச்சிருக்கேன். இவெ அப்பிடி இல்ல. இந்த ஆறேழு வருசமா நானு இவனப் பாத்துக்கிட்டு இருக்கேன். இத்தன வருசமா ஒரே ஒரு மஞ்சக்கலர் பனியனும் ஒரு நஞ்சுபோன லுங்கியுந்தான் கட்டிக்கிட்டுத் திரிறான். இடுப்புல பெல்ட்டு இல்ல. அவங்கட்டியிருக்குற லுங்கி எப்பயும் இடுப்புல நிக்காம கீழ எறங்கித்தாங் கெடக்கும். வெங்கடேசன் ஒரு களவாணின்னு ஊருக்கெல்லாந் தெருஞ்சாலும் அவங் களவாணித்தனத்த எல்லாரும் என்ன காரணத்துக்காகவோ சகிச்சுக்கிட்டு இருந்தாக. சனங்க சகிச்சாங்கன்னு சொல்றதவிட வெங்கடேசன் அவுகள எப்பிடியோ சகிக்க வச்சுக்கிட்டு இருந்தான்.

அவனப் பொறுத்த வரையில் அடுத்தவுக பொருள அபகரிக்கிறது ஒரு சகஜமான காரியம். ஒரு நாளைக்கு ஒரு களவாவது செய்யாட்டி அவனுக்குஞ்சரி அவம்பொண்டாட்டிக்குஞ்சரி ஒறக்கமே வராது. களவு அவனோட ரத்தத்துல ஊறிப்போன ஒன்னாச்சு. இந்தக் களவுனாலயே ஒரு சின்னப் பிள்ளகூட அவன மதிக்காது. வயசுக்கேத்த மாதிரி அவனோட நடவடிக்கைக இல்லாததுனால அவனுக்கு யாருமே மரியாத குடுக்குறது இல்ல. அவனும் அதப்பத்தியெல்லாம் கவலப் பட்டுக்கிட்டதில்ல.

வெங்கடேசனோட களவுகள ரெண்டு வகையாப் பிரிக்கலாம். அவனோட மேஜர் களவு புது வீடுக கட்டுற எடங்கள்ளதான். இந்தக் களவு பற்றி சகல சாதி சனங்களுக்கும் தெரியும். மேட்டுச்சத்திரம் ஊருல யாரு வீடு கட்டுனாலுஞ்சரி வெங்கடேசன் கட்டாயம் அங்க இருப்பான். கடக்கால் போட்டதுல இருந்து வீடு கட்டி முடுச்சு ஆளுக குடியேறி வாரது வரைல நேரங்காலம்னு இல்லாம வீட்டையே சுத்திச் சுத்தி வருவான். மேஸ்திரி, கொத்தனாரு, சித்தாளு இப்பிடி யாரு கண்ணுலயுமே படாம எப்பிடியோ செங்கலு, சிமெண்ட் மணலு, கம்பி, ஜல்லி, இப்பிடி ஒரு பொருளு பாக்கி உடாமெ களவாண்டுட்டு வந்து பொண்டாட்டிட்ட குடுப்பான். அவனும் அவெம் பொண் டாட்டியுமாச் சேந்து அவுக வீட்டு மாடிப்படிக்கட்டுக்கு கீழயோ, மாடிலயோ, வீட்டுக்குள்ளயோ அல்லது வீட்டுக்குள்ளயே இருக்குற தோட்டத்துல பெரிய பள்ளம் தோண்டியோ பெதச்சு வச்சுருவாக. ஒரு நாலஞ்சு மாசங்களுச்சு அம்புட்டயும் எடுத்து வேற எங்கயாச்சும் வீடு கட்டுறவுககிட்ட கொஞ்சங் கொறச்ச ரேட்டுக்கு வித்துருவாக. வெங்கடேசன் விக்கிறதெல்லாம் அநேகமா களவாண்ட பொருளுக தாம்னு எல்லாருக்குந் தெரியும். ஆனாலும் என்னமோ அவெங் கள வாங்குறதும், விக்கிறதும், சனங்க வாங்குறதும் ஒரு சர்வ சாதாரணமா அன்னாடம் நடக்குற நிகழ்ச்சியாத்தான் இருந்துச்சு.

அவனோட ரெண்டாவது வக களவுக ரொம்ப வகுத்தெருச்சலக் குடுக்குறதாவும், விசித்திரமாயும், ரொம்ப நொந்து போகச்செய்ற தாவும் இருக்கும். இந்த களவு தெனமும் அக்கம்பக்கத்துகள்ள தெருவுகள்ள, வீடுகள்ள செய்ற களவு. பக்கத்து வீட்டு தென்னமரத்து லருந்து தென்ன மட்ட, தேங்கா உழுந்துச்சுன்னா அந்த வீட்டுக்காரங் களுக்குத் தெரியாம தேங்காய, மட்டைகளக் கொண்டாந்து வீட்டுக் குள்ள சேக்குரதப் பாத்தா ரொம்ப வேடிக்கையா இருக்கும். யாரு வீட்டுல என்ன இருக்கு, எப்பிடித் திருடலாம்ங்ற யோசனையோடயே சர்வ சதா காலமும் ரவுண்ட்ஸ்லயேதான் இருப்பான். மட்டயப் பாத்த ஒடனயே ஏதோ ஒரு பெரிய திருட்டுக்கு ஆயத்தஞ் செய்றது கணக்கா மொதல்ல லுங்கிய மடுச்சுக் கெட்டுவான். பெறகு சுத்திமுத்தி ஒரு தடவ பாப்பான். யாருமில்லன்னு தீர்மானிச்சப் பெறகு அரவமில்லாமெ மட்டையத் தூக்கித் தோளுல வச்சுக்கிட்டு இத்தினிக்

கூட சத்தமில்லாமெ அடிமேல அடிவச்சு பூன கணக்கா நடந்து வந்து தன்னோட வீட்டுச் சந்துக்குள்ள வந்து ரகசியமா பொண்டாட்டியக் கூப்புடுவான்.

"மீனாச்சி....மீனாச்சி....இந்தா இத எடுத்து வை." மீனாச்சிக்குச் சந்தோசந் தாங்காது. புருசன் திரைகடல் ஓடித்திரவியம் தேடிட்டு வந்துட்டது மாதிரி பூரிச்சுப் போவா. அவுங்ககிட்ட ஒன்னுமில்லாமெ இப்பிடிக் களவாங்றாங்கன்னு நெனைக்கக் கூடாது. எல்லாமெ இருந்தாலும் இப்பிடிக் களவாங்குறதுதான் அவுகளுக்குச் சந்தோசத்தக் குடுத்துச்சு. கவுரமான தொழிலுன்னுதான் நெனப்பான். மத்தவுங்களோட பொருள களவாங்குறத அவுங்களுக்குத் தெரியாம எடுக்குறதுல இவன மாதிரி ஒரு தெறமசாலிய நாம்பாத்ததில்ல. ஒருத்தரோட பொருள எடுத்துக்கிட்டே அவருகூட அன்யோன்யமான ஒறவோட இருக்குற மாதிரி அவருட்ட பழகுறதுல வெங்கடேசன் மகா கெட்டிக்காரன். இத்தனைக்கும் இவந்தான் பொருள எடுத்தாம்னு அவருக்குந் தெரியும்! களவு எடுத்த வெங்கடேசன விட களவு குடுத்தவருக்குத்தான் ரொம்ப சாங்கோஜமா இருக்கும். அந்த அளவுக்கு வெங்கடேசன் கில்லாடி!

வீட்டப் பூட்டிட்டு யாராச்சும் வெளியூர் போயிட்டாங்கன்னா வெங்கடேசனுக்கு ரொம்பச் சந்தோசமா இருக்கும். ஆள் நடமாட்டம் இல்லாத நேரமாப் பாத்து சுத்துச் சுவர் ஏறி உள்ள குதுச்சு, உள்ள இருக்குற பூவோ, காயோ, பழமோ எதுனாலும் புடுங்கிட்டு வந்து தென்ன மட்டகொண்டாந்து குடுத்த அதே பாணில மீனாச்சிட்ட சந்து வழியாகக் குடுத்துட்டு சர்வ சாதாரணமா அவெ நடந்து வர்ரத பாக்கையில எனக்கு ரொம்பா வெளமா இருக்கும்.

"என்ன வெங்கடேஸ், ஆளுக இல்லன்னா ஓம்பாடு கொண்டாட்டந்தான். இதெல்லாம் அசிங்கமாத் தெரியல?"

"இதுலென்ன அசிங்கம்ங்க? ஊருக்குப் போனவுக வர்ரதுக்குள்ள பழம் அழுகிப் போகும்; காய்கறிகள்ளாம் முத்திப் போகும்; பூவெல்லாம் வாடி வேஸ்டாத்தானங்க போகும்? அதான் எடுத்தாரேன். சும்மா வேஸ்டாகுறத நானாச்சும் பிரயோசனப் படுத்துறனே; அதப்பாருங்க" ரொம்ப கூலாச் சொல்லிட்டுப் போவான்.

இந்த ஆளு களவாங்கும் போது ஒரு நாளைக்காவது கையுங் களவுமாப் பிடிபடனும்னு எனக்கு மட்டுமில்ல; இந்தத் தெருவுல இருக்குற அம்புட்டுப் பேத்துக்கும் ஆசை. நாங்க எதிர்பாத்தது வீணாகல. போன சனிக்கிழம வெங்கடேசன் வகைய்யா மாட்டுனான். மாட்டுனாம்னு நாங்க நெனச்சோம். ஆனா மானம் மரியாத எல்லாத்த யும் உதுத்திட்ட அவன எதுவுமே பாதிக்கல.

எங்க தெருவுல வெங்கடேசன் வீடுதாங் கடேசி வீடு. அவனோட வீட்டுக்குப் பெறகு வீடுக கெடையாது. அதுக்குப் பெறகு பூராம் வயக்காடுகதான். சுப்ரமணி அய்யரோட வயக்காட்ட ஒட்டி பெரிய காவா ஒன்னு போகுது. மழக்காலத்துல அதுல தண்ணி வரும்.

மத்த நாளுகள்ள அது காஞ்சேதாங் கெடக்கும். அந்தக்காவா மண்ணு நல்ல வழுவழுன்னு வீடு மொழுகுறதக்கு ஏத்த மண்ணு. அதுனால எங்குட்டு கெடக்குற ஆளுகள்ளாம் இந்தக் காவாயிலதான் வந்து மண்ணெடுத்துட்டுப் போவாங்க. போன சனிக்கெழம அப்பிடித்தான் பிள்ளையார் கோயில் தெருவுலருந்து ரெண்டு பொம்பளைக கூடையும் மம்பிட்டியும் எடுத்துக்கிட்டு மண்ணள்ள வந்துருக்காக. மொதல் நட மண்ண அள்ளிக்கிட்டுப் போகையில மம்பிட்டிய எதுக்கு ஒவ்வொரு தடவயும் தூக்கிச் செமக்கனும்னு சொல்லிக்கிட்டு மம்பிட்டியக் கொண்டாந்து வெங்கடேசன் வீட்டுக்குப் பக்கத்துல இருந்த அடிகொழாப் பக்கத்துல வச்சுட்டுப் போயிருக்காக. வைக்கும் போதே ஒருத்தி சொல்லி இருக்கா.

"நம்ம பாட்டுக்கு மாணாங்கணிக்கா வச்சுட்டுப் போறோம்.... மம்பிட்டிய. யாராச்சும் தூக்கிட்டுப் போயிராம......"

"பட்டப் பகலுல யாரு தூக்கப் போறா....? நம்ம போயி வேகமாக் கொட்டிட்டு விர்ருன்னு வந்துருவோம். இல்லாட்டி ஒவ்வொரு தடவயும் மம்பிட்டியத் தூக்கிட்டுத் தூக்கிட்டுப் போவியாக்கும்?" இப்பிடிச் சொல்லவும் ரெண்டு பேரும் தைரியமா வச்சுட்டுப் போனாக. அவுக போகவும் அந்தப் பக்கமா வந்த வெங்கடேசன் மம்பிட்டியப் பாத்துட்டாரு. அம்புட்டுத்தான். அவரால சும்மா இருக்க முடியல. தெக்கயும் வடக்கயுமா ரெண்டு மூனு தடவ அலஞ்சு நோட்டம் உட்டாரு. யாரும் பாக்கலன்னு உறுதிப் படுத்திக்கிட்டு லபக்குன்னு மம்பிட்டிய எடுத்து லுங்கிக்குள்ள மறச்சு வச்சுக்கிட்டு அவுக வீட்டுச் சந்துப் பக்கமாப் போனாரு.

"மீனாச்சி...மீனாச்சி....," சன்னமான கொரலுல கூப்புட்டாரு. டி.வி. நாடகத்துல மும்முரமா இருந்த மீனாச்சிக்கு இவரு கூப்புட்டது காதுல விழல. ரெண்டு மூனு தடவ கூப்புட்ட வெங்கடேசனுக்குக் கோவம் வந்துருச்சு. கொஞ்சஞ் சத்தத்தக் கூட்டி மறுபடியும் ரகசியமாக் கூப்புட்டான். இந்த தடவக் கூப்புடவும் மீனாச்சி எந்துருச்சு ஓட்டமும் நடையுமா வந்தா. அவளப் பாக்கவும் வெங்கடேசனுக்குக் கோவம் தலைக்கு மேல் ஏறுச்சு. அவளுக்கு மட்டும் கேக்குற மாதிரிக்கத்துனான்.

"நாதாரி நாயே எந்த நேரம் பாத்தாலும் ஒனக்கு டி.வி.தானா? இரு அந்த டி.வி.ய ஒடச்சு எறிறேனா இல்லையான்னு பாரு. இந்தா இதக்கொண்டு போயி வீட்டுல வையி." சொல்லிக்கிட்டு மம்பிட்டிய எடுத்து நீட்டுனான்.

வழக்கமா எதுத்து நாலு வாத்த கேக்குற மீனாச்சி மம்பிட்டியப் பாக்கவும் எதுத்து எதுவும் சொல்லாம சந்தோசமா வாங்கிக்கிட்டு உள்ள போனா. அவா போம்போதே அவளக் கூப்புட்டு அதிகாரமாச் சொன்னான்.

"ஒரு செம்பு நெறய்யா தண்ணி எடுத்துட்டு வாடி. வெயிலு

தாங்கல." ரொம்பாக் கஸ்டப்பட்டு வேல செஞ்சவ மாதி மொகத்த தொடச்சுக்கிட்டான்.

டி.வி. நாடகம் போயிருமேங்ற தவிப்புல மீனாச்சி ஓட்டமும் நடையுமா வந்து தண்ணியக் குடுத்தா. தண்ணியக் குடுச்சுட்டு செம்பக் குடுத்துட்டு மூனாவது வீட்டுக்கு முன்னாடி இருந்த வேப்பமரத்து நெழலு போயிப் படுத்துக்கிட்டான்.

வீட்டுல போயி மண்ணக் கொட்டிட்டு வந்த ரெண்டு பொம்பளைகளும் மம்பிட்டியக் காணாம அலமோதுனாங்க.

"பட்டப்பகலுல இப்பிடிக் களவு போகுமா? இங்ன வச்சுட்டுப் போயி வீட்டுல கொட்டிட்டு வாராதுக்குள்ள இப்பிடித் தூக்கிக் கிட்டாகளே....நாசமாப் போற நாயிக.....அவுக குடும்பம் வெளங் காமப் போக.... கொள்ளைல போக...." ரெண்டு பேரும் மானா வாரியாப் புடுச்சுப் பேசுனாக. அம்புட்டயும் கேட்டுக்கிட்டே வெங்கடேசன் படுத்துக் கெடந்தான். கொஞ்சநேரம் வஞ்சு பாத்துட்டு அக்கம் பக்கத்துல இருந்தவுககிட்ட கேட்டாக. ஒருத்தரும் நாம்பாக்கல நீ பாக்கலன்னுட்டாக. இதையெல்லாம் பாத்துக்கிட்டு இருந்த எனக்கு அந்தப் பொம்பளைகளக் கூப்புட்டுச் சொல்லிப் போடலாமான்னு இருந்துச்சு. இதுக்குள்ள நெறயப் பேரு அங்னக் கூடிட்டாக. ஆளாளுக்கு ஒவ்வொன்னா சொல்ல ஆரம்பிச்சிட்டாக.

"நீங்க வச்சுட்டுப் போனவுக இங்னக்குள்ள யாருட்டயாவது சொல்லிட்டுப் போயிருக்கக்கூடாதா? இல்லன்னா யாரு வீட்டுல யாவது குடுத்துட்டுப் போயிருக்கக் கூடாதா? இங்கதான் முழுச்சுக்கிட்டு இருக்கும்போதே முழியத் தோண்டிட்டுப் போறதுக்கு ஆளு இருக்கே...."

எல்லாத்தயும் பாத்துக்கிட்டு இருந்த எனக்கு இதுக்கு மேலயும் சும்மா இருக்க முடியல. அந்த ரெண்டு பொம்பளைககிட்டயும் சொன்னேன், "எதுக்கும் நீங்க இந்த வீட்டுல இருக்குறவுக்கிட்ட கேட்டுப் பாருங்களேன்."

நாஞ் சொல்லவும் கூட நின்னவுகளும் வெங்கடேசன் வீட்டுல கேக்கச் சொன்னாங்க. இம்புட்டயுங் கேட்டுக்கிட்டே இருந்த மீனாச்சி வெளிய வந்தா.

"என்னங்க என்னத்தங்க காணும்?"

"இம்புட்டு நேரமும் கத்திக்கிட்டு கெடக்கமே...கேக்கல?"

"ஆமா மம்பிட்டியோ என்னமோன்னு சத்தங் கேட்டுச்சு."

"மம்பிட்டிதாங்க."

"எங்க வீட்டுக்காரரு எதுவும் எடுத்து வச்சிருக்காரோ என்னமோ... இப்பிடி எதுனாச்சுங் கெடந்தா எடுத்து வச்சு குடுத்துரு வாருங்க."

"எங்க இருக்காரு ஒங்க வீட்டுக்காரரு?"

“அந்தா அந்த வேப்பமரத்து நெழலுல படுத்துக் கெடக்குறாரு பாருங்க.” சொல்லிட்டு அவரக் கூப்புட்டா.

வெங்கடேசன் எதுவுமே தெரியாதது கணக்கா எந்துருச்சு வந்தான். மீனாச்சி அவங்கிட்ட கேட்டா,

“எதுனாச்சும் மம்பிட்டு கிம்பிட்டி பாத்தியா? கொழாயடில வச்சுட்டுப் போனாகளாம். காணுமாமே.....”

ரொம்ப சர்வ சாதாரணமா வெங்கடேசன் சொன்னான், “ஏம்மா இப்பிடித்தான் பொறுப்பில்லாம பொருள வச்சுட்டுப் போவாகளா? இப்ப நாம் பாக்கப் போயி பத்துரமா எடுத்து வச்சேன். இதே நேரத்துக்கு வேற யாரு கண்ணுலயாச்சும் பட்டுருந்துச்சுன்னு வையி அம்புட்டுத்தான். மீனாட்சி அந்த மூலையில் ஒரு மம்பிட்டி வச்சேன் பாரு. அத எடு இப்பிடி. இந்தாம்மா இதான்னு பாரு....ஜாக்கிரதயா இருக்கனும் இல்லன்னா அம்புட்டுத்தான்.” சொல்லிக்கிட்டே மம்பிட்டியக் குடுத்தான்.

“நா சொல்லலங்க எங்க வீட்டுக்காரரு கையில கெடச்சா அது பத்துரமா இருக்கும்னு சொன்னம்ல.” மீனாச்சி சொல்லவும் கூடி நின்னவுக ஒருத்தர ஒருத்தரு பாத்து ஒரு தினுசா சிருச்சுக்கிட்டாக.

# 25. பரிவு

"எப்ப வந்த ரெசுனா?" காத்தாயிக் கெழவி கேட்டுக்கிட்டே ஒக்காந்தா.

"இப்பத்தா கொஞ்ச நேரத்துக்கு முன்னால வந்தேன். அதுக்குள்ள மூக்கு வேர்த்து ஓடியாந்திரிக்கியே."

"பால்வாடில சோறு வாங்கலாம்னு வந்தேன். அங்ன அந்தக் கெழவி நானம்மா நீயி வந்துருக்குரதாச் சொன்னா. சரி பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்... சரி எப்பிடித்தா இருக்கே?....மருமகன் வல்லியாக்கும்?"

"எந்த மருமகன்? ஆமா எனிய யாருன்னு நெனச்சுக்குட்டு கேக்குற?" சுதாரிச்சுக்கிட்ட காத்தாயி, "நீயாத்தா....நானு அக்கா வாக்கும்னு கேட்டேன். அக்கா பொஸ்பம் நல்லா இருக்காளா?"

"ம்....இருக்கா. நீ எப்பிடி இருக்க? ஒனக்கென்ன கவல.... சம்சாரிக. வீடுகள்ள வாங்கிக் குடுச்சே காலத்த ஒட்டிருவெ."

"ச்சீ யாரப்பாத்து என்ன கேக்க? அதெல்லாம் அந்தக் காலம் இப்பெயல்லாம் அந்தத் தெசக்கடப்பக்கம் கூடப்போமாட்டேன்," ரொம்பா ரோசமாச் சொன்னா.

"நெசம்மாவா பாட்டி? ஆச்சிரியமா இருக்கு அப்பிடின்னா பரவாயில்லை ஒனிய பாராட்ட வேண்டியதுதான்."

"அவசரப்பட்டு பாராட்டிராதக்கா. போனவாரங்கூட சம்சாரிக தெருவுல இவளப் பாத்தேன்," திருணயில ஒக்காந்திருந்த சேவியர் சொன்னான்.

"ஏலேய் வெருவாக்கலங்கெட்ட பெயலே,... வெசயந் தெரியாம பேசாதேலே போன வாரம் எதுக்குலே போனேன்? முன்ன மாதிரி கஞ்சி வாங்கிக் குடிக்கவாலே போனேன்?"

"பெறகெதுக்குப் போனீயாம்?," சேவியர் விடாப்பிடியாக் கேட்டான்.

"நானு இப்பமெல்லாம் அங்குட்டுப் போறதில்ல ரெசுனா. முன்ன மாதிரி சம்சாரிக தெருவுல ஆளுகளும் கெடையாதுல."

"ஏ எங்க போயிட்டாக?"

"எங்க காலத்துல இருந்த சம்சாரிகள்ளாம் ஏறத்தாள போயிச் சேந்துட்டா. அஞ்சாறு கெழடு கெட்டைகதாங் கெடக்குதுக. அவுக

மக்கமாருகள்ளாம் பெரிய பெரிய படிப்புக படுச்சு பூராம் வெளி நாடுகளுக்குப் போயிருச்சுகள்ள. இப்ப போயிப்பாத்தீனா சம்சாரிக வீடுக பூராங் காலியாத்தாங் கெடக்கு."

"அப்பிடின்னா நம்மாளுக போயி அவுக வீடுகள வாங்கி அங்க போயிக் குடியேரலாம்ல?"

"ஐயய்யோ. வேற சாதிக்காரவுகளுக்காச்சும் குடுப்பாகளே ஒழிய நம்மச் சேரித் தெருக்கார ஆளுகளுக்கு மட்டும் குடுக்கவே மாட்டாக. வீடுகளப்பூராம் பூட்டிப் போட்டுட்டுல போயிருக்காக."

"வீடுகளப் பூட்டிட்டுப் போயிட்டாகன்னா நீயி என்னத்துக்கு அங்க போனெ?"

"அந்தய்யா ராமசாமி செத்துப் போனார்ல, அதுக்குத் துஷ்டி கேக்கப் போனேன்." இதக் கேக்கவும் அம்புட்டுப் பேரும் சத்தம் போட்டுச் சிரிச்சாக. சேவியர் கேட்டான், "நீயி என்ன அவுகளுக்குச் சொந்தமா பந்தமா? ஒனிய அவுக கூப்புட்டாகளாக்கும்?"

"எந்த ராமசாமி ஐயா?" சாந்தாயிக் கெழவி கேட்டா.

"நீயி என்ன இந்த ஊர்லதான் இருக்கியா இல்லியா? நானும் ஏம்புருசனும் பண்ண வேல பாத்துக்குட்டு இருந்தமே, அந்த ஐயாவத் தெரியாதவுக இந்த ஊருக்குள்ள யாராச்சும் இருப்பாகளா?," காத்தாயி ராகம்போட்டு இழுத்தா.

ராமசாமி ஐயாவுக்கு நூறு ஏக்கர் நெலத்துக்கு மேலய இருந்துச்சு. வீடும் பெரிய வீடு. வீட்டச்சுத்தி தென்னையும் வாழையும் மாமரங்களுமா வச்சுருந்தாரு. அவுக வீட்டுல இல்லாத பூச்செடிகளே இல்லங்கலாம். மல்லிக, ரோசா, கனகாம்பரம், இருவாச்சி, முல்ல, அந்திமந்தார, செம்பருத்தின்னு விதவிதமா வச்சு வளத்தாக. அந்தம்மா தலையில பூவு வாடவே வாடாது.

காத்தாயி சின்னப் பிள்ளையா இருக்கையிலேயே ராமசாமி ஐயா வீட்டுக்கு வேலைக்கு வந்துட்டா. அவுக பாட்டம் பூட்டங் காலத்துல இருந்தே அந்த ஐயா வீட்டுலதான் பண்ண வேல பாட்டவேல பாத்தாக. வெள்ளங்காட்டி எந்துருச்ச ஒடனே மூஞ்சியக் கழுவிட்டு ராமசாமி ஐயா வீட்டுக்குக் காத்தாயி போயிருவா. பத்து ஐம்பது பசு மாடுக, காளமாடுகளோட சாணி சகதிய அள்ளிக் கொண்டு போயி குப்பையில போட்டுட்டு மாட்டுத் தொழுவத்த கூட்டிப் பெறக்கி அள்ளிட்டு வீட்டச்சுத்தி கூட்டி குப்ப கூளம் அள்ளிப் போடுவா. அங்ன மாட்டுத் தொழுவத்துல வச்சிருக்கிற மஞ்சட்டிய எடுத்துட்டுப் போயி பொறவாசப்பக்கம் நின்னுக்கிட்டு அம்மான்னு கொரல் குடுத்தா ராமசாமி ஐய்யாவோட சம்சாரம் ரேணுகாம்மா உள்ள இருந்து வரும். வந்து புளுச்சுப்போன பழைய சோத்த காத்தாயோட மஞ்சட்டில, எட்டாக்கைல இருந்துக்கிட்டு சடச்சடன்னு ஊத்திட்டுப் போகும். அம்மா உள்ள போகவும் காத்தாயி சட்டிய எடுத்துக்கிட்டுப்

போயி மாட்டுத் தொழுவத்துலயே ஒரு ஓரத்துல ஒக்காந்து சாப்புடுவா. அதுக்குள்ள அவா புருசன் மாடசாமியும் வந்துருவான். அவனும் ஒருவாய் சாப்புட்டப் பெறகு ரெண்டு பேரும் ஐயாவோட காடுகரைகள்ள வேல வெட்டி செய்யப் போவாக. ஒரு பத்து மணிவாக்குல காத்தாயோட மூத்த மகன் செல்வராசு தூக்குச்சட்டில கூழு எடுத்துக்கிட்டு வருவான். அந்தப் பெயலுக்கு காலு கொஞ்சம் வளஞ்சிருக்கும். அதுனால சிக்கட்டிச் சிக்கட்டின்னு நடப்பான். கூழக்கொண்டு வந்து அவுகம்மைட்ட குடுத்துட்டு ஐயாவோட மாடுகளப்பத்திக்கிட்டு மலங்காட்டுச்செம போயிருவான். கொஞ்சம் வெயில் தாளவும் மாடுகள ஓட்டிக்கிட்டு எறங்கி வருவான். அவெ வந்தப் பெறகு இருக்குற கூழக் கரச்சு மூனுபேரும் குடிப்பாக. பொழுதுமுழுகவும் மாடசாமி மாடுகள ஓட்டிக்கிட்டு ஐயா வீட்டுத் தொழுவத்துல கட்டிப் போட்டுட்டு ஐயா குடுக்குற கூலிய வாங்கிக் கிட்டு வருவார். காத்தாயி அடுப்பெரிக்க ரெண்டு முள்ளக்கிள்ளப் பெறக்கிக்கிட்டு வீட்டுக்கு வந்துருவா. செல்வராசு யாரு காட்டுல யாவது மோட்டாரு போட்டுருந்தாகன்னா குளுச்சுட்டு துணிகளத் தப்பிட்டு மெதுவா வந்து சேருவான். வெவரந் தெருஞ்சு நாள்ளருந்து இதுதா அவுக பொழப்பு.

ரெசுனா கேட்டா, "நீயி போயி நம்ம தெருவுகள்ள வைக்கிற மாதிரி ஒப்பாரி வச்சியாக்கும் பாட்டி?"

"அவுக ஆளுகள்ள செத்துட்டா ஒரு சனம் பெணத்துகிட்ட ஒக்காந்து அழுகமாட்டேங்கி கல்லுக்கெணக்கா ஒக்காந்துக்குட்டு இருக்காக. ஒப்பாரி வைக்கத் தெரியாட்டாலும் நாலு சனமாச்சும் வந்து எழவு வீட்டுல ஒக்காரலாம்ல? கர்மமா இருந்துச்சு. இந்தய்யா செத்துக்கெடக்காரு; அவரு சம்சாரம் மட்டும் பொணத்த வச்சுக்கிட்டு மலங்க மலங்க முழுச்சுக்கிட்டு இருக்கு.....பாவம் என்ன சொத்து இருந்து என்ன செய்ய? அழுது பெதைக்க ஆளுல்ல."

"அவருக்கென்ன பிள்ளைக, சொந்தக்காருகன்னு யாரு மில்லையா."

"இல்லாமெ என்ன? ஒன்னுக்கு மூனு ஆம்பளப்பிள்ளைகளும் ரெண்டு பொம்பளப் பிள்ளைகளும் இருக்காக. ஆனா எல்லாப் பிள்ளைகளும் வெளிநாடுகள்ளெ எங்கயோ கங்காண தேசத்துல இருக்குதுகளாம். அங்ன அக்கம் பக்கத்துல இருக்குறவுககூட எட்டிப் பாக்கல. அந்தய்யாவுக்குக் கணக்குல அடங்காத சொத்து. இருந்தும் பெரயோசனம் இல்ல."

"துட்டு இருந்தா அப்பிடித்தான் பந்தபாசமே இருக்காது."

"அப்பிடியாப்பட்ட துட்டு எதுக்கு? மனுசாளுகதாம்தா முக்கியம். துட்டு இன்னைக்கு இருக்கும் நாளைக்குப் போயிரும். அவுகளுக்கு அது தெரிரது இல்ல."

"கொஞ்சம் தண்ணி மோந்துட்டு வாத்தா, கெறக்கமா இருக்குது."

"ஒரு எடத்துல ஒழுங்கா ஒக்காந்து கெடக்கலாம்ல, சும்மா ஆச்சல்ல வாரீயே."

"ஏத்தா ரெசுனா, அந்த ஐயா செத்ததுக்குப் போயிருந்தம்னு சொன்னனா, ஒத்தயில பொணத்தப் போட்டுக்கிட்டு கெடந்த அந்த அம்மாட்ட துஷ்டி கேட்டா....பாதகத்தியா அந்த வெசனத்துல கூட எனிய வெரட்டுது."

"எதுக்கு?"

"அந்த வெசனத்துலயும் அவா சொல்றா, ' நீயி எதுக்கு இங்க வந்த? சீக்கிரம் போ சீக்கிரம் போன்'னு அந்த வெரட்டு வெரட்டுது. நானு பாக்க பரதேசி மாதிரி இருக்கம்ல, அது அந்த அம்மாவுக்குப் புடிக்கல பொறுக்கோ."

"ஒனக்கு நல்லா வேணும். ஒனக்கு அவுகளுக்கும் என்ன இருக்கு? ஒனிய அப்பிடியே வருந்தி வருந்தி கூப்புட்டாகளாக்கும்? போயி மூக்கொடபட்டு வந்தீலெ? ஒனக்கெல்லாஞ் சூடு சொரணன்னு ஒன்னுமே கெடையாது கெழவி," சேவியர் கோவமாவே சொன்னான்.

"என்னடா சொன்ன? எனக்கும் அவுகளுக்கும் என்ன இருக்கா? இல்லாமலாடா போவாக? அடப்படுவாப் பெயலே நீயி நேத்துப் பெய; ஒனக்கென்ன தெரியும்? படுச்சிருந்தும் புத்தியில்லியே." அவுந்து கெடந்த முடிய ஒத்தக் கைட்டயே அள்ளி முடுஞ்சா. இன்னொரு கைட்ட அவா ஊனிக்கிட்டு நடக்குற கம்ப புடுச்சிருந்தா.

"ஓங்கம்பெ என்ன நாயா தூக்கிட்டுப் போகுது? கம்ப உட்டுட்டு ரெண்டு கைட்டயும் முடிய அள்ளிக் கெட்ட வேண்டியதுதான," ரெசுனா கேட்டா.

"சும்மா கெட, இந்தப் பெய புள்ளைகள நம்ப முடியாது. இருந்த மாணிக்க இருந்துட்டு நைசாக் கம்பக் களவாண்டுட்டுப் போயிருவானுக. எத்தன கம்பெ இந்தப் பெயமக்க தூக்கிட்டு உட்டுட்டாக தெரியுமா?"

"நீயி இப்ப யாரச் சொல்றன்னு தெரியுது கெழவி. அப்பிடி எத்தன நாளு ஓங்கம்பெத் தூக்கிட்டுப் போயிருக்கம்னு சொல்லு பாப்போம்," சேவியர் கேட்டான்.

"பாருத்தா இதெல்லாம் வம்புச் சண்டைக்குத்தானெ வழி வைக்கிறான். நானு இன்னார்னு குறிப்பிட்டுச் சொன்னனா? பொதுப்படையாச் சொன்னா இவெ மல்லுக்கு வாராம் பாரு."

"அவெஞ் சும்மா வெளாட்டுக்குச் சொல்றதக்கூட நீயி சீரியசா எடுத்துக்கிற. சரி மேக்கொண்டு சொல்லு," ரெசுனா சமாதானப்படுத்தி உட்டா.

காத்தாயி கெழவிட்ட இத்தினிக்கூட மாத்தந்தெரியல. முன்ன

பாத்தது கெணக்காவெ இருந்தா. கழுத்துல நாலஞ்சு கறுப்புக் கயிறு போட்டுருந்தா. ஒவ்வொரு கயத்துலயும் என்னெத்தென்னத்தையோ கோர்த்து போட்டுருந்தா. ஒரு பழைய சீலயக் கெட்டிக்கிட்டு முந்தானையில என்னத்தயோ முடுஞ்சு வச்சிருந்தா. வலது தோள் பட்டையில பெரிய பனங்காதண்டி இருந்த கட்டி அப்பிடியேதான் இருந்துச்சு. கெழவி ஒருநாத்கூட சட்ட போட்டதில்ல. சட்ட போடுற வளா இருந்திருந்தான்னா அந்த கட்டியோட ரொம்ப கஸ்டப் பட்டுருப்பா.

“ஏ பாட்டி நீயி சட்ட போட்டே நாம்பாத்ததில்லையே....கட்டி இருந்ததுனால சட்ட போடலியா அல்லது எப்பயுமே சட்ட போட்டதில்லையா?” ரெசுனா கேட்டா.

“நீ வேறக்கா. இவா சட்ட போடனும்னா இவளுக்குன்னு பெசலாவுல டெய்லர் வேணும். தோள்பட்டைல இருக்குற இந்த கட்டிய தனியா அளவெடுத்துல தைக்கனும்.”

சேவியர் சொன்னத காதுல வாங்காதது கணக்கா காத்தாயி ரெசுனாட்ட சொன்னா, “ஆமா இதுல பெரிய ஆராச்சி செய்தா. அடுத்த நேரச் சாப்பாட்டுக்கு என்ன செய்வோம்னு நானு அலமோதிக்கிட்டு கெடக்கயில இவளுக்கு ஆராச்சி பாத்தியா எங்க போகுதுன்னு.” சலிப்பாச் சொன்னா காத்தாயி.

“எந்த நேரமும் சாப்பாட்டையே நெனச்சுக்கிட்டே கெடப்பெ போல. எங்குட்டுக்கூடினாலும் ஒனக்கு ஒரு வாயிக் கஞ்சி கெடச்சிருதுல? பெறகு எதுக்கு சும்மா பொலம்பிக்கிட்டுக் கெடக்க?” சேவியர் கேட்டான்.

“ஏலேய் நீயி சும்மா கெடடா. போயி ஆம்பளைக இருக்குற எடத்துல இருப்பானா எப்பப் பாரு பொம்பளைக இருக்குற எடத்துலயே ஒக்காந்துக்குட்டு மணியம் பண்ணிக்கிட்டுத் திரிரான். ஓ வயசுக்கு ஏதாச்சும் வேல வெட்டிக்குப் போயிட்டு வந்து, இந்தா பாட்டி ரெண்டு ரூவா வெத்தல வாங்கிப் போடுன்னு குடுக்கலாம்ல. அது மாதிரி எல்லாஞ் செஞ்சுட்டாத்தாங் கேக்கிறியா....கெழக்க உதிக்கிற சூரியன் மேற்க உதிச்சிற மாட்டான்!”

“அதுக்குத்தா அப்பிடியெல்லாஞ் செய்றதில்ல. சும்மா கெடக்குற சூரியன எதுக்கு மாத்தணும்? அப்பிடி நானு ஏதாச்சுஞ் செஞ்சு சூரியன் மாறிப்போச்சுன்னா ஒனியப் போல கெழடு கெட்டைகளுக்கெல்லாம் பெறகு நெதானம் தெரியாதுல பாட்டி.”

“லொங்காமச் சொல்றாம் பாரு ரெசுனா, போடா வெறும் பெயலே. நீயி குடுப்பென்னாடா நானு இருக்கேன்? பீடி வாங்கத் துட்டு இல்லன்னாச் சொல்லு, நாந் தாரேன் ஒனக்கு.”

“சரி அப்பிடித்தாங் குடேன், ஓம்பேரச் சொல்லிக் குடுச்சுக்கிறேன்.”

“அடி செறுப்பால, ஒங்கம்மயக் கொண்டு போயி ஒங்கய் யனுக்குக் கெட்ட,” சொல்லிக்கிட்டே கம்ப எடுக்க தரயச் சுத்திச் சுத்தித் தடவுனா. சேவியர் கொஞ்சம் நகண்டு ஒக்காந்துக்கிட்டு சிருச்சான்.

“சிரிக்கவாடி செய்ற? பாத்தியா ரெசுனா, ரொம்பாப் படுக்காளிப் பெயத்தா இவெ. அதானெ படிப்பெ பாதில உட்டுட்டு அவுகம்ம கொலய வாங்குறான்.”

“சரி அவன உடு; அவெ ஒரு வெளாட்டுப்பிள்ள; நீயி அவனுக்கு மேல.”

“சம்சாரிக வீட்டுல சாவுன்னா இவளுக்கு அங்க என்ன சோலியாம்? இவா என்ன அவுக சாதியா சனமா....சொந்தமா பந்தமா.... இல்ல பங்காளியா பாட்டாளியா... இவா எதுக்குப் போனாங்ற விசயம் இப்ப வெளிய வரணும்....ஆமா....,” சேவியர் விடாப்பிடியாக் கேட்டான்.

சேவியர் சொன்னதக் கண்டுக்கிறாமெ காத்தாயி ரெசுனாக்கிட்ட நெருங்கி வந்து சொன்னா, “மனசார ஒத்தையில பொணத்தப் போட்டுக் கிட்டு இருந்த அந்த அம்மா, எனியக்கூட காங்கவிடாம வெரட்டுது.”

“நீயி போயி என்ன செஞ்ச?,” ரெசுனா கேட்டா.

“நாம் போயிச் செத்த நேரம் வெளியவே நின்னுக்கிட்டு இருந்துட்டு பெறகு லேசா உள்ள எட்டிப் பாத்தேன். ஒத்த ஆளுக இல்ல. பெறகு மெதுவா போயி வெளி வராண்டாவுல ஒக்காந்தேன். ஒக்காந்துட்டு அந்தம்மாட்ட கேட்டேன், ‘ஐயா சேட்டமில்லாமக் கெடந்தாராக்கும்மா? தெருஞ்சிருந்தா ஓரெட்டு வந்து அவரு உசுரோட இருக்கும்போதே பாத்துருப்பனே’ன்னு சொல்லிட்டு செத்த அழுதேன். அந்த அம்மா எனியத் திரும்பிப் பாத்துட்டு என்ன சொல்லுதுங்க?”

“ஏங்கிட்ட கேட்டா?”

“ஒனியல்லாம் இங்க யாரு கூப்புட்டா? சீக்கிரமா எந்துருச்சுப் போயிரு. வராண்டாவுல வந்து ஒக்காந்துருக்கெ. வெளிய போ... சீக்கிரம் போ,” புடுச்சு தள்ளாத கொறைதான் ரெசுனா.

“நீயி ஒடனே எந்துருச்சு வந்திட்டியாக்கும்?”

“அதெப்பிடித்தா வர முடியும்? ஒரு வருசமா ரெண்டு வருசமா? கொறஞ்சது பத்து இருவது வருசமாச்சும் அந்தய்யாவோட வீட்டுல யும் காடு கரைகள்ளயும் வேலஞ்சிருக்கம்தா. இருவது வருசமா பழகிட்டு இப்பச் செத்தப் பெறகு போயிப் பாக்கலன்னா நானெல் லாம் ஒரு மனுசப் பெறவியா? சொல்லு?”

“அதெல்லாஞ் சரித்தான் கெழவி....இருவது வருசமாப் பழகிட்டேம்னு சொல்லுறியே....அப்பிடி என்ன தாயா புள்ளயாவா பழகிட்டீக? ராத்திரிப் பகலா நாயாக் கெடந்து ஒழச்சுட்டு அஞ்சோ பத்தோ குடுத்தா வாங்கிக்கிட்டு அவுக ஊத்துற மிச்ச மீதிக்கஞ்சிய

குடுச்சுட்டு வருவெ. அம்புட்டுத்தான். அதுதான் அன்னைக்கே முடுஞ்சு போச்சே."

"என்ன ரெசுனா அம்புட்டு ஈசியா சொல்லிப் போட்டெ. உப்பிட்டவர உள்ளளவும் நினைன்னு எதுக்குச் சொல்லுறாக? வேலஞ்சமா சம்பளம் வாங்குனமான்னு இருக்கச் சொல்றியாக்கும்.... என்ன இருந்தாலும் தெனந்தெனம் அவுக மொகத்துல முழுச்சு பேசிப் பெழங்கி இருந்துருக்கம்ல."

"அதுக்கு நன்றி விசுவாசத்தோட இருக்கியாக்கும்?"

"நன்றி விசுவாசத்த உடு ஒரு மனுசத்தன்ம வேண்டாமாத்தா?"

"வேணும்தா காத்தாயி. அந்த மனுசத்தன்ம அவுகளுக்கும் இருக்கனும்லத்தா காத்தாயி" நக்கலாக் கேட்டான் சேவியர்.

"அவுகளுக்குந்தான்....அவுகளுக்கு மட்டுமா? மனுசனாப் பெறந்த அம்புட்டுப் பேத்துக்குந்தான்....ஒனக்கு மொதல்ல இருக் கான்னு பாருல. இருந்தா ஒரு துஷ்டிக்குப் போனதுக்கு இப்பிடிப் பேசமாட்டெ."

"ஏ பாட்டி எனக்கு மனுசத்தன்ம இருக்கப்போயித்தான் நானு இப்பிடிப் பேசுறேன். கோவிக்காம நாஞ் சொல்றத செத்தக்கேளு பாட்டி. நீயி துஷ்டிக்குப் போனத நானு தப்புன்னே சொல்லல. சரி நீயி போனீல....ஒனக்கு என்ன மரியாத கெடச்சது? ஒனிய போ போன்னு வெரட்டுனாகன்னு நீதான சொன்னெ. நாங்க யாராச்சும் வந்து பாத்தமா என்ன? சரி நம்மகிட்ட வேல பாத்த காத்தாயி வந்துருக்கான்னு, சந்தோசமாபட்டாக? சங்கடம்லபட்டுருக்காக..... அதுக்கென்ன சொல்ற?"

"அதனா பாட்டி. நீயி நம்ப வேல செஞ்ச எடமாச்சே....நம்ப மொதலாளியாச்சேன்னு ஒரு ஒணர்வுல போயிருக்கெ....அது எங்களுக்குப் புரியுது. ஆனா அது ஒனிய அப்பிடிப் பாக்காமெ ஒரு சேரித்தெருப் பொம்பளன்னுதான்னெ பாத்து வெரட்டிருக்கு. அப்பிடிப்பட்ட எடத்துக்கு நாம எதுக்குப் போகனும்.... சொல்லு?" ரெசுனா கேட்டா.

காத்தாயி கொஞ்ச நேரம் பேசாமயே இருந்தா. பெறகு சொன்னா, "நீங்க சொல்றது சரித்தான். நானு இல்லங்கல. அந்தம்மா மனுசத்தன்ம இல்லாம நடந்தாகன்னா நாமளும் அவுக மாதிரி நடக்கனுமா என்ன? நானு அந்த அம்மாட்ட நல்லாச் சொல்லிட்டுத் தான் வந்தேன்."

"என்ன சொல்லிட்டு வந்தெ?"

"அம்மா, ஆறுலயுஞ் சாவு நூறுலயுஞ் சாவு. ஏஞ்சீவியத்துல பேருவாதி நாளு ஒங்களுக்குத்தான் ஒழச்சு ஓடாப்போனேன். ஏம்புருசனும் ஒங்க மண்ணுல பாடுபட்டு ஒங்க மண்ணுலயே சீவன உட்டான். சம்பளத்துக்கு ஒழச்சாலும் சாவுன்னு வரயில நம்பல்லாம்

சமந்தானம்மா, எதுக்கும்மா வெரட்டுதீக? நானே போறேன் ”னு சொல்லிட்டு வந்துட்டேன்.

“ அப்ப ஒனிய பாராட்ட வேண்டியதுதான் பாட்டி,” சேவியர் சொல்லிக்கிட்டுச் சிருச்சான்.

“சும்மா வெறுவாயிட்ட சொல்லிட்டாப் போதுமாடா? போயி பாட்டிக்கு ரெண்டு ரூவாய்க்கு வெத்தல பாக்கு போயலயும் ஒரு பொடிமட்டையும் வாங்கியாடா பாப்பம்.”

“இந்தா வாங்கியாரம் பாட்டி,” வேகமா எந்துருச்சுப் போனான் சேவியர்.

# 26. சவம்

பொன்னு போட்டா பொண்ணு வெளைற பூமி. வருசத்துக்குக் கொறஞ்சது மூனு வெள்ளாமெ வைக்கலாம். ஏரில தண்ணி இருந்தா, அதுக்கு மேலயும் வச்சி நெல்லா குமிக்கலாம். பலராம நாயுடு என்ன நெனச்சாருன்னு தெரியல. திடுதிப்புன்னு வயக்காட்டப் பூராம் வீட்டு மனைகளாக்கி வித்துட்டு, லச்சகணக்குல ரூவாய அள்ளிட்டுப்போயி தாம்பரத்துல செட்டிலாயிட்டாரு. அவரு வித்துட்டுப்போன மனைகள பலசாதி ஆளுக வாங்குனாங்க. கொஞ்சப்பேரு வீடுகட்டி குடிவந்துட்டாக. நெறைய மனைக அப்படியே கெடக்கு. இந்த ஏழெட்டு வருசத்துல கிட்டத்தட்ட பத்துப் பன்னெண்டு வீடுக வரைக்கும் வந்துருச்சு.

ஒருத்தருக்கொருத்தரு முன்னப் பின்னத் தெரியாம, வந்து வீடுகட்டி குடிவரவும் மொதல்ல எப்படியோ இருந்தாலும் நாளாவட்டத்துல அக்கா, அண்ணமுன்னு ஒறவு சொல்லிக் கூப்டுற அளவுக்குப் பழகிட்டாக. ஏதோ ஆழமான ஒறவுன்னு இல்லனாலும் ஒரு ஆத்துர அவசரத்துக்கு அக்கம் பக்கத்துல இருக்கிறவுகதாம்னு அம்புட்டுப்பேரும் ஒணந்துக்கிட்டாக.

இங்க இருக்குற ஒவ்வொருத்தரும் பலசாதிக மட்டுமில்லாம, பல மதத்துக்காராவும் இருந்தாக. வேலசெஞ்சு ரிட்டயடானவுகளும், கவர்மெண்டு சம்பளக்காரங்களும், சுயமாத் தொழிலு செய்றவுகளும் இப்பிடி பலதரப்பட்டவுக இருந்தாக. இருக்குற அம்புட்டு வீடுகள்ளயும் நல்ல பெரிய வீடா, ரெட்ட மாடி வீடா இருக்குறது சொக்கலிங்க சாருக வீடுதான். அவரு சென்ட்ரல் கவர்மெண்டு வேல யில இருந்துட்டு ரிட்டயடானவர். அவரு வீட்ட ஒட்டுனாப்புல பலராம நாயுடுவோட வீடு. இந்த ரெண்டு வீட்டுக்காரங்களும் ஒரே கிராமத்துலருந்து வந்தவுக. முன்னாலயே ஒருத்தருக்கொருத்தரு நல்லாத் தெரியுமாம். அதுனால அவுகளுக்குள்ள அண்ணே, அண்ணின்னு ஒறவுமுற வச்சிக் கூப்பிட்டுக்கிடுவாக.

சொக்கலிங்கசாரோட மகளுக்குத் தடபுடலாக் கலியாணம் நடந்துச்சு. எல்லா வீட்டுக்காருகளும் பெருகளமாப் போயிக் கலந்துக் கிட்டாக. இப்பிடித்தான் எந்த விசேசத்துக்கும் ஒருத்தருக்கொருத்தரு ஒன்னா மண்ணாக் கலந்துக்கிடுவாக. பலகாரம் பச்சணமுன்னுகூடப் பகுந்துக்கிருவாக. அப்பப்பச் சண்ட சச்சரவும் வராம இல்ல. வந்தாலும் கொஞ்ச நாளுலயே ராசியாகிக்கிடுவாக. இருக்கிற பத்து

வீட்டுல மூஞ்சியத் தூக்கி வச்சுக்கிட்டு எத்தன நாளக்கி இருக்க முடியும்.

போன தை மாசம் கலியாணத்த முடிக்கணும்னு பலராம நாயுடு மகனுக்கு பல எடத்துகள்ள பொண்ணு பாத்தாக. ஒண்ணும் சரியா அமையல. நல்ல சொத்துத்தோட பொண்ணு தேடி அலஞ்சாக. நாயுடுவோட சம்சாரம் பச்சயம்மா அடிக்கடி சொல்லுவா.

"நாங்க பாக்குரதுக்கு ஒன்னுமில்லாதது மாதிரி இருக்கோம்னு நெனைக்காதிக. எங்கிட்ட நாப்பது சவரன் நக இருக்கு. ஊர்ல பெரிய வீடு இருக்கு. மெட்ராசுல ரெண்டு கிரவுண்டு மன இருக்கு. எல்லாஞ் சேத்தா நாப்பது அம்பது லட்சம் தேறும்."

ஒரு தடவ நாயுடு வீட்டுக்கு கெழக்க வீடுகட்டி இருக்கிற சகுந்தலா கேட்டா. "ஒங்களப் பாத்தா லச்சாதிபதி மாதிரி தெரியலியே. இவ்வளவு சொத்து இருந்தா நல்லா துணிமணி கெட்டிக்கிட்டு, வாய்க்கு ருசியா சமச்சி சாப்பிடலாமுல்ல. எப்பப் பாத்தாலும் கஞ்சிக்கில்லாதது மாதிரில பொலம்புறீக."

"சொத்து இருந்தாலும் வெளிய காட்டிக்கக் கூடாதுங்க. இன்னைக்கு இருக்குதுன்னு வகதொகையா ஆக்கிப் பெறக்கித் தின்னுபோட்டா பின்னால என்ன செய்றது? இல்லாதவுக மாதிரியே காட்டணுங்க," பச்சையம்மாளோட பாலிசி இது.

சரித்தான் எப்பிடியும் சேத்து வைங்க. ஒங்களுக்கு இருக்கிறது ஒரே மகந்தான். அவங் கலியாணத்தையாவது நல்லபடியா முடிங் கன்னு எல்லாரும் சொல்லுவாக.

பல எடத்துல பாத்து கடேசியா காடவாக்கத்துல ஒரு பொண்ணப் பத்து ஏக்கரு நெலத்தோட பேசி முடிச்சிட்டாக.

"என்னண்ணி ஒங்க பையனுக்கு பொண்ணு அமைஞ்சிருச் சாம்ல. பொண்ணு எந்த ஊரு எப்பிடி?" சொக்கலிங்கம் கேட்டாரு.

"பொண்ணு காடவாக்கம்ணே. நல்ல பொண்ணுதான். பத்துவர படிச்சிருக்கு. ஏம்மகனவிட நல்ல கலரு. இருவது சவரன் நகயும், பத்து ஏக்கரு நெலமும் குடுக்காக. போதாதாண்ணே?" சந்தோசம் பொங்கக் கேட்டா பச்சையம்மா.

"போதும்....போதும்...எப்ப நிச்சயம் பண்றீக. நம்ம குடியிருப்பு லருந்து எல்லாரும் வந்து நிச்சயம் பண்ணிருவோம்." சொக்கலிங்கம் உற்சாகமாகச் சொன்னார்.

"நாங்க மெல்லத்தான் வைக்கணும்னு இருந்தோம். ஆனா பொண்ணு வீட்டுல அவசரப்படுத்துராக. அதுனால இந்தத் தை பெறக்கவும் நிச்சயம் பண்ணிட்டு தை கடசிலயே கலியாணத்த வைக்கிறோம்."

"ஆமா....ஆமா....சீக்கிரம் வையுங்க. நாங்கள்ளாம் விருந்து சாப்ட வேண்டாமா?" சொக்கலிங்கம் சாரோட பிரண்டு சங்கரலிங்கம்

சொன்னார்.

அதுக்குப் பெறகு குடியிருப்புல எப்பப்பாத்தாலும் பலராம நாயுடு வீட்டுக் கலியாணத்தப் பத்தித்தான் பேச்சு.

சங்கரலிங்கம் சாரு நாயுடுட்டச் சொன்னார். "நம்ம தெரு வடைக்க பந்தல் போடணும். நல்ல மேள செட் வைக்கணும். எல்லாருக்கும் நல்ல விருந்து வைக்கணும். இருக்குறது ஒரு பிள்ள. நாயுடு வீட்டுக் கலியாணமுன்னா சும்மாவா? நாங்க எல்லாம் அன்னைக்கு லீவுல்ல போடப் போறோம்."

"செஞ்சுட்டாப் போச்சு." சிம்பிளா முடிச்சாரு. நாயுடு.

யாருக்கும் தெரியாமலே நிச்சயதார்த்தத்த கமுக்கமா முடிச்சுட் டாங்க. குடியிருப்பில இருந்து யாரையுமே கூப்புடல. அதுனால எல்லாருக்குமே ரொம்ப அதிர்ச்சியா இருந்துச்சு.

சங்கரலிங்கம் மத்தவுககிட்டச் சொன்னார். "இம்புட்டு நாளா எல்லாரு வீட்டு விசேசத்துக்கும் எல்லாரும் போனோம்.... வந்தோமுல....இவுக மட்டும் பாத்தீகளா, என்ன செஞ்சுட்டாகன்னு.... கலியாணத்துக்குப் பத்திரிக்க வைக்க வரட்டும்....கேட்டுக்கிறேன்...."

சொக்கலிங்கம் சாருக்கு அதவிடக் கோவம். அவரும் மத்த எல்லாருமே இதப்பத்தி மானாவாரியாப் பேசுனாக. எல்லார் பேசுன பேச்சும் காதுல உழுந்தாலும் நாயுடு வீட்டுல இருந்து எந்தப் பதிலும் வரல. அடுத்த வாரத்துலயே வீடு வீடா வந்து பத்திரிக்க வச்சாக.

சொக்கலிங்கம் நேருக்கு நேராக் கேட்டாரு. "நிச்சயதார்த்தத்த மட்டும் கமுக்கமா வச்சுக்கிட்டு, இப்ப என்ன பெரிய பத்திரிக்க குடுக்க வந்துட்டீக. இங்க நடந்த எல்லார் வீட்டு நிச்சயத்துக்கும், கலியாணத்துக்கும் எல்லாரும்தான போனோம். ஒங்க வீட்டு இது மட்டும் என்ன ஸ்பெசலு? இதெல்லாம் ஒன்னும் சரியாத் தெரியல. கலியாணத்துக்கு மட்டும் நாங்க எதுக்கு வரணும்?"

"கோவிச்சுக்காதணா....நிச்சயமெல்லாம் ரொம்பா சிம்பிளா வச்சுட்டோம். யாரையுமே கூப்புடல. கூப்டா எல்லாத்தயும் கூப்டணும். ஒருத்தர விட்டுட்டு ஒருத்தர கூப்புட முடியாது. அதான் ஒருத்தரையுமே கூப்புடல. எதயும் மனசுல வச்சுக்கிடாம கலியாணத்துக்கு வந்துருங்க. லச்சுமி மண்டபத்துல வச்சுருக்கோம்." பச்சையம்மா சாந்தமாச் சொன்னா.

சொக்கலிங்கம் சாரோட சம்சாரமும் ஆத்திரமாக் கேட்டா. "எங்களக் கூப்பிடாட்டிப் பரவாயில்ல. ஆனா எதுக்குக் கூப்புடலன்னு சொல்லு. அப்புறம் என்ன அண்ணி....அண்ணே. சும்மா வாயிக்கு வாயி ஒண்ணுக்குள்ள ஒண்ணுன்னு சொல்லிட்டாப்புல ஆச்சா. நீங்க எதுக்குக் கூப்புடலண்ணு தெரியும்."

"காரணமெல்லாம் ஒண்ணும் இல்ல அண்ணி. சொந்தக்காரங்க வரைக்கு மட்டும்தான் கூப்புட்டோம். தப்பா எடுத்துக்கிடாதீங்க.

வேற எந்த எண்ணமும் இல்ல அண்ணி." பச்சயம்மா சமாதானமாச் சொன்னா.

இதுக்குப் பெறகு குடியிருப்புல முன்னமாதிரி ரொம்பப் பேச்சு வார்த்த இல்ல. ஒரு சிலரு கலியாணத்துக்குப் போகக்கூடாதுன்னு முடிவு செஞ்சாக. இதயெல்லாம் கேக்கவும் நாயுடு வீட்டுல கொஞ்சம் வருத்தம் இருந்தாலும், பச்சையம்மா கொஞ்சம் வீராப்பாச் சொன்னா. "கலியாணத்துக்கு வரப் பிரியப்படுகிறவுக வரட்டும். வரப் பிரியம் இல்லாதவுக நின்னுக்கிடட்டும். யாரயும் கட்டாயப்படுத்தல. நிச்சயத்துக்கு எல்லாரையும் கூப்புடனும்னு சட்டமா என்ன? போகட்டுமே....இவுக வராட்டி கலியாணம் நின்னு போகுமா என்ன?"

இதக் கேக்கவும் சகுந்தலா சொன்னா, "என்ன இருந்தாலும் நீங்க ஒரு வார்த்த கூப்டுருந்திருக்கலாம். வாராகளோ வல்லியோ... பேருக்கு கூப்பிட்டுருந்தா பிரச்சின இல்லையில. நா எதுக்குச் சொல்றேன்னா நாளப்பின்ன நம்மதான இங்ன குடியிருக்கணும்."

பச்சையம்மா நெருங்கி வந்து ரகசியம் பேசுரது கணக்காச் சொன்னா. "கூப்புடச் சொல்றீகளே...அப்பிடி நாங் கூப்பிட்டு அவுக வந்துட்டா பிரச்சினதான. ஒருத்தர உட்டுட்டு ஒருத்தரக் கூப்புடவும் முடியாது. வேற என்ன செய்றது."

"வந்தாப் பிரச்சினையா? என்ன பிரச்சின வரும்?"

"நாஞ் சொல்றது ஒங்களுக்குப் புரியலயா? இந்தச் சொக்கலிங்கம், சங்கரலிங்கமெல்லாம் வேற சாதிங்க. அவுகள எப்பிடி வீட்ல சேக்க முடியும்?

"இங்க இருக்குற எல்லாருமே பல சாதிக்காருகதான. ஒங்க சாதியா எங்க இருக்கு."

"எங்க சாதியா இருக்கணும்னு சொல்லல. மித்தப் பேரக்கூடக் கூப்புட்டிரலாம். அவுக சாதியே பரவாயில்ல. ஆனா இந்த ரெண்டு வீட்டுக்காருகளத்தான் கூப்புட முடியாது."

"ஏனாம்?"

"அவுககிட்ட சொல்லிக்கில்லிப் போடாதீக. அவுக ரெண்டு வீட்டுக்காரங்களும் கீச்சாதிக்காரங்க. அவுகள நாங்க வீட்டுல சேக்க மாட்டோமுல."

"பின்ன எதுக்கு வாய்க்கு வாயி அண்ணே அண்ணிங்கிறீக. இப்ப அவுங்க ஒங்க வீட்டு வாசலுக்கு வராமப் போகாமலா இருக்காக."

"இது வேறங்க. எங்க சொந்தக்காரங்களுக்கு முன்னாடி இவுங்கள வீட்டுல சேத்தா எங்க மானம் மரியாத என்ன ஆகுங்க."

"கலியாணத்துக்கு மட்டும் சேத்தா கவுரவம் கொறஞ்சு போகாதா?"

"கலியாணம் சத்துரத்துல தானுங்க. சத்துரத்துக்கு யாரும்

வரலாம். யாரும் போகலாம். ஆனா நிச்சயத்துக்கு இவுகள வீட்டுக்குள்ள உட்டா வெளங்குமா. அதுவும் ஒரு மங்களமான காரியத்தத் தொடங்கயில."

"சொக்கலிங்கம் சாருதான் ரெட்டமாடி வீடுகட்டி நல்லா டீசென்டாத்தான இருக்காரு. ஒங்களவிட நல்லாத் துணிமணிகட்டி நகநட்டுப்போட்டு நல்லாத்தான் இருக்காக. சங்கரலிங்கம் சாரு வீட்லயும் அப்படித்தான்."

"பணம் வசதி இருந்தா மட்டும் போதுமாங்க. சாதியில்லனு ஆகிப் போகுமா. எம்புட்டுப் பணம் இருந்தாலும் கீச்சாதி கீச்சாதி தாங்க. இவுகளுக்குப் பணம் இப்ப வந்ததுங்க. இந்த சொக்கலிங்கத் தோட அப்பனெல்லாம் எங்க ஊர்ல செருப்புத் தச்சான். அவுக ஆத்தா எங்க வீட்டுல வந்து சாணி சகதிக அள்ளிப் போட்டு கஞ்சி வாங்கிக் குடிச்சவா. இந்தச் சொக்கலிங்கம் எங்க வயக்காட்டுல வேல செஞ்சவந்தான். இதெல்லாம் எங்க சொந்தக்காரங்களுக்குத் தெரியுங்க. அப்ப எப்படிங்க? நீங்களே சொல்லுங்க."

"அது அந்தக் காலங்க. இப்பயெல்லாம் சாதி கீதியெல்லாம் பாக்கக்கூடாதுங்க. பாத்தா நம்மெல்லாம் இங்க சேந்து வாழ முடியுமா?"

"வேற என்னங்க செய்றது. அட்ஜஸ்டு பண்ணிக்கிட்டுத்தான் இருக்கோம். அதான் கலியாணத்துக்குக் கூப்புடுறோம்ல. அது போதாதா? இவுங்களும் ரொம்ப ஆசப்படக் கூடாதுங்க. பழச நெனச்சுப் பாக்கணும். என்னதான் கோடி கோடியா வச்சிருந்தாலும் எங்களுக்கு ஈடாக முடியுமா?"

"சரி.....இவ்வளவு பேசுறீகளே. அந்தக் கோமதி டீச்சர மட்டும் நிச்சயத்துக்குக் கூப்புட்டுப் போயிருக்கீங்க...அது மட்டும் எப்பிடி."

"ஒங்களுக்கு யாரு சொன்னா?"

"சொன்னாங்க ஒருத்தரு. யாரு சொன்னா என்ன? கூப்டு போனீகளா இல்லயா?"

"ஆமாங்க. அது வந்து அந்த டீச்சரு வெளி ஊருக்காரு. கைமாத்தா அஞ்சோ பத்தோ வாங்கலாம்."

"ஒங்களுக்குத் தெரியுமா அவுகளும் சொக்கலிங்க சாரோட சாதிதான். அவுகள மட்டும் வீட்டுல சேத்துட்டீகள்ள."

"மெய்யாலுமா?"

பச்சையம்மா மொகம் சவங்கணக்காப் போச்சு.

# 27. தீர்ப்பு

மூனு, நாலு, அஞ்சாங் கிளாஸ் பிள்ளைகளுக்கு ரொம்பாக் கும்மரச்சமா இருந்துச்சு. அவுகள மட்டும் நாளைக்கு பக்கத்து ஊர்ல இருக்குற சினிமா தியட்டருக்குப் படம் பாக்கக் கூட்டிட்டுப் போப்போறாங்க. அந்த சந்தோசத்துல பாடங்கூட படிக்க முடியாமெ எப்படா நாளைக்கு வரும்னு எதிர்பாத்துக்கிட்டு இருந்தாக. ஆள் ஒன்னுக்கு அஞ்சு ரூவா கொண்டு வரனும்னு ஹெட்மாஸ்டரு சொல்லி உட்டாரு. எல்லாரும் யூனிபார்ம் போடனும், செருப்பு இருக்குறவுக செருப்புப் போட்டுட்டு வரனும், வாட்டர் பாட்டில் இருந்தா தண்ணி கொண்டாரனும் இப்பிடி நெறைய விஷயங்களச் சொல்லி அனுப்புனாரு. பிள்ளைக ரொம்பா உற்சாகமாயிட்டாக. பின்ன இருக்காதா? எங்கயோ பட்டணத்துக்கு டூரு போறமாதிரி எல்லாருக்கும் நெனப்பு.

காட்டூர் தொடக்கப் பள்ளி தொடங்கி ஐம்பது வருஷத்துக்கு மேல ஆகி இருந்தாலும் ஊருல ஒரு முன்னேத்தமும் வரல. ஒரு பஸ் வசதியோ, குடிதண்ணீர் வசதியோ, ஆஸ்பத்திரி வசதியோ ஒன்னுங்கெடையாது. ஒரு டீக்கடையோ மளிகைக் கடையோ கெடையாது. தவுச்ச வாய்க்கு ஒரு சோடா கீடா குடிக்க பேருக்கு ஒரு பெட்டிக்கட கூட கெடையாது. எதுக்குனாலும் மூனு கிலோமீட்டர் தூரத்துல இருக்குற ஊத்துக்கோட்டைக்குத்தான் போகனும். அது கொஞ்சம் பெரிய ஊரு. அங்க சகல சம்பத்தும் வாங்கலாம். அங்கதான் ஒன்னுக்கு ரெண்டு சினிமா தியட்டர் இருக்குது. அதுல ஒரு தியட்டர்லதான் பிள்ளைங்க, கொழந்தைகளுக்கான ஒரு படம் பாக்கப் போறாங்க. அது என்ன படமா இருந்தாலும் பரவாயில்ல. ஊத்துக்கோட்டைக்குப் போறதே ஒரு தனி சந்தோசந்தான்.

மறுநாளு காலைல எல்லாரும் வழக்கத்துக்கு மாறா ஏழு மணிக்கெல்லாம் ஸ்கூலுக்கு வந்துட்டாங்க. அசெம்பிளி முடுஞ்ச பெறகு எல்லாரையும் வருசயா நிக்க வச்சு டீச்சர்களோட அனுப் பிட்டு ஹெட்மாஸ்டரு அவரோட வண்டில ஏறி முன்னால போனாரு. அடக்க முடியாத ஆர்வத்துலயும் சந்தோசத்துலயும் பிள்ளைக ரொம்ப வேகமா நடந்தாக. கிட்டத்தட்ட மூனு கிலோ மீட்டர் தூரம் நடக்கனும். ஓட்டமும் நடையுமா வந்து சேந்துட்டாக. தியட்டருல ஏற்கனவே வேற ஒரு ஸ்கூல் பிள்ளைக வந்து ஒக்காந்திருந்தாக. எங்க ஸ்கூல் பிள்ளைகள எண்ணி எண்ணி உள்ள

உட்டாக. தியட்டருக்குள்ள பயங்கரமான ஆரவாரமும் கூச்சலும்.... காதச் செவுடாக்கிரும் போல இருந்துச்சு. ஒரு வழியா எல்லா ஸ்கூல் பிள்ளைகளும் வந்து சேந்து படம் ஆரம்பிக்க பத்து மணிக்கு மேலயே ஆகிப்போச்சு. படம் தொடங்கவும் எல்லாரும் கப்சிப்புன்னு ஆகிட்டாங்க. அது 'த பேபீஸ் டே அவுட்' ங்ற இங்கிலீசு படமா இருந்தாலும் பிள்ளைங்க நல்லா ரசுக்க லயிச்சுப் போயிப் பாத்தாங்க. படத்துல வந்த கொழந்தையோட ரொம்பவே ஒன்றுச்சுப் போயிட் டாங்க. எடயில உட்ட இடைவேளைல கச்சாம்புச்சாம்னு கைல இருந்த காசு கரைர வரைக்கும் இஷ்டப்படி கண்ணுல கண்டத யெல்லாம் வாங்கி வாங்கித் தின்னாங்க.

படம் முடியவும் மறுபடியும் வருசயில நின்னு வேணாப்பறந்த வெயிலுக்குள்ள நடக்க மாட்டாமெ நடந்து வந்தோம். மெயின் ரோட்டக் கடக்கவும் வருச கிருச எல்லாங் கலஞ்சு போச்சு. நல்லா உச்சி வெயிலாங்காட்டி காலு பொசுக்குது. நெறய்யாப் பிள்ளை களுக்குச் செருப்பே கெடையாது. தண்ணித் தாகம் வேற நாக்கச் சுருட்டுது. எப்பிடியோ உழுந்தடுச்சு ஓடியாந்தோம். கொண்டு போன பாட்டில் தண்ணியப் பூராம் சினிமாக் கொட்டைகையிலயே காலி பண்ணிட்டாங்க. வேர்க்க விறுவிறுக்க ஓடியாந்து எப்படா ஸ்கூல்ல போயித் தண்ணி குடிப்போம்னு ஆவலா ஓடியாந்தாங்க.

வார வழில ஸ்கூல்லருந்து ஒரு கிலோமீட்டர் தொலவுல பள்ளத்தூர்னு ஒரு ஊரு வரும். அங்னக்குள்ள வரவும் பிள்ளைக பூராம் அங்ன தெருவுல இருந்த அடிகுழாயில தண்ணி அடுச்சுக் குடுச்சாக. அம்புட்டுத் தாகம். அஞ்சாங் கௌாஸ்லருந்து ஒரு பெரிய பையன் எல்லாருக்கும் தண்ணி அடுச்சு உட்டான். எல்லாரும் நானு நீயின்னு முண்டியடுச்சுக்கிட்டு ஒருத்தர ஒருத்தரு நெருச்சுக்கிட்டு கெடந்தாக. அவுகள வருசப்படுத்தி குடிக்க வைக்கிறதுக்கே பெரும்பாடாப் போச்சு. மூனாங் கௌாஸ் மகாலச்சுமி அவளோட பாட்டுல நீட்டி ஆவலாத் தண்ணி புடுச்சுக் குடிக்கப் போனா. ஆனா அஞ்சாங் கௌாஸ் படுச்சுக்குட்டு இருந்த அவுகக்கா விஜயலச்சுமி, அவளத் தண்ணி குடிக்க உடாமெ பாட்டுல புடுச்சு இழுத்து மகாலச்சுமி முதுகுல ஒரு அடி வச்சுட்டு கோவமாச் சொன்னா,

"சேரித் தெருவுல இருக்குற கொழாயில போயித் தண்ணி குடிக்கப் போறீயா?....வா...ஒனிய அப்பாட்ட சொல்லி நல்லா அடி வாங்கித் தாரேன்." சொல்லிக்கிட்டே பாட்டுல்ல இருந்த தண்ணிய தரைல கொட்டுனா.

"ரொம்பாத் தாகமா இருக்குக்கா. அப்பாட்ட சொல்லாதக்கா. கொஞ்சூண்டு குடுச்சுக்குறேன்." மகாலச்சுமி கெஞ்சிப் பாத்தா.

விஜயலச்சுமி குடிக்கவே உடல. மகாலச்சுமி சத்தம் போட்டு அழுதுக்கிட்டே வந்தா. அவளப் பாத்த மேரி டீச்சர் கேட்டாக, "என்ன மகாலச்சுமி, எதுக்கு அழுற? நடக்க முடியலயா? இன்னங் கொஞ்ச

தூரந்தான். இந்தா வந்துருச்சு பாரு ஸ்கூலு அந்தா பாரு....ஒங்க கௌாஸ் கூட தெரிது பாரு.” கூட வந்துக்கிட்டு இருந்த சாந்தி சொன்னா,

“அதுல்ல டீச்சர் மகாவுக்குத் தண்ணித் தாகம் எடுக்குதுன்னு அழுகுறா.”

“இப்பத்தான எல்லாரும் அடிகுழாய்ல தண்ணி அடுச்சு குடுச்சாக. அதுக்குள்ள மறுபடியும் தண்ணித் தாகம் எப்பிடி வரும்? சரி....வா....வா....ஸ்கூல்ல போயி குடிக்கலாம்.” டீச்சர் சொன்னாங்க.

“கொழாய்ல மகா தண்ணி குடிக்கல டீச்சர். அவுகக்கா குடிக்கக் கூடாதுன்னு சொல்லி கூட்டிக்கிட்டு வந்துட்டா.”

“ஏ குடிக்க உடமாட்டம்னா?”

“அது சேரிக் குழாயாஞ் டீச்சர். அதுல தண்ணி குடிச்சா அவுக அப்பா அடிப்பாராம்.”

“அப்பிடி யாரு சொன்னது?”

“மகாலச்சுமியோட அக்கா டீச்சர்.”

இதக் கேக்கவும் டீச்சருக்குத் தூக்கிவாரிப் போட்டது கணக்கா ஆயிருச்சு. இந்த வயசுல இப்பிடி எல்லாம் வித்தியாசம் பாக்குது களே....மனசுக்குள்ள கோவமும் வலியும் கொஞ்ச நஞ்சமில்ல. கிளாசுல எல்லாம் ஒன்னாமன்னாத்தான இருக்காக....பழகுறாக.... இங்க ஸ்கூல்லகூட ஒரே குழாய்லதான அம்புட்டுப்பேரும் தண்ணி குடிக்காங்க....இப்ப இது மட்டும் என்ன சேரிக்கொழாயாம்.... ஆனாலும் அடிமனசுல இப்பிடி ஒரு அசிங்கமான எண்ணம் எப்பிடி வந்துச்சு?...அவுகப்பா அடிப்பார்னா அப்ப வீட்லதான் இப்பிடிச் சொல்லிக் குடுத்துருக்காங்க. பல மாதிரி யோசுச்ச மேரி டீச்சர் ஒன்னும் பேசாமலே வந்தாங்க. அப்புறம் விஜயலச்சுமிய கூப்டு கேட்டாங்க.

“அந்தக் குழாயில தண்ணி குடுச்சா என்ன ஆகும் விஜயலச்சுமி? அதுல வர்ரதும் நல்ல தண்ணிதான? அங்க குடிக்கக் கூடாதுன்னு சொன்னியாமே?”

“ஆமா டீச்சர் எங்க வீட்டுல சொல்லி இருக்காங்க டீச்சர். சேரிப்பசங்ககூடச் சேரக்கூடாது, அவுங்ககிட்ட இருந்து எதுவும் வாங்கித் திங்கக்கூடாது, சேரித்தெருப் பக்கம் போகக்கூடாதுன்னு சென்னாங்க டீச்சர்.”

“அப்பிடிச் செய்யலாமா? அது தப்பு இல்ல?” விஜயலச்சுமி பதுல் ஒன்னும் சொல்லாமெ அமைதியா வந்தா. அதுக்குமேல டீச்சரும் எதுவும் கேக்கல. மத்த பிள்ளைகள்ளாம் பசிக் கெறக்கத்துல யும் வெயிலுலயும் தொவண்டு போயி ஸ்கூலுக்குள்ள வேக வேகமா ஓடுனாங்க. டீச்சரும் கிறுகிறுத்துப் போயிச் சேந்தாக.

மேரி டீச்சருக்கு வழில பேசிக்கிட்டு வந்த விசயம் ரொம்ப வேதனையா இருந்துச்சு. சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி

உயர்ச்சி சொல்லல் பாவம்னு இம்புட்டு நாளு சொல்லிக்குடுத்த தெல்லாம் வேஸ்ட்டுத்தான்.... இந்த விஜயலச்சுமி போன வருசம் ஏங்கிட்டத்தான் நாலாங் கிளாஸ் படுச்சா...அப்பங்கூட தமிழ் பாடத்துல வந்த பாரதியாரோட முரசு பாடல எப்பிடி விளக்கமாச் சொல்லி பூனக்குட்டிய வச்சு மனுசரெல்லாம் ஒன்னுதான்னு தொண்டத்தண்ணி வத்தக் கத்துனேன்... அம்புட்டும் வேஸ்டு.... ஒரு பிரயோசனம் இல்ல...ஸ்கூல்ல சொல்லிக் குடுக்குறத விட வீட்ல சொல்லிக் குடுக்குறதத்தான் இந்தப் பிள்ளைக சட்டுனு கத்துக்குதுக.... என்ன பிரயோசனம்...ஹெட்மாஸ்டர் வரவும் அந்தப் பிள்ளையக் கூப்புட்டுக் கேக்கச் சொல்லனும்...இந்த முடிவோட மத்தியானச் சாப்பாட்ட ஏனோதனோன்னு சாப்புட்டு முடுச்சுட்டு ஹெட்மாஸ்ட ருக்காகக் காத்துருந்தாங்க டீச்சர்.

ஹெட்மாஸ்டர் வீட்டுல போயிச் சாப்புட்டுட்டு ரெண்டு மணியப் போல வந்தார். டீச்சர் மெதுவாச் சொல்ல ஆரம்பிச்சாக.

"சார் வரும்போது பிள்ளைகள்ளாம் ரொம்பக் கஸ்டப்பட்டுப் போனாக சார். இந்த வெயிலுக்குள்ள தண்ணித் தாகம் வேற....நல்ல வேளையா இங்ன பள்ளத்தூர் வந்து அடிகுழாய்ல வந்து தண்ணியக் குடிக்கவும் அதுக்குப் பெறகு கொஞ்சம் தெம்பா நடந்தாக சார். ஆனா அந்தத் தாகத்துலயும் சில பிள்ளைக அந்தக் குழாயில தண்ணி குடிக்க மாட்டேனுட்டாக சார்."

"ஏ....என்ன ஆச்சு?"

மேரி டீச்சர் வழில நடந்த விசயத்த விவரமாச் சொல்லி அந்தப் பிள்ளையக் கூப்புட்டு கேக்கனும் சார்னு சொல்லி முடுச்சாக. ஒரு பிள்ளைய ஒடனே அனுப்பி அந்த ரெண்டு பிள்ளைகளையும் கூட்டிட்டு வரவும் சொன்னாக.

ரெண்டு பேரும் வந்தப் பெறகு ஹெட்மாஸ்டரு ரொம்பச் சாதாரணமாக் கேட்டாரு,

"தெருக்குழாயில தண்ணி குடுச்சா என்ன தப்பு? சேரி ஆளுகளோட வீட்லதாங் குடிக்கக் கூடாது...ஒங்க வீட்ல அந்தத் தெருக் கொழாயிலயே குடிக்கக்கூடாதுன்னுட்டாங்களா... சரி சரி கிளாசுக்குப் போங்க," வீட்டுலதாங்கற வார்த்தய மட்டும் ரொம்பா அழுத்தமாச் சொல்லிட்டு கிளாசுக்குப் போயிட்டாரு ஹெட்மாஸ்டரு வரதராஜுலு.

# 28. வாயத்த சீவன்

“யாரது வயக்காட்டுல புல்லறுக்குறது? வெளிய வா....எத்தன தடவ சொன்னாலும் இதுகளுக்கு மண்டயுல ஏறாது....வெளிய வான்னு சொல்றம்ல....” அதட்டலோட முடுச்சார் பங்குச்சாமியார் கிருபாகரன்.

குனுஞ்சு புல்லறுத்துக்கிட்டே கெஞ்சுற கொரலுல, “நாந்தாஞ் சாமி..... செயமேரி....மாடுக கொலப்பட்டினியாக் கெடக்குதுக சாமி..... மேகலக்குடி சம்சாரிகளும் புல்லுப்பெறக்க உடமாட்டேங் காங்க... நாங்க எங்க போறது சாமி? இங்ன இந்த வரப்புக்காட்டுல அறுத்துட்டுப் போயிடுறேன் சாமி.....”

“நீதானா? ஒனக்கு சூடு சொரண ஒன்னுங் கெடையாதா? ஒங்க தெரு ஆளுகள யாருமே உடமாட்டாங்க. ஏன்னா ஒங்க வாய்ல பொய்யி; கையில களவு. இப்ப நீயி வெளிய போகலன்னா நாய உட்டு கடிக்க உட்டுருவேன். சொன்னா கேக்க மாட்டெ?” மறுபடியும் சாமியாரு உறுமுனாரு.

“இந்தா இம்புட்டுத்தாஞ் சாமி. இந்த ஒரு மடிய மட்டும் அறுத்துட்டு புல்லக்கெட்டிட்டுப் போயிடுறேன். நாயக்கீய உசுக்காட்டி உட்டுறாதீக. குடிக்க கஞ்சிக்கே பெரும்பாடா இருக்கு. இதுல நாயி வேற புடுங்குச்சுன்னா ஊசி போடத் துட்டு கெடையாது. அதுலயும் ஒங்க பங்களா நாயி நல்லாக் கறியுஞ் சோறுமாத் தின்னு கொழுத்துப் போயிக்கெடக்கு,” சாமியாரோட கோவத்தத் தணிக்கனும்னு ரொம்பாச் சாந்தமா லேசாச் சிரிப்போட சொல்லிப் பாத்தா.

“என்ன வெளாடுறியா ஏங்கிட்ட? சொல்லிக்கிட்டே இருக் கேன்....கொஞ்சங்கூட மரியாத இல்லாமெ ஓம்பாட்டுக்கு அறுத்துக் கிட்டே இருக்க....டேய் அந்தோணி பங்களாவுல போயி சமையல்கார அம்மாள கூட்டிக்கிட்டு வாடா,” அங்ன வெளாண்டுக்கிட்டு இருந்த பையங்கிட்ட கோவமாக் கத்துனாரு.

சமையல்காரப் பொம்பளயக் கூப்டச் சொல்லவும் விறு விறுன்னு புல்லள்ளிக் கட்டுனா செயமேரி. கட்டும்போதே மனசுக் குள்ள நெனச்சுக்கிட்டா, “அந்தச் சமையல்காரி ரொம்பா ராங்கி புடுச்சவா; ஆங்காரி; அந்த லண்டி வந்தான்னா அம்புட்டுத்தான்... இம்புட்டு நேரமும் வம்பாடு பட்டு அறுத்த புல்லப் பூராம் அள்ளிச் சகதிக்குள்ள போட்டுருவா. முன்னகூட இப்பிடித்தான் அந்த தேவிடியா செஞ்சா.”

அந்த வயக்காடு பள்ளிக்கொடத்த ஒட்டுனாப்புல இருந்துச்சு. சுத்தி பனமரங்க வேலி கணக்கா நின்னுச்சுக. மரங்களுக்கு ஊடால முன்ளுச் செடிக பொதருகளா மண்டிக்கெடந்துச்சு. தெக்குப் பக்கம் பள்ளிக்கூடம். பள்ளிக்கொடத்த அடுத்து சாமியாரோட பங்களா. பங்களாவுக்கு எதுத்தாப்புல பங்குக் கோயிலு. பள்ளிக்கொடத்துப் பாத வழியா வயக்காட்டுக்குள்ள புல்லறுக்கப் போகமுடியாது. போனா சாமியாரு கண்ணுல படவேண்டியிருக்கும். அதுனால வயக்காட்டுக்கு வடக்குப் பக்கத்துல இருந்த இடுக்கலான வழியாத்தான் புல்லறுக்கப் போவாக. ஒசரமா ரெண்டு கருங்கல்லு நட்டி வச்சு அதக்கெடையில இத்தினிக்கானு எடவெளி உட்டு வச்சுருப்பாக. அதுக்கெடைலகூடி தான் வரமுடியும்; போகமுடியும். செயமேரி மெலுஞ்ச உருவம்ங்றது னால நெளுச்சு கிளுச்சு உள்ள மொழஞ்சுருவா.

சமையல்காரி வரமுன்ன ஓடிரனும்னு அரக்கப் பரக்க புல்லள்ளிக் கட்டிக்கிட்டு, பன்னறுவாள பின்னால இடுப்புல சொறுகிக்கிட்டு வரப்புல கொல தெரிக்க ஓடுனா. பாதி வரப்புல வந்துக்கிட்டு இருக்கும்போதே சமையல்காரியோட சத்தங் கேட்டுருச்சு.

வரும்போதே கத்திக்கிட்டே ஓடியாந்தா, “நா நெனச்சேன் இந்த இடும்பு பண்றவா ஒனியத்தவுர வேற யாரும் இருக்க மாட்டாகன்னு எனக்குத் தெரியும். ஒனக்கு எத்தன தடவ சொல்லியாச்சு. நீயெல்லாஞ் சோத்தத் திங்கியா இல்ல பிய்யத்திங்கியா? இந்தா வாரேன்.” செயமேரி தட்டுத்தடுமாறி வரப்புல ஓடுனா. கல்லுக்கிட்ட வந்ததும் ஒடம்பக் கல்லுக்கெடையில உட்டு முறுக்கித் திருக்கி எப்பிடியோ வெளிய போனப்பெறகுதான் அவளுக்கு மூச்சே வந்துச்சு. அடவகுத்துல கல்லு ஒரசி வலி தாங்க முடியல. காலைல இருந்து கஞ்சி தண்ணி குடிக்காமெ புல்லறுத்து நொந்து போன அவளுக்கு வெளிய போகவும் எங்குட்டுக்கெடந்துதான் அம்புட்டு வேகம் வந்துச்சுன்னு தெரியல. வெளிய நின்னுக்கிட்டு பலங்கொண்ட மட்டும் கத்துனா.

“சோறு திங்கியா...பீயத்திங்கியான்ன கேட்ட? தட்டுவாணி முண்ட...குசினி வேல செஞ்சு கஞ்சி குடிக்கிற கொள்ளு மகளுக்கு இம்புட்டு மப்பு ஏறிப்போச்சா? இந்த வயக்காடு என்ன ஒங்கப்பெ வீட்டுச் சொத்தா...இல்ல ஓம்புருச வீட்டுச் சொத்தா?....கோயிலுச் சொத்து. இங்க வாக்கப்பட்டா வந்துருக்க? கண்டாரத்த கொள்ளு... காச்சி வைக்க வந்த கழுத காச்சி வச்சுப் போட்டு மிச்சமீதி இருந்தா தின்னுட்டுப் போவியா....வந்துட்டா என்னமோ சம்சாரிக கணக்கா... தூ...துப்புக்கெட்ட முண்ட.....”

கல்லுப்பாதைக்குள்ள மொழஞ்சு சாமியாரோ, சமையல்காரியோ வரமுடியாதுங்குற தைரியத்துல வகுத்தெருச்சலக் கொட்டித் தீத்தா. ஒலஞ்சு கெடந்த முடிய அள்ளிக் கொண்ட போட்டுக்குட்டு புல்லுக்

கெட்டத் தூக்கித் தலையில வச்சுக்கிட்டு கௌம்புனா. சமையல் காரியோட வசவுச்சத்தம் தூரத்துல கேட்டுக்கிட்டு இருந்துச்சு.

"நாயிகெணக்கா கொரச்சுக்குட்டு கெட. எங்குட்டுக்கெடந்து வந்த சக்காளத்தி இங்க வந்து நாட்டாமெத்தனஞ் செய்றா. இந்தச் சாமியாருக்கும் கொஞ்சங்கூட ஈவு எரக்கம்னு இல்லியே... சரி... கஸ்டப்படுற சனங்க....இந்தப் புல்லப் பெறக்கிட்டுப் போயிப் பொழைக்கட்டும்னு இத்தினிக்கூட நெஞ்சுக்கூட்டுல எரக்கமில்லியே .... நம்ம சேரி ஆளுகன்னா எல்லாருக்கும் எளப்பமா இருக்கு....நம்ம வாயில பொய்யாம்....கையில களவாம்... மத்தவுகள்ளாம் ரொம்ப ஒப்பரவானவுகதான்.....தெரியாதாக்கும் இவுக வகுசைக....செத்த நாயிக....மேலக்குடி சம்சாரிக அவெவெ நாப்பது அம்பது ஏக்கரு வச்சிருக்கவனுக கூட இம்புட்டுக் கெடுபுடியா இருக்க மாட்டாக. இத்தனைக்கும் சொந்த வயக்காட்டுக்காரனுக....இந்தச் சாமியாரு இன்னைக்கு இங்க ...நாளைக்கு ஆண்டவர்சாமி இவர மாத்திட்டா..... எங்கயோ....இதுக்கு இம்புட்டு மணியஞ்செஞ்சுக்குட்டு கெடக்காரு.... நாளைலருந்து எங்க போயி புல்லறுக்கவோ..." யோசன செஞ்சுக் குட்டே வீடு வந்து சேந்தா செயமேரி.

மொதல் வேலையா புல்லுக்கெட்ட அவுத்து தொழுவத்துல கெட்டிக்கெடந்த மாடுகளுக்குப் போட்டா. ஒவ்வொரு மாடா தட்டிக் குடுத்தா.

"நீங்களே இல்லன்னா நானும் ஏம்புள்ளைகளும் பட்டினி கெடந்து சாகவேண்டியதுதான். ஏதோ கடவுள் புண்ணியத்துல லோனுக்கு ஒத்த மாட்டப் புடுச்சாந்து வளத்து இன்னைக்கு லோனும் முடுஞ்சு நாலஞ்சு மாடாகிப் போச்சு. இதவச்சு ஏதோ மொறையக் கழிக்கலாம்னு பாத்தா இந்த வரப்புக் காட்டுகள்ள கூட புல்லறுக்க உடமாட்டேங்குறாங்களே.... அநியாயப்பட்ட பாவிக...வரப்புல புல்லறுத்தா வரப்புதானே சுத்தமாகும்....புல்லுமண்டிக்கெடந்தா ஒரு பாம்பு பல்லி கெடந்தாக்கூட தெரியாதே...கெடந்து அந்தச் சாமி யாரையும் சமையல்காரியயும் நல்லாப் புடுங்கட்டும்.... அப்பத்தான் தெரியும்... ச்சே...ச்சே...சாமியாரப் புடுங்கக்கூடாது. என்ன இருந்தா லும் அவரு கடவுளுக்காக வந்தவரு...அவருக்குத் தும்பம் நெனச்சா கடவுளு நம்மளத்தாந் தெண்டிப்பாரு... அந்தச் சமையல்கார முண்டையக் கொத்தனும்," மாடுககிட்ட பேசிக்கிட்டே தொழு வத்துலயே ஒக்காந்திருந்தா.

பீடி பத்த வச்சுக்கிட்டே வந்த அவா புருசஞ் சின்னப்பராசு செயமேரி ஒக்காந்திருந்த தோரணயப்பாத்துக் கேட்டான்,

"யே...என்னத்தா இப்பிடித் தொழுவத்துக்கிட்டயே ஒக்காந் துட்ட? போயிக் காலக்கையக் கழுவிட்டு கூழ் குடிக்க வேண்டியது தான....என்ன ஒருமாதிரியா இருக்க?..... சேட்டமில்லையாக்கும்."

"குடிக்கனும் இந்த வாயில்லாச் சீவனுகளுக்குத் தெனமும்

புல்லறுத்துக் கொண்டாந்து போடுறதுக்குள்ள எனக்குச் சீவனத்துப் போகும். கண்ட கண்ட நாயிககிட்டயெல்லாம் பேச்சு வாங்க வேண்டியிருக்கு” பெருமூச்சு உட்டபடியே புல்லறுக்கயில நடந்த விசயத்தப் பூராம் சொன்னா. “அந்த நாரமுண்டய நாம்போயி நாலு வாத்த நல்லாச் சாகும்படியாக் கேட்டுட்டு வாரேன். இவா எவா அதிகாரஞ் செய்ய...சாமியாரே கூட சொல்றதுக்கு ரைட்டு கெடையாது. இது நம்ம கோயில் நெலம். இதுல நம்ம புல்லறுக்காமெ வேற யாரு வந்து அறுப்பா?....நம்ம என்ன வெள்ளாமெ வெளச்சலயா அழிமாண்டஞ் செய்றோம்? எல்லாம் இந்தச் சாமியாரு குடுக்குற எடம்....இல்லன்னா இந்தக் கழுதைக்கு இம்புட்டுத் துணுச்சல் எங்கருந்து வரும்?,” சின்னப்பராசு கோவமாக் கத்துனான்.

“ஏ...சும்மாகெட...ஓம்பாட்டுக்குப் போயி சண்டகிண்ட போட்டுக்கிட்டு இருக்காத....சாமியாரு சப்போட்டுலதான் அவா இப்பிடி ஆடுறா. சாமியாரப் போயி நம்ம பகைக்க முடியுமா சொல்லு. நம்ம நெலம தெருஞ்சும் இந்தச் சாமியாரு இப்பிடிக் கல்நெஞ்சுக்காரரா இருக்காரே....சரி ...உடு....நாளைல இருந்து வேற எங்குட்டாச்சும் போயி பாக்க வேண்டியதுதான்” செயமேரி சலிப்பாச் சொன்னா.

“நீயி அங்கயே போயி புல்லுப் பெறக்குத்தா. அவுக வந்து ஒனிய என்ன செய்றாகன்னு பாப்பம். ஓடுற நாயக் கண்டா வெரட்டுற நாயிக்கித் தொக்காம். அவுக வெரட்ட வெரட்ட நம்ம ஓடுறதுனாலதான் இப்பிடிக் கண்ணுல காங்க உடாமெ வெரட்டுறாக. நீயி ஓம்பாட்டுக்குப் போயிப் பெறக்கு. என்ன கழுத்தயா சீவிடுவாக?”

சின்னப்பராசுக்கு ஆறு பிள்ளைக. எல்லாஞ் சின்னஞ் சிறுசுகளா இருந்துச்சுக. இந்த மாட்ட வச்சுத்தான் அவுக பொழப்பு. விடுஞ்சது லருந்து அடஞ்சது வரைக்கும் மாடுகளக் கவனிக்கவே நேரங் சரியா இருக்கும். வேற வேலவெட்டி எதுக்கும் போக முடியாது. மாடுகளும் நல்ல சாதி மாடுக. ஒவ்வொன்னும் ஏழெட்டு லிட்டரு பாலு குடுக்கும். சேரித் தெருவுக்குள்ள இவுக மாடு மாதிரி வேற எந்த மாடும் இம்புட்டுப் பாலு குடுக்காது. மாடுகள வெலைக்குக் கேட்டு எம்புட்டெம்புட்டோ யாவாரிக வந்தாக. எம்புட்டுக் கஸ்டம் இருந்தாலும் மாடுகள மட்டும் விக்கமாட்டேனுட்டான்.

செயமேரியும் அவா மக்களும் மாடுகமேல கொள்ளப் பிரியம் வச்சுருந்தாக. மாடுக கன்னு போடப்போட ஒன்னக்கூட விக்காமெ வச்சுருந்தாக. இப்பயும் மாடுங் கன்னுமாச் சேந்து பத்துப் பன்னெண்டு உருப்பிடிக இருக்கும். அம்புட்டுக்குந் தீவனம் போடுறதுதான் ரொம்பாக் கஸ்டமா இருந்துச்சு. செயமேரியும் காடுகரையெல்லாம் சுத்திப் பெறக்கி எப்பிடியாச்சும் புல்லுக் கொண்டாந்து போட்டுறுவா. ஊடதாட அவா மகா மூத்தவளும் புல்லுப் பெறக்கப் போவா. மாடுகளக் குளுப்பாட்ட, சாணி சகதி அள்ளிப்போட, அதுகளுக்குத்

தண்ணிகாட்ட, பாலு பீச்சன்னு சதா வேலதான். இந்த மாடுகளாலயே அவா பாதி ஒடம்பாப் போனான்னு தெருவுல சொல்லுவாக.

ஒரு வாரமா எங்குட்டெங்குட்டோ சுத்தி அலஞ்சு பாத்தா. புல்லு கெடைக்குறது குதுரக் கொம்பா இருந்துச்சு. சம்சாரிகள்ளாம் வயக்காடுகளப் பூராம் தோப்புகளா ஆக்கிப் போட்டதுனால முன்ன மாதிரி இப்பச் செழிம்பா புல்லு கெடைக்கல. சரிவர புல்லுப் போடாததுனால பாலும் கொறய ஆரம்பிச்சிருச்சு. செயமேரியும் நாலாதிக்கமும் முட்டி மோதிப் பாத்துட்டு கடைசியில வேற வழி இல்லாமெ பழையபடி சாமியாரு வயலுக்கே மறுபடியும் போனா.

"ஒத்த மாடு ரெண்டு மாடுன்னா எப்பிடியும் சமாளிக்கலாம்; இத்தன உருப்படிகளுக்கு என்ன செய்றது? சாமியாரோட காலுல கைல உழுந்தாச்சும் கெஞ்சிக் கூத்தாடி அறுத்துட்டு வரனும். வேற என்ன செய்ய?" நெனச்சுக்கிட்டே போயி அறுத்துட்டு வந்தா. நின்னுக்கிட்டு அறுத்தா தலயப் பாத்துருவாகன்னு வரப்புல குத்த வச்சுக்கிட்டே குனுஞ்ச தல நிமுறாமெ அறுத்தா. ரொம்பா நேரமா அப்பிடிக் குத்தவச்சுக்கிட்டு அறுத்தது குறுக்கே ஒடுஞ்சு போனதுமாதிரி ஆச்சு. இடுப்பு முதுகெல்லாம் நோக்காடு எடுத்துக்கிருச்சு. தெனமும் வலியப் பொறுத்துக்கிட்டு பல்லக்கடுச்சுக்கிட்டு அறுத்துக்கிட்டு வருவா. நாலஞ்சு நாளாப் போயிப் புல்லறுத்தும் சாமியாரோ, சமையல்காரியோ வராதது செயமேரிக்குக் கொஞ்சம் தெம்பாக்கூட இருந்துச்சு.

கொஞ்ச நாளா செயமேரி வயக்காட்டுப் பக்கம் வரலங்கவும் சாமியாருக்குச் சந்தோசமா இருந்துச்சு. ஒரு நாளு சாயங்காலமா சமையல்காரி கார்மேலுட்ட சொன்னாரு.

"அன்னைக்குக் குடுத்த குடுப்புல அந்தச் சேரித் தெருப் பொம்பள பயந்து போனா. இப்ப இந்தப் பக்கமே வர்ரதில்ல."

"ஆமாமா...நாங்கூட கொஞ்ச நாளா அவள இங்க பாக்கல. தொலயட்டும் கழுத..." ரொம்பாத் திருப்தியாச் சொன்னா கார்மேலு. ஒரு நாளு வழக்கம்போல மத்தியானச் சாப்பாட்டுக்குப் பெறகு தூங்கி எந்துருச்ச சாமியாரு, சாப்பாட்டு அறைக்கு வந்து கார்மேலு சுட்டு வச்சுருந்த சூடான வடையத் தின்னுட்டு, காப்பியக் குடுச்சுட்டு, காத்தோட்டமா நடந்து வரலாம்னு வயக்காட்டுப் பக்கமாப் போனாரு. அவரு பின்னாலய அவரோட நாயி ரூபியும் ஓடுச்சு. நாயிக்கும் ரெண்டு வடைய எடுத்துப் போட்டுட்டு கூடயே கூட்டிக்கிட்டுப் போனாரு. அவரு வயக்காட்டுல நொழையறதுக்கும் செயமேரி புல்லுக்கட்டோட வெளியேறுறதுக்கும் சரியா இருந்துச்சு.

"அடச்சே....கொஞ்சம் முன்னால வராமப் போனேனே.... இன்னைக்கு நாயிகூட வந்ததுக்கும் அதுக்கும் அவள ஒருவழி பண்ணி இருந்திருக்கலாமெ...சரியான சான்ச உட்டுட்டேனே... இருக் கட்டும்..... இருக்கட்டும்.... இனி ஒரு தடவ அவள இங்க பாத்தா,

அவ்வளவுதான்.... அவளுக்குப் புல்லுப் பெறக்கவே அவசிய மில்லாதபடி செஞ்சு போடுறேன்... மாடு இருந்தாத்தானே புல்லறுக்க வருவா...இல்லாமலே ஆக்கிப் போடுறேன்." கருவிக்கிட்டே பங்களாவுக்கு வந்து சமையல்காரிட்ட விசயத்தச் சொன்னாரு. ரெண்டு பேரும் ஆலோசன செஞ்சு ஒரு முடிவுக்கு வந்தாக. இவுக திட்டம் எதயும் அறியாத செயமேரி வழக்கம் போல மறுநாளும் புல்லறுக்கப் போனா.

"எந்தச்சாமி புண்ணியமோ சாமியாரோ சமையல்காரியோ வயக்காட்டுப் பக்கம் வர்ரதில்ல. சாமியாருக்குப் பயந்துக்கிட்டு ஒரு பெயமக்களும் இங்க புல்லறுக்க வரமாட்டேங்காளுக ....பயந்தாரிப் பெயமக்க" செயமேரி தனக்குத்தானே சொல்லிக்கிட்டே புல்லறுத்தா. தெக்க பள்ளிக்கொடத்துச் செவத்த ஒட்டுனாப்புல அறுத்த புல்ல குமிச்சு வச்சுட்டு கெழக்க போயி ஒக்காந்து அரவமில்லாமெ அறுத்துக்கிட்டு இருந்தா. சத்தமில்லாமெ அங்க வந்த சாமியாரு செயமேரியப் பாத்துட்டு ஒன்னுமே சொல்லாமெ நேரா சமையல் காரிட்ட போனாரு. ரெண்டு பேரும் என்னமோ குசுகுசுன்னு பேசிக் கிட்டாக. செத்த நேரத்துல சாமியாரு அவரு வண்டில ஏறிப் போயிட்டாரு. சமையல்காரி மட்டும் சத்தமில்லாம வயக்காட்டுப் பக்கம் போனா. தெக்குப் பக்கம் பள்ளிக்கொடத்து ஓரமா வச்சிருந்த புல்லு மேல கைல கொண்டு வந்துருந்த டப்பாவச் சாச்சுட்டு சத்தங் காட்டாமெ அவளும் ஒரு பைய எடுத்துக்கிட்டு ஊருக்குக் கௌம்பிட்டா.

நடந்தது எதுவுமே தெரியாத செயமேரி புல்ல அள்ளிக் கெட்டிக்கிட்டு வீட்டுக்கு வந்தா. சின்னப்பராசு வந்து மாடுகளுக்குப் புல்லள்ளிப் போட்டான். செயமேரி செத்த நேரம் படுத்து எந்துருச்சுட்டு மாடுகளப் பாலு பீச்சப் பத்திட்டுப் போகலாம்னு தொழுவத்துக்குப் போனா. புல்லத்தின்ன மாடுக வாயெல்லாம் நொரநொரையா வந்து கெடந்துச்சுக. நெஞ்சு வெடிக்க செயமேரி போட்ட சத்தத்துல ஊரே அங்க கூடிருச்சு.

# 29. கதறல்

“சேலம் மாவட்டத்தில் சில மாதங்களாக நின்று போயிருந்த பெண் சிசுக் கொலைச் சம்பவம், தற்போது மீண்டும் வேர் விட்டிருப்பது வேதனைக்குரியது.

சில மாதங்களுக்கு முன் அரசு ஆஸ்பத்திரியில் இரண்டு பெண் சிசுக்கொலை நடந்தது. முதல்நாள் பிரசவ வார்டுக்கு அருகில் பெண் சிசு பிணம் கிடந்தது. இரண்டாவது நாள் நர்சுகள் விடுதிக்கு அருகில் இறந்து கிடந்த பெண்சிசுவை நாய் கவ்விக் கொண்டு ஓடியது. இதற்கடுத்து, சில நாட்களிலேயே வாழப்பாடியிலிருந்து வந்த டவுண் பஸ்ஸில் பெண்சிசு ஒன்றும், பட்டைக் கோயில் பகுதி குப்பைத் தொட்டி ஒன்றில் ஒரு பெண் சிசு பிணமும் கண்டெடுக்கப்பட்டது. இதற்கடுத்து, தற்போது பத்து நாட்களுக்கு முன் இதே அரசு ஆஸ்பத்திரிக்கு முன் பெண் சிசு கண்டெடுக்கப்பட்டது.”

பேப்பர் வாசிச்சுக்கிட்டுருந்த மல்லிகாவுக்கு அதுக்குமேல எதையும் வாசிக்கப் பிடிக்கல. மனசு கனத்துப் போச்சு. ஆஸ்பத்திரியும், அதச் சுத்திக் கெடக்குற பெண் சிசு பிணங்களுமா கற்பனைல தெரிய, வேதனையோடெ கோவமும் வந்துச்சு. பெறந்த பச்ச மண்ண நாயி கவ்விக்கிட்டு ஓடுற மாதிரி மனசுக்குள்ள தெரிய, அந்தக் கோரக்காட்சி மல்லிகாவெ ரணப்படுத்த, தலய வேகமா அங்குட்டும் இங்குட்டுமா ஆட்டி, அந்த நெனப்பெ வெரட்டப் பாத்தா மல்லிகா. தலய ஆட்டுன வேகத்துல, சன்னலு கம்பில தல ணங்குனு இடிக்க, கண்ணுல கண்ணீரே வந்துருச்சு. அப்பத்தான் நெதானத்துக்கு வந்த மல்லிகா கொஞ்சம் தள்ளி ஒக்காந்தா. அவா கையிலருந்த பேப்பரு கீழ உழுந்துச்சு. அவா அதப்பாத்தாலும் குனுஞ்சு அத எடுக்கல; எடுக்கப் பிடிக்கல. அந்த பேப்பர் மேல அம்புட்டு வெறுப்பா இருந்துச்சு. பேப்பர செருப்புக் காலுட்ட மிதுச்சு வெறுப்பக் காட்டுனா.

சென்னைக்குப் போற பஸ்சுல, மூனு பேரு ஒக்கார வேண்டிய சீட்ல, மல்லிகா மட்டும் சன்னலோரமா தனியா ஒக்காந்துருந்தா. வழக்கமா ரொம்பி வழிற அந்த வண்டி, அன்னைக்கு என்னமோ காலியாக் கெடந்துச்சு. ஆம்பளைக பத்துப் பேரும், பொம்பளைக ஏழெட்டுப் பேரும் இருந்தாக. சன்னலு கம்பில தல இடிபட்டத யாரும் பாத்துருப்பாகளோன்னு நெனச்சு, ஒரு தடவ மெதுவாத் தலயத்திருப்பி பஸ்சுக்குள்ள நோட்டமிட்டா மல்லிகா. யாரும் பாத்த மாதிரி தெரியல.

அம்புட்டுப் பேரும் சன்னல் வழியா வெளியவே பாத்துக்கிட்டு இருந்தாக. பஸ்சு நின்னதக்கூட அப்பத்தான் மல்லிகா கவனுச்சா. என்ன ஏதுன்னு பாக்க தலயத் தூக்கி முன்வாசலுப் பக்கம் எட்டிப்பாத்தா.

பத்துப் பதுனெட்டு வயசு இருக்கும் அந்தப் பையனுக்கு, அரும்பு மீச, மூஞ்சி மொகற எல்லாம் பருவா இருந்துச்சு. நெத்தியில சின்னதா திந்நீறு பூசியிருந்தான். ரெண்டு கையுட்டயும் ஒரு சின்னப் பொம்பளைய வாரித் தூக்கிக்கிட்டு, அழுதுக்கிட்டே பஸ்சுல ஏறுனான். மெதுவா, பூப்போல அந்தப் பொம்பளைய, மல்லிகா ஒக்காந்துருந்த சீட்டுக்கு முன் சீட்டுல இருந்த ஒரே ஒரு ஆம்பளைய எந்துருச்சு வேற சீட்டுக்குப் போகச் சொல்லிட்டு, அந்த சீட்டுல, படுக்க வச்சான். கூடவே மூனு பொம்பளைக சோகமா ஏறுனாக. ஒருத்தி சன்னலுகிட்டப் போயி, அந்தப் பொம்பளையோட தலயத்தூக்கி தன்னோடெ மடில வச்சுகிட்டு ஒக்காந்தா. இன்னொருத்தி கால் மாட்டுல நின்னுக்கிட்டா. மூனாவது பொம்பள மல்லிகாவுக்குப் பக்கத்துல வந்து ஒக்காந்தா. மூனு பேருமே காதுல, கழுத்துல நக நட்டு போட்டுருந்தாக. படுத்துக்கெடந்த பொம்பளையும் நெறய்யா நக போட்டுருந்தா. கொஞ்சம் வசதியானவுகளா இருப்பாக போலன்னு மல்லிகா நெனச்சுக்கிட்டா.

வண்டிக்குள்ள சத்தமே இல்ல. வண்டில இருந்த அம்புட்டுப் பேரும் சோசமாகிப் போன மாதிரி இருந்துச்சு. அந்த அமைதிய கலைக்குற மாதிரி, படுத்துக் கெடந்த பொம்பள பயங்கரமா அலறுனா. அவளத் தூக்கிக்கிட்டு வந்த அந்தப் பையன் ரெண்டு கையுட்டயும் மொகத்த மூடிக்கிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதான். அவந்தான் அந்தப் பொம்பளைக்குப் புருசம்னு பேசிக்கிட்டாக.

“டைவருட்டச் சொல்லி, செத்த வேகமா வண்டிய ஓட்டச் சொல்லுடா,” நின்னுக்கிட்டுருந்த பொம்பள அவங்கிட்ட சொன்னா. அவனும் கண்ணத் தொடச்சுட்டு எந்துருச்சுப் போயி டிரைவருட்ட என்னமோ சொல்லிட்டு வந்து மண்டயத் தொங்கப் போட்டுகிட்டு சீட்ல ஒக்காந்தான்.

டிரைவரு எங்கயும் வண்டிய நிறுத்தாமெ, படுவேகமா ஓட்டுனாரு. மறுபடியும் அந்தப் பொம்பள பயங்கரமா கத்துனா. அதக் கேக்கவே பரிதாபமா இருந்துச்சு. மல்லிகா முன்னால எட்டிப் பாத்தா. சின்னப் பிள்ளதான். பதினாறு இல்லன்னா பதினேழு வயசுதான் இருக்கும்.

“அழாத கண்ணு…அழாதெ. இந்தா இன்னங் கொஞ்சத் தூரந் தான். செத்தப் பொறுத்துக்க தாயி;” சொல்லிக்கிட்டே சீலய எடுத்துக் கண்ணத் தொடச்சுக்கிட்டா அவா கூட ஒக்காந்துருந்த பொம்பள.

“முருகா, சீக்கிரம் வண்டிய ஓட்டச் சொல்லிச் சொல்லுடா. தாங்க மாட்டா போல,” சொல்லிட்டு கீழ குனுஞ்ச பாத்தா

நின்னுக்கிட்டுருந்த பொம்பள.

மல்லிகாவும் கீழ குனுஞ்சுப் பாத்தா. ஒரே ரத்தக்காடு. பாக்கவே ஒரு மாதிரி இருந்துச்சு. படக்குனு பையத் தூக்கிக்கிட்டு எந்துருச்சு பின் சீட்டுக்குப் போயிட்டா மல்லிகா. பக்கத்து சீட்டுகள்ள இருந்த ஆம்பளைகளும் எந்துருச்சு பின் சீட்டுகளுக்குப் போயிட்டாக. மறுபடியும் பஸ்சுக்குள்ள ஒரே அமைதி. என்ன விவரம்னு யாருக்கும் சரியாத் தெரியல.

"என்ன அந்தப் பிள்ளைக்கு?," மல்லிகா கையிட்ட சைக செஞ்சு கேட்டா.

நின்னுக்கிட்டு இருந்த பொம்பள மல்லிகாவ ஒரு தினுசாப் பாத்தாளே தவுர பதுலு ஒன்னுஞ் சொல்லல.

வண்டி போன வேகத்தப் பாத்து மல்லிகா மட்டுமில்ல; வண்டிக்குள்ள இருந்த அம்புட்டுப் பேத்துக்கும் கலக்கமாத்தான் இருந்துச்சு. வண்டியக் கொண்டாந்து செங்கல்பட்டு ஆஸ்பத்திரிக்கு முன்னால ரோட்டுல நிப்பாட்டிட்டு பின்னால திரும்பிப் பாத்தாரு டிரைவரு. ஒடனே முருகன் ஓடியாந்து மறுபடியும் அந்தப் பிள்ளையத் தூக்க வந்தான்.

"ஏலேய் முருகா…தூக்காதடா. இப்பத் தூக்க முடியாதுடா. பெரசவம் ஆகிருச்சுடா," ஒக்காந்திருந்த பொம்பள சொன்னா.

"கொழந்த பெறந்துருச்சா? எப்ப?," ஆர்வமாக் கேட்டான்.

"போயி டிரைவருட்டச் சொல்லி வண்டிய ஆசுபத்திரிக்குள்ள உடச்சொல்லு. தொப்புளுக்கொடிய அறுத்து உட்டாத்தான், எறங்க முடியும்."

முருகன் வேகமாப் போயி டிரைவருட்ட சொன்னான், "சார் வண்டிய ஆசுபத்திரிக்குள்ள உடுங்க சாரி. கொழந்த பெறந்துருச்சாம். தயவு செய்து சார்."

டிரைவர் வண்டியத் திருப்பி ஆசுபத்திரிக்குள்ள உட்டாரு. நேரா பெரசவ வார்டுக்கு முன்னால போயி வண்டிய நிப்பாட்டுனாரு.

மொதல்ல, என்னமோ ஏதோ ஆக்சிடெண்டோ என்னமோன்னு நெனச்சு வண்டியப் பாத்த சனங்க, பெரசவ வார்டு முன்னால போயி வண்டி நிக்கவும், அங்ன கூடிக்கெடந்த பொம்பளைக பூராம் வண்டியச் சுத்தி வந்து நின்னுக்கிட்டு உள்ள எட்டிப்பாத்தாக. மல்லிகாவுக்கு பேப்பர்ல வாசுச்ச சேலம் ஆசுபத்திரி நெனவுக்குவர மறுபடியும் கலங்கிப் போனா.

"இந்தப் பிள்ளைக்கு என்ன கொழந்த பெறந்துருக்கும்? பொம்பளையா? ஆம்பளையா? பொம்பளன்னா, இவளுங் கொன்னு போடுவாளா…..சே….சே….இவா கொல்ல மாட்டா. அது சேலத்துப் பக்கத்தான். இங்க ஒன்னுங் கெடையாது. இவுகளப் பாத்தா வசதியுள்ளவுக மாதிரித்தானெ இருக்குது….கொல்ல மாட்டாக….."

கண்டக்டரு போட்ட சத்தத்துல மல்லிகா திடுக்குட்டு பஸ்சுக்குள்ள பாத்தா.

“சீக்கிரம் எறங்குங்கப்பா....எனக்கு டயமாகுதுல்ல. ஒங்களுக் காகவே ஒரு டிக்கெட்டுகூட ஏத்தாமெ எறக்காமெ வண்டியக் கொண்டாந்தேன். இப்ப என்னடான்னா, ஆசுபத்திருக்குள்ள கொண்டாந்தப் பெறகும், ஒக்காத்துக்கிட்டு இருந்தா எப்பிடி? சீக்கிரம் எறக்குங்கப்பா.”

“எப்பிடியய்யா எறக்க முடியும்? பெரசவம் ஆகிப் போச்சுல்ல. தாயி வேற பிள்ள வேறன்னு பிருச்சுப் போட்டாத்தானெ எறக்க முடியும்? உள்ள போயி, நர்சக் கூப்டுகிட்டு ஓடியாடா. நீயும் போத்தா,” ஒக்காந்துருந்தவா கத்திச் சொன்னா.

முருகன் கீழ எறங்கி ஓடுனான். ரொம்பா நேரமாகியும் அவனும் வரல; நர்சும் வரல. இதுக்குள்ள கூடி நின்ன செல பொம்பளைக வண்டிக்குள்ள ஏறிப்பாத்தாக. அதுல ஒருத்தி சொன்னா.

“இப்பிடி போட்டுக்கிட்டு இருந்தா, இங்கயே கெடக்க வேண்டியதுதான் குடுக்க வேண்டியதக் குடுத்தாத்தான், அவுகளும் வந்து பாப்பாக, துட்டப் பாக்காதீக. போயிக் குடுத்தீகன்னாதான் வந்து பாப்பாக.”

பஸ்சுல இருந்த அம்புட்டுப் பேரும் எறங்கி கீழ போயிட்டாக. மல்லிகா மட்டும் எறங்கல. மறுபடியும் சேலம் ஆசுபத்திரியும் பெண் சிசு பிணங்களுமா மண்டையக் கொடஞ்சது.

‘எப்பிடித்தான் நாயி கவ்விட்டுப் போற அளவுக்கு உடுறா களோ.... அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிதாம். சும்மா.... மிருகமாவே பெறந்துரலாம்... மிருகங்க கூட தங்களோடெ குட்டிகள எம்புட்டுப் பாசமா பராமரிக்குது....பால் குடுத்து வளக்குது.... சே.... நல்லவேள என்ன சின்னதுலயே கொல்லல.....’

இதுக்குள்ள வண்டிக்குள்ள நெறய்யா பொம்பளைக ஏற ஆரம்புச்சுட்டாக. ஏறுனவுக பூராம் ஒருத்தரு பாக்கி இல்லாமெ என்ன புள்ள....என்ன புள்ளனு கேட்டது மல்லிகாவுக்கு எருச்சலா இருந்துச்சு.

‘என்ன புள்ளன்னா என்ன? இம்புட்டுக் கஸ்டப்பட்டு புள்ள பெறந்துருச்சேன்னு சந்தோசப் படுறத உட்டுட்டு, என்ன புள்ளன்னு தெரிஞ்சுக்கத்தான் துடிக்காக. பொம்பளப் புள்ளன்னா கொன்னு போடுவாகளா?.....எதுக்கு? தாம்படுற கஸ்டம் தன்னோடெ வகுத்துப் புள்ளயும், படக்கூடாதுன்னு இப்பிடிச் செய்வாகளா என்னமோ...’ மல்லிகா யோசுச்சுக்கிட்டே வெளிய பாத்தா. ‘பெண் நாட்டின் கண்’ - எழுதியிருந்த போர்டப் பாத்து, நக்கலாச் சிருச்சுக்கிட்டா.

‘இதுல ஒன்னுங் கொறச்சல் கெடையாது. நாட்டின் கண்ணப் புடுங்கிப் புடுங்கி நாயிக்குப் போட்டுட்டா நாடே குருடாத்தான் போகும். குருடாவே போகட்டும்.’

“ இப்பவும் எம்புட்டு நேரமாச்சு. ஒருத்தராச்சும் வந்து எட்டிப் பாக்காகளான்னு பாரு. வந்து பாத்தப் பெறகு துட்டு குடுக்காமெ ஓடியா போவோம்? அநியாயமாவுல இருக்கு.” சொல்லிக்கிட்டு இருக்கும்போதே வெள்ளச்சீல கட்டுன நர்சும், ஆயாவும் பஸ்சுக்குள்ள வந்தாக.

“ஓம் பொண்ணு மட்டுந்தானா இருக்குது இங்க? பாத்துக் கிட்டுருந்த கேச அப்பிடியே உட்டுட்டு ஓடியார முடிமா என்ன? அம்புட்டுப் பேசுறியே.... டாக்சி வச்சுக்கிட்டு முன்னக்கூட்டியே கொண்டாந்து சேத்துருக்க வேண்டியதுதான? நீயெல்லாம் பிள்ளப் பெத்தவாதானெ? இம்புட்டு லேட்டாக்கி, வண்டிக்குள்ள டெலிவரி ஆக வச்சுக் கொண்டுவாரீயே,” நர்சம்மா கத்துனா.

கத்தரிச்கோல வச்சு தொப்புளுக்கொடிய வெட்டிட்டு, பிள்ளய மட்டும்தூக்குனா.

“இந்தா பாத்துக்கோ. பொம்பளப் புள்ளதான். பெறகு வந்துட்டு நானு ஆம்பளதான் பெத்தேன்; பிள்ளைய மாத்திடாகன்னு வம்பு பண்ணக்கூடாது,” சொல்லிட்டு பிள்ளைய கூட வந்துருந்த ஆயா கைல குடுத்தாக நர்சு.

ஆயா கொழந்தைய வாங்கிச் துணில சுத்திக்கிட்டா.

“இந்தப் பொட்டக்கழுதையப் பெறுரதுக்கா டாக்சி வச்சு வரச் சொல்றா, நல்ல காலம்....பஸ்சுலயே வந்தாச்சு,” முருகனோடெ அம்மெ நெனச்சா. ஆயா கைல இருந்த கொழந்த வீல் வீல்னு கத்துச்சு. அந்தக் கொழந்தயப் பாக்கவும் மல்லிகாவுக்கு மறுபடியும் சேலம் ஞாபகம்.

‘இது பொம்பளப் புள்ளையா இருக்குதே....இது நெலமெ என்ன ஆகுமோ?... தலப்புள்ளனு சொன்னாகள்ள....அதுனால தப்புச்சுரும்.’

நர்சு சத்தம் போட்டா, “என்ன இன்னும் படுத்தே கெடக்க? எந்துருச்சு உள்ள வார்டுக்கு வா. அட்மிசன் போட்டுட்டு மீதியப் பாக்கலாம்.”

மல்லிகாவுக்கு வேதனையா இருந்துச்சு. கூட வந்துருந்த பொம்பளைககிட்ட சொன்னா, “ஏம்மா, இப்படி பஸ்சுல வந்து கஸ்டப்படுறதுக்கு டாக்சி எடுத்துட்டு வந்து பாத்துருக்கலாம்ல?

“அட நீ வேற சும்மா கெட. வகுத்தெருச்சலக் கெளப்பாதெ. அப்டியாச்சும் ஒரு காளங்கன்னப் பெத்துருந்தான்னா டாக்சி வைக்க லாம்; எல்லாம் வைக்கலாம். இந்தப் பொட்டக் கழுதையப் பெறுர துக்கு இது போதும். இந்தச் சனியன வீட்ல பெத்துருந்தான்னா இப்ப இந்த நர்சு, ஆயா, தோட்டி கீட்டினு துட்டச் செலவழிக்க வேண்டாம்.”

மல்லிகா மேக்கொண்டு எதுவும் சொல்லல. ஆயா கொழந்தயத் தூக்கிக்கிட்டு எறங்குனா. பின்னாடியே நர்சு எறங்கிப் போனா. கொழந்த கத்திக்கிட்டே போச்சு. தன்னக் காப்பாத்தச் சொல்லிக் கதறுதோ?

# 30. எகத்தாளம்

**வா**ய்தாவுக்கு வந்த ஆம்பளைகளும் பொம்பளைகளும் பஸ் ஸ்டாண்டுல கூட்டமா ஒக்காந்துருந்தாக. ராசம்மாவும் அவாகூட படுச்ச பிள்ளைகளும் ஒரு ஓரமா ஒக்காந்துருந்தாக. ஊருக்குப் போற வண்டிக்காக ரொம்பா நேரமாக்காத்துக் கெடந்தாக. காலைல இத்தனிக்கஞ்சி குடுச்சுட்டு வந்தது. இப்ப சாயங்காலம் ஆகிப் போச்சு. கஞ்சி தண்ணி எதுவுமில்லாமெ அம்புட்டுப் பேரும் கெறங்கிப் போயி இருந்தாங்க.

அந்நியாரம் பள்ளிக் கொடத்துப் பிள்ளைக கொஞ்சப் பேரு யூனிபாமோடெ பஸ்ல இருந்து எறங்கிப் போனாக. இதப்பாத்த ராம்மாளும் மத்த பிள்ளைகளும் மனசுக்குள்ள நெனச்சாக, "நம்மள மட்டும் போலிசுக்காரனுக புடுச்சு ஜெயிலுக்குள்ள போடெமெ இருந்துருந்தா, நம்மளும் பள்ளிக் கொடம் போயி, பரிச்ச எழுதி இருக்கலாம். இப்ப எல்லாம் போச்சு."

பசிக் கெறக்கத்துல பொம்பளைக ஒவ்வொருத்தரா முந்தானைய விருச்சுப் படுத்துட்டாக.

"உண்டெனத் துட்டு இருந்தா ஒரு காப்பித் தண்ணியாவது குடிக்கலாம். இந்த ஊர்லதான் பச்சத் தண்ணியக்கூட தாளுல அடச்சுக் கிட்டு விக்கிரானுகளே. என்னத்த சொல்ல?" படுத்துக்கிட்டே பொலம்புனா கன்னியம்மா.

"ஒரு வெத்தல பாக்கு வாங்கிப் போடக்கூட வழி இல்ல," கொட்டாவி உட்டுக்கிட்டே ஆராயிப் பாட்டி சத்தமாச் சொன்னா.

ராசம்மா பக்கத்துல இருந்த போலிசுக்காரனுகளயே உத்துப் பாத்துக்கிட்டுருந்தா. அவுக பக்கத்துல இருந்த பலகைல எழுதி இருந்தத வாசுச்சா.

"மே ஐ ஹெல்ப் யூ? காவலர் உங்கள் நண்பன்."

செவப்பு எழுத்துல இருந்த இந்த வாக்கியங்கள வாசுத்துட்டு அவளுக்குப் பழைய நெனவுக வந்துச்சு. நாலஞ்சு மாசத்துக்கு முன்னால ஊர்ல நடந்த சம்பவங்க பூராம் தொடர்ச்சியா மனசுக்குள்ள ஓடுச்சுது.

அப்ப ராத்திரி பத்துமணிக்கு மேல இருக்கும் லிங்கம்பட்டி தலித்துக தெருவுல ஒரே கூப்பாடும், கதறலுமாக் கேட்டுச்சு. தடதடன்னு போலிசுகாரனுக தெருவுக்குள்ள ஓடுறதும், வீட்டுக்

கதவுகள ஒடைக்கிறதும், கைல ஆப்ட ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேத்தயும் அடுச்சு புடிக்கையில் அடி தாங்க மாட்டாமெ அந்தச் சனங்க அலறுன சத்தமும் கேக்கக் கேக்கக் கொலையே நடுங்குச்சு.

ஒறக்கத்துலருந்து அரக்கப் பரக்க எந்துருச்ச வேதமுத்து, கெட்டுன வேட்டியோடெ, பொண்டாட்டி பார்வதியயுங் கூட்டுகிட்டு கெழக்க பாத்து ஓடுனாரு. அவருக்கு முன்னால பத்து பதனஞ்சு பேத்துக்கு மேல ஓடிக்கிட்டு இருந்தாக. பாதித்தொலவு ஓடியாந்தப் பெறகுதான், சட்டப் பையில வச்சிருந்த ரூவாய எடுத்துக்கிட்டு வந்துருக்கலாமேன்னு தோணுச்சு. பார்வதிக்கு தொடர்ந்து ஓட முடியல. இந்தச் சாகப்போற வயசுல இந்தப் பாடுபட்டு ஓடனுமான்னு நெனச்சுக்கிட்டு மூச்செரைக்க ஓடுனா

ரெங்கசாமியோடெ வயக்காட்டத் தாண்டயில தெருவுக்குள்ள இருந்து அலறல் சத்தங்க கேட்டுச்சு.

ஐயய்யோ.... அம்மா.....உட்ருங்கய்யா.... அவள உட்ருங்க சாமி ... பச்ச ஒடம்புக்காரி.... அடி தாங்கமாட்டா... கொழந்த பெத்து ரெண்டு வாரந்தான் ஆகுதுய்யா.... இந்த ஊரு இல்லையா... வள்ளி கொளத்துக்கு வாக்கப்பட்டுப் போயிட்டு பேறுகாலத்திற்காக இங்க வந்தவா சாமி. ஒங்களுக்குப் புண்ணியமாப் போகுது... அவள உட்ருங்க சாமி.”

கல்நெஞ்சயும் கரைக்கும் அந்த கதறலக் கேட்ட பார்வதி சொன்னா,

“அடக் கருமாந்துரமே... அந்தக்கா சந்தம்மாளோடெ சத்தம்ல இது. அவா மகாதான் பிள்ளப் பெத்துக் கெடந்தா. இந்தச் சாமத்துல பச்ச மண்ணத்தூக்கிக்கிட்டு எங்குட்டு ஓட முடியும்? தாயும் பிள்ளையுமா மாட்டிக்கிட்டாக பொறுக்கோ.”

“யே...நீ கொஞ்சம் மெதுவாப் பேசுத்தா. சத்தங்கேட்டு வந்தாம்னா... அம்புட்டுத்தான். கூண்டோட கைலாசந்தான். எப்பிடியாச்சும் விடியமுன்ன தட்டுத் தடுமாறி கெஞ்சம்பட்டி போயிச்சேந்தரனும். அங்க நம்மாளுக நெறய்யா இருக்காங்க,” வேதமுத்து சொல்லவும் நடைய இழுத்து வச்சுப் போனாக.

அடுக்குப் பானைக்குள்ள வச்சிருந்த ரூவாயத் தேடிக்கிட்டு இருக்கும்போதே தெருவுக்குள்ள போலிசுக்காரனுக மொழஞ்சிட்டானுக. அருளம்மாளுக்கு என்ன செய்யதுன்னு புரியல. சடார்னு கீழ படுத்துகிட்டு எரிக்கக் கட்டி வச்சிருந்த மொளகாமார எடுத்து மேல பரப்பி உட்டுக்கிட்டு ஆடாமெ அசையாமெக் கெடந்தா. வீட்ல கரண்டு லைட்டு இல்லாததுனால சட்டுனு கண்டு பிடிக்க மாட்டாகன்னு நெனச்சுக்கிட்டா. அவா வீட்டுக்குள்ளவும் திமுதிமுன்னு போலிசு மொழஞ்சு, மத்த வீடுகள்ள செஞ்சது கெணக்கா, இருக்கற சாமாஞ்சட்டுகள அடுச்சு நொறுக்கித் தள்ளுனாக. மொளகாமாரோடெ

நெடி மூக்குக்கு ஏற ஏற அவளுக்குத் தும்மல் வர்ர மாதிரி இருந்துச்சு. ரொம்பக் கஸ்டப்பட்டு அடக்கிக்கிட்டு அராமுத்துக் கெடந்தா. போலிசுக்காரனுக போகவும் எந்துருச்சு வாய்ல சீலய அமிக்கிக்கிட்டுத் தும்மித் தும்மிக் கண்ணிராக் கொட்டுச்சு. நெஞ்ச அடைக்கிற மாதிரி இருந்துச்சு. உசுர வெறுத்துட்டு துணுஞ்சு ஓடியாந்தா. கெழக்கால உழுந்தடுச்சு வந்து, ஏற்கனவே ஓடிக்கிட்டுருந்தவுகக்கூட சேந்துக் கிட்டா.

“எப்பிடித்தா தப்புச்செ? பயங்கரமாச் சத்தங் கேட்டுச்சு?” வேதமுத்து கேட்டாரு.

“அத ஏங் கேக்கறெ? மொளகாமாத்த மேல அள்ளிப் போட்டுக்கிட்டு மறஞ்சு கெடந்துட்டு, தும்ம முடியாமெ நாம் பட்ட அவஸ்த! சே...நானு எப்பிடியோ ஓடியாந்துட்டேன். பாவம்.... சாந்தம்மா மதினியும் அவா மகளும் மாட்டிக்கிட்டாக. ஒறக்கத்துல இருந்ததுனால ஏகப்பட்ட சனங்க மாட்டிருச்சுக. இத்தினிக்கூட நெஞ்சுல ஈரமில்லாத பெயல்களா இருக்கானுக. கதறக் கதறப் புடுச்சு அடிக்கானுக. அவுக வீட்ல ஆம்பள பொம்பள அம்புட்டுப் பேரும் மாட்டிக்கிட்டாக. அந்தப் பள்ளிக்கொடத்துல ரெண்டோ மூனோ படிக்குதே ஒரு சின்னப் பிள்ள, அது மட்டும் கெடந்து அழுதுட்டு கெடக்குது பாவம்.”

இவுக பேசிக்கிட்டு வேகமா நடந்துக்கிட்டு இருக்கயில நல்ல முத்து வேர்க்க விறுவிறுக்க ஓடியாந்தாரு.

“ஊரச் சுத்தி போலிசுக்காரனுக நிக்கானுக. மேற்க சத்தங் கேக்கயில நானு எந்தருச்சு ஓடியாந்தேன். அந்தத்த கொறக்காலி வீட்டுக்கிட்ட வரயில போலிசு வந்துட்டான். நானு சரசரன்னு அங்ன நின்ன வேப்பமரத்துல ஏறிட்டேன். ஆனா ஏம் பொண்டாட்டியும் மக்களும் மாட்டிக்கிட்டாக. ஏங்கண்ணு முன்னால அவுக பட்ட இம்சயப் பார்த்துட்டு எறங்கிரலாம்னு இருந்துச்சு. மனசக் கல்லாக்கிக்கிட்டு இருந்தேன். மேல இருந்து பாத்தீனா ஊருக்குள்ள எங்ன பார்த்தாலும் போலீசுதான். மேகலக்குடி ஆளுக நாலஞ்சுபேரு போலிசுக்காரனுகளுக்கு நம்ம வீடுகள அடையாளங்காட்டிக் குடுத்துட்டு, நம்பளப் பத்திய அம்புட்டு வெவரத்தயும் சொல்லிக் குடுத்துப் புடிக்கச்சொல்லுறானுக. அதுமட்டுமில்லாமெ இந்தச் சுத்து வட்டாரத்துல நமக்குச் சொந்த பந்தங்க எந்தெந்த ஊருகள்ள இருப்பாகன்னும் சொல்லிக் குடுக்கானுகளாம். நம்ம எங்குட்டாச்சும் தூரந்தொலவு ஓடிப்போகனும்.”

“நீ என்னனு எறங்கி ஓடியாந்தெ?”

“அதான். அவனுக பூராம் மேற்க போகுந்தண்டிக்கும் ஒக்காந்துக் கிட்டே இருந்தேன். நம்மள அடுச்சுப் புடிக்கிறவனுக்கெல்லாம் மேகலக்குடி ஆளுக தெருவுகள்ள நல்ல கவனிப்பு. சாப்பாடு, காப்பி, சீரெட்டு எல்லாங் குடுத்து கவனிக்காகளாம். மரத்துமேல இருந்து

பாக்கயில ஒவ்வொருத்தரையும் புடுச்சு அடிக்கிறது நெஞ்சாங்கொலை யலச் சம்மட்டி கொண்டி அடிக்கிறதுகெனக்கா இருந்துச்சு. ஆத்துரப் பட்டு என்ன செய்ய? அவனுக மேற்க போகவும் துணுஞ்சு எறங்கிட் டேன். எறங்கி குனுஞ்சிக்கிட்டே பம்மிப்பம்மி நடந்து போயி ராசாரா மோடெ பம்புசெட்டு ரூம்புகிட்ட போகையில யாரோ பேசற சத்தங் கேட்டுச்சு... ரூம்பு செவத்தோடெ செவரா ஒட்டி நின்னுக்கிட்டு உத்துக் கேட்டேன். கெணத்துக்குள்ள இருந்துதான் என்னமோ சத்தங் கேட்டுச்சு. அம்புட்டுத்தான். பேயோ பெசாசோன்னு பயந்துபோயி, அப்படியே ஒக்காந்துட்டேன். ஓடனும்னு நெனச்சாக்கூட ஓட முடியல. பயத்துல அப்பிடியே ஈரத்துணி கெணக்காக் கெடந்தேன். வேர்த்து ஊத்துது. போலிசு கைல தப்புச்சு வச்சு இங்க பெசாசுகிட்ட மாட்டிட்டோம்னு நடுங்கிப் போயிக்கெடந்தேன்."

"அந்தக் கெணத்துல எந்தப் பேயிடா இருக்கு? பயத்துல நீ கண்டமானிக்க நெனச்சிருப்ப," பார்வதி சொன்னா.

"இல்ல. இல்ல.... அதுல கன்னி கழியாத கொமரி உளுந்து செத்துப் போயிருக்கா?," ரோம்மா சொன்னா.

"சரிதாம் போடா... இந்தப் போலிசுக்காரப் பெயல்க கைல சிக்கி அடி வாங்கிச் சாகுறதவிட பேயிக கைல சிக்கிக்கிறது நல்லது," வேதமுத்து சொன்னாரு.

"அதுசரிதான் நாந்தான் மரத்து மேல இருந்து பாத்தனே... மனுசன அடிக்கிறது கெணக்காவா அடிக்கான்? அடங்காத சண்டி மாட்டக்கூட நாம அந்த அடி அடிக்க மாட்டோம். செத்த நேரத்துல கெணத்துக்குள்ள இருந்து நம்ம நடுத்தெர ராசமாணிக்கம், அவனோட சம்சாரம், பிள்ளகுட்டிக, மேலத்தெரு பாக்கியராசு, மணிவேலு மாமா எல்லாரும் மேல ஏறி வந்தாக. அவுகளப் பாத்தாப் பெறகுதான். எனக்குப் போன உசுரு திரும்பி வந்துச்சு.

"கெணத்துக்குள்ள என்னத்துக்கு போயிக் கெடந்தாக?"

"அத ஏங் கேக்குற! தப்புச்சு ஓடியாந்துருக்காக. ஓடியாந்தா ராசாராமரு தோப்புக்குள்ளருந்து ரெண்டு போலிசு வந்துக்கிட்டு இருந்தாகளாம். அம்புட்டுத்தான். அங்கனக்குள்ள வேற ஒளியரதுக்கு என்ன எடமிருக்கு? அதான் நடக்கிறது நடக்கட்டும்னு கெணத்துக்குள்ள போயிக் கெடந்திருக்காக. இப்பத்தான் தெக்க அவுக்கம்மா ஊருக்குப் போறாக."

கிட்டதட்ட இருநூறு பேருகிட்ட ஜெயிலுக்குள்ள கெடந்துட்டு சாமீன்ல வந்தாக. தப்புச்சு ஓடுனவுக நாடோடிக கெணக்கா அலஞ்சுட்டு கொஞ்சங் கொஞ்சமா இப்பத்தான் ஊருக்குள்ள தல காட்டுறாக. எத்தன பொம்பளைகள கைப்பிள்ளைகளோடெ செயிலுக்குள்ள போட்டாக. அந்தப் பிள்ளைக என்னை செஞ்சதுக? படிக்கிற பிள்ளைக ஆணும், பொண்ணுமா இருவது பேத்தக்கு மேல

அடச்சுப் போட்டு, அம்புட்டுப் பேரு படிப்பும் போச்சு. ஊரே சுடுகாடாப் போச்சு. ஒருசனம் இல்ல. நடக்கமாட்டாத ரெண்டு கெழவிகளும் கண்ணு தெரியாத மொட்டுக்கன்னு தாத்தாவும் மட்டுந்தான் தெருவுக்குள்ள ஆளுன்னு இருந்தது. அவுககூட பாவம் அன்னந்தண்ணி ஆகாரமில்லாமெ சாகப் பொழைக்கக் கெடக்காக.

சாமீன்ல வெளிய வந்தவுக செயிலுக்குள்ள பட்ட வேதனையச் சொல்லி அழுகையிலே போலிசுக்காரனுக மனுசமக்களுக்குப் பெறந்தவனுகதானான்னு சந்தேகமா இருக்குது. செயிலுக்குக்கொண்டு போகையில தன்னடையா நடந்து போன அருளாயி பெரியம்மா, திரும்பி வரயில தானா நடந்து வர முடியல. லத்திக் கம்புட்ட மானாவாரிக்கு அடுச்சு பிட்டாணி போயி, கைகாலும் வெளங்காமப் போனா. நாலஞ்சு பேரு சேந்துதான் அவளத் தூக்கியாந்து போட்டாக. அவுந்து கெடந்த முடிய அள்ளிக்கெட்டக்கூட அவளுக்கு கை மேல ஒசரல. என்னமோ நரம்பு அந்து போச்சாம். பேச்சுக்கூட சரியா பேசமுடியல. என்னத்தக் கேட்டாலும் பேயறைஞ்சது கெணக்கா மலங்க மலங்க முழிக்கா. அவா மகமுத்தும்மாளும் செயிலுக்குள்ள அடபட்டு வந்தா. அவுகம்மய பாத்துப் பாத்து தெனமும் அழுகதான்.

"செயிலுக்குள்ளயே செத்தப் போயிருந்தாலும் தூக்கிப் பொதச்சுட்டு வந்துருக்கலாம். இப்ப இப்படி நடக்க மாட்டாமெ, பேச மாட்டாமெ கெடக்குறதப் பாக்கையில எப்பிடி இருந்த எங்கம்மெ இப்பிடிப் போனாளேன்னு இருதயமே வெடிச்சிரும் போல இருக்குது. ஒரு சீக்கு நோக்குனு கெடந்து பீ மோத்துரம் அள்ளிப் போட்டாலும் மனசு ஆறிப் போகும். நல்லா இருந்தவகளக் கொண்டு போயி அடுச்சு, இடுப்ப ஒடுச்சுப் போட்டுட்டானுகளே."

அனந்தம்மா சித்திக்கு ஒடம்பு பூராங் கண்ணிப் போயி கெடந்துச்சு. அவா செவத்த ஒடம்புக்கு அடிவாங்குன எடம் பூராம் நீட்ட நீட்டாமா அடையாளங் கெடந்துச்சு. என்னன்னுதான் அம்புட்டு அடிகளத் தாங்குனானோ.....

மாராப்பெ எடுத்து உட்டுட்டு அழுதுகிட்டே சித்தி சொன்னா.

"ஊருக்குள்ள பிடிபட்டதல இருந்து சும்மா அடிதான். வண்டியில ஏத்தயில அடி; எறக்கறியல அடி; செயிலக்குள்ள அடைக்கயில அடி; வெளில உடும்போது அடி. எப்பப் பார்த்தாலும் டம்டம்னு அடித்தான். நம்மள மாதிரி ஏழபாழைகள அடிக்குதுக்குத் தான் அரசாங்கம் அவனுகளுக்குச் சம்பள குடுக்குது... இவனுகள்ளாம் என்ன சாவு சாவானுகளோ. கடவுளே...." அவா அழுகுறதப் பாத்துட்டு ஊருச்சனமே அழுதுச்சுக.

அவா பேரனும் கேவிக் கேவி அழுதுகிட்டு கேட்டான்,

"எதுக்கு பாட்டி இப்பிடி அடுச்சாக? எதுக்கு செயிலுக்குள்ள போட்டாக.....?"

"எல்லாம் ஒங்க மாமெ தங்கராசு செஞ்ச வேலதான். எலக்சன்ல நின்னாம்ல. அதுக்குத்தான். அவனுக்கு எத்தன தடவப் படுச்சுப் படுச்சுச் சொன்னேன் கேட்டானா? மேகலக்குடி ஆளுகளுக்குப் போட்டியா வேண்டாண்டான்னு எத்தன பேரு சொன்னோம். கேட்டானா? இன்னைக்கு அவெம்பேருல கொலக்கேசு போட்டு உள்ள வச்சுட்டானுக."

"நம்ம தேர்தல்ல நிக்கக்கூடாதாக்கும் பாட்டி? தேர்தல்ல நின்னா அடிப்பாகளாக்கும்?"

"நம்ம ஓட்டு மட்டுந்தான் போடனும் போல. நமக்கு ஓட்டுக் கேட்டு எலக்சன்ல நிக்கக் கூடாதுங்குறானுக."

மேகலக் குடிகாரனுகளுக்கு எம்புட்டுத் திமுருனா, அவனுக எகத்தாளமாச் சொன்னானுகளாம்.

"அங்கங்க தனித் தொகுதிகள்ளயே இவஞ்சாதிக்காரனுக நிக்க முடியாமெ கெடக்கயில... இவனுகளுக்கு எம்புட்டுக் கொழுப்புன்னா பொதுத் தொகுதில, அதுவும் நமக்குப் போட்டியா நிப்பானுக. இப்பத் தெரியும்ல."

ராசாம்மாளுக்கு யோசிக்க யோசிக்க வெறித்தனமா வந்துச்சு. நம்மளப் பாத்தா எல்லாத்துக்கும் எகத்தாளமாகத்தான் இருக்குது.

இவ்வளவு மிருகத்தனமா அடுச்சு கொண்டு போயி அடச்சுட்டு, காவலர் உங்கள் நண்பர்னு வேற போர்டு மாட்டுக்கிட்டு இருக்கானுக...வெக்கங்கெட்ட பெயல்க. இப்பிடிக் கண்டமாணிக்க நெனச்சுக்கிட்டே காறி அந்த போர்டுமேல துப்புனா. ஊருக்குப் போற வண்டியும் வந்துருச்சு.

❋ ❋ ❋